339

ஜீவா'வின் கற்பனைச் சித்திரம்—2.

ஓம்!

# தாசி ரமணி

அறிவு அபிவிருத்தி சங்கம்
க
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

417

ஆசிரியர் :
நாரண-துரைக்கண்ணன்
"ஜீவா"

மதுரை காமராசர் பல்கலைக்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

பிரசுரம் :
ஆனந்தபோதினி காரியாலயம்,
சௌகார்பேட்டை, சென்னை.
1944

காபிரைட்.] [விலை ரூபாய் ஒன்றரை.

## இந்நூலாசிரியர்

தமிழ் மக்கள் வாழ்க்கை விசித்திரங்களைப் படம் பிடித்துக் காட்டும் சமூகக் கதைகள், நாடகங்கள் பலவற்றையும், நம் தேசீயத் தலைவர்கள், மகான்கள், கவிகள், மேனாட்டுச் சுதந்திர வீரர்கள், ராஜதந்திர நிபுணர்கள், சர்வாதிகாரிகள் சரித்திரங்கள் பலவற்றையும் எழுதியிருக்கிறார்.

அவ்வை தி.க. சண்முகம்
நூல் வரிசை எண்: 458
நன்கொடை எண்: 458

காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
மதுரை.

சென்னை ஆனந்தபோதினி அச்சகத்தில
அச்சிடப் பட்டது.

# முன்னுரை

இந்திய மாகாணங்களில் இரட்டை யாட்சி நடைபெற்றுக் கொண் டிருந்த காலம். சென்னைச் சட்டசபையில் சில முக்கிய மான சமூக சீர்திருத்த மசோதாக்கள் கொண்டுவரப்பட்டுச் சட்ட மாயின. அவைகளில் மிக முக்கியமானதொன்று **தேவதாசி மசோதா.** தெய்வத்தின் பெயரால் கோயில்களில் தாசிப் பெண் களுக்குப் பொட்டுக்கட்டி முத்திரையிடும் வழக்கத்தை அடியோடு ஒழிக்க சட்டபூர்வமாக நடவடிக்கை யெடுத்துக்கொள்ள வேண்டு மென்று அம் மசோதா மூலமாகப் பிரரேபிக்கப்பட்டது. நீண்ட காலமாக, சமயத்தின் பெயரால் ஆதிக்கஞ் செலுத்தி வரும் இக் கொடிய மூட வழக்கத்தை யொழிக்க முற்படுவதற்குப் பலத்த எதிர்ப்பிருக்கும் என்று நன்கு அறிந்தும் இம் மசோதாவை மிகத் தைரியமாகக் கொண்டு வந்தவர் **டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மையா** ராவர். இவர் **இந்திய மாதர் சங்கத்தின்** வாயிலாகவும், தனிப் பட்ட முறையில் **ஔவை ஆசிரமத்தை** நடத்தி வருவது வாயிலாகவும் பெண்ணுலகுக்குப் பலவகையாகப் பெருஞ் சேவை செய்து வரு பவர்.

அம்மையார் கொண்டுவந்த தேவதாசி மசோதாவை வைதீக மனோபாவங் கொண்டவர்க ளெல்லாம் தீவிரமாக எதிர்க்கலாயி னர். ஆனாலும், முத்துலக்ஷ்மி அம்மையாரின் தேவதாசி மசோதா சட்ட மாவதற்குச் சென்னைச் சட்டசபையின் பரிபூரண ஆதரவு கிடைத்து விட்டது. இதன்பயனாக, இந்துமத தர்ம பரிபாலன சட்டத்தில் கடவுள் பெயரால் தாசிப் பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் வழக்கத்தை யொழிப்பதற்கு அநுகுணமாகச் சில திருத் தங்கள் செய்யப்பட்டன. அதை யடுத்து, சென்னை மாகாணத்தி லுள்ள நகரங்களில் இருந்தெல்லாம் விபசார விடுதிகளை வெளி யேற்ற வேண்டும் என்ற சட்டமும் அமுலுக்கு வந்தது. இவ்விதம் டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மையார் ஆற்றிய அரும் பெரும் சேவையை முன் மாதிரியாகக் கொண்டு தான், காங்கிரஸ் அர

சாட்சி நடத்திய காலத்தில், சென்னை ஜனப் பிரதிநிதி சபையில், ஸ்ரீமதி அம்மண்ண ராஜா தேவதாசிகளைப் பற்றிய ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மையார் தேவ தாசிகளைப் பற்றிய மசோதாக்கள் கொண்டு வந்தது 1926, 1928-ம் வருஷங்களில் என்று நினைக்கிறேன். அச்சமயம், நான் தேச வர்த்தமானங்களைச் சரிவர அறியக்கூடாத இளைஞை யிருந்ததால், டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மையார் தேவதாசி மசோதா கொண்டு வந்ததும், அதை வைதீகர்கள் பலமாக எதிர்த்ததும் எல்லாம் எனக்குப் புதுமையா யிருந்தது. "பெண்ணுலகில் இப்படியும் ஒரு கூட்டம் இருக்கிறதா? தெய்வத்தின் பெயரால் தேவதாசி மகளிர்க்குப் பொட்டுக் கட்டும் வழக்கம் சிறிதும் அறிவுக்குப் பொருந்தாததா யிருக்கிறதே! கடவுள் திருப்பணிக் கென கன்னிகையர் சிலர்க்கு பொட்டுக் கட்டி முத்திரை யிடுவதெனின், விபசாரம் எப்படி அத் தேவதாசிகள் பால் இடம் பெற்றது?" என் றெல்லாம் என் இளம் உள்ளம் எண்ணி ஏங்கியது. அத்துடன், டாக்டர் முத்துலக்ஷ்மி யம்மையாரின் நன்முயற்சியால் ஏற்பட்ட சட்டங்களால் பொட்டுக் கட்டும் வழக்கம் குறைந்து வருகிறதானாலும், நகரங்களில் விபசார விடுதிகள் பகிரங்கமாக நடத்தப்படவில்லை யானாலும், எதிர் பார்க்கப்பட்ட பலன் இவ்வளவு ஆண்டுகளாகியும், பூரணமாக ஏற்படவில்லை. இதற்குக் காரணம், பொட்டுக் கட்டும் வழக்கத்தினின்றும் விடுபட விரும்புபவர்களுக்கும், ஈனமான விபசார வாழ்க்கையை வெறுத் தொதுக்க விரும்புபவர்களுக்கும் புகல் வேறு இல்லாதது தான்; அதாவது கண்ணியமாக வாழ்க்கை நடத்த அவர்களுக்குத் தகுந்த வசதி செய்யா திருப்பதுதான். வெறும் சட்டஞ் செய்து விட்டால் மட்டும் போதுமா? சட்டத்தால் பாதிக்கப் படுபவர்களுக்குத் தக்க பரிகாரஞ் செய்ய வேண்டாமா?

தேவதாசிகள் பயங்கரமான விபசாரப் படுகுழியி லிருந்து கரை யேற வேண்டுமானால், அதற்கு ஜன சமூகத்தின் உதவி இன்றி யமையாதது. ஜன சமூகம் தாசிப் பெண்களின் பரிதாப நிலையை யுணர வேண்டும்; ஜன சமூகம் தனது ஒரு பிரிவு இவ்வளவு இழி நிலையி லிருக்கிறது என்று அறிந்து அந் நிலையை மாற்றி உயர்த்த முன் வந்தால் தான், பெண்ணினத்

துக்கே நீங்காக் களங்கத்தை யுண்டுபண்ணி யிருக்கும் தாசி குலம் என்ற விபசாரக் கூட்டம் மறைந் தொழியும்.

இவ்விதமெல்லாம் நீளச் சிந்தித்து, பல்லாண்டுகளாக, தேவ தாசிகளின் நிலைமையைக் கூர்மையாகக் கவனித்து வந்ததன் பயனாக, என் உள்ளத்தில் உருக்கொண்டு வந்த எண்ணங் களின் திரட்சியே, "தாசி ரமணி" என்ற கதையாகப் பரிணமித்தது என்று கூறவேண்டும்.

ஒரு பொருளை அல்லது கொள்கையை அல்லது தத்துவத்தை ஜன சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டுமானல், ஒரு கட்டுரை வாயிலாக அல்லது சொற்பொழிவு மூலமாகக் கூறு வதைவிட, ஒரு கதை வாயிலாக, நாடக வாயிலாக வெளிப் படுத்துவது பெரும் பலனை அதுவும் உடனடியாகத் தரும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவே தான், ஜன சமூகத் தில் யான் காணும் குறைபாடுகளை எடுத்துக் காட்டவும்,—அச் சீர்கேடுகளைப் போக்கிச் செய்ய விழையும் சீர்திருத்தங்களைப் புகுத்தவும், நான் கதைகளை, எனக்குரிய கருவிகளாகக் கொண் டிருக்கிறேன். வாழ்க்கையின் உண்மைகளி னின்றும் விலகிப் போய் வெறுங் கற்பனையில் மூழ்கி ஒரு கதையை யெழுதுவதை விட, சமூகச் சூழல், கால தேச வர்த்தமானங்களை அநுசரித்து, தான் எழுத விரும்பும் நவீனங்களை உருக்கொள்ளச் செய்வது சிறப்புடைத்தாகும் என்பது என்னுடைய எண்ணம். ஏனென் ருல், கதாசிரியன் வாழும் காலமும், சமூகக் கருத்துமே அவனது நோக்கையும் கதையின் போக்கையும் நிர்ணயிக்கின்றன. ஜன சமூகத்தின் ருசியும், அவன் காலத்தில் பரவியுள்ள கொள்கை களும் கதாசிரியனை ஆட்சி செய்யாமல் இருக்குமா? ஆனல், கதாசிரியன் ஒன்று செய்யக்கூடும். அவன் காலத்திய ஜன சமூக வாழ்க்கையைத் தான் சிருஷ்டிக்கும் கதையில் பிரதிபலிப்ப துடன் நின்றுவிடாமல், சிக்கலான வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்க அவன் முற்பட்டு வழிகாட்ட வேண்டும். கதாசிரியன் தனது எழுத்தாற்றலால், கால நிலையிலும் சமூகச்சூழலிலும் புரட்சி கரமான மாறுதல்களை உண்டுபண்ணக் கூடும். மாக்ஸிம் கார்க்கி என்ற ரஷ்ய எழுத்தாளனின் "அம்மா" முதலிய சக்தி வாய்ந்த அபூர்வ சிருஷ்டிகள், ரஷ்ய மக்க ளிடையே அறிவுப் புரட்சியை

உண்டுபண்ணி, லெனின் புரிந்த அரசியல் புரட்சிக்கு வெற்றி யேற்படப் பேருதவியா யிருந்தன என்பதை நாம் கேள்விப்பட் டிருக்கிறோம். ஆகவே, நாடோறும் மக்கள் வயிற்றுப் பாட்டுக்காக நடத்தி வரும் வாழ்க்கைப் போராட்டத்தில் சோர்வுற்று இளைப்பாறும் நேரங்களில், உள்ளமும் உடம்பும் புத்துணர்ச்சி பெறுவதற்காக வாசிக்கும் சிறு கதைகள், நவீனங்கள் வாயிலாக, ஜன சமூக வாழ்க்கையை விமரிசனஞ் செய்து உள்ளுணர் வூட்டி, உயர்வுக்கு உழைக்குமாறு ஊக்கலா மென்பது என் நம்பிக்கை.

தாய்க் குலத்தில் தேவதாசிகள் என்ற விசித்திரக் கூட்டம் உண்டா? எப்படி, எப்போது, எக்காரணத்துக்காக இத் தேவதாசிக் கூட்டம் ஏற்பட்டதா யிருந்தாலும், இப்போதும் இருந்து வரவேண்டுமா? என்பதைச் சிந்தித்துப் பார்த்து, தமிழ் மக்கள் ஒரு முடிவுக்கு வருவதற்காக, நான் "தாசி ரமணி" என்னும் இக் கதையை அவர்கள் முன்னர் சமர்ப்பித் திருக்கிறேன்.

சமூகச் சீர்கேட்டுக்கு வித்தாகவுள்ள தேவதாசி முறையை உடனடியாக ஒழிக்கவேண்டும் என்ற உணர்ச்சியைத் தமிழ் மக்கள் உள்ளத்தில் எழச் செய்யவேண்டும் என்ற இம் முயற்சியில் நான் எவ்வளவு தூரம் வெற்றி பெறக் கூடும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், இக் கதையை வாசிப்பவர்கள் மனத்தில் தேவதாசிகளைப் பற்றிய உண்மை நிலையை உணர்த்த, நான் வெகுவாகக் கவனஞ் செலுத்தி யிருக்கிறேன். கதைப்போக்கு படிப்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளத் தக்கவிதமாக இருந்தால் தான் நம் நோக்கம் ஓரளவேனும் நிறைவேறு மென்ற எண்ணத்தோடு, கதை யமைப்பைத் தொடக்கம் முதல் கடைசி வரை ரஸனை குறையாதவாறு கொண்டு போயிருக்கிறேன். பத்தாண்டுகளுக்கு முன்பிருந்த மனப் பக்குவத்தில், எனது கற்பனா சக்தியில் தன்னம்பிக்கை போதியபடி இல்லாதது காரணமாக, கதை ரஸனையை அதிகப்படுத்த இதற்கு மேனாட்டு மெருகு கொடுத்திருக்கிறேன். அதாவது, **"Desire"** என்ற ஆங்கில நவீனமொன்றில் வரும் சில கட்டங்களை ஸ்வீகரித்துக் கொள்ளலானேன்.

இவ்விதம் நான் இக் கதையை அமைக்க இவ்வளவுதூரம் சிரம மெடுத்துக்கொண் டிருக்கவும், தமிழ் எழுத்தாள ரொருவர் இக் கதையின் முற் பகுதியை அப்படியே கபளீகரஞ் செய்து

சுமார் 2000 அடிகளில் சினிமாவுக்குக் கதை யெழுதிக் கொடுத்துத் தம் வருமானத்துக்கு வழி செய்து கொண்டார். பாவம்! மற்றெரு எழுத்தாளர், 'தாசி ரமணி'யைத் தழுவிய முறையில் ஒரு கதையை எழுதி ஒரு பத்திரிகையில் வெளிவரச் செய்தார். இவ்விதம், எனது சிறு உழைப்பு என் சகோதர எழுத்தாளர்களின் வயிற்றுப் பாட்டுக்கும், கீர்த்திக்கும் ஓரளவேனும் உதவியதே என்பதில் எனக்கு மகிழ்ச்சி தான். ஆனால், ஒன்று மட்டும் கூற விரும்புகிறேன். பிறரது அறிவையும் உழைப்பையும் தமதாகப் பயன்படுத்திக் கொண்டு சுலபமாகப் பொருளும் பெயரும் பெற முயல்வதை விட, தமது அறிவின் அளவைக் கொண்டே எழுத முயல்வது பெருமை தருவதாகும். அப்படியின்றி, பிற அறிஞர்களது அறிவையும் உழைப்பையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்தால், அவர்களுடைய அநுமதியைப் பெறுவதும், அவர்களுக்கு நன்றி செலுத்துவதும் முறையாகும். அது நிற்க,

"தாசி ரமணி" "பிரசண்ட விகடன்" பத்திரிகையில் 1937-ம் ஆண்டில் தொடர்ச்சியாக வெளிவந்தது. அதன் பின், மேற்குறித்த வாறு, சகோதர எழுத்தாளர்கள் அக் கதையை உரிமையோடு கையாண்டு கொண்டதி லிருந்தும், அதன்பின், "தாசி ரமணி"யை முன் மாதிரியாகக் கொண்டு, சிறுகதைகளும், பெரிய கதைகளும், இரண்டொரு தமிழ்ப் படங்களும் வந்ததி லிருந்தும் இக் கதை பலருடைய உள்ளங்களைக் கவர்ந்திருக்கிறது; ஒருவித உணர்ச்சியை உண்டுபண்ணி யிருக்கிறது என்று நன்கு தெரியலாயிற்று. நான் எந் நோக்கத்தோடு, "தாசி ரமணி"யை எழுத முற்பட்டேனே அந்நோக்கம் இது புத்தக ரூபமாக வெளிவருவதற்கு முன்பே மேற்குறித்த விதமாக ஓரளவு நிறைவேறி யிருப்பதிலிருந்து, இப்போது வெளியாகும் புத்தகம் இன்னும் எதிர் பார்க்கும் பலனை அளிக்கும் என்று நம்புகிறேன்.

"ஜீவோதயம்"
சென்னை. 1-6-'44.

இங்ஙனம்:
நாரண - துரைக்கண்ணன்

# பொருள் அடக்கம்


| அதிகாரம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | இவள் யார்? இப் பெண்மணி யார்? | 1 |
| 2. | நகை வியாபாரியின் ஏமாற்றம் | 18 |
| 3. | ரமணியின் அவசரப் பிரயாணம் | 44 |
| 4. | எதிர்பாரா சந்திப்பு | 72 |
| 5. | வீராங்கனையும் வீரமார்த்தாண்டனும் | 102 |
| 6. | கள்வன் உள்ளத்தைக் கவர்ந்த காரிகை | 121 |
| 7. | நீ தாசியா? தாசிப் பெண்ணு? | 153 |
| 8. | சரசாங்கியின் சாகசச் செயல் | 173 |
| 9. | மர்மம் வெளியாதல் | 195 |
| 10. | பிரஹதாம்பாளின் புத்திமதி | 208 |
| 11. | தியாக புத்தியும் திருட்டுத்தனமும் | 221 |
| 12. | தாயும் சேய்களும் ஒன்று கூடல் | 237 |

ஓம்:

# தாசி ரமணி

## முதலாவது அதிகாரம்

### "இவள் யார்? இப்பெண்மணி யார்?"

"சகோதரி சகோதரர்களே! காங்கிரஸ் சட்ட சபைப் பிரவேசத்தை மேற்கொண்டது எதற்காக வென்றால்—காங்கிரஸ்காரர்கள் வரப்போகும் இந்தியா சட்ட சபைத் தேர்தலில் கலந்து கொள்ளத் தீர்மானித்து அபேட்சகர்களாக நிற்க முன் வந்திருப்பது எதற்காக வென்றால்—இந்தப் பிரிட்டிஷ் சர்க்காரின் யதேச்சாதிகார ஆட்சியிலுள்ள ஊழலை வெளிப் படுத்தவே யாகும். ஜனநாயகம் என்னும் பெயரால் தங்கள் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நிலைநிறுத்தப் பாடுபட்டு வரும் சர்க்காரை எதிர்த்து இதுவரை வெளியிலிருந்து போராடியது போலவே, இப்போது சட்டசபைக்குப் போய் உள்ளிருந்து போராடத் தீர்மானித் திருக்கிறோம். சிங்கம் வசிக்கும் குகையினுள் சென்றே அதன் பிடரி மயிரைப் பிடித்துக் குலுக்குவதுதான் ஆண்மைத் தனம். அதுபோல, ................" என்று பேசிக் கொண்டே ஓங்கி மேஜை மீது ஒரு குத்து விட்டான் கலியாணசுந்தரன். ஏதோ ஆவேசத் தால் உந்தப்பட்டு பிரசங்கஞ் செய்த கலியாணசுந்தரின்

உணர்ச்சியின் வேகத்தைத் தாங்கமாட்டாது அப்படியே நாற்காலியில் சாய்ந்து விட்டான். அவன் தன்னிலைமைக்கு வர சிறிது நேரமாயிற்று. பிறகு, அவன் கண்களைக் கசக்கிக்கொண்டு சுற்று முற்றும் நோக்கினான். அவன் எதிரில் யாருமில்லை. அப்போதுதான் அவனுக்கு, தான் தனது பத்திரிகாலயத்தில் தனக்கு விடப்பட்ட அறையில் இருப்பது நினைவுக்கு வந்தது. தன் பைத்தியக்காரச் செயலுக்காக அவன் தனக்குத் தானே சிரித்துக்கொண்டான்.

வாசகர்களே! நீங்கள் கலியாணசுந்தரன் அரசியல் மேடையில் நின்று ஆயிரக் கணக்கான மக்களிடையே இருந்து ராஜீயப் பிரசங்கம்—அதுவும் தேர்தல் பிரசாரஞ் செய்கிறான் என்று நினைத்தீர்களல்லவா! நீங்கள் கருதியதற்கு முற்றிலும் மாறாக, கலியாணசுந்தரன் தனது அறையில் தனியாக இருந்து பித்தன் போல் தானாகவே ராஜீயப் பிரசங்கஞ் செய்தான் என்று அறிந்ததும் உங்களுக்குப் பெரிய ஏமாற்றமாகவே இருக்கும்.

கலியாணசுந்தரனின் இவ்வித விபரீத நடத்தைக்கு அவன் சிறிதும் பொறுப்பாளியில்லை. அவன் மேற்கொண்டிருக்குந் தொழிலே அவனை இவ்வித நிலைக்குக் கொண்டு வந்து விட்டது. அவன் ஒரு ஜார்னலிஸ்ட்; அதாவது ஊர் வம்பளக்கும் பத்திரிகைத் தொழிலை—நாற்றிசைகளிலும் நடக்குஞ் செய்திகளையுஞ் சேகரித்து வெளியிடும் பத்திரிகைத் தொழிலை—மேற்கொண்டவன். பத்திரிகைத் தொழிலில் அவனுக்கு நல்ல அநுபவமும், நிபுணத்துவமும் உண்டு. அதனால்தான், சென்னை மாகாணத்திலேயே-ஏன் இந்தியாவிலேயே—மிகவும் பிரசித்தி பெற்ற "தின வர்த்தமானி" என்னும் தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியர் அவனைத் தமது பத்திரிகைக்கு தலைமை நிருபனாக வைத்துக்

கொண்டார். சென்னையில் நடக்கும் முக்கிய—பெரிய—பொதுக் கூட்டங்களுக்கும், சட்டசபைக் கூட்டங்களுக்கும் நமது கலியாணசுந்தரன் தான் சுருக்கெழுத்து நிருபனாகச் செல்வான். அவனால் குறித்துச் செல்லப்படும் சம்பவங்கள் மறுநாள் பத்திரிகையில் மிக நல்ல முறையில் தெளிவாக வெளிவரும். கவர்னரையோ, பிற சர்க்கார் மெம்பர்களையோ அல்லது வெளிநாட்டு அரசியல் நிபுணர்களையோ பேட்டி கண்டு பேசி விஷயங்களைக் கிரகித்துக் கொண்டு வருவதற்கு நமது கலியாண சுந்தரனையே ஆசிரியர் அனுப்புவார். பத்திரிகைத் தொழிலில் எவ்வளவு நிபுணனோ அவ்வளவுக் கவ்வளவு அவன் வெளித் தோற்றத்தில் அசட்டுச் சப்பன் போலக் காணப்படுவான். ஆனால் அவன் பேரழகன்; நல்ல உடற்கட் டமைந்தவன். அவனுக்கு ஏறக்குறைய இருபத்தைந்து வயதிருக்கும்.

சிறந்த அழகும், கம்பீரத் தோற்றமு மிருந்தும் அசடன் போலக் காணப்படுவதற்குக் காரணம், எந்த விஷயத்தைப் பற்றியேனும் அவன் மூளை ஆழ்ந்து ஆராய்ந்து கொண்டிருப்பதும், சதா அவன் சிந்தனைக் கிரந்தனை யிருப்பதுமே யாகும். மேலும், சமீபத்தில் ஏற்பட்ட இந்தியா சட்டசபைத் தேர்தலின்போதும், அதற்குப் பின்னர் அடுத்தடுத்து ஏற்பட்ட சென்னை சட்டசபைத் தேர்தலின் போதும் நடைபெற்ற காங்கிரஸின் தீவிர தேர்தல் பிரசாரங்கள் அவன் மூளையைக் கலக்கிவிட்டன. அதிலும், ஸ்ரீஜத் சத்தியமூர்த்தியின் வீராவேச இடிமுழக்கப் பிரசங்கங்கள் அவனது மூளையை முற்றும் கவர்ந்துவிட்டன. அப் பிரசங்கங்களிலேயே அவனது அறிவு தோய்ந்து போயிருந்ததால், அவன் அவைகளைப் பற்றியே கனவு கண்டு கொண்டு இருந்தான்.

— எனவே, வழக்கம்போல் அன்று காலை பத்து மணிக்குப் பத்திரிகாலயத்துக்கு வந்து தன் அறையை யடைந்து, 'இன்று ஆசிரியர் எங்கு போகச் சொல்லுகிறாரோ' என் ஆசிரியர் கட்டளையை எதிர்பார்த்து அமர்ந்திருந்தவன், எண்ணத்தின் மிகுதியால் தன்னை மறந்து உணர்ச்சியின் வேகத்தால் உந்தப்பட்டு ஸ்ரீஜத் சத்தியமூர்த்தியைப் போலவே முதல்தரமான ராஜீயப் பிரசங்கஞ் செய்ய ஆரம்பித்து விட்டான். உணர்ச்சியின் வேகம் உச்சநிலையை யடைந்து, மெள்ள மெள்ளக் கீழிறங்கிய பிறகே அவன் தனது சித்தசபலத்தின் சேஷ்டையை உணர்ந்து புன்னகை கொள்ளலானான்.

இவ்விதம் தனது பைத்தியக்காரச் செய்கையை நினைத்துச் சிரித்தவண்ணம் நாற்காலியை விட்டெழுந்து அறையின் சுவற்றில் மாட்டப்பட்டிருந்த தேசத்தலைவர்கள், அரசியல் நிபுணர்களது படங்களைப் பார்த்தவாறே அறைக் கதவை யடைந்து அதைத் திறக்க முயன்றான்.

இதுவரை இவனது செயலை அறைக்கு வெளியில் கதவோரத்தில் நின்று கவனித்துக்கொண்டிருந்த ஆசிரியர் திரு. ஜெகதீச ராமநாதனும், தலைமை யுதவி யாசிரியர் திரு. துரைராஜனும், கலியாணசுந்தரன் கதவைத் திறந்ததுமே, அவனை நோக்கி, "பேஷ்! முதல்தரமான பிரசங்கம்! அடித்துத் தள்ளிவிட்டாயே. கலியாணம்!" என்று கூறிக் கை கொட்டி விழுந்து விழுந்து சிரிக்கலாயினர். எதிர்பாராதவாறு இவர்களைக் கண்டதும்—அதுவும் அவர்கள் தனது பைத்தியக்காரச் செயலை இதுவரை மறைந்திருந்து கவனித்திருந்தார்களென்று அறிந்ததும், கலியாணசுந்தரன் ஒருபுறம் திகைப்பும், மற்றொருபுறம் வெட்கமுங் கொண்டான். ஆகவே, அவனது தலை தாழ்ந்தது.

"என்ன கலியாணம்! வெகு மும்மரமாகப் பிரசிங்கம் நடந்தாற்போலிருக்கிறது. உனது கோடைவிடி முழக்கத்தில் எங்கு ஆபீஸ் கட்டிடமே இடிந்து விழுந்துவிடுமோ என்றுகூட நான் பயந்துபோனேனே!" என்று கூறிக் கொண்டே ஆசிரியர் அவனெதிரே வந்தார்.

அவரைப் பின்பற்றி வந்த தலைமை உதவியாசிரியர், "அவரென்ன செய்வார் ஸார், பாவம்! இந்த காங்கிரஸ் தேர்தல் சண்டமாருதப் பிரசாரம் அவரை இவ்விதம் பைத்தியங் கொள்ளச் செய்துவிட்டது................" என்று புன் சிரிப்போடு கூறினர்.

கலியாணசுந்தரன் ஒன்றுமே வாய திறக்கவில்லை. ஆசிரியர்களுடைய சிரிப்பெல்லாம் ஒருவாறு ஓய்ந்தபிறகு தலைமையாசிரியர் கலியாணசுந்தரனை நோக்கி, "கலியாணம்! இன்று நீ எங்கு செல்ல உத்தேசித்திருக்கிருய்? சென்னை சட்டசபைக் கூட்டம் இன்று ஆரம்பமாமே! போய் வருகிருயா?" என்று விநயமாக வினவினர்.

கலியாணசுந்தரன், "தங்கள் உத்தரவுப்படியே" என்று கூறிய வண்ணம், கோட்டை யெடுத்து மாட்டிக் கொண்டு, மேஜைமீதிருந்த நோட் புக்கையும், பென்சிலையும் பாக்கெட்டில் செருகியவாறே வெளியே நடந்தான். ஆசிரியரும், தலைமை யுதவியாசிரியரும் கலியாணசுந்தரனிடம் தங்களுக்குள்ள அன்பைக் கண்களில் வெளிப்படுத்தியவாறு அவன் செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்றனர்.

மேன்மாடியிலிருந்து கீழிறங்கிய கலியாணசுந்தரன் தனது மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டு மவுண்ட் ரோட் வழியாகக் கோட்டையை நோக்கிச் சென்றான்.

சென்னை நகரம் ஜனநடமாட்டம் நிறைந்ததாதலால், வண்டிப் போக்குவரத்து சிரமமின்றிச் செல்வது அசாத்தியம் என்பது நகரி லுள்ளவர்களுக்குத் தெரிந்த விஷயம். ஆதலால், வண்டிகளோ, மனிதர்களோ தாராளமாகச் செல்ல முடியாது. அதிலும் வியாபார ஸ்தலங்களும், பெரிய பெரிய கம்பெனிகளும், ஆபீஸ்களும் உள்ள மவுண்ட் ரோட் போன்ற (சதா ஜன நடமாட்டம் மிகுந்துள்ள) ராஜ பாட்டை வழியாக, கலியாணசுந்தரன் சிந்தனைக்கிரந்தனைய் மோட்டார் சைக்கிலில் சென்றுகொண்டிருந்தான். அவன் மனம் எதையோ தீவிரமாய் யோசித்தவாறு உள்ளுக்குள் வேலை செய்துகொண்டிருந்தாலும், பாதையில் செல்லும் வழிப்போக்கர்கள் ஒரு பக்கத்திலிருந்து மற்றொருபக்கம் கடக்க முயலும் அவசரத்தில் எதிரே வரும் வண்டிகளைக் கூட கவனியாது ஓடி வருவதனால் ஏற்பட்ட நெருக்கடியையும், கார்கள் 'நான் முந்தி; நீ முந்தி' என ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு ஒன்றையொன்று மீறிப் போகவேண்டி ஒழுங்காகச் செல்லவேண்டிய பக்கத்தை விட்டுத் தவறாக வேறு பக்கஞ் செல்வதனால் உண்டான நெருக்கடியையுஞ் சமாளித்துக்கொண்டும் ஹார்ன் அடித்துக் கொண்டும் மிக எச்சரிக்கையாகவே போய்க் கொண் டிருந்தான்.

இவ்வாறு சென்று கொண்டிருந்த கலியாண சுந்தரன் ஸர். தாமஸ் மன்ரோ உருவச் சிலையைத் தாண்டி, கோட்டை வாராவதியைக் கடந்து கோட்டையினுள் போகுஞ் சமயத்தில், மேற்கே ஸர். தியாகராஜ செட்டியார் ரோட் வழியாக, வேகமாக வந்துகொண்டிருந்த பேபி ஆஸ்டின் காரொன்று நாற்சந்தி நடுவில் பீட் நிற்கும் கான்ஸ்டேபிள் காட்டிய சைகையைக் கூடக் கவனியாது, மோட்டார்

சைக்கில் மீது மோதியது. இதைக் கண்ட வழிப்போக்கர்கள் "ஆ! ஆ!! விபத்து! ஆள் போய்விட்டான்!" என வாய்விட்டுக் கூவினர். பீட் கான்ஸ்டேபிள் ஒரு கணம் அப்படியே திகைத்து நின்றுவிட்டான். பின்னும், முன்னும் வந்துகொண்டிருந்த மோட்டார் கார்களும், மற்ற வண்டிகளும் 'கர்' எனச் சப்தஞ் செய்துகொண்டே திடீரென அப்படி யப்படியே நின்றுவிட்டன. இதற்குள் நாலா பக்கமுஞ் சென்றுகொண்டிருந்த மக்கள் சம்பவம் நடந்த இடத்துக்கு வந்து குழுமிவிட்டனர்.

அந்தமட்டும் நல்லகாலம். பேபி ஆஸ்டின் கார் வாராவதி பக்கமாகத் திரும்பும் நோக்கத்தோடு வந்த வேகத்தில், மோட்டார் சைக்கிலின் மீது மோதி அதைச் சேதப்படுத்தி, அதன்மீது அமர்ந்திருந்த கலியாண சுந்தரனையும் ஆபத்துக்காளாக்கி யிருக்கும். தெய்வச் செயல்! எவ்வித அசம்பாவிதமோ, கோர சம்பவமோ நேரவில்லை. மறுவிநாடி நிகழப் போகும் நெருக்கடியைச் சிறிதும் எதிர் பாராத கலியாண சுந்தரன், திடீரென மிகச் சமீபத்தில் ஒரு கார் தன்னை மோதுவதுபோல் வருவதைக் கண்டதும், மெய் விதிர் விதிர்த்துப் போனன். அவன் மோட்டார் சைக்கிலின் 'ஹாண்டிலை'ப் பிடித்திருந்த கைகளும் நடுநடுங்கிப் பிடியை நெகிழவிட்டன. இதற்குள் பேபி ஆஸ்டின் காரை ஓட்டிக் கொண்டுவந்த ஆசாமி, மோட்டார் சைக்கிலைச் சமீபிக்கும் சமயத்திலேயே நெருக்கடியான நிலைமையை உணர்ந்து திடீரென 'பிரேக்' போட்டுக் காரை நிறுத்த முயன்றார். இவ்விதம் திடீரென 'பிரேக்' போட்டதனல், கார் பெரிய சப்தஞ் செய்துகொண்டு சிறிது தூரஞ் சென்று நின்றது. கலியாண சுந்தரன் கைப்பிடியை நெகிழவிட்டு மோட்டார் சைக்கில் ஒருவிதமாகச் சாய்வதற்கும், கார் 'பிரேக்'

போட்ட வேகத்தில் சில அடி தூரம் வந்து நின்றதற்குஞ் சரியாக இருந்தது. இரண்டுக்கு மிடையே ஒரு அங்குலங் கூட இல்லை. கலியாண சுந்தரன் கைப்பிடியை நெகிழ விட்டு மோட்டார் சைக்கிலைச் சாய்க்கா திருந்திருந்தாலும் கார் சிறிது உராய்ந்தாயினு மிருக்கும். 'ஹாண்டிலை'ப் பிடித்திருந்த பிடி நழுவி மோட்டார் சைக்கில் கீழே விழப் போகுஞ் சமயத்தில், கலியாண சுந்தரன் தன் நிலையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு அதைக் கீழே விழாவாறு பிடித்துக்கொண்டான்.

கலியாண சுந்தரன் காரை இவ்வளவு கண் மூடித்தன மாகவும், வேகமாகவும் ஓட்டி வந்தது யார் எனப் பார்த் தான். ஒரு பெண்மணி யென்று அறிந்ததும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டதுபோலாயிற்று. அவன் ஆச்சரியத் தோடு அவளை மீண்டு மொருமுறை நோக்கினான். ஆம். அக் காரில் டிரைவர் ஸ்தானத்தில் அமர்ந்திருந்தவள் ஒரு மங்கையே. அவள் ஒருத்தியே அதில் இருந்தாள். அவளுக் குச் சுமார் பதினெட்டு வயதிருக்கும். மாற்றில்லாப் பசும் பொன்னால் இயற்றப்பட்ட சுவர்ண விக்கிரகமோ அல் லது மிக உயர்ந்த யானைத் தந்தத்தில் கடைந் தெடுக்கப் பட்ட சித்திரப் பதுமையோ எனப் பார்ப்பவர் கண்டு அதிசயிக்கத்தக்க பேரழகைப் பெற்றிருந்தாள். செல்வத்திற் சிறந்த பாரஸீக மாதர்கள் உடை யுடுத்தி யிருப்பதுபோல் அவள் நாகரிகமாக ஆடை யணிந்திருந்தாள். அவள் சேலை முந்தானையால் இட்டிருந்த முக்காடு நெற்றியின் பெரும் பாகத்தை மறைத்திருந்தது. காதுகளில் வைரத் தோடு களும், கைகளில் நாலைந்து பொன் வளையல்களும், இடது கையில் பொன்னாலாய ஒரு சிறு கடிகாரமும், கழுத்தில் தங்கச் சங்கிலி யொன்றும் அவள் அணிந்திருந்தாள். அவ



.........காரை வேகமாக ஓட்டி வந்தது யார் எனப் பார்த்தான் கலியாணசுந்தரன்.

—பக்கம் 8.

ளது இயற்கையான பேரழகுக்கு அவை திருஷ்டி பரிகாரஞ் செய்வதுபோலிருந்தன. தன்னை வியப்போடு நோக்கிய கலியாண சுந்தரனை அந் நங்கையும் நோக்கினாள். ஆனால், எதிர்பாராது நேர விருந்த விபத்தை யுத்தேசித்து அவள் பதைபதைப்பு அடைந்ததாகவோ, மனக்கலக்கம் உற்ற தாகவோ தோன்றவில்லை. அவளது முகம் யாதொரு சலனத்தையுங் காட்டவே யில்லை. அவள் மோட்டார் 'ஸ்டீரிங்'கைக் கரத்தில் பிடித்துக்கொண்டு அமைதியாகவே உட்கார்ந்திருந்தாள். இந் நிகழ்ச்சியை விவரித்துச் சொல்வ தற்கு இவ்வளவு நேரமாயிற்றே யொழிய, இச் சம்பவம் நிகழ்வதற்கு அதிக நாழிகை யாகவில்லை. எல்லாம் இரண் டொரு நிமிடங்களில் நடந்து முடிந்து விட்டன.

இதற்குள் வழிப்போக்கர்களும், அங்குள்ள ஆலமரங் களின் கீழ் வசிக்கும் ஏழை மக்களும், மாடு மேய்க்கும் சிறுவர்களும், புல் வெட்டும் மாதர்களும் காரையும் சைக் கிலையுஞ் சூழ்ந்து கொண்டனர். காரில் அமர்ந்திருந்த நங்கை மக்கள் கூட்டத்தை ஒருவிதமாகக் கவனித்தாள். இதனிடையே, பீட் கான்ஸ்டேபிள் திகைப்பு நீங்கித் தன் னைச் சமாளித்துக்கொண்டு அவசர அவசரமாகக் காரை நோக்கி வந்தான். அவன் வருங் குறிப்பை யறிந்து கொண்டவள் போல் தானாகத் தலையை யாட்டிக்கொண்ட அம்மங்கை எதிர் பக்கம் நோக்கினாள். அப்போது தான் கலியாண சுந்தரன் தன் மோட்டார் சைக்கிளை காருக்கு எதிரினின்றும் நகர்த்தி அப்புறப்படுத்திச் சிறிது தூரத்தில் கொண்டுபோய் நிறுத்தினான். மக்களெல்லாம் அப் பெண் மணியையே ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்த னர். தூரச் சென்ற கலியாணசுந்தரன் பார்வையும் இவள் மீதுதான் இருந்தது. தனக்கு விபத்தை யுண்டாக்க விருந்த

அவளைக் குறித்து தனக்குள்ளாகவே முணு முணுத்துக் கொண்டிருந்தான். "எல்லாம் அந்த மேனாட்டுப் போலி நாகரிகம் பண்ணும் கூத்து" என்றெண்ணி அதைச் சபித் தான்.

கான்ஸ்டேபிள் கார் நெம்பரைக் குறித்துக்கொள்ளு முன் அப் பெண்மணி யிருக்கும் பக்கமாக வந்து, லைசென்ஸை எடுத்துக் காட்டும்படி கூற வாயெடுத்தான். அதேசமயத்தில் அம் மங்கை யாரும் எதிர்பாராத வகை யாகக் காரை 'ஸ்டார்ட்' செய்து, விர்ரென விட்டாள். காரின் எதிரே நின்றிருந்தவர்க ளெல்லாங்கூட அலறிப் போய் காருக்கு வழிவிட்டு விலகி நின்றனர். சிறிது நேரத் திற்கெல்லாம் கார் தெற்கு நோக்கிச் சிட்டாய்ப் பறந்து டது. எல்லோரும் வாயைப் பிளந்துகொண்டு நின்றனர். கான்ஸ்டேபிள் திகைத்துப்போய் நின்றுவிட்டான். கலி யாணசுந்தரன் வியப்பே வடிவமாயினன். எதிர்புறத்தில் நின்ற கார்களில் இருந்த கனவான்கள் அப் பெண்மணி யின் தீரத்தையும் சமயோசித புத்தியையும் பாராட்டி வியந்து பேசினர். பின்புறத்துள்ள கார்களில் இருந்தவர் கள் கான்ஸ்டேபிள் ஏமாந்த விதத்தை யெண்ணிச் சிரித்து அவனைக் கேலி செய்யலாயினர். ஜனங்களும், கான்ஸ்டேபி ளும் அப்பெண்மணியின் கார் சென்ற திக்கையே பார்த்து நின்றனர்.

இப் பெண்மணியின் துணிகரச் செய்கையைக் கண்டு கலியாண சுந்தரன் மற்றெல்லாரையும் விட மிகவும் ஆச்சரி யங் கொண்டான். அவனது வாழ்க்கையில் இம்மாதிரி யான சம்பவம் நடந்தது இதுவே முதல் தடவை யாதலால், "இக்காலத்துப் பெண்கள் எவ்வளவு நெஞ்சுரமும், சாக ஸச் செயலும் சாமர்த்தியமும் கொண்டவர்களாய்ப்

போய் விட்டார்கள்? அடேயப்பா! எதிர் பாராதவாறு எக்க சக்கமாக மாட்டிக்கொண்டால், இவ்விதம் தப்ப வேண்டுமென்று எந்தத் தைரியமுள்ள—சாமர்த்தியமுள்ள ஆடவனுக்குங்கூட தோன்றி யிருக்காதே! இந்தப் பெண் மணியின் சமயோசித புத்தியும் தைரியமுந்தான் என்னே!" என்று அவன் வியந்து நின்றான்.

ஒரு நாகரிக நங்கையினால் நேர்ந்த விநோத சம்பவம், அதைக் கண்ட எல்லோருக்கும் ஒருவித கலகலப்பை யுண்டு பண்ணினாலும், சிறிது நேரத்திற்கெல்லாம் அவரவர்கள் அலுவல்களைக் கவனிக்க முற்பட்டார்கள். மேற்படி சம்பவத்தால் சில நிமிடங்கள் போக்குவரத்து தடைப்பட்டதால் நாலா பக்கங்களிலும் இருந்து வந்த மோட்டார் கார்களும், மற்றும் வண்டிகளும் அப்படி யப்படியே நின்று விட்டனவென்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறோ மல்லவா? அக் கார்களில் உட்கார்ந்திருந்த கனவான்கள் துரிதப் படுத்தவே, இன்னமும் அப்பெண்மணி சென்ற திக்கையே முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்த பீட் கான்ஸ்டேபிளின் கவனத்தைத் திருப்புவதற்காக டிரைவர்கள் ஹாரன்களை யமுத்தி, "பாம்! பாம்!!" என ஊதிச் சப்தஞ் செய்தனர். இச்சப்தம் காதுகளில் தாக்கிய பிறகுதான், கான்ஸ்டேபிள் தன்னினைவு பெற்றான். தான் 'ரைட்' கொடுக்காததனால், நாலா பக்கமும் வண்டிகள் வந்து தேங்கி யிருக்கின்றன வென்பதை யுணர்ந்ததும், அவனது உடல் பதறியது. ஒரு சாதாரண மங்கை நம்மை ஏமாற்றிச் சென்று விட்டாளே என்ற அவமானம் ஒரு பக்கம்; பகல் கோட்டை விட்டதாக அங்குள்ளார் கூறிய ஏளனச் சொல்லினால் ஏற்பட்ட ரோஷம் மற்றொரு பக்கம் அவனை வாட்டியது. எனவே, அக் கோபத்தோடு, ஆஸ்டின்

காரில் சென்ற அப் பெண்மணியை வாயில் வந்தவாறு வைதுகொண்டே, தான் 'பீட்' நின்றிருந்த இடத்துக்கு வந்து நின்று ஒவ்வொரு காராக— வண்டியாக—'ரைட்' கொடுக்கலானான். அப்போதும் அவன் வாய் முணுமுணுத்துக்கொண்டே யிருந்தது. நாலா பக்கமும் இருந்து அப்போதுதான் கார்களில் வந்த சில கனவான்கள் அங்கு நடந்த விஷய மென்னவென அறியாமலே, அநாவசியமாக, போக்குவரத்தைத் தடைப்படுத்தி வண்டிகளை நிறுத்தியிருக்கிறான் என்று கருதிக் கான்ஸ்டேபிளைக் கண்டபடி பேசிக்கொண்டே சென்றனர். அங்கு கூடியிருந்த வழி போக்கர்களும் ஜனங்களும் வேறு சும்மா கலைந்து செல்லாமல், அப் பெண்ணின் சாமர்த்தியத்தையும் துணிகரச் செயலையும் பலவாறு வியந்து பேசிக்கொண்டே சென்றவர்கள், அவளிடத்து ஏமாந்ததற்காகக் கான்ஸ்டேபிளைச் சுட்டிக் காட்டிப் பரிகாசஞ் செய்துகொண்டுஞ் சென்றார்கள். இவை யெல்லாம் கான்ஸ்டேபிளுக்கு மேலும் கோபத்தையும், ஆத்திரத்தையும் ஊட்டியது. அக்கோபத்தை அவன் சாதாரண ஜட்கா வண்டிக்காரர்கள் மீதும், ரிக்ஷாக்காரர்கள் மீதும் காட்டி எறிந்து விழலானான். இப்புத்தி தடுமாற்றத்தால் அவன் சிறிதுநேரம் தாறுமாறாகக் கூட 'ரைட்' கொடுத்து குழப்பத்தை விளைவித்தான். வெகு நேரத்துக்குப் பிறகே அவன் தன் தடுமாற்ற நிலையைச் சமாளிக்கலானான்.

கலியாணசுந்தரனோ, தனக்கு விபத்து விளைக்கவந்த ரமணியை மனத்துக்குள் சபித்துக்கொண்டே தன் மோட்டார் சைக்கிலை ஒழுங்கு படுத்தலானான். பிறகு, அவன் மோட்டார் சைக்கிளில் ஏறிக் கோட்டைக்குள் நுழைந்து சட்டசபைக் கட்டிடத்தை யுடையலானான்,

அவனது இப் போக்கிலிருந்து, அவனுக்கு அப்பெண்ணின் மீது வெறுப்புணர்ச்சி யேற்பட்டதாகத் தெரிந்ததே யொழிய, அவளது அழகிய உருவம் அவனுடைய உள்ளத்தில் பதிந்ததாக—மனதைக் கவர்ந்ததாகத் தெரியவில்லை. சைக்கிலில் ஏறிச் சில கஜதூரம் போகும் வரைதான், கல்யாணசுந்தரனுக்கு இச் சம்பவம் நினைவில் உழன்று கொண்டிருந்தது. சட்டசபை மண்டபத்தில் நுழைந்தானோ இல்லையோ, அவன் இவற்றையெல்லாம் அடியோடு மறந்துவிட்டான். சட்டசபை மெம்பர்களின் வாதப் பிரதிவாதங்களும், தலைவர் சட்ட நுணுக்கமான கட்டளைகளும், சர்க்கார் மெம்பர்களின் குதர்க்க பிரசங்கங்களும் அவன் மனதைக் கவர்ந்துவிட்டன. அவ் விசித்திர வுலகில் சஞ்சரிக்க ஆரம்பித்த அவன், தன்னைச் சூழ்ந்துள்ள சடப் பிரபஞ்சத்தை மறந்துவிட்டதில் வியப் பொன்றுமில்லை யல்லவா! எனவே, அவன் அன்றைய பத்திரிகையில் சட்டசபை நடவடிக்கைகளைச் சவிஸ்தாரமாக வெளியிட்டது தவிர, காலையில் நடந்த மோட்டார்—சைக்கில் விபத்து சம்பவத்தைப்பற்றி ஒரு வரிகூட வெளியிடவில்லை யென்றால் வாசகர்கள் ஆச்சரியப்படாமல் இருக்கமாட்டார்கள்.

* * * *

இனி, ஆஸ்டின் காரில் சென்ற ஆரணங்கைக் கவனிப்போம். அந்த நவநாகரிக நங்கை யார்? எங்கு செல்வதற்கு அவள் அவ்வளவு வேகமாகக் காரை யோட்டிக் கொண்டு வந்தாள்? இதுபோன்று எழும் கேள்விகளுக்கெல்லாம் அம் மங்கையைப் பின் தொடர்ந்து சென்றால் தான் நாம் பதில் பெறமுடியும்? அவளைப்பற்றி அறியமுடியும்?

ஆனால், அப் பெண்மணி உடை யுடுத்தி யிருக்கும் தோரணை அதாவது, பார்ஸிக மாதர்போல் சேலை முந்தானை

யைத் தலையில் முக்காடிட்டு முகத்தின் பாதி பாகத்தை மூடி யிருக்கும் தோரணை தன்னை யாரும் இன்னாரென அடை யாளங் கண்டுகொள்ளக் கூடாதென்று கருதுவதுபோல் காணப்பட்டது. அவள் சம்பவம் நடந்த இடத்தில் காரை நிறுத்தி யிருந்தபோதுகூட காற்றினால் அடிக்கடி முகத்தி னின்றும் விலகிய சேலையின் தலைப்பைப் புருவத்துக்குக் கீழ் வரை இழுத்து இழுத்து விட்டுக் கொண்டிருந்தாள். ஆனால், நீலக் கடலில் நீந்திக்கொண்டிருந்த சேல் மீன் களைப் போன்ற அவளது செவ்வரி படர்ந்த கண்கள் மற்ற வர்களைக் கூர்ந்து கவனித்தன. அம் மை விழிகளின் கூரிய பார்வை நோக்குபவர் உள்ளங்களை ஊடுருவிப் பாய்ந்து செல்லுந் தகைமை வாய்ந்தனவா யிருந்தன.

அப்பெண்மணி, பீட் கான்ஸ்டேபிளுக்கும், மற்றவர் களுக்கும் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு ஒரே பாய்ச்ச லாய் பாய்ந்து வேகமாகக் காரை விட்டுக்கொண்டு சென்ற வள், ஸர். மன்ரோ துரையின் உருவச்சிலை இருக்கு மிடத்தைத் தாண்டியதும், வாய்விட்டுக் கல கலவெனச் சிரிக்கலானாள். அவ்வோசை வெங்கலமணி 'கிளிங் கிளிங்' என அடித்து ஓசை செய்வதுபோல் இனிமையாக இருந் தது. அவள் தனது சமயோசித புத்தியையும், தைரியத்தை யும் தானே மெச்சிக்கொண்டாள் போலும்!

ஜிம்கானா மைதான கிளப்புக்குச் சமீபமாக வந்ததும் அவள் தான் விட்டுவந்த மோட்டார் காரின் வேகத்தை அடக்கிக் கொண்டு சாதாரணமாக ஓட்டலானாள். ஏனென் றால், அங்கு 'டிராபிக்' கான்ஸ்டேபிள் 'பீட்' நின்றுகொண் டிருக்கிறா னல்லவா! அவள் வெல்லிங்டன் வாராவதியைத் தாண்டி கவர்னர் மாளிகை பக்கமாகக் காரைச் செலுத் திக்கொண்டே சென்றாள், பி. ஆர். அண்டு சன்ஸைச் சமீ

பித்ததும், அவள் காரை மிக மெதுவாக ஓட்டிய வண்ணம், அக் கம்பெனியை மிகக் கவனமாகப் பார்வை யிட்டுக் கொண்டே சென்ருள். என்ன நினைத்தாளோ! பி. ஆர். அண்டு சன்ஸைக் கடந்து சிறிதுதூரஞ் சென்றதும், இரு பக்கத்து வண்டிகளின் போக்குவரத்தைக் கவனித்துவிட்டு, காரை மீண்டும் வடக்கு பக்கமாகத் திருப்பிச் செலுத்த லாளுள்.

அவ்வாறு செலுத்தியவள் ஸ்பென்ஸர் பர்னிச்சர் கம்பெனியைத் தாண்டியதும், நேரே செல்லாது நேப்பியர் பார்க்கு வழியாகக் காரை ஓட்டிளுள். மோட்டார் கார் போய்க்கொண்டே யிருந்தது. இதற்கிடையே அப் பெண் மணி பேரழகு வாய்ந்த முகத்தை மறைத்துக்கொண்டிருந்த முக்காட்டை யெடுத்து விட்டாள். மார்பின்மீது குத்தி யிருந்த தங்கத்தாலாய "புரூச்"சை யெடுத்து விட்டு, சேலை யைத் திருத்திக்கொண்டு தலைப்பை அழகாகக் கொசுவிப் பின்பக்கம் போட்டுத் தொங்கவிட்டாள். அதற்கப்புறம் "புரூச்"சை மீண்டுங் குத்திளுள். பிறகு, காதுகளில் இலங் கிக் கொண்டிருக்கும் வைரத்தோடுகளை மறைத்து கொண் டிருந்த தலைமயிரை (காதணி தெரியாதபடி தலைமயிரை முன் கொண்டுவந்து வாரி விடுவது நவநாகரிகச் சின்னங்களி லொன்ருகும்.) கோதிக் காதுகளுக்கு மேலே வாரிவிட்டுக் கொண்டாள். இவ்வளவு ஒப்பனைகளும் ஆன பிறகு, அவ ளுக் கெதிரே காரி னொருபுறத்தில் அமைக்கப் பட்டிருந்த கண்ணுடியில் குனிந்து பார்த்த வண்ணம் மேலும் சில சீர்திருத்தங்களைச் செய்து கொண்டாள். ஒரு கையால் மோட்டார் ஸ்டீரிங்கைப் பிடித்து ஓட்டிக்கொண்டே மற் ருெரு கையாலேயே இவ்வளவு மாற்றங்களையுஞ் சாமர்த் தியமாகச் செய்துகொண்டாள்.

இதற்குள் கார் சிந்தாதிரிப்பேட்டை கூவம் வாரா வீதியைக் கடந்து ரிப்பன் கட்டிடத்தைச் சமீபித்து விட்டது. கடியாரத்தில் மணியைப் பார்த்தாள். அப்போது 11-30 மணியா யிருந்தது. அதைப் பார்த்து தலையசைத்து விட்டு அவள் காரைக் கிழக்கு நோக்கிச் செலுத்திக் கடைசியாக எஸ்பிளனேட்டுக்கு எதிரிலிருந்த ஒரு பிரம்மாண்டமான கட்டிடத்தண்டை நிறுத்தினாள்.

அக் கட்டிடத்திற்குள் சீமான்களும் சீமாட்டிகளும் போய்க் கொண்டும், வந்து கொண்டு மிருந்தனர். அக் கட்டிடத்தின் முன் பக்கத்தில் "குபேர பட்டினம் குமரப்ப செட்டியார் அண்டு சன்ஸ்," வைர நகை வியாபாரிகள்—என்று ஃபான்முலாம் பூசிய எழுத்துக்கள் பதிக்கப்பட்ட போர்டு தொங்கிக்கொண்டிருந்தது. குமரப்ப செட்டியார் அண்டு சன்ஸ் நகைக் கடை சென்னை நகரிலேயே மிகவும் பிரசித்தி பெற்றது. மிக விலையுயர்ந்த வைர நகைகளும் நவமணிகளும் அழகிய சித்திர வேலைப்பா டமைந்த ஆபரணங்களும் வேண்டுமென்று விரும்பும் செல்வச் சீமான்களெல்லாம் இக் கடையைத் தான் நாடி வருவார்கள். கை தேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு செய்யப்படும் மிக அழகான நகைகளை விற்பவர்கள் என்பது மட்டுமல்ல; நாணயத்துக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்கள் என்பதே நகை வாங்குபவர்களால் முக்கியமாகக் கருதப் பட்டது.

அப் பெண்மணி தான் ஓட்டி வந்த பேபி ஆஸ்டின் காரை மேற்படி நகைக் கடைமுன் நிறுத்திவிட்டு அவ்விடத்தைப் பார்த்தாள். உடனே, அக் கட்டிடத்தின் முன் காவல் காத்துக் கொண்டிருந்த சீக்கியன் (அவனது இடையில் உரையோடு கூடிய கத்தி யொன்று தொங்கிக் கொண்

டிருந்தது.) ஓடி வந்து காரைத் திறந்து வழி விட்டு நின்று மரியாதை செய்தான். இம் மங்கை புன்சிரிப்பு கொண்டவளாய் மணிபர்ஸான தோல் பையை யெடுத்து இடது கரத்தில் மாட்டிய வண்ணம் காரை விட்டிறங்கினுள்.

அக் கட்டிடத்தின் மேன் மாடியில் நகைக் கடை இருந்ததால், நம் பெண்மணி கால்களில் அணிந்திருந்த ஊதா வெல்வெட் பட்டாலாகிய சிலிப்பர் 'கிர் கிர்' எனச் சப்தஞ் செய்ய, படிகளின் மீதேறி நடந்து மேன்மாடியை நோக்கிச் சென்ருள். அவள் உள் வாயிலில் நுழையும் போது நான்கு கூரிய கண்கள் அவளைக் கூர்ந்து நோக்கி அடி முதல் முடிவரை ஆராய்ந்தன.

———

# இரண்டாவது அதிகாரம்

## நகை வியாபாரியின் ஏமாற்றம்

உள் நுழையும் வாயிலின் முன்னே இரு பக்கங்களிலும் வர்ணக் கண்ணுடிகளால் அமைக்கப்பட்டிருந்த 'காமிரா'க்கள் இருந்தன. ஒவ்வொரு 'காமிரா'விலும் உள் பாகத்தில் ஆள் உயரத்துக்கு காலணு அகலத்தில் இரு வட்டமான துவாரங்கள் விடப்பட்டிருந்தன. சாதாரண சமயங்களில் அவ் விரு துவாரங்கள் ஒரு தகட்டினுல் மூடப்பட்டிருக்கும். வெளியில் இருந்து ஆள் வரும் அரவங் கேட்டவுடனே அந் நகைக் கடையின் காரியஸ்தர்கள் இருவர் ஒவ்வொரு 'காமிரா'வுக்குள் ஒவ்வொருவராகச் சென்று மேற்படி துவாரங்களேத் திறந்து அவற்றின் வழியாக நோக்கி, 'நகை வாங்க வருபவர் யார்? அவர் தகுதி முதலியன என்ன?' என்பதை முதல் பார்வையிலேயே ஆராய்ச்சி செய்து அளந்து விடுவர்.

படிக்கட்டுகளில் ஏறி உள் நுழைந்ததுமே வருபவரை வரவேற்க ஆட்கள் தயாராகக் காத்துக்கொண்டிருப்பர். மண்டபம் போன்றுள்ள பெரிய கூடத்துள் மூன்று வரிசைகளிலும் கண்ணுடிப் பெட்டிகளில் சிறிய நகைகள் அலங்காரமாக வைக்கப்பட்டிருக்கும். பெரிய பீரோக்களில் மிக விலே யுயர்ந்த பெரிய நகைக ளெல்லாம் பார்ப்பவர் கண்களேப் பறிக்கும் விதமாய் வரிசை வரிசையாக வைக்கப்பட்டிருக்கும். ஏதோ நகையோ அல்லது வைரம் முதலிய மணிகளோ வாங்க வந்தவரை முகமன் கூறிப் பல்லேக் காட்டிய

வண்ணம் இருவர் நகைகள் வைத்திருக்கு மிடத்துக்கு அழைத்துச் செல்வர். இதற்குள் 'காமிரா'களுக்குள் இருந்து, வந்த ஆளைக் கவனித்த காரியஸ்தர்கள் இருவரும் விரைந்து வந்து இவர்களோடு கலந்துகொண்டு, நகை வாங்க வந்தவர் போக்கிற்கும் தகுதிக்கும் ஏற்ப பேச்சு கொடுத்து எப்படியாகிலும் அவர் எந் நகைகளை யாகிலும் வாங்கும்படி செய்து விடுவர். அவர்களுடைய நயப்பான பேச்சுகளிலும், சாகஸச் சிரிப்பிலும் எப்பேர்ப்பட்ட சாமர்த்தியசாலிகளும் மயங்கி விடுவர்.

நம் பெண்மணி உள் நுழைந்த எடுப்பிலேயே தன் கயற் கண்களால் அவ்விடம் முழுவதையும் ஆராய்ந்து விட்டாள்.

"வாருங்கள் அம்மா! வாருங்கள்!!" என்று மிக விநயத்தோடு கைகளைக் காட்டி யழைத்தான் ஒரு சிப்பந்தி.

மற்றொரு சிப்பந்தி, "இப்படி வாருங்கள்; இந்த ஆசனத்தில் அமருங்கள். உங்களுக்கு என்ன வேண்டும்? நகைகளா? அல்லது வைரம் முதலிய நவமணிகளா? எந்த தினுசு நகை........" என்று இழுத்தான்.

இதற்குள் 'காமிரா'களுக் குள்ளிருந்து கவனித்த காரியஸ்தர்கள் வந்து விட்டார்கள். அவர்களில் ஒருவர் தூர வரும்போதே, "என்னடா மடையா! அம்மாளை நிற்க வைத்துப் பேசுகிறாயே! பெரிய இடத்து மனுஷாள் வந்தால் எந்த மாதிரி மரியாதையா நடந்துக்கணும்னு தெரியறதா! தூ! சோம்பேறித் தடியா! உள்ளே ஓடிப்போய் அந்த வெல்வெட் மெத்தை தைத்த நாற்காலியைக் கொண்டு வாடா!" என்று கோபங் கொண்டவர்போல் ஆர்ப்பரித்தார்.

"இந்த மடச் சாம்பிராணிகளைத் தொலைத்துடனும்ணு! என்ன சொன்னாலும் மண்டையி லேறமாட்டே னென்கிறதே!" என்று மற்றொருவர் முன்னவரோடு ஒத்தூதிவிட்டு, "அம்மா! என்ன வேண்டும் சொல்லுங்கள்; உடனே கொண்டுவரச் சொல்கிறேன்" என்று நம் பெண் மணியை நோக்கிக் கேட்டார். இவர்களது சாகஸச் செயலையும், ஆர்ப்பாட்டத்தையுங் கண்டு புன்னகை கொண்ட அப் பெண்மணி, "இருக்கட்டும்; நானே நகைகளைப் பார்வையிட்டு, கடைசியாக எனக்கு எது பிடிக்கிறதோ அதை ஆர்டர் கொடுக்கிறேன். உங்களுக்கு ஒன்றுஞ் சிரமம் வேண்டாம்" என்று பதில் சொன்னாள்.

"என்ன! எங்களுக்கா சிரமம்? நாங்கள் தான் காத்துக் கொண்டிருக்கிறோமே; வருபவர்கள் விருப்பத்தையறிந்து நடப்பதற்கு? அதற்காகத் தானே நாங்கள் முதலாளிகளால் நியமிக்கப் பட்டிருக்கிறோம்?—பெரிய இடத்து மனுஷாளாகிய உங்களுக்குச் சிரமம் ஏற்படக் கூடா தென்றே......................." என்று நீட்டிப் பேசிக் கொண்டே போனார் வயது சென்ற காரியஸ்தர்.

இவர்களது பேச்சைப் பொருட்படுத்தாது அப்பெண் மணி வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் நகைப் பெட்டிகளையும் பீரோக்களையும் பார்வையிட்டுக் கொண்டே போனாள். அவள் ஒரு பெட்டியண்டை, அல்லது பீரோ வண்டை நின்று ஏதோ ஒரு நகையை அல்லது மணிகளைக் கூர்ந்து கவனித்தால் போதும்; உடனே எதிர்பக்கத்தில் இவளோடேயே பின் தொடர்ந்து வரும் காரியஸ்தர்கள் "என்ன அம்மா? இந்த நகையா வேண்டும்? இதன் விலை ஐந்நூறு ரூபாய். இந்த வைரம் பாருங்கள். நீல நிறம் டால் அடிக்கிறது கண்களைப் பறிக்க வில்லையா? இதன்

கரூர் விலை ஆயிரத் திருநூறு. உங்களுக்கு வேண்டுமானால் ஆயிரத்துக்கு முடிக்கிறோம்..................” என்று அளக்க ஆரம்பித்து விடுவார்கள்.

நம் பெண்மணி இவற்றையெல்லாம் சாவதானமாகக் கேட்டுக் கொண்டே முக்கியமான நகைகளை மிக ஊக்கத்தோடு கவனித்தவாறு சென்றாள். இவ்விதஞ் சென்றாலும், அவள் காரியஸ்தர்களின் சாகஸப் பேச்சை ஆராயவும், அவர்களைக் கடைக்கணிக்கவும் மட்டுந் தவறவில்லை. இவ்வாறு பார்த்து வந்தவள் இரண்டாவது மாடியில் தூண் மறைவிலிருந்து தங்களை ஒரு ஆசாமி கவனிப்பதை தற்செயலாகக் கண்டு விட்டாள். இதை யறிந்ததும் அவள் தனக்குள் நகைத்துக்கொண்டு தலையை யாட்டினாள்.

பிறகு, அவள் ஒரு பெரிய பீரோவண்டை சென்றாள். அப் பீரோவின் உள்ளே மேல் பாகத்தில் மாட்டப்பட்டிருந்த மிக விலையுயர்ந்த வைரமாலையின் பிரகாசம் அவளது செவ்வரி படர்ந்த கண்களைப் பறித்தது. அவள் சிறிது நேரம் அவ் வைரமாலையையே பார்த்துக்கொண்டு நின்றாள். அவள் பின்னேயே வந்துகொண்டிருந்த காரியஸ்தர்கள் இச்சமயம் அப் பெண்மணியின் பார்வை விழுந்திருக்கும் வைரமாலை வேண்டுமா என்றோ, அதன் தராதரம், மதிப்பு முதலியன இத்தகையது, இன்ன விலை யுடையது என்றோ அவளிடங் கூறவில்லை. பெரிய் பெரிய கோடீஸ்வரர்களும், லட்சாதிபதிகளுமே வாங்கக் கூடிய மிக விலையுயர்ந்த வைர மாலையை இப் பெண்மணி வாங்குவாளா? வாங்கக் கூடிய சக்தி அவளுக்கு இருக்கிறதா? என்று அவர்கள் சந்தேகங் கொண்டனர் போலும்! அதனால்தான் அவர்கள் ஒன்றும் பேசாது தயங்கி அவள் குறிப்பை நோக்கி நின்றனர்.

காமராசர் பல்

சில விநாடிகள் வரை பீரோவினுள் மாட்டி யழகாகத் தொங்க விடப்பட்டிருந்த வைரமாலையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அப் பெண்மணி திடீரென அறிவு தெளிந்து, தன் பார்வையை வைரமாலையையே யல்லாது மற்ற ஆபரணங்களின் மீதும் செலுத்துவது போல் பொது நோக்கு நோக்கிப் பாவனை செய்யலானாள். இதனிடையே தன் கடைக்கண்ணால் காரியஸ்தர்களை ஒருவிதமாக நோக்கினாள். அவர்களது அப்போதைய மன நிலையை அந் நொடியில் ஒருவாறு அளந்து விட்டாள். அக் காரியஸ்தர்கள் தன்னை அவ் வைரமாலை வேண்டுமா என்று கேட்காததன் உட்கருத்தையும் தெரிந்துகொண்டு உள்ளுக்குள் சிரித்தாள்.

எனவே, அப் பெண்மணி அவ்விடத்தில் சுழன்று கொண்டிருக்கும் மின்சார விசிறியின் காற்றினால் சுருண்டு முன்னே வந்து நெற்றி மீது விழுந்துகொண்டிருந்த கூந்தலைக் கையால் நீவி விட்டவாறே, ஒரு முறை சுற்று முற்றும் பார்க்கலானாள். இவள் நின்றிருந்த இடத்திற்குச் சிறிது தூரத்தில் சில கனவான்களும், பெண்மணிகளும் தங்களுக்கு வேண்டிய நகைகளையும், நவமணிகளையும் பொறுக்கி யெடுத்து வியாபாரஞ் செய்துகொண் டிருந்தனர். கடையிலுள்ள மற்ற சிப்பந்திகளும் அவர்கள் தேர்ந்தெடுத்துக் காண்பித்த நகைகளுக்கும். ரத்தினங்களுக்கும், விலை கூறிப் பேரஞ் செய்துகொண் டிருந்தனர். சுற்றுப்புற நிலைமையைக் கவனித்த நம் பெண்மணி வேறெங்கேயோ பார்ப்பது போல் மேன் மாடியை நோக்கினாள். வியாபார நிலைமையையும், கடை சிப்பந்திகள் வியாபாரத்தைக் கவனிக்கும் மாதிரியையும், நகை வாங்க வந்திருப்பவர்களின நடவடிக்கையையும் மறைவிலிருந்து கூர்ந்து கவனித்துக்

கொண்டிருந்த ஆசாமி, அச்சமயம் இப்படியும் அப்படியுமாக உலவிக்கொண்டே நிலைமையைக் கவனித்துக்கொண்டிருப்பதை அவள் அறிந்துகொண்டாள்.

சுற்றுப்புற நிலைமையை ஒரு பார்வையில் அளந்து அறிந்துகொண்ட நம் நங்கை, இடது கையில் தொங்கிக் கொண்டிருந்த மணி பர்ஸைத் தள்ளி விட்டுக்கொண்டே, "செட்டியார்வாள்! இதோ பீரோவில் வைக்கப்பட்டிருக்கும் வைரமாலையை எடுங்கள்; பார்க்கலாம்" எனப் பெருமிதத்தைத் தோற்றுவித்த வண்ணம், காரியஸ்தர்களில் வயது முதிர்ந்தவரை நோக்கிக் கேட்டாள்.

"என்னம்மா! அந்த வைரமாலையையா கேட்கிறீர்கள்? அதை நீ........ங்........க........ள் வா........ங்........கப்........போகிறீர்களா என்ன........?" எனத் தயக்கத்தோடு வினவினர் சின்ன காரியஸ்தர்.

உடனே நம் பெண்மணி புருவத்தை நெறித்து அச்சின்ன காரியஸ்தரை ஒரு மாதிரியாகப் பார்த்தவண்ணம், "நீர் கேட்பதைப் பார்த்தால், நான் இந்த வைர மாலையை வாங்கக்கூடிய யோக்கியதையில்லை என்று நினைப்பதாகவல்லவா தோன்றுகிறது! அப்படியானல், உம்முடைய கண்ணுக்கு........" எனக் கோபப்பட்டவள் போல் படபடப்பாகப் பேசிக்கொண்டே போனுள்.

இதற்குள் பெரிய காரியஸ்தர் இடைமறித்து, "கோபித்துக் கொள்ளாதீர்கள் அம்மா! அந்த ஆள் என்னமோ தெரியாத்தனமாய் உளறி விட்டான்...........அவன் கிடக்கிருன். நீங்கள் கேட்ட வைரமாலையை நான் இதோ எடுத்துக் காண்பிக்கிறேன்" எனக் கூறிச் சமாதானப்படுத்தி விட்டு தனது உதவிக் காரியஸ்தரை நோக்கி, "என்ன ஓய்!

உமக்குப் புத்தியில்லே? நகை கேட்டால், குறிப்பிட்டுக் கேட்கும் நகையை எடுத்துக் காண்பிப்பதா? அதைவிட்டு, 'தத்துபித்' தென்று உளறிக் கொட்டுவதா........? உம்மைப் போல இரண்டு ஆள் கடையிலிருந்தால் வியாபாரம் நடந் தாற் போலத்தான்" என்று கடிந்து பேசுவதுபோல் பாவனைசெய்து பேசியவாறே நடந்து சென்று, பீரோவைத் திறந்து, அவ் வைரமாலையை எடுத்துக் கொண்டு வந்து மங்கையினிடம் பணிவாக நீட்டினர்.

நம் பெண்மணி அவ் வைரமாலையை மிக ஜாக்கிரதை யாக வலது கையால் வாங்கிப் பரிசீலனை செய்யலானுள். அவளது நீலவிழிகள் அம் மாலேயிலுள்ள ஒவ்வொரு வைரக் கல்லேயும் கூர்மையாக ஆராய்ந்தன. மிக அழகாகப் பட்டை தீட்டப்பட்டுள்ள அவ் வைரங்களின் பூரிப்பும், ஜாஜ்வல்லியமான ஜொலிப்பும் கண்களையேயன்றி, அவளது உள்ளத்தையும் பறித்தன. நல்ல பசும் பொன்னில் வைரங் களேப் புதித்து அமைக்கப்பட்டுள்ள மாலேயின் வேலேப் பாடோ மிகவும் பாராட்டத்தக்க விதமா யிருந்தது.

சில நிமிடங்கள் வரை அவ்வைர மாலையை ஆராய்ந்து தனக்குள்ளே மதிப்பிட்டுக் கொண்டிருந்த நம் பெண்மணி, கடைசியாக, பெரிய காரியஸ்தரை ஏறிட்டுப் பார்த்து, "ஆமாம்; இம்மாலேயின் விலே யென்ன? செட்டியார்!" என்று சாவதானமாகக் கேட்டாள்.

இதுவரை மற்றவரோடு கண்களாலேயே குறிப் பாகப் பேசிக்கொண் டிருந்த பெரிய காரியஸ்தர் இக் கேள்வியைக் கேட்டதும் தூக்கத்தி னின்றும் திடீரென விழித்தவர்போல் திடுக்கிட்டு, "என்ன அம்மா! இம் மாலே யின் விலேதானே? சரியாக ஐம்பதினுயிரம் ரூபாய் ஆகி றது......." என்று கூறி நிறுத்தினர்.

"ஐம்பதி ணுயிரத்துக்குக் குறையாதோ?"

"இதில் குறைப்பதற்கு ஒன்றுமில்லை யம்மா! இந்த கற்களே ரூ. 50,000 ஆய் விடுகின்றனவே!...........பெரிய நகை என்று பேரே யொழிய, இதை விற்ருல், இதில் எங்களுக்குக் கொஞ்சங்கூட லாபமே கிடையாது. சின்ன உருப்படிகளில்தான் எங்களுக்கு ஏதாகிலும் கிடைக்கும். இப்படி சொன்னுல் நகை வாங்குபவர்கள் நம்ப மாட்டார்கள். என்ன செய்வது? எங்கள் பிழைப்பு அப்படி யிருக்கிறது" என்று நீட்டிப் பேசினர் பெரிய காரியஸ்தர்.

"அப்படியா ...........?" என்ருள் நம் நாரீமணி.

"ஆமாம்; அம்மணி! இம்மாதிரி வைரநகைகளுக்கே இப்போது கிராக்கி யிருப்பதில்லை. எல்லாரும் ரங்கோன் கமலம், 'ஆர்ட்டிபிஷியல் டையமண்ட்' முதலிய இமிடேஷன் கற்கள் மீதுதான் மோகங் கொண்டிருக்கிருர்கள். விலை மிக மலிவாக இருக்கிற தோல்வியோ! அதனுல் தான் அதை வாங்க ஆரம்பித்து விட்டார்கள். பின்னுல் கொஞ்சநாள் போனதும் அவை பல்லை யிளிக்கப் போவதை அவர்கள் என்ன அறிவார்கள்?" என முன்னவர் பேச்சுக்குத் தாளம் போட்டுப் பேசினர் சின்ன காரியஸ்தர்.

"அதிருக்கட்டும்; செட்டியார்வாள்! எனக்கு நேரமாகிறது. இதை விலை தீர்த்துக் கொடுங்கள்.—40,000 ரூபாய் வைத்துக் கொள்ளுங்கள்; இப்போதே இம்பீரியல் பாங்குக்குச் செக் எழுதிக் கொடுத்து விடுகிறேன். என்ன சொல்கிறீர்கள்?"

"ஐயையோ! ஒரேயடியாகப் பத்தாயிரம் ரூபாய் குறைவாகவா? அது முடியாத காரியம், அம்மா! என்னை

மன்னித்துக் கொள்ளுங்கள். இதில் எங்களுக்குப் பத்து தம்பிடிகூட லாபமில்லை. சும்மா வியாபாரங் கெடக் கூடா தென்று இந் நகைகளை யெல்லாம் பெருமைக்குச் செய்து வைத்திருக்கிறோம். அவ்வளவுதான். நீங்கள் வேண்டு மானால் வைரங்களைப் பரிசீலனை செய்வதில் கெட்டிக் காரர்களாக உள்ள யாரையாகிலும் அழைத்துக் கொண்டு வந்து மதிப்பு போட்டுக் கொள்ளலாம். எங்களுக்கு அதில் சிறிதும் ஆட்சேபனையே யில்லை" என்று வெகு சாமர்த்திய மாகப் பேசினார் பெரிய காரியஸ்தர்.

நம் பெண்மணி வைர மாலையைக் கையில் தாங்கிக் கொண்டே சிறிதுநேரம் ஏதோ ஆலோசனை செய்வது போல் பாவனை செய்து, "அப்படியானால் சரி; என் கணவரிடம் இம் மாலையைப் பற்றிச் சொல்ல வேண்டும். நீங்கள் ஒன்று செய்யுங்கள், செட்டியார்வாள்!—இன்று மாலை—ஊஹூம்; வேண்டாம்; நாளை காலை பத்து மணிக்கு—இந்தாருங்கள்; (தான் வைத்திருந்த வைரமாலை யைப் பெரிய காரியஸ்தரிடம் அளித்த வண்ணம்)—இந்த மாலையை எங்கள் பங்களாவுக்கு நீங்களே எடுத்துக் கொண்டு வாருங்கள். இதற்குள் என் கணவரிடம் நான் இம் மாலையின் தகுதி, விலை முதலியவைகளைச் சொல்லி இதை வாங்குவது பற்றி முடிவு செய்து கொள்ளுகிறேன். அவர் சம்மதித்து விட்டால், நீங்கள் சொன்ன விலைக்கே இம் மாலையை வாங்கிக்கொண்டு விடுகிறேன். அப்போதே என் கணவரிடம் நீங்கள் ரூபாயை வாங்கிக்கொண்டு விட லாம். என்ன சொல்கிறீர்?" என்று கேட்டாள்.

இவள் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும், காரியஸ் தர்கள் இருவரும் கூழைக் கும்பிடு போட்டு, "அதற் கென்ன! உங்கள் சித்தம்; எங்கள் பாக்கியம். உங்கள்

விருப்பப்படி நடக்கக் காத்திருக்கிறோம்" என்று ஏக காலத்தில் கூறினர்கள்.

கடைசியாக, அப் பெண்மணி, தன் கையில் மாட்டித் தொங்க விட்டிருந்த தோல் பையைத் திறந்து எதையோ தேடிப் பார்ப்பதுபோல் செய்துவிட்டு, "அடாடா! எங்கள் விலாசக் கார்டு இருந்தது ஆய் விட்டது. பரவாயில்லை. ஒரு சிறு துண்டு காகிதங் கொடுங்கள்" என்று கேட்டாள்.

உடனே சின்ன காரியஸ்தர் ஓடிப்போய் காகிதத் துண்டொன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். அதில் அப் பெண்மணி ஏதோ எழுதிப் பெரிய காரியஸ்தரிடந் தந்து, "சரியாக நாளை காலை—10 மணிக்கு வந்துவிடவேண்டும். சிறிது தாமதித்தாலும் ஐயா வெளியே போய் விடக் கூடும். தெரிகிறதா! நான் உமது வருகையை எதிர் பார்த்திருப்பேன்" என்று கூறிய வண்ணம் காரியஸ்தரிருவரும் தான் தந்த விலாசத்தைப் பார்த்து விட்டு வியப்போடு ஒருவரை யொருவர் நோக்கிக் கொள்வதைக் கண்டு உள்ளுக்குள் நகைத்தவாறே அடிபெயர்ந்து நடந்து, "எனக்கு நேரமாகிறது; நான் போய் வரட்டுமா!" என்றாள்.

பெரிய காரியஸ்தர் முகத்தை மூன்று கோணலாக்கிப் பல்லை யிளித்து, "ஆஹா! அப்படியே போய் வாருங்கள். -உம்.-ஏனம்மா! மாலையை வேண்டுமானால் கூட எடுத்துக் கொண்டு போய் ஐயாவிடங் காட்டலாமே! நான் வேண்டுமானல் நீங்கள் கட்டளை யிட்டபடி நாளை காலை 10-மணிக்கு வருகிறேன்................" என்று விநயமாகக் கூறினர்.

"வேண்டாம்; வேண்டாம். நாளை நீங்களே எடுத்து வரலாம். அவசர மொன்றுமில்லை" எனப் புன்னகையோடு கூறிவிட்டு நடந்தாள். சிப்பந்திகள் அவளுக்கு மரியாதை யாக வழிவிட்டு நின்றனர். வைரமாலையை அவள் முதலில் பார்த்தபோது மிக விலை யுயர்ந்த அம்மாலையை வாங்கக் கூடிய தகுதி அவளுக்கு இருக்கப் போகிறதா என அலட் சியமாக நினைத்து சந்தேகித்தவர்கள், பிறகு அவள் பேசிய தோரணையைப் பார்த்ததும், சிறிது சிறிதாக நம்பிக்கை கொள்ளலானார்கள். கடைசியாக அவள் எழுதிக் கொடுத்த விலாசத்தைக் கண்டதும், அவர்களுக்குப் பூரண நம்பிக்கை யுண்டாகி விட்டது. 'இன்று ஒரு நல்ல கிராக்கி படிந்தது' என்று அவர்கள் பெரு மகிழ்ச்சி கொண்டு, ஜன்னலண்டை போய் வெளியே நோக்கினர். அப்போதுதான் நம் பெண் மணி தனது காரிலேறி அதை மேற்கே செலுத்தினாள்.

*　　*　　*　　*

பூந்தமல்லி ஹைரோட்டில் உள்ள ஒரு பெரிய பங்க ளாவினுள் கார் நுழைந்தது. அப் புங்களா சென்னையில் மிகப் பிரசித்தி பெற்ற டாக்டர் மாதவ ராவ் எம். பி., பி. எஸ்., உடையது. உள்ளே சென்றதும் நம் பெண்மணி காரைவிட்டு இறங்கி மாளிகையினுள் சென்றாள். இதற் குள் காவலாள் இவளை எதிர்கொண்டழைக்க ஓடிவந்தான்.

"டாக்டர் இருக்கிறாரா?" என்று கேட்டாள் நம் பெண்மணி.

"இருக்கிறாரம்மா" என்றான் காவலாள் பணிவாக.

"'பேஷண்ட்ஸ்' யாரையாகிலும் கவனித்துக் கொண் டிருக்கிறாரா?"

"இல்லை; தனியாகத் தானிருக்கிறார்."

"அப்படியானால், நான் அவரை உள்ளே போய்ப் பார்க்கலாமா?"

"கொஞ்சம் இருங்கள்; இதோ ஒரு நொடியில் ஐயாவைக் கேட்டுக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்று கூறிக் கொண்டே உள்ளே ஓடினான்.

இதனிடையே, நம் பெண்மணி அம் மாளிகையைச் சுற்றிக் கவனிக்கலானாள். அவ்வளவு பெரிய மாளிகையில் சந்தடியொன்றும் அவ்வளவாக இல்லாதிருப்பதை யறிந்து அதிசயித்தாள். சில விநாடிகளுக்கெல்லாம் அதற்குரிய காரணத்தையும் ஒருவாறு ஊகித்துக் கொண்டு, "நம் காரியத்துக்குச் சாதகமானதாகவே யிருக்கிறது" என்று தனக்குள் கூறிக் கொண்டாள்.

இதற்குள் காவலாள் வந்து, "டாக்டர் ஐயா, உங்களை உள்ளே வரச் சொல்லுகிறார்" என்று கூறினான். இதற்குள் கம்பவுண்டர் அங்கு வந்து டாக்டரிருக்கும் அறைக்கு வழி காட்டிக்கொண்டே முன் நடந்தான். டாக்டரது அறை முன் புறத்திலேயே வலது பக்கமாக இரு அறைகளைத் தாண்டி உள்ளே யிருந்தது.

அவ்வறையினுள் நம் பெண்மணி நுழைந்ததும் டாக்டர் தமது ஆசனத்தை விட்டு எழுந்து, "ஹலோ! குட் மார்னிங்! வாருங்கள். இப்படி அமருங்கள்" என்று ஒரு நாற்காலியைக் காட்டி யுபசரித்தார்.

நம் பெண்மணி அறையினுள் புகும்போதே, தான் ஏதோ பெரிய துக்கத்தால் பீடிக்கப் பட்டிருப்பதுபோல், முகத்தை மாற்றிக்கொண்டாள். ஆதலால், அவள் மிகச் சிரமத்தோடு முகமலர்ச்சி கொள்ள முயல்வதுபோல்

பாவனை செய்து பிரதி வந்தனம் செலுத்திய வண்ணம் உட்கார்ந்தாள்.

டாக்டர் நம் பெண்மணியை இமை கொட்டாது பார்த்துக்கொண்டேபோய் தமது ஆசனத்தில் அமர்ந்தார். நம் பெண்மணியின் பேரழகு அவரை நிலைகுலையச் செய்தது. அவர் சிறிதுநேரம் தேனில் விழுந்த ஈ போல தம்மை மறந்திருந்தார். என்ன இருந்தாலும் மனித சுபாவம் தானே! முற்றுந் துறந்த முழு முனிவர்களையும்—அவ்வளவேன்? 'காடு வா வா; வீடு போ போ' என்ற நிலையிலிருக்கும் தொண்டு கிழவர்களையுங் கூட—தலை கிறுக்க வைக்கும் பேரழகுடைய நம் பெண்மணியைக் கண்டு சுமார் முப்பது வயதேயுடைய டாக்டர் மாதவராவ் மயங்கியது ஆச்சரிய மில்லையல்லவா!

"என்ன விசேஷம் அம்மணி; என்னை நாடி வந்தது?" என்று நயமாகக் கேட்டார் டாக்டர் வெகு நேரத்துக்குப் பிறகு.

நம் பெண்மணி மார்பி னின்றுஞ் சிறிது விலகிய சேலையை இழுத்து மூடிச் சீர்திருத்தியவளாய் டாக்டரைக் கடைக் கண்ணால் நோக்கிக் கொண்டே, "ஒன்றுமில்லை. என்னுடைய கணவரது விஷயமாக வந்தேன்................" என்று ஆரம்பித்தாள்.

இதற்குள் டாக்டரது முகம் மாறுத லடைந்தது. அவர் பதட்டமாக, "அப்படியானால், உங்களுக்குக் கலியாண மாய்விட்டதா...........?" என்று கேட்டார்.

டாக்டரது படபடப்பைக் கண்டு நம் பெண்மணிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. எனவே, அவள் உதட்டைக் கடித்துக்கொண்டு அதை மறைத்துப் பழையபடி துக்கத்

தைத் தோற்றுவித்து, "சமீபத்தில்தான் எனக்கு விவாகம் ஆயிற்று. நான் ஏழைக் குடியில் பிறந்தவள். ஆதலால், என் பெற்ரோர் தங்கள் வறுமையைப் போக்கிச் சுகமடையக் கருதி என்னை வயது சென்ற ஒரு தனவந்தருக்குக் கலியாணஞ் செய்து தந்தார்கள்..............." என்று கூறிக் கொண்டே வந்தாள்.

"ஐயோ பாவம்! கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுப்பதுபோல், உங்களை ஒரு கிழவனுக்கா கட்டிக் கொடுத்துவிட்டார்கள்? பெரும்பாலான பெற்ரோர்களே இப்படித்தான் கடின சித்த முள்ளவர்களாக இருக்கிருர்கள்..........." என்று அநுதாபத்தோடு கூறினுர்.

நம் பெண்மணி மேலுந் தொடர்ந்து பேசலானுள். "அதற்காகக் கூட நான் வருந்தவில்லை; என் பெற்ரோரை நிந்திக்கவுமில்லை. ஏதோ என் விதிவசத்தால் இவ்வாறு வயது முதிர்ந்த ஒருவரைக் கணவனுக அடைய நேர்ந்தது என்று எனக்குள் சமாதானஞ் செய்துகொண்டு, அவரோடு வாழ்க்கையை நடத்திவந்தேன். எங்கள் இல்வாழ்க்கை யாரம்பித்து ஐந்தாறு மாதங்கூட ஆகவில்லை. இதற்குள்ளாக இவ்வித இடி விழுமென்று நான் கனவிலும் கருதவில்லையே!..........."

"உம் புருஷர் இறந்துவிட்டாரா என்ன!" எனப் படபடப்போடு கேட்டார் டாக்டர்.

"தெய்வச் செயலாக அவ்வித மொன்றும் நேரவில்லை. அவர் உயிருடனேயே இருக்கிருர். அவருக்குத் திடீரென்று சித்த சபலம் ஏற்பட்டுவிட்டது. "வைரமாலை; 50,000 ரூபாய்" என்றும், "50,000 ரூபாய் கொடு; இல்லாவிட்டால் வைரமாலையைக் கொடு" என்றும் யாரைப் பார்த்

தாலுங் கேட்க ஆரம்பித்து விடுகிறுர். அடிக்கடி தமக்குள்ளாகவும் இவ்விதங் கேட்டு ஏதேதோ தாறுமாருகப் பிதற்றுகிறுர். இவ்விதம் எதிர்பாராத வகையில் அவருக்குப் பைத்தியம் ஏற்பட்டதற்குரிய காரணம் என்னவென்று எனக்குப் புலப்படவில்லை.—எங்கள் செட்டியார் லேவாதேவி செய்வதுண்டு. அதில் தான் யாரிடமாயினும், பணத்தையோ, நகையையோ ஏமாந்து விட்டு விட்டாரோ என்னவோ; தெரியவில்லை. இவ்விதப் பெரிய ஏமாற்றத்தால் தான் போலும்! அவருக்கு மூளை குழம்பிவிட் டிருக்குமென நினைக்கிறேன். எதுவோ இருந்து போகிறது.—இப்போது நான் உங்களை நாடி வந்தது எதற்காகவென்றுல், நீங்கள் என் கணவரது சித்த சபலத்தைப் போக்கிக் குணப்படுத்துவீர்க ளென்ற நம்பிக்கையிஞலேயே யாகும். நான் உங்களைப் பற்றி வெகுவாகக் கேள்விப்பட் டிருக்கிறேன். நம் நகரிலேயே நீங்கள் தான் மூளைக் கோளாறைப் போக்கும் விஷயத்தில் தேர்ச்சிபெற்ற டாக்டராய் இருக்கிறீர்கள் என்று பலர் சொல்ல..........." என்று கூறிப் பேச்சை முடிக்கு முன்னமே, டாக்டர் இடைமறித்து, "அதற்கென்ன அம்மா! இது தானே! நான் வெகு விரைவில் குணப்படுத்தி விடுகிறேன். நீங்கள் உங்கள் கணவரை இங்கு அழைத்து வருகிறீர்களா? அல்லது நான் உங்கள் வீட்டுக்கு வரட்டுமா?" என்று விஞவிஞர்.

"வேண்டாம்; வேண்டாம்; உங்களுக்கு அவ்வளவு சிரமம் வேண்டாம். நானே என் கணவரை நாளை காலை சரியாக 10.மணிக்கு அழைத்து வருகிறேன். அவரைச் சரிப்படுத்தி விட்டால் அதுவே போதும்" என்று கூறிக் கொண்டே எழுந்து, "வந்தனம்; தங்களுக்குச் சிரமங் கொடுத்ததற்கு மன்னிக்க வேண்டும். நாளை காலை

10-மணிக்கு அவசியம் வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே நடந்தாள். டாக்டர் உடன் எழுந்து மரியாதை செய்து அவள் செல்வதையே பார்த்துக்கொண்டு நின்றார்.

* * * *

மறுநாள் காலை 9-55 மணிக்கே நம் பெண்மணி டாக்டர் மாதவராவ் பங்களாவுக்கு வந்துவிட்டாள். அவள் காரைப் பங்களாவின் ஒரு புறத்தில் நிறுத்திவிட்டு, 'குபேரபட்டினம் செட்டியார் கடை' காரியஸ்தர் வரவை எதிர்பார்த்துக்கொண்டு வெளிப் புறத்திலேயே உலவிக் கொண்டிருந்தாள். சிறிதுநேரத்தில் பெரிய காரியஸ்தரும் ஒரு வண்டியில் வந்து இறங்கினார். வண்டி தூர வரும் போதே கண்டுவிட்ட நம் பெண்மணி உடனே காவலாளின் அநுமதி பெறுமலே உள்ளே ஓடி டாக்டரிடஞ் சென்று, "டாக்டர் சார்! அதோ என் கணவரை அழைத்து வந்திருக்கிறேன். அவர் சிறிது முரடர். அவர் விஷயத்தில் ஜாக்கிரதையாக நடந்து கொள்வீர்களென நம்புகிறேன். அவரை உள்ளே அழைத்து வரட்டுமா?" என்று பட படப்போடு கேட்டாள்.

"ஓ! அழைத்து வாருங்கள். நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று டாக்டர் அநுமதி கொடுத்துவிட்டு ஆயத்தமாக இருந்தார்.

உடனே, பெண்மணி வெளியே விரைந்து நடந்தாள். இதற்குள் காரியஸ்தரும் காவலாளிடம் வந்து என்னவோ கேட்டுக்கொண் டிருந்தார். நம் பெண்மணி ஒரே தாவாகத் தாவி, "செட்டியார்வாள்! வாருங்கள்; வாருங்கள்; உங்கள் வருகையைத் தான் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறேன்; அந்த மட்டும் நான் சொன்ன நேரத்துக்கே சரியாக வந்து விட்டீர்களே! மிகவும் சந்தோஷம்!" என்று

கூப்பிட்டுக் கொண்டே எதிர் சென்ருள். காரியஸ்தரும் அவளை யணுகி விட்டார். இருவரும் டாக்டர் அறையை நோக்கி நடந்தார்கள். இதனிடையே நம் பெண்மணி, "வைர மாலையைக் கொண்டு வந்திருக்கிறீர்க ளோல்லியோ, செட்டியார்! எதோ இப்படிக் கொடுங்கள்" என்று சாகஸ மாகக் கேட்டாள்.

"ஆஹா! கொண்டு வராமலா வருவேன். இதோ!" என்று காரியஸ்தர் அவ் வைரமாலையை வெல்வெட் பெட்டி யோடு அவளிடம் கொடுத்தார்.

நம் பெண்மணி அப் பெட்டியைத் திறந்து வைர மாலை யைக் கையி லெடுத்தாள். இதற்குள் அவர்கள் டாக்டர் அறையையும் சமீபித்து விட்டார்கள். உடனே நம் பெண் மணி, "செட்டியார்! இப் பெட்டியைப் பிடியுங்கள். இம் மாலையை என் மாமியாரிடங் காட்டிவிட்டு வருகிறேன். இதோ என் கணவர் உங்கள் வரவை எதிர் பார்த்து உட் கார்ந்திருக்கிருர். உள்ளே போய் உட்காருங்கள். நான் ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்" என்று கூறிய வண்ணம் அறைக் கதவைத் திறந்து உள்ளனுப்பிவிட்டு வெளியிலேயே நின்ருள்.

செட்டியார் அறையினுள் சென்ருரோ இல்லையோ, நம் பெண்மணி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வெளியே நடந்தாள்.

குபேர பட்டினம் செட்டியார் கடையின் பிரதம காரியஸ்தர், டாக்டர் மாதவராவ் உட்கார்ந்திருந்த பிரத்தி யேக அறையில் பயபக்தியோடு நுழைந்தார். இத னிடையே, அவர் தம் கையில் வைத்திருந்த வெல்வெட் பெட்டியைக் கோட்டுப் பாக்கெட்டில் போட்டுக் கொண் டார்.

டாக்டர் காரியஸ்தரைக் கண்டதும், "வாருங்கள் செட்டியார்! வாருங்கள். இந்த நாற்காலியில் அமருங்கள். இப்போது உடம்பு எப்படி யிருக்கிறது?" என்று விநயமாகக் கேட்டார்.

காரியஸ்தர் டாக்டர் தம்மை இங்கு வரும் நோயாளிகளில் ஒருவரென நினைத்துக்கொண்டு இவ்விதம் தவருகக் குசலப்ரச்னம் வினவுகிருர் என்று கருதிப் பதிலொன்றுஞ் சொல்லாமல் டாக்டருக்கு வந்தனஞ் செலுத்திவிட்டு எதிரேயுள்ள நாற்காலியில் மெள்ள அமர்ந்தார்.

டாக்டர் காரியஸ்தரை ஒருவிதமாக நோக்கிய வண்ணம் தமது நாற்காலியை இருவருக்கு மிடையே உள்ள மேஜைக்கு மிகச் சமீபத்தில் இழுத்துப் போட்டுக் கொண்டு, "ஏதோ செட்டியார்! உங்கள் கையைக் காட்டுங்கள்; பார்க்கலாம்" என்று கேட்டவாறே தம் கைகளை நீட்டினர்.

காரியஸ்தர் ஒன்றுந் தோன்ருதவராய் சிறிது மயங்கி, "டாக்டர் சார்! நான் நோயாளியில்லை;—வைரமாலை விஷயமாக வந்திருக்கிறேன்..........' என்று இழுத்தாற் போல் கூறினர்.

டாக்டர் இவர் சொல்வதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், "அதிருக்கட்டும்; வைரமாலை விஷயம்தான் உம்மை இங்கே என்னிடம் வரச் செய்தது என்று எனக்குத் தெரியும். அஃதறிந்துதான் உம்மைக் கைகாட்டும்படி கேட்கிறேன்.—செட்டியார்! நான் கூறுவதைக் கொஞ்சம் கவனித்துக் கேளுங்கள். உம்முடைய தற்போதைய நிலைமை மாறவேண்டுமானல்,—உமது சித்தசபலம் குணப்பட வேண்டுமானல்,—நீங்கள் நான் கேட்குங் கேள்வி

களுக் கெல்லாம் தக்கபடி பதிலளிக்கவேண்டும். இல்லா விட்டால்..........."என்று பேசிக்கொண்டே போனார்.

காரியஸ்தர் இடைமறித்து, "என்ன டாக்டர் சார்! நீங்கள் ஏதேதோ கூறுகிறீர்களே! நீங்கள் பேசுவதொன்றும் எனக்குப் புரியவேயில்லையே!..........." என்று பரபரப்போடு கேட்டார்.

"ஆமாம், நீங்கள் தற்போதுள்ள நிலைமையில் நான் சொல்வது மட்டுமல்ல; யார் கூறுவதும் என்ன சொன்னாலும் ஒன்றும் புரியாதுதான்.—அதற்காகவே, உமக்குச் சிகிச்சை செய்ய நான் முற்பட்டிருக்கிறேன்."

"என்ன! எனக்குச் சிகிச்சையா? எதற்காக? நான் என்ன நோய் கொண்டிருக்கிறேன் என்று நீங்கள் எனக்குச் சிகிச்சை செய்யப் போகிறீர்கள்? நான் இன்ன நோயால் பீடிக்கப்பட்டு வருந்துகிறேன் என்று உங்களிடம் ஏதாகிலும் சொன்னேனா? அல்லது......................" என்று பட படப்போடு கேட்டுக்கொண்டே போனார்.

டாக்டர் அப்போதும் அவர் பைத்தியத்தாலேயே பட படப்பாகப் பேசுகிறார் என நினைத்து, அவரை உற்றுப் பார்த்து சிறு நகை கொள்ளலானார்.

காரியஸ்தர் மேலும் பேசத் தொடங்கி, "டாக்டர் சார்! என்னிடம் விளையாடுகிறீர்களா? அல்லது என்னைப் பரிசோதிக்கிறீர்களா?.............." என்று வினவினார்.

டாக்டர் அமைதியாக, "செட்டியார்வாள்! நான் உம்மிடம் விளையாட வரவில்லை. உம்மோடு விளையாட்டாகப் பொழுது போக்க எனக்கு அவகாசமுமில்லை. உம்மைப் பரிசோதிக்கவே நான் விரும்புகிறேன். உம்முடைய உடற்கூற்றைப் பரிசோதித்துப் பார்த்தால் தானே உமக்கு

இன்ன நோய் இருக்கிறது; இன்னவிதமான மருந்தைக் கொடுத்தால் அந் நோயைப் போக்கலாம் என்று நான் அறிந்து கொள்ள முடியும்...............?" என்று கூறினர்.

காரியஸ்தர் பொறுமையை இழந்தவராய், "மகா பெரிய டாக்டராகிய நீங்கள்—மிகவும் பிரசித்தி பெற்ற டாக்டராகிய நீங்கள்—இவ்வளவு அசட்டுத்தனமாக என்னிடம் பேசுவதைக் கண்டால் அதியாச்சரியமா யிருக்கிறது. நீங்கள் என்னை ஒரு நோயாளியென்று நினைத்து விசாரிக்கிறீர்களென்று அறிந்து தான், முதலிலேயே நான் நோயாளியல்லவென்றும், வைர மாலை சம்பந்தமாக வந்திருக்கிறேன் என்றும் தெரிவித்தேன். அதை நீங்கள் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் சம்பந்தா சம்பந்தமின்றி ஏதேதோ............................" என்று கூறிக் கொண்டே போனர்.

டாக்டர் சிரித்துக் கொண்டே அவரைக் கையமர்த்தி, "வைர மாலை சம்பந்தமாகத் தானே வந்தீர்கள்? அது எனக்கு நீங்கள் வரும்போதே தெரியுமே, செட்டியார்வாள்! இதற்கு முன் எத்தனை பேரை வைர மாலையைப் பற்றிக் கண்டிருக்கிறீர்கள்? எத்தனை பேரைக் கேட்டிருக்கிறீர்கள்?—அதிருக்கட்டும்; வைர மாலையின் விலையென்ன?" என்று கேட்டுப் பேச்சை நிறுத்தினர்.

காரியஸ்தர், "50,000 ரூபாய்" என்று வெகு துரிதமாகப் பதில் சொன்னர்.

"ஓ! 50,000 ரூபாயா? இவ்வளவு அதிகமாக விலை கொடுத்து வாங்கியா, கடைசியில் பறி கொடுத்தீர்? யாரிடம் அதைக் கொடுத்து ஏமாந்தீர்?"

"என்ன பறி கொடுத்தேன? ஏமாந்தேன! ஏன்? உங்கள் மனைவி தானே எங்கள் கம்பெனிக்கு வந்து அவ்

வைர மாலையைக் கண்டு விலை பேசித் தீர்த்து இங்கு கொண்டுவரச் சொன்னார்கள்."

"ஹஹ்ஹஹ்ஹா! என் மனைவியா விலை பேசிக் கொண்டுவரச் சொன்னாள்? அப்படியானால், அவ் வைர மாலை எங்கே? காட்டும்; பார்க்கலாம்."

"உங்கள் தாயாரிடங் காட்டி விட்டு வருவதாகச் சொல்லி தங்களது மனைவியார் உள்ளே வாங்கிக்கொண்டு போனார்கள்."

டாக்டர் வாய் விட்டு வயிறு குலுங்கச் சிரித்தவராய், "என் மனைவி தான் உம்மிட மிருந்து வைர மாலையை வாங்கிக்கொண்டு போனாள் என்று உமது அதிசய மூளைக்கு எப்படி புலப்பட்டது?" என்று கேட்டு விட்டு மேலும் விழுந்து விழுந்து நகைக்கலானார்.

"ஏன்? இதில் சந்தேக மென்ன? உங்களுடைய மனைவி தான் எங்கள் கம்பெனிக்கு வந்து அவ் வைர மாலைக்கு ஆர்டர் கொடுத்தவர்! அவர் தான் இன்று வைர மாலையைத் தம் மாளிகைக்கு எடுத்துக் கொண்டு வந்தால், அதைக் கணவராகிய உங்களிடங் காட்டிச் சம்மத மடைந்தவுடன் அதன் கரூர் விலையாகிய 50,000 ரூபாய்க்கு ஒரு 'செக்' எழுதிக் கொடுக்கச் செய்வதாகக் கூறிவிட்டு வந்தவர்! இப்போதும் அந்தம்மாளே இங்கு என்னை வரவேற்று வைர மாலையை என்னிடமிருந்து வாங்கிக்கொண்டு உங்கள் அறையில் போய் உட்காரும்படிக் கூறிவிட்டுச் சென்றவர். அப்படி யிருக்க, 'என் மனைவி தான் வாங்கிக் கொண்டு போனாள் என்று எவ்வாறு உமக்குப் புலப்பட்டது?' என்று நீங்கள் கேட்பது அதிசயமாக வல்லவோ இருக்கிறது....!" என்று காரியஸ்தர் பேச்சை அடுக்கிக்கொண்டே போனார்.

டாக்டர் அப்போதுஞ் சந்தேகங் கொள்ளாதவராய், "ஏதேது செட்டியார்! வைர மாலையி லிருந்து இப்போது நகைக்கடைக்கு வந்து விட்டீரே? ஏதோ லேவாதேவி நடத்திக்கொண் டிருந்ததாகவும், அதில் யாராலோ ஏமாற்றப்பட்டு இவ் வைர மாலைப் பைத்தியம் பிடித்துவிட்டதாகவும் அல்லவோ உமது மனைவி சொன்னார்?—நகைக்கடைகூட வைத்திருந்தீரா?—உம். சரி; இதெல்லாம் உமது மூளைக் கோளாறால் ஏற்பட்ட கற்பனை யென்பதை மறந்து விட்டேனே!—இப்படி வாரும் செட்டியார்! சிறிது நேரத்தில் உம்மைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, உமக்குத் தகுந்த மருந்து கொடுத் தனுப்புகிறேன். நான் சொல்லுகிறபடி நடந்தீரானால், உமது சித்த சபலம் சீக்கிரம் நீங்கி நீர் குணமடைவீர்..........." என்று கூறி, காரியஸ்தர் என்ன சொல்லப் போகிறார் என்பதையும் எதிர்பாராது நாற்காலியை விட்டு எழுந்து அவரண்டை போனார்.

காரியஸ்தர் ஆத்திரங் கொண்டவராய், "டாக்டர் சார்! யாருக்குச் சித்தசபலம்? உங்களுக்கா? எனக்கா? நீங்கள் இதுவரை பேசிவரும் போக்கைக் கவனித்தால் உங்களுக்குத்தான் ஏதோ மூளைக் கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது.—உங்களுடைய மனைவி வாங்கி யிருக்கும் வைர மாலை சம்பந்தமாகவே உங்களிடம் வந்திருக்கிறேன் என்று பலமுறை தெரிவித்தும், நீங்கள் அதையெல்லாம் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், என்னைப் பைத்தியக்காரனென நினைத்துக் கொண்டோ என்னவோ, என்னிடஞ் சம்பந்தா சம்பந்தமற்ற வார்த்தைகளைப் பேசி வருகிறீர்கள்.—என்னுடைய மனைவி உங்களிடம் வந்து ஏதோ கூறியதாக நீங்கள் கூறியதிலிருந்தே உங்களுக்குத் தான் இப்போது புத்தி

தடுமாற்றம் ஏற்பட்டிருக்கிறதென்று தெரிகிறதல்லவா!—உம். வீணுகப் பேச்சை வளர்த்துவானேன்!—இப்போது நீங்கள் உங்களுடைய மனைவி வாங்கி யிருக்கும் வைர மாலைக்காக 50,000 ரூபாய் தரப் போகிறீர்களா? அல்லது வைர மாலையைத் திருப்பிக் கொடுத்து விடுகிறீரா? இரண்டில் ஏதாவது ஒன்று செய்யும்.—நான் வந்து வெகு நாழிகை யாகிறது. சீக்கிரம் எங்கள் கம்பெனிக்குப் போக வேண்டும்" என்று சிறிது மிடுக்காகவே பேசித் துரிதப் படுத்தினுர்.

டாக்டர் காரியஸ்தரது ஆத்திரத்தையும், அவசரத்தையுங் கண்டு கைகொட்டிச் சிரித்து, "பேஷ்! எனக்கே பைத்தியக்காரப் பட்டமல்லவோ சூட்டி விட்டீர்; செட்டியார்! உமது மனைவியுடைய வேண்டுகோளின்படி, நான் உமது சித்த சபலத்துக்குச் சிகிச்சை செய்யப் போக, எனக்குப் பித்தேறி விட்டதாகக் கூறத் துணிந்தது உமது மூளையின் விசேஷத்தையே காட்டுகிறது. எப்படி யிருந்தாலும் நான் பைத்தியக்கார டாக்டர்-அதாவது பைத்தியம் பிடித்தவர்களை குணப்படுத்தும் டாக்டர்-தானே! எனவே, நீர் கூறியது மிகவும் பொருத்தந்தான் - அது கிடக்கட்டும், செட்டியார்!—இப்போது உமக்கு ஒன்று ரூபாய் வேண்டும் அல்லது வைர மாலை வேண்டும். இவ்வளவுதானே! சரி; இப்படி வாரும்" என்று கூறிய வண்ணம் அவரது கையைப் பற்றி அங்கு ஒரு பக்கம் போடப்பட்டிருந்த கட்டிலருகே அழைத்துக் கொண்டுபோய் உட்கார வைக்க முயன்றுர்.

காரியஸ்தர் கோபமிகுந்து, டாக்டர் பிடியி னின்றும் தம் கையைத் திமிறிக்கொண்டே "கையை விடுங்கள், டாக்டர் சார்! இனி இம் மாதிரி விளையாடாதீர்கள்.—நீங்கள் பணத்தைக் கொடுக்கப் போகிறீர்களா, இல்லையா? இல்லா

விட்டால், உங்களுடைய மனைவியைக் கூப்பிட்டு அவரிட மிருக்கும் வைர மாலையை வாங்கிக் கொடுத்து விடுங்கள். வீண் மனஸ்தாபத்துக்கும் விபரீதத்துக்கும் இடமுண் டாக்கி விடாதீர்கள்? எங்கள் முதலாளி சிறிது முரடர் ..............." என்று கூறிக்கொண்டே கையை யுதறினர்.

டாக்டருக்கு இப்போதுதான் சிறிது சந்தேக முண் டாயிற்று. "என்னையா உளறுகிறீர்! யாரைக் கூப்பிடச் சொல்கிறீர்? என் மனைவியையா?—எனக்கு இன்னும் கலியாணமே ஆகவில்லையே!—என்ன நீர் சொல்வது ஆச் சரியமாக இருக்கிறதே!" என்று வியப்புந் திகைப்பும் ஒருங்கே தோன்றக் கூறினர்.

"என்ன! என்ன!! உங்களுக்கு அந்தம்மாள் மனைவி யில்லையா? உங்களுக்குக் கலியாணமே இன்னும் ஆக வில்லையா?—அப்படியானல், இப்போது இங்கிருந்து என்னை வரவேற்று என்னிடமிருந்து வைர மாலையை வாங் கிக் கொண்டு சென்ற பெண்மணி யார்?—ஐயோ! நேற்று அந்தம்மாள் எங்கள் கடைக்கு வந்து நகை பேரஞ் செய்த போது உங்கள் பெயரைச் சொல்லித் தான் உங்களுடைய மனைவியென்றும், வைரமாலையை இன்று காலை 10-மணிக்கு எடுத்து வரும்படிக்கும், அதை உங்களிடம் காட்டிச் சம்மதம் பெற்ற உடனே அதற்குரிய பணத்தையும் கொடுத் தனுப்புவதாகவு மன்றே கூறிவிட்டு வந்தார்?—இவ்வளவு நேரம் இவ்விஷயத்தைத் தானே நான் திருப்பித் திருப்பிக் கூறிக் கொண்டிருந்தேன். நீங்கள் அதைக் கவனிக்காது ..................." என்று காரியஸ்தர் படபடப்போடு கூறிக் கொண்டே போனர்.

"என்ன! அவள் தன்னை என் மனைவி யென்ற கூறினள்?—என்னிடம் அவள் உமது மனைவி யென்

றன்றோ சொன்னாள் ?" என்று பேராச்சரியத்தோடு டாக்டர் கூறினார்.

"என் மனைவி யென்றா ?" எனக் காரியஸ்தர் கேட்ட வண்ணம் தம் வாயைப் பிளந்தார்.

"ஆம் ; உம்முடைய மனைவி யென்று தான் கூறினாள்" என்று பதிலளித்தார் டாக்டர்.

இதே சமயத்தில் காவலாள் அறைக்கதவை அவசர அவசரமாகத் திறந்துகொண்டு, "என்ன எஜமான் ! ஏதோ பேசிக்கொண் டிருக்கிறீங்க ? இப்போ இங்கே வந்த அம்மா யாரு ? அவங்க இந்த ஐயா வந்தவுடனே எவ்வளவு அவசரமா வெளியே ஓடினாங்க, தெரியுமா ? அவுங்க காரில் ஏறிக்கொண்டு போன மாதிரி எனக்குச் சந்தேகமா யிருந் துச்சு. இங்கு அறையில் ஏதோ சந்தடி யேற்பட்டதைக் கேட்ட பிற்பாடு தான், சந்தேகம் பல மாயிடுத்து. உடனே இத் தகவலைச் சொல்ல வந்தேன்" என்றான்.

டாக்டர் மேலுந் திகைப்புற்று, "செட்டியாரே ! நீங்கள் இருவருங் கூறும் விவரத்தைப் பார்த்தால் ஏதோ மோசடி நடந்திருக்கிற தென்றன்றோ சந்தேகிக்க வேண்டி யிருக்கிறது..................." என்று கூறி மேலும் ஏதேதோ கூற விரும்பினார்.

இதனிடையே காரியஸ்தர் தேகம் பதற, "இன்னம் என்ன சந்தேகம் வேண்டி யிருக்கிறது. மோசடி நடந்து விட்டது என்னமோ நிச்சயம்..............." என்று கூறி வந்தவர் நாக்குழற மேலே பேச முடியாது நிறுத்தினார்.

டாக்டர் மாதவராவ் நாம் மேலே குறிப்பிட்டு வந்த பெண்மணி, தம்மை நேற்று வந்து பார்த்ததையும், தம்மிடம் வந்து கூறிய விவரத்தையும் ; இன்று காரியஸ்தர் வருவதற்

குச் சில விநாடிகளுக்கு முன் அவள் தன்னிடம் வந்து தன் கணவரை யழைத்து வந்திருப்பதாகக் கூறியதையும் காரியஸ்தரிடம் விவரமாகக் கூறினர்.

"ஐயோ! படுபாவி அப்படியா கூறினள்? உங்கள் மனைவி என்று எங்களிடமும், என் மனைவி யென்று உங்களிடமும் கூறி இருதிறத்தாரையும் ஏககாலத்தில் ஏமாற்றி விட்டாளே! அவள் பலே சாகசக்காரியாகத்தான் இருக்க வேண்டும். இனிப் பேசிக் காலம் போக்குவதில் பயனில்லை. டாக்டர்!—உடனே போலீஸுக்குப் போன் செய்யுங்கள்....நான் எங்கள் கம்பெனிக்கும் இக்கணமே தகவல் கொடுக்கவேண்டும்" என்று துரிதமாகக் காரியஸ்தர் கூறினர்.

# மூன்றாவது அதிகாரம்

---

## ரமணியின் அவசரப் பிரயாணம்

திருவொற்றியூர் தியாகராயப் பெருமான் கோவில் தென்னிந்தியாவில் மிகப் பிரசித்திபெற்ற சிவாலயங்களில் முக்கியமானதொன்று என்பது வாசகர்களில் பலர் அறிந்திருக்கலாம். இச்சிவாலயம் சென்னைமா நகரின் வடகோடியில் இருக்கிறது. வருடந்தோறும் நடைபெறும் திருவிழாக்காலங்களில் மட்டு மன்றி, மாதந்தோறும் வரும் பௌர்ணமி சமயங்களிலும் தியாகராயப் பெருமானது திருநடனம் நடைபெறும். நடன அசைவிற் கேற்ப நாதஸ்வர முதலிய இன்னிசைக் கருவிகளும், மேளதாளங்களும், எக்காளங்களும் ஏக காலத்தில் ஒலிக்க, தியாகராயப் பெருமான் திருநடனஞ் செய்யுங் காட்சி கண்கொள்ளா அற்புதக் காட்சியாக இருக்கும்.

அதுவன்றி, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தேவி வடிவாம்பிகைக்கு விசேஷ பூஜை நடக்கும். ஆதலால், ஆயிரக்கணக்கான மக்கள் வந்து வடிவாம்பிகை யம்மைக்கு அருச்சனை புரிந்து தரிசனஞ் செய்து செல்வர். ஆனால், இவ்வாறு வருபவர்களில் பெரும்பாலார், தேவி தரிசனத்தைக் காரணமாகக் கொண்டு கோயிலுக்கு வந்து தத்தம் அலுவல்களிலேயே குறிக்கோளா யிருப்பவர்க ளாவர். 'மெட்ராஸ்' மைனர்கள் முதன் முதல் கன்னிவேட்டையாடப் பழகு மிடங்களான மெரீனா பீச், சினிமா, தியேட்டர் போன்றவைகளோடு திருவொற்றியூர் கோவிலும் ஒன்றாகும்.

வெள்ளிக்கிழமையானல், சென்னையிலுள்ள பெரிய தாசிகள் முதல் சாதாரண தாசிகள் வரை பெரும்பாலார் அங்கு வந்து சேர்ந்து விடுவர். அவர்கள் தங்கள் மைவிழிகளாகிய மாய வலைகளை வீசிப் பெரிய பெரிய செல்வந்தர்களையும், பணக்கார மைனர்களையும் சிக்க வைப்பதற்காக, மாமா'க்கள் முன்னே செல்ல, அங்குமிங்கும் திரிந்து கொண்டிருப்பர். பெண்மான் வேட்டையாட வென்றே வரும் பிரபுக்களும், மைனர்களும் அவர்களைப் பின்தொடர்ந்து செல்வர். பக்தர் குழாத்திடையே பொது மகளிரும் மைனர்களும் கலந்து கண்களால் உறவாடிக்கொண்டும், விஷமச் சிரிப்பு சிரித்துக்கொண்டும், சமிக்கை செய்து கொண்டும் இருப்பது பார்ப்பதற்கு விரஸமா யிருக்கும்.

தேவி வடிவாம்பிகை சந்நிதானத்தில் ஆடவர்களுக்கு ஒருபுறமும், பெண்மணிகளுக்கு மற்ருெரு புறமும் செளகரியமாகத் தேவியைத் தரிசனஞ்செய்ய இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தேவியின் திருவருளைப் பெறுவதற்காகவே வரும் பக்தர்கள் தேவியை இரக்கமாக நோக்கி மனதால் இறைஞ்சி மெய் மறந்து நிற்பார்கள். ஆனல், நாரீமணிகளை நாடிவரும் விட புருஷர்களும், மைனர்களுமோ தாங்கள் அணிந்திருக்கும் பட்டு சரட்டுகளின்மீது பொற்சரிகையாலாய மயில் கண் மேல்வேஷ்டியை அழகு பட வரிந்து கட்டிக்கொண்டு, காதுகளில் வைரக் கடுக்கன்கள் 'டால்' வீச, நெற்றிகளில் அகலமாகக் குங்குமப் பொட்டு இட்டுக்கொண்டு தேவி சந்நிதியின் பக்கமாகக் கைகளை அஞ்சலி செய்து நிற்பார்கள். அவர்களது வாய்கள், "அந்தரி! சுந்தரி! துரந்தரி! நிரந்தரி!............ அழகு வடிவான உமையே!" என்று ஓசைபட பிதற்றிக் கொண்டிருக்கும். இவர்களது அபிநயங்களை யெல்லாம்

பார்த்தால், 'இவர்கள்தான் தேவி வடிவாம்பிகையின் பூரண அருள்பெற்ற மெய்யடியார்கள் போலும்!' என்று பிறர் நினைக்கும்படியாக இருக்கும். ஆனல் இவர்களது கபடக் கண்களோ அடிக்கடி எதிர் வரிசையில் நிற்கும் அழகிய மங்கைகளின்மீது தான் சென்று ஆராய்ந்து கொண்டிருக்கும். பெண்கள் வரிசையில் பொருளேயே குறிக்கோளாகக் கொண்டு மேற்குறித்த விட புருஷர்களேயும், மைனர்களேயுமே நாடி வந்திருந்த விலே மாதர்கள் இவ்வித சந்தர்ப்பங்களேயே எதிர் பார்த்து வந்தவர்களாதலால், தேவிக்கு அருச்சனே செய்யப்போகிறவர்கள்போல், மற்ற மகளிரை விலக்கிக்கொண்டு முன் வந்து நின்று, விட புருஷர்களின் கண் சிமிட்டலுக்கும், மைனர்களின் சைகைக்கும் ஏற்றவாறு மை விழியாலும், முல்லே நகையாலும் தக்க பதிலளிப்பார்கள். இவ்விரு திறத்தாரும் கண்களாலேயே எல்லா விஷயங்களேயும் குறிப்பாகப் பேசி முடித்து விடுவார்கள். கடைசியாக, பொது மகளிர் ஒரு விதமாகச் சாடைகாட்டி விட்டுத் தங்கள் தோழிகள் புடைசூழ அன்ன நடை நடந்து தேவி சந்நிதானத்தை விட்டு வெளி யேறுவார்கள். உடனே மைனர்கள் விட புருடர்களான தங்கள் தோழர்களோடு, அக்கணிகையர்களேப் பின் தொடர்ந்து செல்வர். இவ்விதம் இவர்கள் கோவில் உட்பிரகாரத்தை வலஞ் செய்துவிட்டு கடைசியாக, கோயிலே விட்டு வெளியேறுவர். வெளிவந்ததும், 'மாமா'க்கள் மெல்ல மைனர்களிடம் வந்து சிநேகஞ் செய்து விலேமாதர்கள் சார்பில் பேரம் பேச ஆரம்பிப்பார்கள். மைனர்களுக்கு 'மாமா'க்களது சாகஸப் பேச்சு வரப்பிரஸாதம் போலிருக்கும். முடிவில் 'மாமா'க்களது தயவால் இதுவரை கண்களால் உறவாடி வந்த மைனர்களும், தாசிகளும் ஒருவருக்கொருவர் நேர் முகமாக நின்று பேசி மகிழும்

'பாக்கியத்'தைப் பெறுவார்கள். இவ்விதம் ஏற்படும் நட்பு மைனர்களது தராதரத்தைப் பொறுத்து நிற்கும். சிலர் தங்களுக்குத் தாசிகளோடு ஏற்பட்டிருக்கும் தொடர்பைத் தற்காலிகமாக வைத்துக்கொள்வர். வேறு சிலர், மேனி மினுக்கிக் குலுக்கி நடக்கும் வேசிகள் சகவாசமே பெரிய சொர்க்க போகம் என்று கருதி நிரந்தரமாக வைத்துக் கொள்வர். அவ்வாறு நடப்பவர்கள் கோயிலுக்கு எதிர் புறத்திலுள்ள ஒரு பெரிய மகிழ மரத்தினடியில் தாங்கள் கணவன் மனைவிபோல் இருந்து வாழ்க்கை நடத்துவதாகச் சபதஞ் செய்து கொள்வர். ஆதியில் சைவ சமயாசாரியரில் ஒருவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவொற்றியூர் தியாகராயப் பெருமானைத் தரிசனஞ் செய்ய வந்திருந்த சமயத்தில், அங்கிருந்த சங்கிலி என்னும் பெண்மணியைக் கண்டு காதலித்து இறைவன் திருவுள்ளப்படி மகிழ மரத் தடியில் இருவரும் கலியாணஞ் செய்துகொண்டனர். அச் சம்பிரதாயம் இப்போது கூடா வொழுக்க முடையவர்க ளால் கடைபிடிக்கப்பட்டு வருவது மிகவும் வருந்தத் தக்க தாகும்.

இவ்விதம் மைனர்கள் பெண்மான் வேட்டையாடுவ தற்கும், மைவிழி மங்கையர் கண்வலை வீசுவதற்கும் நிலைக் களனு யிருக்கும் திருவொற்றியூரில் கோவில் வடக்குமாட வீதியில் ஒரு பெரிய பங்களா அந்தப் பக்கத்தையே அழகு செய்துகொண்டிருந்தது. அப் பங்களாவின் அமைப்பும், அதைச் சுற்றிச் சூழ்ந்துள்ள பலவித செடி கொடி மரங் கள் வளர்ந்திருக்குஞ் செழிப்பும் கண்கவர் வனப்பினவா யிருந்தன. அத்தகைய பங்களாவின் முன்னே பல மோட் டார் கார்களும், கோச்சு வண்டிகளும் வரிசையாக நின் றிருந்தன. பங்களாவி னுள்ளிருந்து சில சீமான்களும்,

மைனர்களும் வந்து தத்தம் வண்டிகளில் ஏறியதும் அவை முறையே புறப்படலாயின. நிமிஷத்துக் கொரு தடவை வந்து கொண்டிருந்த கார்களி லிருந்து வேறு சில செல்வந் தர்களும், விடபுருடர்களும் வந்து இறங்கிப் பங்களாவி னுள் சென்று கொண்டிருந்தனர். சென்னைமா நகரிலுள்ள செல்வச் சீமான்களும், மைனர்களும் எல்லாம் அங்கு ஒருங்கே வந்து திரண்டிருந்தார்களென்று கூறினல் அது மிகையாகாது. ஆனல், அவர்களெல்லாம் பங்களாவினுள் தாராளமாகச் செல்லவில்லை. வெளிப்புறத்தில்தான் காத் துக்கொண்டிருந்தனர். அவர்கள் கிடைக்கக் கூடாத பொருள் எதற்கோ ஏக்குற்றுக் காத்துக்கொண்டிருப்பது போல் காணப்பட்டனர். அச்சீமான்கள் அங்கு போடப் பட்டிருந்த சோபாக்களிலும், நாற்காலிகளிலும் அமர்ந் திருந்தனர்.

செல்வச் சீமான்களும், மைனர்களும் எல்லாம் ஈக்கள் போல் மொய்த்துக்கொண்டிருக்கும் அப் பங்களா யாரு டையது? சொல்லவும் வேண்டுமோ! வண்டுகள் எதை மொய்த்து ரீங்காரஞ் செய்யும்? தேன் துளும்பிய மலர் களையே யன்றோ! அதுபோன்று மைனர்களும், சீமான் களும் தங்கள் நாட்டங்களைக் கவர்ந்த நாரீமணியின் கிரு பையைப் பெற வந்து குவிந்துகொண்டிருந்தனர். இப் பங்களா சென்னையிலேயே மிகவும் பேரழகியெனப் பேர் பெற்றவளும், தாசிகளில் மிகப் பிரசித்தி பெற்றவளுமான 'தாசி ரமணி' என்னும் பெண்மணியி னுடையதாகும். இவள்தான் நமது கதாநாயகியாகும். அவளுடைய கடைக்கண் நோக்கைப் பெறுவதற்காக, ஆயிரக்கணக் காகப் பணத்தைப் பாத காணிக்கையாகச் செலுத்த எத்தனையோ மைனர் பிரபுக்கள் அவளது கடைவாயிலைக்

காத்து நின்றார்கள். அவள் தாங்கள் இருக்கும் பக்கந் திரும்பிப் புன்முறுவல் கொண்டால் போதும்; அதையே பெரும் பேருகக் கொண்டு அவளுக்குத் தலை தாழ்த்திப் பலமுறை சலாம் போட்டு சொர்ணுபிஷேகஞ் செய்ய பல செல்வச் சீமான்கள் துடிதுடித்துக் கொண்டிருந்தார்கள். 'அவ்வளவுகூட வேண்டியதில்லை; அவளது திருமுக தரிசனங் கிடைத்தால் போதும்; ஸ்வர்ண விக்கிரகம் போன்றுள்ள அவளது தேகத்தை முடிமுதல் அடிவரை வைரங்களாலும், கோமேதகம், மரகதம், மாணிக்கம், நீலம் முதலிய பல மணிகளாலும் இழைத்து அலங்கரிக்கத் தயாராயிருக்கிறேம்' என்று கூறி எத்தனையோ பெரிய உத்தியோகஸ்தர்களெல்லாம் தூதனுப்பினர்கள். இவ்வளவு பேருடைய விருப்பமும் கோரிக்கைகளும் நமது ரமணி—(ஆம்; ரமணி தான்; ரமணி என்ற அழகிய பெயர் பேரழகியாகிய நமது கதா நாயகிக்கே தகும்; முற்றும் பொருந்தும்) விஷயத்தில் வியர்த்தமேயாயின. இவள் காமவெறி கொண்டலையும் காதகர்களுக்குக் 'காமக் கழிவிட'மாக இருக்க விரும்பவில்லை; தன்னை நாடுவோர் லட்சாதிபதிகள்; சீமான்கள் என்று தெரிந்தும், அவள் அவர்களை மிகத் துச்சமாய் நினைத்தாள். ஆகவே, அவள் கூடுமானவரை ஆடவர் கண்களில் படாமலேயே இருந்து வந்தாள். எவ்விதமோ தப்பித் தவறி எந்த மைனர் அல்லது சீமான் பார்வையிலாயினும் பட்டுவிட்டால், அவர்களைத் தனது சாகஸப் பேச்சினலும், விஷமச் செயலினலும் பரிகாசம் பண்ணிப் பங்கப்படுத்தி — அவமானப்படுத்தி — ஏய்த்து அனுப்பி விடுவாள்; அல்லது தானகிலும் அவர்களிட மிருந்து பக்குவமாகத் தப்பித்துக்கொண்டு போய்விடுவாள்.

ரமணி பால பருவம் நீங்கி மங்கைப் பருவ மடைவதற்கு முன்னரே, அவளது பேரழகு பல்லோரையும்

மயங்கச் செய்தது ; ஆகையால் அவளது அழகைக் கேள்வி யுற்ற செல்வச் சீமான்களும் மைனர் பிரபுக்களும் ஒவ் வொருவரும் தாங்களே முதன் முதலாக அவளையடைய பெரிய பெரிய தொகைகளைக் குறிப்பிட்டுச் செய்திகள் அனுப்பிக்கொண் டிருந்தனர். ரமணிக்குப் பாட்டியும், மாமாவும் இருந்தனர். ரமணி பாட்டியின் பெயர் சரசாங்கி; மாமாவின் பெயர் தாமோதரம் பிள்ளை. இவர்க ளிருவருந் தான் ரமணிக்குப் போஷகர்களாக இருந்து வரலாயினர். 'இப்போது ஒன்றும் அவசரப்படக்கூடாது ; தக்க வயது வரட்டும் ; மங்கைப் பருவமடையட்டும் ; அப்போது பார்த்துக்கொள்ளலாம் ; பின்னர் இப்போது உள்ளவற் றைவிட நல்ல கிராக்கி கிடைத்தாலுங் கிடைக்கும்' என்ற எண்ணத்தைக் கொண்டவளாய் இவ்விருவரும் செல்வந் தர்களின் கோரிக்கைகளை அவ்வளவாக லட்சியம் செய் யாதவர்கள் போல் பாவனைசெய்து வந்தனர்.

ஆயினும், மங்கைப்பருவ மடைந்து இரண்டு மூன்று வருடங்களான பின்னரும், ரமணி தங்கள் பரம்பரை வழக் கத்தை யனுசரியாது, வலிய வரும் சீதேவியை உதறித் தள்ளுவதுபோல், நான் முந்தி, நீ முந்தி என வரும் பணக் காரர் கோரிக்கைகளைப் புறக்கணிப்பதைப் பார்த்து அவர் கள் மனம் புழுங்கினர். சென்னையிலுள்ள பிரசித்தி பெற்ற பிரமுகர்களிட மிருந்தும் பெரிய பெரிய செல்வந்தர்களிட மிருந்தும், உயர்தர சர்க்கார் உத்தியோகஸ்தர்களிட மிருந் தும் செய்தி வரும்போதெல்லாம், 'ரமணி அவர்களது விருப்பத்துக்கு இணங்கிவிட மாட்டாளா! இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பணத்தைக் குவித்துவிட மாட்டாளா!' என்றே எண்ணிச் சரசாங்கி யும் தாமோதரம் பிள்ளையும் ஆவலோடு துடிதுடித்துக் கொண்டிருப்பர். ஆனல், ரமணி இவைகளை யெல்லாம்

'தூ'வென உதறித் தள்ளி அனைவருக்கும் ஏமாற்றத்தையே அளித்து வந்தாள். தப்பித் தவறி சரசாங்கியோ தாமோதரம் பிள்ளையோ இவ் விஷயமாக ரமணியை யணுகி வற்புறுத்த ஆரம்பித்தால், அவள் புற்றிலிருந்து 'புஸ்' எனச் சீறியெழும் நாகப் பாம்பைப்போல் அவர்கள் மீது சீறி விழுவாள். அவளது கோபத்தின் முன்னே அவர்கள் நிற்க முடியாது மெல்ல நழுவிவிடுவர். ரமணி எவ்வளவுக் கெவ்வளவு பேரழகியா யிருக்கிறளோ அவ்வளவுக் கவ்வளவு திட சித்தமும், பிடிவாத குணமும் வாய்ந்தவள். அவள் எவ்வித ஆபத்துக்கும், இடையூறுக்கும் மனங் கலங்கவே மாட்டாள். தந்திரத்தால் அவைகளி னின்றும் தப்பவே முயற்சிப்பாள். எதையாகிலும் ஒன்றைச் செய்ய வேண்டுமென்று அவள் எண்ணிவிட்டால், பின்னர் அது அநுபவ சாத்திய மற்றதென்று தெரிந்தாலும், அதற்காக மனந் தளராமல் அதை எவ்விதத்தி லாயினும் சாதிக்கவே கடைசிவரை முயன்று பார்ப்பாள். அவளது மனப்போக்கும் செயலும் இவள் அல்லி ராணியின் மறுபிறப்போ எனப் பிறரைக் கருதச் செய்யும். அவள் எல்லா வகையிலும் ஒரு சிறந்த வனிதாரத்னமாகவே விளங்கினாள். இத்தகைய ரமணியின் பெயர் முன்னே தாசி என்ற பதம் எவ்வாறு தான் வந்து ஒட்டிக்கொண்டதோ தெரியவில்லை. அவள் வாழும் மரபை யொட்டி ஜன சமூகம் ரமணியை அவ்வாறு அழைக்கிறது போலும்!

பங்களாவின் மேன் மாடியில் ஒரு பெரிய கூடம். கூட முழுவதும் கீழே இரத்தின கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. நீலவர்ணம் பூசப்பட்டிருந்த சுவற்றின் நாலா பக்கங்களிலும் கிருஷ்ணன், ராமன், சிவன், பார்வதி, முருகன் முதலிய சுவாமி படங்களும், இயற்கை யழகைத் தோற்றுவிக்கும் மேனாட்டுப் படங்களும், சித்திர நிபுண

ரான ரவி வர்மாவால் சித்திரிக்கப்பட்ட அழகிய படங்களும் பொருத்தமுற மாட்டப் பட்டிருந்தன. சுவற்றி னோரங்க ளில் சோபாக்களும், மெத்தை வைத்துத் தைத்த நாற்காலி களும் போடப்பட்டிருந்தன. கூடத்தின் நடுவே போடப் பட்டிருந்த சிவப்பு வெல்வெட்டாலாய சோபா வொன்றில் தான் நமது ரமணி ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டிருந் தாள். யானைத் தந்தத்தால் கடைந் தெடுக்கப்பட்டு, பொன் மெருகு கொடுக்கப்பட்ட சித்திரப் பதுமைபோல் காணப்பட்ட அவள் வெண் பட்டாடையை உடுத்தி யிருந்ததானது அவளது பேரழகை இன்னும் அதிகப் படுத்திக் காட்டியது. அவளது காலடியில் ஒரு அழகிய வீணை சார்த்தி வைக்கப்பட்டிருந்தது. அவளது அப்போ தைய தோற்றம் சரஸ்வதி தேவியோ என ஐயுறத் தக்கதா யிருந்தது. அச்சமயத்தில் ரமணியினுடைய கரங்களில் ஒரு தினசரி பத்திரிகை யிருந்தது. அவள் அப் பத்திரிகை யின் ஒரு பக்கத்தில் கொட்டை கொட்டையான பெரிய எழுத்துக்களில் பிரமாதமாகப் போடப்பட்டிருந்த செய்தி யொன்றைப் பார்த்துப் பார்த்துச் சிரித்துக்கொண் டிருந் தாள். இதே சமயத்தில் கூடத்துக்கு வெளியில் கத வோரத்தில் பதுங்கி நின்றிருந்த சரசாங்கி அடிக்கடி தலையை உள்ளே நீட்டி ரமணியைப் பார்த்தவாறு இருந்தாள். அவளுக்கு உள் நுழையவும் பயம் போலிருந் தது. அவள் ரமணியை யணுகத் தக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதுபோல் காணப்பட்டாள்.

ரமணியின் சிரிப்புக்குக் காரணந்தான் என்ன? அப் பத்திரிகையில் அவளுக்கு நகைப்பு தரக்கூடிய விஷயம் என்ன இருக்கிறது? ரமணியின் கண்களைக் கவர்ந்ததும் அவளுக்குச் சிரிப்புண்டாகச் செய்ததுமான செய்தி பின்வருமாறு:—

# பட்டப்பகலில் பகிரங்கக் கொள்ளை

## 50,000 ரூபாய் பெறுமான வைரமாலை மறைந்த மாயம்

### டாக்டர்-நகை வியாபாரிகள் திகைப்பு

### ஒரு மங்கையின் திருவிளையாடல்

★

சென்னை மேமீ 14உ

இன்று காலை பூந்தமல்லி ஹைரோட்டில் பகிரங்கமான பகல் கொள்ளையொன்று நடந்துவிட்டது. இதில் சம்பந்தப்பட்ட ஒரு பிரபல நகை வியாபாரியும், ஒரு பிரபல டாக்டரும் சுமார் 20 வயது நிரம்பப் பெறாத ஒரு மங்கையினால் ஏககாலத்தில் ஏமாற்றப்பட்டதுதான், யாவருக்கும் வியப்பை விளைத்திருக்கிறது.

நேற்று காலை சென்னை நகரிலேயே மிகவும் பிரசித்தி பெற்ற "குபேர பட்டினம் குமரப்ப செட்டியார் அண்டு சன்ஸு"க்கு எதிரில் பேபி ஆஸ்டின் காரொன்று வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ஒரு பெண்மணி நேராக மேற்படி நகைக்கடைக்குள் நுழைந்தாள். சிறிதுநேரம் அங்குள்ள விலையுயர்ந்த நகைகளைப் பார்வையிட்டு விட்டுக் கடைசியாக, ஒரு வைரமாலையைப் பொறுக்கி யெடுத்து விலை கேட்டாள். நகைக்கடை காரியஸ்தர்கள் அதன் விலை 50,000 ரூபாய் என்று கூறினார்கள். இவள் 40,000 ரூபாய்க்குத் தரும்படி பேரம் பேசினாள். அவ்விலைக்குத் தர காரியஸ்தர்கள் இணங்கவில்லை. எனவே, அவள் தன் விலாசத்தை ஒரு காகிதத் துண்டில் எழுதிக்கொடுத்து, அவ்விடத்துக்கு மறுநாள் காலை 10-மணிக்கு அவ் வைரமாலையை எடுத்துவந்தால், தன் கணவரிடங் காட்டி அவர்கள் கூறிய விலைக்கே வாங்கிக்கொள்வதாகக் கூறிவிட்டுச் சென்றாள்.

அந் நங்கை கூறியவாறே மேற்படி நகைக்கடையின் பெரிய காரியஸ்தர் பூந்தமல்லியில் அவள் தெரிவித்த பங்களாவுக்கு வைர மாலையை எடுத்துக் கொண்டு சென்றார். இவர் வரவையே எதிர்பார்த்திருப்பதுபோல், வாயிலிலேயே காத்திருந்த மேற்குறித்த பெண்மணி காரியஸ்தரை வரவேற்று அழைத்துச் சென்று முன் பக்கத்திலிருந்த ஒரு அறையைக் காட்டி அதனுள் தான் தன் கணவர் இருக்கிறாரென்று கூறித் தந்திரமாக அவர் வைத்திருந்த வைரமாலையைத் தன் கையில் வாங்கிக்கொண்டு, உள்ளே யிருக்கும் தன் மாமியாரிடம் அதைக் காட்டிவிட்டு வருவதாகவும், காரியஸ்தர் அவள் காட்டிய அறையுள் சென்று அவருடன் பேசிக்கொண் டிருக்கும்படியுங் கூறிக் காரியஸ்தரை உள்ளே அனுப்பினாள். அதற்கப்புறம் அவள் எவ்விதமோ அவ்விடத்தை விட்டு வைரமாலையோடு மாயமாய் மறைந்து விட்டாள்.

அப் பெண்மணி குறிப்பிட்டதும், இருந்து காரியஸ்தரை வரவேற்றதுமான பங்களா, சென்னையில் மூளைக் கோளாறைத் தீர்த்து வைப்பதில் நிபுணத்துவம் வாய்ந்தவரான டாக்டர் மாதவராவ் எம். பி. பி. எஸ்., உடையது. காரியஸ்தர் அம்மங்கை காட்டிய அறையினுள் நுழைந்ததும், உள்ளே அமர்ந்திருந்த டாக்டர் மாதவ ராவ், அவரைப்பற்றி முன்னதாகவே தெரிந்தவர்போல் அவரது உடல் நிலையை விசாரித்தாராம். பிறகு, அவரைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தினாராம். காரியஸ்தர் நகை வியாபாரியென்றும், வியாபார நிமித்தமாகவே வந்திருப்பதாகவுந் தெரிவித்தும் டாக்டர் அவற்றை யெல்லாங் காதில் வாங்கவே யில்லையாம். இவர்களுக்குள் பலத்த வாக்குவாத மேற்பட்டு, சிறிது நேரம் சச்சரவு உண்டான

பின்னரே, கடைசியாக டாக்டர் ஏதோ சூது நடந்திருக்கிறது என உணர்ந்தாராம். பிறகு, இருவருமாகச் சேர்ந்து அம் மங்கையைத் தேட ஆரம்பித்ததில், அவள் போன இடம் தெரியவில்லையாம். அப் பெண்மணி, தாம் டாக்டர் மாதவராவின் மனைவியென்று நகை வியாபாரியிடமும், மேற்படி நகைக்கடை காரியஸ்தர் தன் கணவனென்று டாக்டரிடமும் சாமர்த்தியமாகக் கூறி ஏககாலத்தில் இரு திறத்தாரையும் ஏமாற்றி யிருக்கிருளென்று இதிலிருந்து தெரிகிறது.

இது சம்பந்தமாக டாக்டர் மாதவ ராவை விசாரித்ததில், அவர், நேற்று காலே பதினேரு மணிக்கு அம் மங்கை தம்மிடம் வந்து, தனது கணவருக்குத் திடீரென்று பைத்தியம் பிடித்துவிட்டதென்றும், அவரது சித்த சபலத்தை எப்படியும் குணப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதாகவும், தாம் அவளது வார்த்தையை உண்மையென்றே நம்பி அவ்விதமே குணப்படுத்துவதாக ஒப்புக்கொண்டதாகவும், மறுநாள் காலே 10—மணிக்கு அவள் தன் கணவனை யழைத்து வருவதாகச் சொல்லிச் சென்றதாகவும், அவள் சொன்ன விதமே, மறுநாள் காலே சரியாகப் பத்து மணிக்குக் காரியஸ்தர் வரவே, தாம் அவரை மேற்குறித்த பெண்ணினுடைய கணவரென்றே கருதிப் பரிசீலனை செய்ய முற்பட்டதாகவும் வெகு நேரத்திற்குப் பிறகே, தாம் வஞ்சிக்கப்பட்டதை யுணர்ந்ததாகவும், தமது வாணுளில், இதுபோன்ற விசித்திர அனுபவத்தை இதுவரை பெற்றதில்லை யென்றும் கூறினர்.

இச் சம்பவத்தை டாக்டர் மாதவராவும், குபேர பட்டினம் குமரப்ப செட்டியார் அண்டு சன்ஸ் நிர்வாகஸ்தர்களும் போலீஸ் கமிஷனருக்கு அறிவித்திருக்கிருர்கள்.

உடனே நகரின் நாலாபக்கங்களிலுமுள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கு இப் பகற் கொள்ளையைப்பற்றி டெலிபோன் மூலமாக அறிவிக்கப்பட்டது. குற்ற இலாகா போலீஸாரும், இரகசியப் போலீஸாரும் இக்கொள்ளையைப் பற்றிப் புலனறிய தீவிரமாக முயன்று வருகிறார்கள். வெளியூர் போலீஸ்களுக்கும் இது சம்பந்தமாகத் தகவல் கொடுத் திருப்பதாகத் தெரிகிறது.

இப் பகற் கொள்ளையை வெகு திறமையாக நடத்திய பெண்மணிக்கு வயது இருபது தானிருக்குமாம். சிறந்த அழகும் நவ நாகரிகத் தோற்றமும் வாய்த்தவளாம். அவள் உடையுடுத்தி யிருக்கும் மாதிரி மங்களூர் பிராம்மணப் பெண்போலக் காணப்படுகிறதாம். சுமார் $5\frac{1}{4}$ அடி உயர மிருப்பாளாம்.

இப் பெண்மணியைப் பற்றி உளவறிந்து கூறுபவர்களுக்குப் போலீஸ் அதிகாரிகளும், குபேர பட்டினம் குமரப்ப செட்டியார் அண்டு சன்ஸ் நிர்வாகிகளும் ஏதோ பரிசளிக்கப் போவதாகக் கூறப்படுகிறது. இச் சம்பவம் நகரில் ஒருவித பரபரப்பை யுண்டுபண்ணி யிருக்கிறது. எங்கு பார்த்தாலும் இதைப் பற்றியே பேச்சாக இருக் கிறது.

(பின்னர் வந்த செய்தி)

நேற்று காலை கோட்டைக்கு எதிரில் அதாவது ஸர். டி. முத்துசாமி ஐயர் ரோட்டும், ஜிம்கானு வாராவதியும் சந்திக்கு மிடத்தில் பெரிய விபத்து நடைபெற விருந்தது. தெய்வச் செயலாக அவ்விதமொன்றும் நடைபெறவில்லை. மவுண்ட் ரோட்டிலிருந்து மோட்டார் சைக்கிலில் வந்து கோட்டைக்குள் போய்க் கொண்டிருந்த ஒரு வாலிபன் மீது ஹைகோர்ட் வழியாக இருந்துவந்த ஒரு பேபி

ஆஸ்டின் கார் மோத இருந்தது. காரில் வந்த பெண்மணி பீட் கான்ஸ்டேபிள் கை காட்டுவதையுங் கவனியாது அதிவேகமாக மோட்டாரை யோட்டிக்கொண்டு வந்தாளாம். வெகு சமீபத்தில் வந்த பிறகே அம்மங்கை தன் கார் மோட்டார் சைக்கில்மீது மோதப் போகிறது என்று தெரிந்து, உடனே "பிரேக்" போட்டு காரை நிறுத்தினுளாம். அப்படியும், காருக்கும் சைக்கிலுக்கும் இடையே அரை யங்குலம்கூட இல்லையாம். அவ்வாலிபன் சைக்கிலோடு சாய்ந்து கொடுத்ததால்தான் சிறு விபத்துகூட நேராது தப்பியதாம். காரை அதிவேகமாக விட்டுவந்தது ஒரு பெண்மணி என்று தெரிந்ததும் பீட் கான்ஸ்டேபிலும்; மற்றும் பொது மக்களும் ஆச்சரிய மடைந்தார்களாம். கடைசியாக, பீட் கான்ஸ்டேபிள் காரை அதிவேகமாக விட்டுவந்து விபத்து விளேக்கக் காரணமாக இருந்த பெண் மணியைப்பற்றித் தகவல் அறியவும், கார் நெம்பரைப் பார்த்துக் குறித்துக்கொள்ளவும் நெருங்குகையில், யாரும் எதிர்பாராத வகையில், அம்மங்கை திடீரென காரை வேகமாக விட்டுக்கொண்டு போய் விட்டாளாம். இவ்விதம், பீட் கான்ஸ்டேபிளுக்கும், மற்றவர்களுக்கும் 'டிமிக்கி' கொடுத்துவிட்டுச் சென்ற பெண்மணியும், இவ் வைரமாலேயைக் கொள்ளேயடித்துச் சென்ற பெண்மணியும் ஒரே நபரா யிருக்கலாமோ என்று சந்தேகிக்கப்படுகிறது. ஏனென்ருல், வைரமாலே கொள்ளேயில் சம்பந்தப்பட்ட பெண்ணேப்பற்றிய வருணனே, குறிப்பு அனேத்தும், விபத்துண்டாக்க விருந்த பெண்ணேடு ஒத்திருக்கிறது. இது சம்பந்தமான உண்மையையும், குற்றவாளியையும் இரகசியப் போலீஸார் கூடிய சீக்கிரம் கண்டுபிடித்து விடுவார்களென்று நம்பப் படுகிறது.

* * * *

"ஹஹ்ஹஹ்ஹா! இரகசியப் போலீசார் கூடிய சீக்கிரம் கண்டுபிடித்து விடுவார்களாம். இவ்விதம் யாரோ நம்புகிறுர்களாம். யார் நம்புகிறது? பத்திரிகா நிருபரின் பேஞ முனேதான் நம்பவேண்டும்?—மற்றவர்களுக்குத் தெரியாதா? இம்மாதிரி சம்பவங்கள் பொதுவாகப் போலீஸ் புலிகளேக் கதிகலங்க வைக்கின்றன என்று.—இதுபோன்ற பத்திரிகைகளுக்கு வேண்டுமானுல் நல்ல வேட்டை என்று சொல்லலாம். வேறு வேலேயற்ற இப் பத்திரிகாசிரியர்கள்—ஊர் வம்பளப்பதையே தங்களது முக்கியத் தொழிலாகக் கொண்ட இப்பத்திரிகாசிரியர்கள் தான், 'இம்மாதிரி திடுக்கிடும் சம்பவங்கள் நிகழாதா! நம் பத்திரிகைகளிலுள்ள இடங்களே நிரப்ப எதையாகிலும் போட்டுத் தீர வேண்டுமே! தினம் ஒரு திருட்டு, ஒரு கொள்ளே, ஒரு கொலேயாகிலும் நடக்காதா! இவையெல்லாம் ஒன்றுமில்லாவிட்டாலும், சாதாரண அடிதடி சண்டை நடந்தாலும் போதுமே! இச் சிறு சம்பவத்தை வைத்துக்கொண்டு பெரிய சரடு கட்டிப் பிரமாதமாக வெளியிடலாமே?' என்று எண்ணி இவ்வித சம்பவங்களே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.—மற்றவர்களுக்கு—பொது மக்களுக்கு மட்டுமல்ல; போலீஸ் புலிகளுக்குக்கூட—வீண் கவலேயும், பீதியும், சிரமமுந் தரக்கூடிய விஷயங்களல்லவா இவையெல்லாம்!—டாக்டரும் செட்டியாரும் நேரே போலீஸ் கமிஷனருக்கு தகவலறிவித்திருக்கிறுர்களாம். போலீஸ் கமிஷனருக்கு அறிவித்தால் உடனே விமோசனம் கிடைத்து விடுமென்பது அவர்களுடைய எண்ணம் போலும்! நகரின் பல பாகங்களுக்கும், சுற்றுப் பக்கத்து ஊர்களுக்கும் டெலிபோனும் தந்தியும் பறந்து என்ன செய்வது! இக் கொள்ளேயைப் பற்றிப் புலனறிய தீவிரமாக முயன்றுவரும் குற்ற இலாகா

போலீஸாரும், இரகசியப் போலீஸாரும் கையாலாகாமல் கடைசியில் எவராகிலும் ஒரு ஏழை—நிரபராதி—யின் தலை மீது கையை வைத்துவிடப் போகிறார்கள். அந்த ஆசாமி தான் வைரமாலையைக் கொள்ளையடித்தது என்று சாட்சி சொல்ல போலீஸாருக்கு ஆசாமிகள் தானா அகப்படாமல் போகப்போகிறார்கள்? அடே யப்பா! குற்றவாளி கொள்ளையடிக்கும்போது பக்கத்திலிருந்து பார்த்ததாக மிகச் சாதுர்யத்துடன் சாட்சி சொல்லும் ஆசாமிகள் எத்தனை பேரிருக்கிறார்கள்? கடைசியாக, நீதி வழங்க நீதிபதி மகானுபாவர்கள் இருக்கவே இருக்கிறார்கள். இதற்கெல்லாம் பெயரென்னவென்றால், நீதியும் ஒழுங்கும் மிகக் கருத்தாகக் கவனிக்கப்படுகிறது என்பதே. பொது மக்களிடையே நீதியையும், ஒழுங்கையும் காப்பதற்கென்றே அவதரித்திருப்பதாகத் தங்களைக் கூறிக்கொள்ளும் இந்தப் 'போலி' அதிகாரிகளால்தான் அநீதியும், ஒழுங்கீனமும் அதிகரித்து வருகின்றன. இன்று உலகில் நடைபெறும் அட்டூழியங்களுக்கு மூலகாரணமென்ன என்று அறிந்து பரிகாரந் தேட, இவர்களாலோ மற்ற எந்த அறிவாளிகளாலோ முடியவில்லை. அப்பேர்ப்பட்டவர்கள் நீதியையும் ஒழுங்கையும் காப்பதாகக் கூறிக்கொள்வதற்கு வெட்கமாக இல்லையா?—சே! என்ன உலகம்! என்ன மனித சமூகம்!! இன்று தேக பலமோ, அறிவு பலமோ, பண பலமோ உள்ளவன் எவனோ அவன் செய்வதெல்லாம் நியாயம்! அவன் வைத்தது சட்டம்! அவன் செய்யும் அட்டூழியங்களும், கொடுமைகளும் வெளி வராமலே மறைந்துபோகின்றன. தப்பித் தவறி வெளிவந்தாலும், அவன் தப்பித்துக்கொள்ள எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அதிகாரிகளெல்லாங் கூட அவனுக்கு இவ்விஷயத்தில் உதவி புரிகிறார்கள். அவன் எவனைக் கேட்க

ஜனசமூகம் காத்துக்கொண்டிருக்கிறது. பரம ஏழைக்கோ —பலமற்றவனுக்கோ இவ்வுலகில் புகலிடமில்லை. நீதி ஒழுக்கம், சர்க்கார் சட்டம், சமூகக் கட்டுப்பாடு எல்லாம் அவனுக்கு விரோதமாக இருக்கின்றன. ஆகவே, ஏழைக ளுக்கும், அபலைகளுக்கும் நியாயம் வழங்காத உலகம் நாசமாகட்டும்; ஜன சமூகம் அழிந்தொழியட்டும்— அக்கிரமத்தை அக்கிரமத்தால் வெல்ல வேண்டும். அட்டூழி யங்களை யொழிக்க அட்டூழியச் செயலைக் கையாளவேண் டும். வஞ்சகத்தை வஞ்சகத்தாலும், மோசத்தைப் படு மோசத்தாலும் தகர்த் தெறியவேண்டும்.—இன்று பெரிய செல்வந்தர்க ளென்றும், லட்சாதிபதிக ளென்றும், கோடீஸ் வரர்க ளென்றும் இருப்பவர்களெல்லாம் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் தொழிலாளர்களின் பேருழைப் பால் கொழுத்தவர்க ளல்லவா? ஜமீன்தார்க ளென்றும், மகாராஜாக்க ளென்றும் பெயர் வைத்திருப்பவர்க ளெல்லாம் பரம ஏழைகளான விவசாயிகளின்—குடிமக்களின்—இரத் தத்தை உறுஞ்சிப் பிழைப்பவர்க ளல்லவா! பெரிய மனித ரென்றும், கனதனவான்க ளென்றும் பெயர் வாங்கி யிருப் பவர்க ளெல்லாம் யார்? வஞ்சகத்தாலும், மோசத்தாலும் பல எளிய குடும்பங்களைப் பாழாக்கி முன்னுக்கு வந்திருப் பவர்கள்தாம். இவ்விதம் உயர்நிலை யடைந்திருக்கும் இவர்கள் தங்களது முன்னேற்றத்துக்குக் காரணஸ்தர் களா யிருந்தவர்கள் தங்களைச் சூழ்ந்துள்ள ஏழை மக்களே என்பதை நினைத்தாயினும் பார்க்கிறார்களா? அவர்களிடம் நன்றி யறிதலுடையவர்களா யிருக்கிறார்களா? தங்கள் தயவை நாடி வரும் ஏழை மக்களுக்கு ஒரு சிறு உதவி யாகிலுஞ் செய்ய அவர்களுக்கு மனம் வருகிறதா? பரம தரித்திரர்களுக்கு — பிச்சைக்காரர்களுக்கு ஒரு தம்பிடி கொடுக்கக்கூட மனம் வராத இவர்கள், தங்களது ஆடம்

பரச் செலவுகளுக்கும், குடிக்கும், கூத்திக்கும், நாடகம், சினிமா முதலிய கேளிக்கைகளுக்கும் ஆயிரக்கணக்காகப் பணத்தைத் தண்ணீர்போல் செலவழிக்கிருர்கள். இவர்கள் தங்களது செல்வச் செருக்கால், தங்கள் மாளிகையில் அரம்பை போன்ற அழகுடைய மனைவியர் இருந்தும், அவர்களை வெறுத் தொதுக்கிவிட்டு, வெளியே பெண்மான் வேட்டையாடத் தொடங்கி விடுகிருர்கள். பிறர் மனைவியரைக் கபடமாகக் கற்பழிக்கக் காளைகள்போல் திரிகிருர்கள். 'எம் மூலையில் எங்கே தாசிப்பெண்கள் வசிக்கிருர்கள்' என்று மோப்பம் பிடித்துக்கொண்டு அலைகிருர்கள். விபசாரஞ் செய்வதையே தொழிலாகக்கொண்ட அப் பெண்மணிகளிடம் — அவர்கள் வேண்டாம்; வேண்டாமென்று கூறினும் கேட்காமல் — வலியக்கொண்டு போய்ப் பணத்தையும், வைர நகை முதலியவைகளையும் இவர்கள் குவிக்கிருர்கள். ஒரு சிறு உழைப்புமின்றி, கவலையின்றித் தின்று கொழுத்துவிட்டிருக்கும் இவர்கள் தங்கள் காமவெறியை—மிருக வுணர்ச்சியைத் தணித்துக்கொள்ள பெண்களைத் தேடித் திரிந்ததாலன்ருே—அவ்வபலைகளைப் பொருளாலும், நயவஞ்சக மொழியாலும், ஆடம்பர வெளி மயக்காலும் — இவற்றுக்கெல்லாம் இணங்கவில்லை யென்ருல் பலாத்காரத்தாலும்—மயக்கித் தங்கள் வசப்படுத்தி அட்டூழியஞ் செய்து வந்ததாலன்ருே—உலக உற்பத்திக்கே—மனித வளர்ச்சிக்கே—நிலைக்களனுக உள்ள தாய்மைத் தன்மை வாய்ந்த பெண்ணினத்தில் மிகக் கேவலமான தாசிகள்—வேசைகள்—என்று ஒரு பிரிவு உண்டாயிருக்கிறது? அப் பிரிவு ஜனசமூகத்தை அரிக்கும் விஷப்புழுக் கூட்டமாக வன்ருே ஏற்பட்டிருக்கிறது? ஜன சமூகத்திற்கே அழியாத சாபக்கேடாக இத் தாசிப் பெண்கள் கூட்டம் வந்து வாய்த்திருக்கிறது. இத்தகைய வேசைக்

கூட்டத்தை யுண்டுபண்ணிய இப் பணக்காரர்களேயும், ஜமீன்தார்களேயும் என்ன செய்தால்தான் தீராது.—குபேர பட்டினம் குமரப்ப செட்டியாரும் இவரது குமாரர்களும் இக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் தானே! இவர்களைக் கொள்ளை யடித்தால் என்ன! கொடுமை செய்தால்தான் என்ன! இவர்கள் பல்லாயிரக் கணக்கான ஏழைகளைப் பகல் கொள்ளை யடிப்பதைக் காட்டிலும், இவர்களைக் கொள்ளை யடிப்பது என்ன கெட்டுவிட்டது! இவர்கள் ஏழைகளைக் கொள்ளையடிப்பது நியாயம்! இவர்களைக் கொள்ளையடிப்பது அநியாயமா!— இவர்களைக் கொள்ளை யடித்தவர்களைக் கண்டுபிடிப்பவர்களுக்குப் பரிசு வேறு கொடுக்கப்போகிறார்களாம். விளம்பரப் படுத்தட்டுமே! எவர் கண்டுபிடிக்கப் போகிறார்களென்று பார்ப்போம்.— இந்த ரமணி யிடமா இவர்களுடைய பாச்சாவெல்லாம் பலிக்கும்? பார்க்கிறேன் ஒரு கை............" என்று கூறிய வண்ணம், பத்திரிகையை ஒரு பக்கம் வீசி யெறிந்து விட்டுக் கைகளைக் கொட்டி ஒரு சிரிப்பு சிரித்தாள். பிறகு ரமணி திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவள்போல் தனது மார்பைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள். சில விநாடிகள் அவள் சிந்தனையி லாழ்ந்தாள். உடனே அவள் ஜாக்கெட்டினுள் கையை விட்டு, மாலை போன்ற ஒரு பொருளை வெளியே எடுத்தாள். ஆம்; அது வைரமாலை தான். அதை வலது கையில் தாங்கிய வண்ணம் கண்க ளார நோக்கினாள். அவ் வைரமாலையின் ஜாஜ்வல்யமும் ஜொலிப்பும் அவளது கண்களைப் பறித்தன. அம் மாலையின் பிரகாசம் அவளது கண்களைக் கூசச் செய்தது. பின்னர், அவள் அம் மாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டாள். உடனே எழுந்து போய் அங்கு மாட்டப்பட்டிருந்த நிலைக் கண்ணாடி யொன்றன் முன் நின்று தன்னைக் கவனித்தாள்.

அவளது விழிகள் வியப்பால் விரிந்தன. இயற்கையிலேயே அழகு வாய்ந்த ரமணியின் கழுத்தில் ஜொலித்துக்கொண்டிருந்த வைரமாலை, அவளுக்கு ஒருவிதப் புத்தழகைக் கொடுத்து, இலக்குமி தேவியோ என அதிசயிக்கச் செய்தது. ரமணி பெருமிதத்தோடு சில விநாடிகள் அந் நிலைக் கண்ணாடி முன்னர் நின்று தன்னழகையும், வைரமாலையின் ஜொலிப்பையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"ஆஹா! என்ன அழகு! என்ன அழகு!! அழகிக்கேற்ற அழகிய மாலை............!"

எதிர் பாராத இக் குரலைக் கேட்டதும் ரமணி விதிர்ப்புற்று, "யாரது!" என்று ஒரு பெரிய அதட்டல் போட்ட வண்ணம் திரும்பினாள். மாமா தாமோதரம் பிள்ளை அசட்டுச் சிரிப்பு சிரித்தவாறு நிற்பதைக் கண்டு ரமணி அடங்காக் கோபங் கொண்டாள்.

மாமா அப்போதும் அசட்டு நகையை விடாதவராய்க் கைகளைப் பிசைந்த வண்ணம், "ரமணி! இவ் வைரமாலை உனக்கென்றே செய்யப்பட்டது போலிருக்கிறதே! இவ் விலையுயர்ந்த மாலையை அணியத்தக்க தகுதி உன்னை விட வேறு யாருக்கு இருக்கிறது? எவ்வளவோ பெண்மணிகள் தான் ஆயிரக் கணக்கில் பணத்தைச் செலவு செய்து வைர நகைகளைப் பண்ணிப்போட்டுக் கொள்ளுகிறார்கள். என்ன பிரயோசனம்! டால் வீசும் வைர நகைகளை யணிந்து கொண்டால் மட்டும் போதுமா! அதற் கேற்ற அழகும் இருக்கவேண்டாமா? அப்போது தானே சோபிக்கும்! என்ன இருந்தாலும் ரமணி ரமணி தான்! அப்படி இல்லாமலா பெரிய பெரிய கோடீஸ்வரர்கள், ஜமீன்தார்கள், மகாராஜாக்களெல்லாம் உன் திருமுக மண்டலத்தைத் தரிசனஞ் செய்ய நமது கடை வாயிலில் தவஞ்செய்து கொண்டிருக்கி

ளூர்கள்............'' என்று நீட்டிப் பேசிக்கொண்டே போனர்.

இதுவரை தாழ்வாரத்தில் கதவருகில் பூனை போல் பதுங்கிப் பதுங்கி நின்று கொண்டிருந்த சரசாங்கி இது தான் நல்ல சமயமென்று மெல்ல நடந்து வந்த வண்ணம், "அடே தாமு! குழந்தை மேல் கண் வைக்காதேடா! திருஷ்டி தோஷம் ஏற்பட்டு விடப் போகிறது.......'' என்று மேலும் ஏதோ கூற வாயெடுத்தாள்.

இதற்குள் ரமணி இவர்களது முகஸ்துதியைக் கேட்கச் சகிக்காதவளாய், "நிறுத்துங்கள்; உங்களது சாகஸப் பேச்சை!—உங்களை யார் இங்கு வரச் சொன்னது? எத்தனை தடவை நான் உங்களுக்குக் கூறுவது; நான் தனியே இருக்கும் போது யாரும் வந்து தொந்தரவு செய்யக் கூடாது என்று. உங்களுக்குக் கொஞ்சமாகிலும் அறிவிருந்தால் இவ்விதம் நடந்து கொள்வீர்களா! நான் இப்போது சிறிது நேரந் தனியா யிருக்க வேண்டும்; போங்கள்.— ஏன் தயங்கி நிற்கிறீர்கள்?—போகிறீர்களா! இல்லையா!" என்று உரத்த குரலில் கூறிப் பெண் புலி போல் சீறினள்.

சரசாங்கியும், தாமோதரம் பிள்ளையும் ரமணியின் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு நடுநடுங்கிப் போய் விட்டனர். ரமணி ஆத்திரத்தோடு பேசிய வண்ணமே அவசர அவசரமாகத் தன் கழுத்தை அணி செய்திருந்த வைர மாலையைக் கழற்றித் தனது மாமனுக்கும், பாட்டிக்குந் தெரியாவாறு பழையபடி ஜாக்கெட்டினுள் செருகிக் கொண்டாள். ஆனல், சரசாங்கியின் கபடக் கண்கள் இவளது செயலைக் கவனிக்கத் தவற வில்லை. அவள் தாமோதரம் பிள்ளையை மெதுவாகத் தட்டி இதைக் குறிப்பித்தாள்.

ரமணி தான் நின்ற இடத்தினின்றும் அடி பெயர்ந்து இவர்கள் இருக்கும் இடத்தை நெருங்கி, "பாட்டி, நான் சொன்னது உன் காதில் ஏற வில்லையா என்ன! விஷம மனைத்திற்கும் காரணமாயிருக்கும் நீ ஒன்றுந் தெரியாதவள் போல் 'திரு திரு' வென விழித்து நிற்கிருயே! உலகிலுள்ள வஞ்சகம், சூழ்ச்சி, தந்திரம் எல்லாவற்றிற்கும் நீ நிலைக் களம் போன்றிருக்கிருய். இந்த அசட்டு மாமா நீ ஆட்டி வைக்கும் வண்ணம் ஆடும் சூத்திரப் பதுமை என்று எனக்கு நன்கு தெரியும். இப்போது என்ன சமாசாரம்? எதற்காக இங்கு வந்தாய்? விஷயத்தைச் சீக்கிரம் சொல்லித் தொலை. இல்லாவிடில்...........தெரியுமா!" என்று துடி துடிப்பாகப் பேசினுள்.

சரசாங்கி, "ஒன்றுமில்லை. நம்ம வீட்டுக்கு அடிக்கடி வருவார் பாரு; தனபால பூபதி மகாராஜா. அவர் வந்திருக்கிருரு. உன்னைப் பார்க்கணும்னு கண்ணிலேயே இருக்குதாம். உன்னிடம் வந்து உன்னைப் பார்த்துட்டு ஒரு வார்த்தை பேசிட்டுப் போயிடுருராம்...." என்று விட்டு விட்டுத் தழுதழுப்போடு கூறினுள். அவள் சிறிது பயத் தோடேயே பேசினுள்.

சரசாங்கியைத் தொடர்ந்து தாமோதரம் பிள்ளை, "அவர் மட்டுமல்ல; மன்மதபுரி மைனர் சந்திரசேகர முதலியார், சிவசைலம் ஜமீன்தார் சிதம்பரநாதம் பிள்ளை, பிரஞ்சு டைமண்டு மெர்சண்ட் மோகன்லால் சேட், பொம்மிடி ரகுநந்தன செட்டியார் இன்னும் எத்தனையோ பேர் வந்து உன் சேவைக்காக, காலையிலிருந்து காத்துக்கொண் டிருக் கிருர்கள். நீதான்..........." என்று மேலும் ஏதோ கூற முயன்ருர்.

ரமணி கோபத்தால் முகம் சிவப்பேற பவள வாய் துடிக்க, "என்ன! எனக்காக—என்னைக் காண—என்னிடம் ஒரு வார்த்தை பேச—தனபாலபூபதி, மன்மதபுரி மைனர் சிவசைலம் ஜமீன்தார் எல்லாம் காத்துக்கொண்டிருக்கிறார்களா! இந்தச் சனியன்களை யெல்லாம் இங்கு யார் வரச் சொன்னது! இவ்வளவு நேரம் காத்துக்கொண்டிருக்கச் சொன்னது!—நான்தான் எத்தனையோ தடவை சொல்லி யிருக்கிறேனே; யாரையும்,—அவர்கள் கோடீஸ்வரர்களா யிருந்தாலும், இவ்வுலகத்தையே படைத்த பிரம்மாவா யிருந்தாலும் இங்கு சேர்க்க வேண்டாம்; இடங்கொடுக்க வேண்டாம் என்று.—நான் என்ன சொன்னாலும் நீங்கள் லட்சியஞ் செய்யாமல், உங்கள் போக்கில் எல்லாம் செய்து கொண்டு வருகிறீர்கள். பணக்காரர், ஜமீன்தார் என்றவுடனே பணங் கொட்டுவார்களென்று வாயைப் பிளக்கிறீர்கள். பணம் பணம் என்று அலைகிறீர்கள். உங்களுக்கேன் இந்தப் பணப் பைத்தியம்? பணப் பேய்களாகிய உங்களுடைய பேராசைக்கு நான் பலியாக வேண்டுமா? அது முடியாது. போங்கள்; இங்கு என்னெதிரில் நில்லாதீர்கள். கீழே வந்திருப்பவர்களை யெல்லாம் விரட்டியடியுங்கள். ஓடுங்கள் சீக்கிரம்; உம். சீக்கிரம்" என்று கூறித் துள்ளிக் குதித்தாள்.

ரமணியினுடைய சீற்றத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் கண்ட தாமோதரம் பிள்ளையும், சரசாங்கியும், உண்மையிலேயே பீதி யடைந்து விட்டனர். அவர்கள் ரமணியைப் பயமும் பரிதாபமுங் கலந்த பார்வையில் பார்த்த வண்ணமே பின் பக்கமாக நகர்ந்து அவ்வறையை விட்டு வெளியேறினர். அவர்கள் ரமணி இவ்வளவு பிரமாதமாகக் கோபித்துக் கொள்வாள் என்று சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை. ரமணிக்கு விபசாரத் தொழிலை மேற்கொள்ளுவ

தென்பது இளம் பருவத்தி லிருந்தே பிடிக்க வில்லை யென்பதை அவர்கள் நன்கு அறிந்திருக்கிருர்கள்; ஆயினும் இது வரை நடந்து வந்தது போல், உடல் உழைப்பின்றித் தின்று கொழுத்து காமப் பேயால் உந்தப்பட்டு இங்கு வந்திருக்கும் செல்வச் சீமான்களையும், மைனர்களையும் நயவஞ்சக மொழிகளாலும், சாகஸச் செயல்களாலும் மயக்கி அவர்களைத் தன்னருகே அணுக வொட்டாமலேயே தேன் குடித்த நரிபோல் மதிமயங்கச் செய்து அவர்களாகவே பணத்தையும், தாங்கள் அணிந்திருக்கும் விலையுயர்ந்த நகைகளையும் சமர்ப்பித்து விட்டுப் போகச் செய்வாள் என்று பேராவலோடு அவர்கள் ஒருவர் பின் ஞெருவராக ரமணியிடம் வந்தனர். அவர்கள் எதிர் பார்த்ததற்கு முற்றும் மாருக ரமணி நடந்து கொள்ளவே பெரிய ஏமாற்றமடைந்தனர். ஆனுலும், ரமணி வைத்திருந்த வைரமாலையைக் கண்டதும் அவர்களுக் குண்டான ஏமாற்றமும், வருத்தமும் ஒருவாறு நீங்கின. ரமணி வெளியே போன இடத்தில் யாரோ ஒரு பெரிய கோடீஸ்வரனைச் சந்தித்திருக்கிருள்; அவன் இவளது பேரழகில் மயங்கிப் போய்ப் பல்லைக் காட்டி மிக விலையுயர்ந்த வைரமாலையைப் பரிசாகக் கொடுத்திருக்கிருன்; அம் மாலையை அவள் அடித்துக் கொண்டுவந்த உற்சாகத்தில் தான், மற்றெதையும் லட்சியஞ் செய்யாதிருக்கிருள் என்று அவர்கள் நினைத்துக் கொண்டு 'எப்படியும் நமக்கு நல்ல வருவாய் தான்' எனக் கருதித் திருப்தி யடைந்தனர். ரமணி குபேர பட்டினம் குமரப்ப செட்டியார் அண்ட் ஸன்ஸின் வைரமாலையை, அக் கம்பெனி காரியஸ்தரிட மிருந்து ஏமாற்றி யடித்துக் கொண்டு வந்ததும், இச்செய்தி பத்திரிகைகளில் வெளியாகியிருப்பதும், போலீஸார் இவளைப் பல இடங்களிலும் தேடிக் கொண்டிருப்பதும் இவர்களுக்குத் தெரியாது.

அறையை விட்டு வெளியே வந்த சரசாங்கியும், தாமோதரம் பிள்ளையும், ரமணியின் போக்கைப் பற்றியும், அவள் வைத்திருக்கும் வைரமாலையைப் பற்றியும் பேசிக் கொண்டே மெத்தைப் படிகளின் வழியாகக் கீழிறங்கினர்.

இவர்கள் வெளிச் சென்ற பின்னரும், ரமணியின் ஆத்திரம் அடங்கவில்லை. அவளது அப்போதைய உற்சாக நிலைமையைத் தாமோதரம் பிள்ளையும், சரசாங்கியும் குறுக்கிட்டுக் கெடுத்து விட்டது ரமணிக்குச் சிறிதும் ஆறவேயில்லை. அவள் இரத்தங் குடித்த பெண் புலி போல், அறையில் இப்படியும் அப்படியுமாக நிலை கொள்ளாது உலவலானாள். அமைதி யிழந்த அவளது முகம் மனதில் நிகழும் சிந்தனைப் போராட்டத்தை வெளி காட்டியது. கோபம் மாறித் தெளிவடைந்த அவளது அழகிய வதனம் சிறிது நேரத்திற் கெல்லாம் மீண்டும் இருண்டது. அவளையறியாமலே அவளது உடம்பு நடுங்கி யமர்ந்தது. அவள் திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவளாய் அறையை விட்டு நடந்து வெளியே நின்று, “மாமா! ஓ மாமா!” எனப் படபடப்போடு கூப்பிட்டாள்.

ரமணி கூப்பிடுவதை முதலில் தாமோதரம் பிள்ளை கவனிக்க வில்லை. கிழவி சரசாங்கியின் பாம்புக் காது மட்டும் எப்படியோ இதைக் கேட்டு விட்டது.

ரமணி எதற்காகக் கூப்பிடுகிறாள் என்று திட்டமாகத் தெரியாவிட்டாலும், தங்கள் விருப்பத்துக்கு இசைந்து வந்திருக்கிறாளோ என்ற எண்ணந் தூண்ட சரசாங்கி மனதுள் மகிழ்ச்சி கொண்டாள். எனவே, முன்னே நடந்து கொண்டிருந்த அவள் சடக்கென நின்று, திரும்பித் தாமோதரம் பிள்ளையைப் பார்த்து, ரமணி கூப்பிடுவதாகக் குறிப்பிட்டாள். அப்போதுதான் தாமோதரம் பிள்ளைக்கு

ரமணி அழைப்பது காதில் விழுந்தது. அதைக் கேட்டதும் அவர் விதிர்ப்படைந்தார். 'தம்மை எதற்காக ரமணி கூப்பிடுகிருள்; இப்போது போனுல் இந்த அல்லிராணி இன்னும் என்ன அட்டகாசம் பண்ணுகிருளோ' என்று அவர் எண்ணியபோது தொடை நடுங்கியது. இருந்தாலும் அவர் சிறிதுந் தாமதிக்காமல் விழுந் தடித்துக்கொண்டு மாடிக்கு ஓடினுர். சரசாங்கி விஷய மறிய அவர் பின்னுலேயே சென்று பூனைபோல் தாழ்வாரத்தின் சுவற்ருேரத்தில் நின்று உற்றுக் கேட்டாள்.

தாமோதரம் பிள்ளை தம் பயத்தை வெளிக்குக் காட்டாமல், சாதாரணமாக இருப்பது போலவே பாவனை செய்து, "என்னையா அம்மா, கூப்பிட்டாய்! எதற்காக?" என்று கேட்டுகொண்டே ரமணி முன்னே போய் நின்ருர்.

ரமணி தாமோதரம் பிள்ளையைக் கண்டதும், "மாமா! ரொம்ப அவசரம்!....................நான் இவ்விடத்தை விட்டு உடனே வெளியே போக வேண்டும்........என் பிரயாணத்துக்கு வேண்டியவைகளைச் சீக்கிரம் தயார் செய்யச் சொல்லுங்கள்................இன்னென்று மிகவும் முக்கியம். இங்கு கீழே வந்திருக்கும் பிரபுக்களில் யாரையாகிலும் தாஜா பண்ணி, நீண்ட தூரம் வெளியூர்களில் இடைஞ்சலின்றிப் போகக்கூடிய காரொன்றை வாங்கிக் கொள்ளுங்கள். அவர்கள் வேண்டுமானுல், எனது பேபி ஆஸ்டின் காரை எடுத்துக்கொண்டு போகட்டும்.........................நான் இனி ஒரு நிமிஷமும் இங்கு இருக்கக் கூடாது. தலைமேல் ஆபத்து காத்துக் கொண்டிருக்கிறது. அது எந்த விநாடியும் என்னை வந்தடையக் கூடும். விஷயத்தை இப்போது விவரித்துச் சொல்ல எனக்கு அவகாச மில்லை. சமாசாரம் என்ன? ஏது? என்று இச் சமயம் ஒன்றுங் கேட்கவோ

அறியவோ முயலவேண்டாம்........எனது கைப்பெட்டியில் என்னுடைய உடை முதலியவைகளை யெல்லாம் வைத்துப் பூட்டச் சொல்லுங்கள்........நீங்களும் பாட்டியும் வேண்டு மானல் சாவதானமாகப் புறப்பட்டு தஞ்சாவூருக்கு வாருங்கள். நான் ஹம்ஸ தமயந்தி வீட்டில் உங்களை வந்து சந்திக்கிறேன்........எனது அவசரப் பிரயாணம் இரகசிய மாகவே இருக்கட்டும். யாருக்கும்—பாட்டிக்குக்கூட—தெரியக்கூடாது. பாட்டிக்குத் தெரிந்தால் 'நச்சு பிச்' சென்று ஏதேதோ கேட்டு என்னைப் பிய்த்துத் தள்ளி விடுவாள்........என்ன மாமா! ஒன்றும் பதில் பேசாமல் தூண் போல் நிற்கிறீர்களே!................நான் சொன்னதெல்லாம் காதில் விழுந்ததா?...................." என்று துடிதுடிப்போடு பேசிக் கடைசியாக ஒரு கேள்வி கேட்டாள்.

தாமோதரம் பிள்ளை ரமணியின் பேச்சைக் கேட்டு மனக்கலக்க முற்றாராலும், கடைசியாகத் தம்மைச் சமாளித்துக் கொண்டு, "ஒன்றுமில்லை. ரமணி, நீ கூறிய வனைத்தையுங் கேட்டேன். என்னமோ ஆபத்து தலைமேல் இருப்பதாகச் சொன்னயே! அது என்னமோ ஏதோ என்று தான் பயமா யிருக்கிறது. என்ன விஷயமென்று என்னிடம் சொன்னல், இங்கு வந்துள்ள சீமான்கள் யாரையாகிலுங் கொண்டு அதை நிவர்த்திக்க வழியுண்டா என்று முயற்சிக்கலாம். அதற்காக நீ எங்களை யெல்லாம் விட்டுத் தனியாக வெளியூருக்கு ஓடுவானேன்........" என்று மெதுவாகக் கூறிக்கொண்டே போனர்.

ரமணி இடைமறித்து, "இதுதானே மாமா, நான் வேண்டா மென்று சொன்னது!—நான் கூறியபடி செய்தால் அது போதும். எனக்கு யாருடைய உதவியும் வேண்டாம். அது பயன்படவும் படாது—மறு பேச்சு பேசா

தீர்கள். உடனே போங்கள். நான் சொல்லியபடி எல்லா வற்றையும் விரைவில் ஏற்பாடு செய்யுங்கள். இதற்குள் நான் தயாராகிக் கொண்டு கீழே வருகிறேன்" என்று அழுத்தமாகக் கூறினாள். அதற்குமேல் தாமோதரம் பிள்ளையால் பேச முடியவில்லை. அவர் ரமணியைப் பற்றிய பழைய பயமெல்லாம் போய் புதுவிதமான அச்சத்தோடு வெளியேறினார். இதுவரை உள் நடந்தவைகளை யெல்லாங் கேட்டுக் கொண்டிருந்த சரசாங்கி பெருமூச்சு விட்டவளாய் குழம்பிய மனதோடு அவ்விடத்தை விட்டு ஓசை படாது நீங்கிக் கீழே சென்றாள். ரமணி அடுத்த கணமே தன் காரியங்களைக் கவனிக்கலானாள்.

# நான்காவது அதிகாரம்

---

## எதிர்பாரா சந்திப்பு

சென்னையி லிருந்து திருச்சிஞப்பள்ளிக்குச் செல்லும் ராஜபாட்டையில் 'செவர்லட் நியூமாடல்' காரொன்று வெகு வேகமாகப் போய்க்கொண் டிருந்தது. அது போகும் வாயு வேகத்தில் பாதையிலுள்ள புழுதி பறந்து தூசைக் கிளப் பியதினுல், காரில் இருப்பவர் யாரென்று அறிவது சிறிது சிரமமா யிருந்தது. ஆயினும், கொஞ்சம் ஊன்றிக் கவனித் தால் அக் காரில் இருப்பவர் ஒருவரே யென்றும், அதுவும் ஒரு பெண்மணி யென்றும், அம் மங்கையே இவ்வளவு வேகமாகக் காரை யோட்டிக் கொண்டு செல்பவ ரென்றும் தெரிந்து கொள்ளலாம். அப் பெண்மணி கேரள நாடாகிய திருவாங்கூர் நம்பூத்ரி பிராம்மண வம்சத்தைச் சேர்ந்தவள் போல் காணப்பட்டாள். அவள் நல்ல சரிகை கரை போட்ட தூய வெள்ளை ஆடை யுடுத்தி யிருந்தாள். நம்பூத்ரி வகுப்பில் நாகரிக மடைந்த படித்த பெண்கள் உடுத்துவது போல், சேலையின் தலைப்பைப் 'புரூச்' குத்தி முன் பக்கத்திலேயே தொங்க விட்டிருந்தாள். அவளது காதுகளில் கற்களில்லாமல் வெறும் பொன்னுலாகிய தோடு களை அணிந்திருந்தாள். கைகளில் இரண்டிரண்டு பொன் வளையல்கள் சப்தித்துக் கொண்டிருந்தன. இடது கையில் ஒரு சிறு கடிகாரம் மிளிர்ந்து கொண்டிருந்தது. வெள்ளை யானைத் தந்தத்தால் கடைந்து எடுக்கப் பட்டதுபோல் காணப்பட்ட கழுத்தில் மிக மெல்லியதான பொற் சங்கிலி யொன்று தொங்கிக் கொண்டிருந்தது. அவள் தலைமயிரைச் சாதாரணமாகக் கோதி முடித்திருந்தாள். அழகிய நெற்றி

யில் திலகம் திகழ்ந்து கொண்டிருந்தது. ஏற்கனவே சேலை யின் முந்தானையை முன்புறந் தொங்கவிட் டிருந்ததால் மார்பகத்தைப் பாதி மூடியும் மூடாமலு மிருந்த மேலாடை கார் போகும் வேகத்தால் ஏற்படுங் காற்றினுல் பறந்து விலகி இளமைச் செவ்வியால் பூரித்து புடை பரந்திருந்த கொங்கைகளின் அமைப்பை நன்கு காட்டியது. இவ்வித நடையுடை பாவனையால் இம் மங்கை வேறு யாரோ போன்று தோன்றினுலும், அவளது ஒளி வீசும் அழகிய முகம் நமக்கு மிகவும் அறிமுகமான ரமணி யென்றே தெளிவுபடுத்தி விட்டது.

ரமணி காரை வாயுவேகம் மனோவேகமாக ராஜ பாட்டையில் விட்டுக் கொண்டு சென்ருலும், பின்போ, முன்போ வேறு மோட்டார்கள் வரும் சப்தங் கேட் டாலோ அல்லது வேறு ஏதோ சப்தங் கேட்டாலோ திடுக் கிட்டுத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்ருள்.

தனக்கு முன்னுல், யாரேனும் காரில் போவதாகத் தெரிந் தால், ரமணி தன் காரைச் சிறிது மெதுவாக விட்டுப் பின் தங்கியே போவாள். பின்னே கார் வருஞ் சப்தங் கேட் டால், திரும்பிப் பார்த்து விட்டு, எங்காகிலும் மரங்கள் அடர்ந்த இடமாக இருக்கிறதா என்று சுற்று முற்றும் பார்த்து, காரை வளைத்து கரடு முரடான சமவெளியில் விட்டு அடர்ந்த மரங்களிடையே மறைந்து நின்று, பின்னே வந்த மோட்டார் கார்கள் போன பிறகு, தன் காரை ராஜ பாட்டையில் விட்டுச் செல்வாள்.

இவ்விதம் மிக எச்சரிக்கையாகப் போய்க் கொண் டிருந்த ரமணி விழுப்புரத்தை யடைந்ததும், காரை நிறுத்தி வழிகாட்டி ஸ்தம்பத்தைக் காரிலிருந்த வண்ணமே அண்

ணுந்து நோக்கினுள். அந்த ஸ்தம்பம் நாலா திக்கும் போகும் பாதையை மைல் கணக்கோடு காட்டியது. ஆகவே, அதைப் பார்த்து தலை யாட்டிய வண்ணம், திரிச்சிக்குப் போகும் பாதை வழியாகக் காரை 'ஸ்டார்ட்' செய்தாள். அதே சமயம், 'பியட்' காரொன்று இவளது காரை மோதுவது போல் வந்து இவளைக் கடந்து சென்றது. பின்னே ஏதாகிலும் கார் முதலியன வருகிறனவா என்று பாராமல் திடீரென காரை 'ஸ்டார்ட்' செய்ததனுல், சிறிது நேரத்தில் விபத்துக்கு இட முண்டாக்கப் பார்த்தோமே என்ற எண்ணத்தோடு சிறிது முன்னே சென்ற காரை நோக்கிய ரமணி, அக் காரை யோட்டிச் செல்லும் வாலிபனைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

அக்காரை ஓட்டிச் செல்லும் வாலிபன் யார்? அவனைக் கண்டு ரமணி ஏன் திடுக்கிட வேண்டும்? அக் காரில் இருக்கும் வாலிபன்தான் நமது கதை ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட பத்திரிகை நிருபன் கலியாண சுந்தரன் ஆவன். அட! அவன் இங்கு எப்படி வந்தான் என வாசகர்களே! நீங்கள் ஆச்சரியப் படுகிறீர்களல்லவா! நாகப்பட்டினத்தில் நடக்கப்போகும் தஞ்சை ஜில்லா அரசியல் மகாநாட்டுக்குப் பத்திரிகைப் பிரதிநிதியாக ஆபீஸ் காரில் சென்று கொண்டிருந்தான். ஏனெனில், நீண்ட தூர பிரயாணத்துக்கு மோட்டார் சைக்கிலைவிட, கார் சௌகரியமானதல்லவா!

கலியாண சுந்தரன் சென்னையிலிருந்து திருச்சி செல்லும் பாதை வழியாகவே தனது காரை நிதானமாக விட்டுக் கொண்டு வந்தான். எதிரே வரும் வண்டிகளையும் மக்களையுங் கவனித்தே அவன் வலது புறத்தில் ஓரமாகக் காரை யோட்டிச் சென்றுன். விழுப்புரம் நாற்சந்தி கூடு மிடத்தி

னருகே வருகையில் திருச்சி ராஜபாட்டையைக் கவனித்தே காரை யோட்டினுன். அவ்வித மிருக்க, நாற்றிசை காட்டும் ஸ்தம்பத்தினருகே இடது புறத்திலிருந்து ஒரு கார் பின்புறமாகவே வந்து தன் காரில் மோத வரும் என அவன் சிறிதும் எதிர்பார்க்க வில்லே. திடீரென்று, முன்னே யிருந்து ஒரு கார் பின்பக்கமாகவே வரவே, தன் கார் இன்னும் ஒரு அடி முன் செல்லுமானுல், கட்டாயம் அக் கார்மீது மோதும் என்று அறிந்து திடுக்கிட்டு, உடனே, காரைப் பின்னுக்கு வேகமாகச் செலுத்தினுன். பிறகு அக் கார் வளைந்து திரும்புவதற்குள், இலாவகமாகத் திருப்பித் தன் காரை யோட்டி அதைக் கடந்து செல்லலானுன். இது வரை அவன், யோசனை யில்லாமல் நாற்சந்தி கூடு மிடத்தில் காரைத் தாறுமாருக விடுவது யார் என அறியவோ, அந் நபர்மீது சினங் கொள்ளவோ நினைக்க வில்லே. அவன் அக் காரைக் கடந்து செல்லும்போது அக் காரினுள் இருந்து ரமணி "ஆ" வென ஆச்சரியமாக வாய்விட்டுக் கூவியது காதில் விழவே, அவன் திரும்பிப் பார்த்தான். ரமணியைக் கண்டதும் அவனுக்கு அதியாச்சரிய முண்டாய் விட்டது. 'இக் காரை யோட்டி வந்தது ஒரு பெண்மணியா? சென்னேமா நகரில்தான் நவநாகரிக மகளிர் காரை யோட்டுவது சகஜமாகப் போய்விட்டது. இவ்வித நாட்டுப்புறங்களில் கூடவா நங்கையர் மோட்டார் காரைத் தாங்களாகவே ஓட்டிச் செல்லுகின்றனர்? யாருடைய துணையோ உதவியோ இன்றி ஒரு மோட்டார் காரை விட்டுச் செல்லக்கூடிய தைரியம் இந்நாட்டுப்புறப் பெண்களுக்கும் வந்து விட்டதா என்ன?' என அவன் பலவிதமாக நினைத்தான். ஆனுல், அவனுக்கு இப் பெண்மணி சிறிது நாட்களுக்கு முன் சென்னேயில் கோட்டை வாராவதியண்டை தான் ஏறிச் சென்ற மோட்டார் சைக்கிலே, அவள் ஓட்டிவந்த பேபி

ஆஸ்டின் காரினுல் மோதி விபத்து விளைக்க முயன்றவள் தான் என்று உடனே அறிந்துகொள்ள முடியவில்லை.

ரமணி மட்டும் கலியாணசுந்தரனைக் கண்டவுடனே இன்னவன் தானென அடையாளந் தெரிந்து கொண்டாள். அவனது உருவம் எவ்வாருே அவளுடைய உள்ளத்தில் பதிந்து போயிருந்தது. 'முன்பு தான் சென்னையில் அம் மனிதன் மீது மோட்டாரை மோதி விபத்துண்டாக்க இருந்தோ மென்ருல், இங்குமா சிறிதும் எதிர்பாராத நிலையில் அவன் விட்டுவந்த மோட்டாரில் மோத விருக்க வேண்டும்! அட ஆண்டவனே! சில சம்பவங்கள் நம்மை யறியாமலே—நாம் சிறிதும் எதிர்பாரா திருக்கையிலேயே—நடை பெறுகின்றன. அவ்விதம் எதிர்பாரா சம்பவங்கள் நிகழ்வதற்கு ஏதோ காரணங்கள்—நமக்கு இப்போது தெரியா விட்டாலும்—இருக்க வேண்டும்!—அதுவும் இவ் வாலிபனுக்கும் எனக்கும் ஏதோ முற் பிறப்பில் சம்பந்தம் இருந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். இல்லாவிடில், ஒரு முறைக் கிருமுறை நான் சிறிதும் எதிர்பாரா வகையில், இவ் வாலிபனுக்கு விபத்து விளைக்கும் முறையிலேயே சந் திக்க வேண்டும் என்று இருக்குமா?—ஆமாம். இவ்வாலி பன் யார்? இவன் இங்கு எப்படி வந்தான்? ஏன் வந்தான்? இப்போது எங்கே போகிருன்? இவன் நாடோடியா? இல்லாவிடில், ஏதாயினும் ஒரு தொழிலை மேற் கொண் டிருக்கிருனு? இவனைப்பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.—'எல்லாம் நன்மைக்கே!' என்ற முதுமொழி யின் உண்மையே உண்மை.—இவ் வாலிபனைப் பார்க்க நேர்ந்ததும் நல்லதாகவே முடிந்தது. இந் நீண்ட தூர பிர யாணத்துக்கு இவ் வாலிபனைத் துணைபற்றினுல் பல விதத்தி லும் உதவியாக இருக்கும்.—அது சரி; என்னைப்பற்றி

அவன் என்ன நினைத்திருப்பான்? ஒரு தடவைக் கிரு தடவை அனுக்கு விபத்துண்டாக்கக் காரணமாயிருந்த வள் என்று தெரிந்தால் என்மீது அவனுக்கு நல்ல அபிப் பிராயம் ஏற்படுமா? என்னோடு பழக அவன் விரும்பு வானு?—ஹூம்;—எப்படியும் அவனைப் பின்பற்றி எவ்வித மாயினும் அவனோடு சிநேகஞ் செய்து கொண்டு அவனைப் பற்றிய தகவல் தெரிந்து கொள்ள வேண்டும்" என்ற தீர் மானத்தோடு ரமணி அவனது காரைப் பிடிக்க, அதிவேக மாகத் தன் காரை ஓட்டினுள்.

சிறிது முன்னே காரைச் செலுத்திச் சென்ற கலி யாணசுந்தரன் திடுமென ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் காரின் வேகத்தை யடக்கி மெதுவாக ஓட்டிய வண்ணம் பின்புறந் திரும்பிப் பார்த்தான். பின்னே ரமணி யின் கார் வந்து கொண்டிருப்பதை யறிந்தான். "காரை யோட்டிவரும் பெண்மணியின் தோற்றத்தைக் கவனித் தால் இப் பக்கத்து மகளிரைப் போல் காணப்பட வில் லேயே!—என்னதான் நாகரிக மடைந்திருந்தாலும், நாட்டுப் புறப் பெண்களுக்கு ஒரு மோட்டாரைத் தனியாக ஓட்டிச் செல்லக்கூடிய அவ்வளவு துணிச்சல் ஏற்படாது.—இவள் நம் சென்னைப் பட்டினத்து நாரீமணியாய்த் தானிருக்க வேண்டும். அவள் யாரெனப் பார்ப்போம்" என்று அவன் மீண்டும் யோசித்த வண்ணம் காரை மிக மெதுவாக ஓட்டினுன்.

எனவே, இவனது காரைப் பிடித்து விடவேண்டு மென்ற நோக்கத்தோடு வந்த ரமணி சிறிது நேரத்தில் அக்காரை நெருங்கி அதைக் கடந்தும் செல்லானுள். கலி யாணசுந்தரனுக்கு இச் சந்தர்ப்பம் மிக அநுகூலமா யிருந் தது. அவன் ரமணியை நன்கு கவனித்தான். இவன்

தன்னைக் கவனிக்கிருனு என்று ரமணியும் கூர்மையாக நோக்கியவாறே போனாள்.

கலியாண சுந்தரன் மூளை மீண்டும் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தது. 'இவளை நான் இதற்கு முன் எங்கோ பார்த்திருக்கிருப்போல் தோன்றுகிறதே! இவளது அழகிய முகம் எனக்கு அறிமுகமான தாகவன்றோ காணப்படுகிறது? இவள் கேரள நாட்டு—அதாவது மலையாள—தேசத்துப் பெண்போல் அன்றோ காணப்படுகிருள்? எனக்குக் கலாசாலைகளிலோ, மற்ற பொது இடங்களிலோ பழக்கமான பெண்களில் யாரும் மலையாளி மங்கையில்லையே!—ஹூம்;—இவள் யாரா யிருந்தால் நமக்கென்ன? நாம் வந்த வேலை யென்ன? அதைப் பார்த்துக் கொண்டு போவதை விட்டு, யாரோ வழியே போகும் பெண்ணைப் பற்றி யறிய முயலுவானேன்?' இவன் கடைசியாக இவ்வாறு தீர்மானித்தாலும், இவனுடைய மனம் மட்டும் ரமணியின் பின்னேயே சென்றது. இது இவனுக்கு ஆச்சரியத்தை யுண்டு பண்ணியது. தன் கவனத்தை வேறு வழியில் திருப்ப முயன்றும், மனம் கட்டுக் கடங்காது ரமணியின் பேரழகில் ஈடுபட்டு விட்டதை யறிந்த கலியாண சுந்தரன், 'இப் பெண்மணி யிடத்தில் ஆகர்ஷண சக்தி இருக்கிறது போலும்!' என்று அதிசயித்தான்.

இவ்வாறு ரமணியும், கலியாண சுந்தரனும் ஒருவரை யொருவர் அறிந்து கொள்ள முயன்றவாறே தங்கள் கார்களை முன்னும் பின்னுமாக விட்டுக்கொண்டு சென்றனர். கலியாண சுந்தரனது மனம் ரமணியை மீண்டுமொரு முறை பார்த்துவிட வேண்டுமென்ற ஆவலைத் தூண்ட, அவன் காரைச் சிறிது வேகமாக விட்டு ரமணியின் காரைக் கடந்து சென்ற வண்ணமே அவளைக் கடைக்கணித்துக்

கொண்டு செல்வான். ஆனால், அவனை நேருக்கு நேர் கண்ணாரக் காணத் துணிச்சல் ஏற்படவில்லை. ரமணியோ, 'கலியாண சுந்தரனோடு எவ்விதம் பேச்சு கொடுப்பது; எவ் விதம் சிநேகஞ் செய்து கொள்வது' என்ற யோசனையோடு பல முறை அவனது காரைச் சமீபித்து அதன் பக்கமாகவே உராய்ந்தவாறு செல்வாள். ஆனால், ரமணிக்குக் கலியாண சுந்தரனைப் பார்த்தவுடனே அவனோடு எவ்விதமாயினும் பேச வேண்டுமென்று தீர்மானித்திருந்த தைரிய மெல்லாம் போய் விடும். சிறிது தூரம் இவ் விருவரும் தங்களுக்குத் தெரிந்த மோட்டார் சர்க்கஸ் வேலைகள் அனைத்தையும் காட்டியவாறு முன்னும் பின்னுமாகப் போய்க்கொண் டிருந்தனர். இவர்களுடைய அதிர்ஷ்டம் அப் பாதையில் வேறு வண்டிகள் எதுவும் வரவில்லை. வழிப்போக்கர்கள் கூட எங்கோ ஒருவரிருவர்தான் போய்க் கொண் டிருந்தனர்.

இவ்விதம் சென்றுகொண் டிருக்கையில் ஓரிடத்தில் இவர்களது கார்கள் திடீரென நின்றன. மந்திர சக்தியால் கட்டுண்டது போல், இவர்கள் ஏக காலத்தில் தங்கள் கார்களை—அதுவும் ஒன்றன் பக்கத்தில் மற்றொன்றாக— நிறுத்தியது இருவருக்கும் சில விநாடிகள் வரை ஆச்சரி யத்தை யுண்டாக்கியது. இவர்களுடைய மனோ சக்தியின் வேகம்தான் இவர்களை யறியாமலே ஒரே சமயத்தில் கார்களை நிறுத்தச் செய்தன போலும்!

அந்த நிலையில் ரமணியும் கலியாண சுந்தரனும் வியப் போடு ஒருவரை யொருவர் வெறித்துப் பார்த்துக் கொண் டிருந்தனர். இந்த இரண்டொரு விநாடிகளில் அவர்க ளுடைய கண்கள் ஒன்றோடொன்று கலந்து உறவு கொண் டாடி ஏதோ உரையாடின. ஆனால், இவர்கள் மட்டும்

ஊமையர் இருவர் ஒருவரை யொருவர் அர்த்தமின்றி நோக்குவது போல், அசையாது பார்த்துக் கொண்டிருந் தனர். ரமணியின் நீல விழிகளுடைய ஜால வித்தைகளால், கலியாண சுந்தரன் முற்றும் தன் அறிவைப் பறிகொடுத்து விட்டான்; ஆயினும், அவளது நோக்கின் கூர்மையைத் தாங்க மாட்டாது தலை குனிந்தான். சிறிதும் எதிர்பாராத நிலையில் தன்னை யாரோ சிறைப்படுத்தி விட்டது போன்ற ஒருவித உணர்ச்சி அவனுக்கு உண்டாயிற்று. அவன் அங்விடத்தி னின்றும் அக்கணமே போய்விட வேண்டு மென்று கூட நினைத்தான். எனவே, 'ஸ்டீரிங்'கின் மீது ஓய்வெடுத்துக் கொண்டிருந்த அவனது கைகள் மீண்டும் அதை 'ஸ்டார்ட்' செய்யத் தொடங்கின.

இக் குறிப்பை யறிந்த ரமணி தன் நாணத்தைச் சிறிது விலக்கி, "தாங்கள் எங்கு போகிறீர்கள் ?" என்று கேட்டாள்.

"நாகப்பட்டினத்திற்கு, ஏன் ?" எனக் கலியாண சுந்தரன் தன்னை யறியாமலே பதிலளித்தான்.

"இல்லை; நானும் நாகப்பட்டினந்தான் போகிறேன்; வழிக்குத் துணையா யிருக்குமே என்ற நோக்கத்தோடே கேட்டேன்" என்று சாதுர்யமாகப் பேசினாள். ரமணி மாமா தாமோதரம் பிள்ளையிடத்தில் தஞ்சாவூரில் தன்னைச் சந்திக்கும்படிக் கூறினாளே யொழிய, இதுவரை தான் எங்கு எவ்வூருக்குப் போவது என்பதை பற்றித் தீர்மா னிக்கவே யில்லை. தன் மனம் போனவாறே காரைச் செலுத்திக் கொண்டு வந்தாள். கலியாண சுந்தரன் 'ஏன் ?' எனக் கேட்டதும், 'நானும் நாகப்பட்டினந்தான் போகி றேன்' என்று சமயோசிதமாகச் சொல்லி வைத்தாள்.

"அப்படியானல், நீ இந்த ஊர் இல்லையா?" என்று பேராச்சரியத்தோடு—ஆயினும் தன் முன்னைய சந்தேகத்தைத் தெளிவுபடுத்திக்கொள்ள — கலியாண சுந்தரன் கேட்டான்.

ரமணி சிறிது தயக்கத்துடன், "இல்லை, நான் சென்னைப் பட்டினத்தி லிருந்து வருகிறேன். நீங்களும் சென்னையி லிருந்துதானே வருகிறீர்கள்?" என்று கேட்ட வண்ணம் அவனை ஒருவிதமாகப் பார்த்தாள்.

கலியாண சுந்தரன், "ஆமாம்" என்று கூறினன்.

மீண்டும் இருவ ரிடையேயும் அமைதி நிலவியது. இதிலிருந்து அவர்க ளிருவருமே தங்கள் பேச்சு தொடர்ந்து நடை பெறுவதற்கு ஆதாரந் தேடிக்கொண் டிருக்கிருர்களெனத் தெரிந்தது.

ரமணியே மறுபடியும் பேசத் தொடங்கினள். "நான் உங்களைப் பின்தொடர்ந்து வருவதில் உங்களுக் கொன்றும் ஆட்சேப மில்லையே!" என்று மெதுவாக ஒரு கேள்வி போடலானள்.

கலியாண சுந்தரனுக்கு இக் கேள்வி ஒரு புதிர்போல் காணப்பட்டது. ஆயினும் அவன் சமாளித்துக்கொண்டு, "இந்தப் பாதை எல்லார்க்கும் பொது. இதில் என் காரை விட்டுக்கொண்டு போவதுபோல், நீயும் உன் காரையோட்டிக்கொண்டு போகப் போகிருய்! இதில் எனக்கென்ன ஆட்சேபம்?" என்று அவள் கேட்ட நோக்கத்தை யறியாதவன்போல் பிடி கொடாமலே பேசினன்.

"அதைக் கேட்க வில்லை. இந் நீண்ட தூர வழிப் பிரயாணத்துக்கு உங்களைப் போன்ற ஒருவருடைய துணை

யிருந்தால் பலவிதத்திலும் உதவியா யிருக்கும் என்று கருதினேன்........................"

"ஓ! அதுவா! அதற்கென்ன? நீயும் நாகப்பட்டினம் போவதாகக் கூறியதால், ஓரிடத்துக்கே போகும் நாமிரு வரும் ஒன்று சேர்ந்து செல்வது நலமே. நீ என்னோடு வருவதில் எனக்கு ஆட்சேபமில்லை. தாராளமாக வரலாம்."

ரமணி கலியாண சுந்தரனை நோக்கி நாகப்பட்டினஞ் செல்லுங் காரணத்தைப் பக்குவமாக வினவினள். அவன் உண்மையைச் சொன்னான்.

"ஓ! அப்படியானல் நீங்கள் பத்திரிகா நிருபரா?" என ஆச்சரியமும் மகிழ்ச்சியும் தோன்றக் கேட்டாள்.

"ஆம்" என்றான் சாவதானமாக.

"நாகப் பட்டினத்துக்கு ரயிலில் செல்லலா மல்லவா?......................"

"ஓ! செல்லலாம்."

"அப்படியிருக்க, நீங்கள் காரில் ஏன் பிரயாணஞ் செய்கிறீர்கள்? ரயில் பிரயாணத்தைவிட, காரில் செல்வது சிரமமாகத் தோன்ற வில்லையா?"

"ரயில் பிரயாணத்தைவிட காரில் செல்வது சிறிது சிரமந்தான். ஆயினும், காரில் செல்வதில் என் போன்ற வர்களுக்குச் சில சௌகரியங்கள் உண்டு. நினைத்த இடத் தில் இறங்கலாம்; பல ஊர்களையும் பார்க்கலாம். ஆங்காங் குள்ள விசேஷங்களை யறியலாம். ஏதேனும் முக்கிய சம் பவம் நேர்ந்தால் குறித்துக் கொள்ளலாம். என் போன்ற பத்திரிகா நிருபர்களுக்கு ஊர் வம்பளப்பது தானே தொழில்!—அதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். நான் ரயிலில் பிரயாணஞ் செய்திருந்தால் உன்னைச் சந்தித்திருக்க

முடியாதல்லவா! காரில் வந்ததால் தானே உன்னைக் கண்டு கலந்து பேச வாய்ப்பு கிடைத்தது.—இதுவே ஒரு பெரிய நன்மையல்லவா!” என்று கலியாணசுந்தரன் புன் முறுவலோடு கூறினன்.

“வெகு ஹாஸ்யமாகப் பேசுகிறீரே!” என்று கூறிய ரமணி ஏதோ நினைத்துக்கொண்டு மனந் துணுக்குற்றாள். ‘அடாடா! கடைசியில் பத்திரிகா நிருபனுக உள்ள ஒருவனிட மன்றோ சிக்கிக் கொண்டோம்? ஸி. ஐ. டி. போலீஸாரை விட, பத்திரிகா நிருபர்கள் பொல்லாதவர்களாயிற்றே! உளவறிவதிலும், பிறரிடமிருந்து விஷயங்களைக் கிரகிப்பதிலும் அப்போலீஸாரை விட இவர்கள் சமர்த்தர்க ளல்லவா! அவ்வித ஆசாமியிடம் நான் சிநேகங் கொள்வது ஆபத்தன்றோ?—ஹூம். எப்பேர்ப்பட்ட சமர்த்தர்களும் பெண்கள் முன்னிலையில் சலாம் போடத் தான் வேண்டும்; அவர்களுடைய வீரம், தீரம், பராக்கிரமம் எல்லாம் மகளிரிடையே பறந்துபோய் விடுகின்றன. எனது சிறு அநுபவத்தில், எத்தனையோ விதமான ஆடவர்களை—வீராதி வீரர்களை—ராஜதந்திர நிபுணர்களையெல்லாம் பார்த்திருக்கிறேன். அவர்களையெல்லாம் விடவா இவ் வாலிபன் சாமர்த்தியசாலி! அப்படியே இருந்தாலும், என் சாகஸச் செயலில் இவனை மயக்காமல் போகிறேனு? பார்க்கிறேன் ஒரு கை’ என்று ரமணி தனக்குள் கூறிக் கொண்டாள்.

பின்னர் ரமணி, “சரி; நமது பிரயாணத்தைத் துவக்கலாமே?” என்று முகத்தை மலர்த்தியவாறு சொன்னுள்.

“ஓ! போகலாம்” என்று கூறியவாறு கலியாண சுந்தரன் தன் காரை ஓட்டலானுன். அவனைப் பின் பற்றி ரமணியும் காரைச் செலுத்தினுள்.

இருவரும் இங்ஙிலேயிலேயே நாலைந்து மைல் தூரஞ் சென்றிருப்பார்கள். திடீரென்று பின்னுலிருந்து மோட்டார் ஹார்ன் சப்தமும், படபடவென்ற மோட்டார் சைக்கில் சப்தமும் கேட்டன. அது அரை மைல் தூரத்திலிருந்து கேட்டது. இச் சப்தத்தைக் கேட்டு ரமணி திடுக்கிட்டாள். அவளது இருதயம் படபடவென அடித்துக் கொண்டது. ஸ்டீரிங்' பிடித்திருந்த கைகள் நடுங்கியதால், காரின் வேகங் குறைந்தது. உடனே அவள் ஏதோ யோசித்தாள். முன்னே செல்லும் கலியாணசுந்தரனுக்குத் தெரியாத வாறு மெதுவாக, அவள் காரை நிறுத்தி வலது பக்கத்தில் காணப் பட்ட ஒரு பெரிய தோப்பிற்குள் வளைத்துச் செலுத்தி மூங்கில் புதரொன்றன் மறைவில் நிறுத்தினுள். பிறகு அக் காரை விட்டு இறங்கிச் சிறிது தூரம் நடந்து ஒரு பெரிய ஆலமரத்தின் பின்னர் பதுங்கி நின்று பாதை யைக் கவனிக்கலானுள்.

சிறிது நேரத்திற் கெல்லாம் ராஜபாட்டையில் நாலைந்து மோட்டார் சைக்கில்களும், ஒரு பெரிய 'ரோல்ஸ்ராய்' காரும் சென்றன. அவற்றில் இருந்தவர்க ளெல்லாம் குற்ற இலாகா போலீஸாராகவே காணப்பட்டனர். அவர்கள் செல்லும் வேகத்தைப் பார்த்தால், தத்தம் இரைக்காக மோப்பம் பிடித்துச் செல்லும் வேட்டை நாய்கள் போல—அவர்கள் யாரையோ தேடிக் கொண்டு செல்வது போன்றே தோன்றியது. நல்ல வேளை. ரமணி முன் னெச்சரிக்கையாக அவர்கள் கண்களில் படாது மறைந்து கொண்டாள். காரிலும், மோட்டார் சைக்கில்களிலுஞ் சென்ற ஸி. ஐ. டி. போலீஸார் வைரமாலை சம்பந்தமாக, ரமணியைத் தான் தேடி வருகிறுர்கள் என்று திட்டமாகச் சொல்வதற் கில்லாவிடினும், இக் காட்டுப் பாதையில் ஒரு

பெண் தனியாக கார் விட்டுச் செல்வது அவர்களுக்குச் சந்தேகத்தை யுண்டாக்கலாம். அல்லது ரமணி குற்றஞ் செய்தவ ளாகையால், அவள் போலீஸாரைக் கண்டதும் தன்னை யறியாமலே நடுங்கித் தான் குற்றவாளி யென்பதைக் காட்டிக் கொள்ளலாம். இவ்விதம் ஏதேனும் சங்கடத்தில் மாட்டிக் கொள்ள இடமேற்பட் டிருக்குமல்லவா! அதுவும் முன் பின் பழக்கமில்லாது புதிதாகச் சிநேகம் பண்ணிக் கொள்ளப் போகும் ஒரு வாலிபன் முன்னிலையில் போலீஸாரால் தனக்கு ஏதேனும் அவமானம் நேரிடுமானல், அதைத் தாங்க முடியுமா! இதை யெல்லாம் எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்த ரமணி, காரும், சைக்கில்களும் கண்களுக்கு மறைந்ததும் ஒரு பெரு மூச்சு விட்டுக் கொண்டு வெளி வந்தாள். தனக்கு முன் சென்ற வாலிபன் தான் பின்னே வாராமையைக் கண்டு எங்கு ஏதேனும் தவருக நினைத்து சந்தேகங் கொள்ளுகிருனே என்று நினைத்தவளாய் ரமணி உடனே கார் இருக்குமிடஞ் சென்று, அதிலேறி 'ஸ்டார்ட்' செய்து ராஜ பாட்டைக்குக் கொண்டு வந்து வேகமாக ஓட்டலானுள்.

முன்னே சென்ற கலியாணசுந்தரன் சிறிது தூரஞ் சென்றதும் திரும்பிப் பார்த்தான். ரமணியின் கார் காணப் படவில்லை. அதற்குப் பதிலாக மோட்டார் சைக்கில்களும், வேறு ஒரு காரும் வருவதைக் கண்ணுற்ருன். அவை இவனது காரைக் கடந்து சென்றன. அவற்றி லிருந்த போலீஸார் இவனைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றனர். இவற்றிற்குப் பிறகு ரமணியினது கார் வராமல் போகவே இவனுக்குப் பலத்த சந்தேகம் உண்டாயிற்று. ரமணிக்கு ஏதாயினும் விபத்து நேர்ந்து விட்டதோ என அவன் கருதினன். எனவே, அவன் தான் திரும்பிச்

சென்று பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு காரைத் திருப்ப முயன்ருன். இதே சமயத்தில் ரமணி தன் காரை வேகமாக விட்டுக்கொண்டு வந்தாள். தன்னைக் காணுது அவ் வாலிபன் காரைத் திருப்புவதைத் தூரத்தில் கண்டு விட்டதுமே, அவள் தன் தாமதத்திற்குக் காரண மென்ன எனக் கேட்டால் என்ன பதிலளிப்பது என்று யோசிக்க லானுள். திருப்திகரமான பதிலில்லாவிடில், அவன் தன் நடத்தையில் சந்தேகங் கொள்வான் அல்லவா! எடுத்த எடுப்பிலேயே அவனுக்குச் சந்தேகத்தை யுண்டுபண்ண லாமா! எனவே, அவள் காரைத் திடுமென நிறுத்திஞள். பிறகு, காரை விட்டுக் கீழிறங்கி முன் பக்கம் வந்து மேல் மூடியைத் திறந்து ஏதோ ஒரு மரையைக் கழற்றி மோட்டார் மிஷினைக் கெடுத்து விட்டு, எதையோ பரி சோதிப்பது போல் பாவனை செய்தாள்.

இதற்குள் கலியாணசுந்தரனும் அங்கு வந்து விட் டான். அவன் வந்ததைப் பார்த்ததும், இன்னும் அதிக மாக, ரமணி மேலும் கீழும் இறங்கி இறங்கி ஏதோ சாமான்களைத் திருகுவதும் பார்ப்பதுமா யிருந்தாள்.

கலியாணசுந்தரன் வியப்புடன் காரை விட்டிறங்கி, "என்னம்மா! கார் கெட்டு விட்டதா, என்ன!" என்று கேட்டுக்கொண்டே வந்தான்.

"அப்படித் தான் நினைக்கிறேன். ஓட்டி வருகையில், திடீரென நின்று விட்டது. என்ன காரணமென்று நானும் இந்த கால் மணி நேரமாகப் பார்க்கிறேன். ஒரு இழவுந் தெரிய வில்லை" என்று அலுப்போடு கூறிஞள்.

கலியாணசுந்தரனும் அக்காரி னருகே சென்று பரி சோதித்தான். ஒன்றிஞலும் பயனில்லை. ரமணி தான் வேண்டு மென்றே விஷமஞ் செய்து விட்டு அபிநயம் செய்

கிருளே ! அது எப்படி உருப்படும். வெகு நேரத்துக்குப் பிறகு, கலியாணசுந்தரன் ஏமாற்றத்தோடு, “இது இப்போதைக்குச் சரிப்படாது. இதை இங்கேயே விட்டு விடடுப் போவோம். பிறகு ஆளனுப்பிக் கொண்டு வரச் செய்யலாம். ஹும். உன் பெட்டி முதலியவைகளை யெல்லாம் கொண்டு வா. என் காரில் ஏறு” என்று கட்டளையிடுவதுபோல் கூறினன்.

ரமணி அவ்வித மொழியையே எதிர் பார்த்தவள் ஆதலால் பெட்டியை எடுத்து வந்தாள். கலியாணசுந்தரன் அதை வாங்கிக் கொண்டுபோய் தன் காரில் வைத்தான். பிறகு, அவன் ரமணியைக் காரின் உள் பக்கத்தில் போய் உட்காரும்படி கை காட்டி விட்டு, காரில் ஏறி யமர்ந்தான்.

“இல்லை; நான் முன் புறத்திலேயே உட்கார்ந்து கொள்கிறேன்” என்று கூறிய வண்ணம் ரமணி அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள். கலியாணசுந்தரன் ரமணியை ஒருவிதமாகக் கடைக்கணித்தவாறு உதட்டைப் பிதுக்கினன்.

கலியாணசுந்தரன் காரைச் சிறிது தூரமே செலுத்தியிருப்பான். இதற்குள் நாலைந்து கஜ தூரத்திலிருந்து ஒரு ஆள் காரை மெதுவாகக் கொண்டுவந்து நிறுத்தும்படி ஒரு சிகப்புத் துணியை யாட்டிச் சைகை காட்டினன். அதன் படியே கலியாணசுந்தரன் காரைக் கொண்டுபோய் நிறுத்தினன். அங்கு பாதையின் குறுக்கே ஒரு நீண்ட பலகை காணப் பட்டது. அதற்கு அப்பால் ஒரு சிறு கட்டிடம் இருந்தது. அங்கு வழிப்போக்கர்களும், மற்றவர்களும் சுங்க இலாகா அதிகாரிகளும் குழுமியிருந்தனர். கலியாணசுந்தரன் உடனே விஷய மறிந்து கொண்டான். இப்போது தாங்கள் பிரஞ்சு சர்க்கார் எல்லை

யாகிய கண்டமங்கலத்துக்கு வந்திருப்பதாகவும், இங்கு சுங்க இலாகா அதிகாரிகள் வழிப் போக்கர்களைப் பரிசோதனை செய்து அனுப்புவார்கள் என்றும் அவன் ரமணிக்குத் தெரிவித்த வண்ணம், இருவருடைய பெட்டிகளையும் தூக்கிக்கொண்டு கட்டிடத்தை நோக்கி நடந்தான். ரமணிக்கு ஒன்றுந் தோன்றவில்லை. எதிர்பாராதவாறு சங்கடத்தில் வந்து மாட்டிக் கொண்டதை யறிந்ததும் அவளது தேகம் முழுதும் அவளை அறியாமலே நடுங்கியது. கால்கள் கலியாணசுந்தரனைப் பின்தொடர்ந்து நடந்தனவே யொழிய, அவளது மனதில் பெரும் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அவளுடைய சர்வாங்கங்களும் வியர்வையால் நனைந்தன.

இதற்குள் கலியாணசுந்தரன் கஸ்டம்ஸ் ஆபீஸர் முன் போய் நின்றான். இவனுடைய கம்பீர தோற்றத்தையும், இவனுக்குப் பின்னே வரும் பெண்மணியின் பேரழகையுங் கண்ட மற்ற சிப்பந்திகளும் வழிப்போக்கர்களும் இவர்களுக்கு வழிவிட்டு ஒருபுறம் ஒதுங்கி நின்றனர். கலியாணசுந்தரன் இரு பெட்டிகளையும் ஆபீஸர் முன்னிலையில் வைத்து, முதலில் தன் பெட்டியைத் திறந்து காட்டினான். அவர் அதிலிருந்த சாமான்களையும், துணிமணிகளையும் ஒவ்வொன்றாக எடுத்து உன்னிப்பாகப் பார்த்துப் பரிசோதிக்கலானார். இதே சமயத்தில் கலியாணசுந்தரனைச் சேர்ந்தாற்போல் நின்ற ரமணி சுற்று முற்றும் கூர்மையாக நோக்கிவிட்டு, தன் மார்பகத்தில் வைத்திருந்த வைரமாலையை யாரு மறியாவாறு எடுத்துக் கலியாணசுந்தரனின் கோட் பாக்கெட்டில் மெதுவாகப் போட்டு விட்டாள்.

ரமணி கலியாணசுந்தரனின் கோட்டுப் பாக்கெட்டில் வைரமாலையை சந்தடி செய்யாது போட்டதை நல்ல கால

மாக யாருங் கவனிக்க வில்லே. கலியாணசுந்தரனும் இதை உணர வில்லே. இதற்குள் சுங்க இலாகா உத்தியோகஸ்தர் கலியாணசுந்தரனின் கைப்பெட்டியைப் பரிசோதித்து விட்டார். அடுத்தபடியாக, கலியாணசுந்தரன் ரமணியின் பெட்டியை எடுத்து அவர் முன் வைத்து விட்டு, தன் பெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டான். சுங்க உத்தியோகஸ்தர் முதல் பெட்டியில் சந்தேகிக்கக்கூடிய பொருள்கள் எதுவும் இல்லாததாலும், கலியாணசுந்தரனும், ரமணியும் தகுதியுடைய பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல் காணப் பட்டதாலும், முக்கியமாக, ரமணியின் பேரழகு அவரைக் கவர்ந்ததாலும் ரமணியின் பெட்டியைத் திறந்து கூட பார்க்காமல் எடுத்துக் கொள்ளும்படி அநுமதித்து விட்டார். தம்முடைய தாராள புத்தியையும், கௌரவ செய்கையையுங் கண்டு பெண்மணி தம்மிடம் நன்மதிப்பு கொள்வாள்; கடைக்கண்ணுல் கடாட்சிப்பாள் என்பது சுங்க உத்தியோகஸ்தரது எண்ணம்.

ரமணி சுங்க உத்தியோகஸ்தரது செய்கையைக் கண்டு உள மகிழ்ந்தாள். ஏனென்ருல், அவள் தன் பெட்டியில் பல நாட்டுப் பெண்கள் உடுத்தும் ஆடையாபரணங்களே யெல்லாம் வைத்திருந்தாள். மேல்பூச்சுச் சாமான்கள், கண்ணுக்கு மையிடும் கோல், பலவிதமான "புரூச்"கள் இன்னும் என்னென்னவோ வஸ்துக்களெல்லாம் வைத் திருந்தாள். இதுவன்றி, ஆணுடைகள் சிலவும் இருந்தன. இவை யெல்லாம் ஒரு பெண்ணுக்கு எதற்கு? சாதாரணமாக, இப்பொருள்கள் யாருக்கும் சந்தேகத்தை யுண்டு பண்ணக் கூடியனவே யல்லவா! சுங்க உத்தியோகஸ்தருக்கு இதுபற்றி யெல்லாம் ஆராய வேண்டிய அவசியமில்லே யென்ருலும், 'இவை யெல்லாம் எதற்கு?' என்ற

கேட்டால், எக்கசக்கமாக வல்லவோ போய்விடும்? திருட்டுச் சொத்தான வைரமாலையை மறைத்து வைக்க வேண்டு மென்றிருந்த தீவிர எண்ணத்தில், இவைகளைப் பற்றி ரமணி லட்சியஞ் செய்யவேயில்லை. இவை சம்பந்த மாக ஏதேனும் பிரச்சினை கிளம்பினாலும், சமாளித்துக் கொள்ளலாம் என்று தைரியங் கொண்டாள். அவளுடைய குறிக்கோ ளெல்லாம் தன்னிட மிருக்கும் வைரமாலையை எப்படியாகிலும் அப்புறப்படுத்திச் சுங்க அதிகாரியின் சோதனையி னின்றுந் தப்பித்துக்கொள்ள வேண்டு மென் பதுதான். ஆதலால், அது பற்றியே அவள் தீவிர ஆலோசனை செய்தாள். இரண்டொரு விநாடிக்குள் ஒரு வித முடிவுக்கு வந்தாள். அம் முடிவின்படிதான், அவள் கலியாணசுந்தரனின் ஜேபியில் வைரமாலையைப் போட்டு சமயோசித புத்தியோடும், சாமர்த்தியத்தோடும் நடந்து கொண்டாள். இப்போது அப் பெட்டி சோதனை செய் யப்படவில்லை யென்று அறிந்ததும் அவள் மிகவும் சந் தோஷங் கொண்டாள்.

பிறகு, கலியாணசுந்தரன் இரு பெட்டிகளையும் அங் கேயே ஓரிடத்தில் வைத்துவிட்டு, ஆள் சோதனை நடை பெறும் அறையை நோக்கி நடக்கலானான்.

ரமணிக்கு மீண்டும் நடுக்க முண்டாயிற்று. 'இச் சோதனையில் கட்டாயம் கலியாணசுந்தரனின் ஜேபியில் இருக்கும் வைரமாலை கண்டு பிடிக்கப்பட்டு விடும். இத னால் என்ன விபரீதம் விளையுமோ' என்றெல்லாம் எண்ணி, அவளது இருதயம் 'திடுக் திடுக்'கென்று அடித்துக்கொண் டது. வைரமாலையைத் தன்னிடமிருந்து அப்புறப்படுத்தும் போது, தான் தப்பித்துக் கொண்டால் போதும் என்று கருதினாள். இப்போதோ அவள், 'கலியாணசுந்தரனிட

மிருந்து வைரமாலையைக் கண்டு சந்தேகித்தால் அவன் குற்றவாளியாகக் கருதப்படுவது நிச்சயம்; அப்போது, அவனுடனிருக்கும் நாமும் அக்குற்றத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாக வன்றோ எண்ணுவார்கள். இதென்ன கஷ்ட காலமாய்ப் போய்விட்டதே! வினையை விலை கொடுத்தன்றோ வாங்கிக்கொண்டு அவதி படுகிறோம்' என்றெல்லாம் எண்ணி மனங் குழம்பினுள். இக் குழப்பத்துடனேயே அவள் கலியாண சுந்தரனுடன் செல்லத் திரும்பினுள்.

இதற்குள் மேற்படி சுங்க உத்தியோகஸ்தர் ரமணியைக் காமக் குறிப்போடு நோக்கியவாறே, கலியாணசுந்தரனைக் கைதட்டி யழைத்து, "சார்; அதற்கு அவசியமில்லை; நீங்கள் போகலாம்" என்று கூறினர். இச் சொல் செவியில் விழுந்ததும், ரமணிக்கு இருந்த பயமெல்லாம் போய் விட்டது; அவள் வியப்பும் மகிழ்ச்சியும் ஒருங்கே யடைந்தாள். கடவுள்தான் தன்னை இப் பெருஞ் சங்கடத்தினின்றுங் காப்பாற்றினர் என்று மன ஆறுதல் அடைந்தாள். கலியாணசுந்தரனே சுங்க அதிகாரியின் உதாரத்துவத்தைக் கண்டு எவ்வித மாறுதலும் அடையவில்லை. தன் நேர்மையைக் கண்டே சுங்க அதிகாரி மிகவும் மரியாதை காட்டினர் என்றே சாதாரணமாக எண்ணினன். எனவே, அவன் அதிகாரிக்கு ஒரு "தாங்க்ஸ்" கூறி விட்டு இரு பெட்டிகளையுந் தூக்கிக் கொண்டு ரமணியைத் திரும்பிப் பார்த்து விட்டு காரை நோக்கி நடந்தான். ரமணியும் அவனைப் பின் தொடர்ந்தாள். இதனிடையே ரமணியின் மனத்தில் மற்ருெரு கவலை வந்து குடிகொண்டது. 'அடாடா! இச் சுங்க அதிகாரி இவ்வளவு தாராள மனப்பான்மை காட்டி ஆள் பரிசோதனைக்கு இடமில்லாமல் செய்வார் என்று தெரிந்திருந்தால், நான் அவ் வைரமாலையை

என்னிடத்திலேயே வைத்துக்கொண் டிருந்திருப்பேனே!—அவசரப்பட்டு காரியத்தைச் செய்து விட்டேன்.—ஹூம்; இப்போது இவ் வாலிபனது ஜேபியிலிருந்து இவ் வைர மாலையை எப்படி எடுப்பது? இது வல்லவோ இப்போது ஒரு முக்கிய பிரச்சினையாகப் போய் விட்டது?—ஹூம்; இச் சுங்க ஆபீஸில் இவ்வளவு பேரிடையில் இம் மாலையை இவன் ஜேபியில் போடுவதற்குச் சந்தர்ப்பங் கிடைத்த போது, அதை அவன் ஜேபியிலிருந்து எடுப்பதற்குத் தானா சமயம் வாய்க்காமற் போகப் போகிறது? நாம் தான் அவனுடன் நாகை வரையில் போகப் போகிறோமே! பார்த்துக்கொள்ளலாம்' என்று பலவாறு சிந்தித்துக் கடைசியாக ஒருவிதத் தீர்மானத்துக்கு வந்தாள்.

இதற்குள் இவர்கள் காரை யடையவே, இவர்களுக்குத் தெரியாமலே அதைச் சோதனை செய்து பார்த்த சுங்க இலாகா சிப்பந்தி யொருவன், இவர்களைப் பார்த்து விட்டு அவர்கள் வரும் வரை அதைப் பாதுகாத்துக் கொண்டிருப்பதுபோல் பாவனை செய்தான். கலியாணசுந்தரன் பெட்டிகளைப் பின் சீட்டில் வைத்து விட்டு முன் சீட்டுக் கதவைத் திறந்து ரமணியை உட்கார வைக்கும் நோக்கத்தோடு திரும்பினான். இதற்கு முன்பே ரமணி அங்கு வந்து உட்கார்ந்து விட்டாள். எனவே, கலியாணசுந்தரன் புன்சிரிப்போடு அந்தப் பக்கமாகப் போய் உட்கார்ந்து காரை யோட்டினான். பழையபடி கார் மிக வேகமாகப் போய்க்கொண் டிருந்தது.

சில விநாடிகள் கழிந்ததும் ரமணியே முதலில் பேசத் தொடங்கினாள். "ஆமாம்; திருச்சி ராஜபாட்டை வழியாக வந்து கொண்டிருந்த நாம் எப்படி இக் கண்டமங்கலம் பக்கம் வந்து சேர்ந்தோம்?"

கலியாணசுந்தரன், "அதுதான் எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது? விஷயம் இப்படித்தான் இருக்க வேண்டும். விழுப்புரம் நாற்சந்தி கூடுமிடத்தில் உன் மோட்டாரின் தயவினுல் நாம் ஒருவரை யொருவர் சந்தித்தோமல்லவா! அந்த சந்திப்பின் விசேஷம் தான் இவ்விதம் நேர்ந்து விட்டது........ஏன் நான் விஷயத்தை மூடி மூடிப் பேச வேண்டும்; என் மனதிலுள்ளதைத் திறந்து சொல்லி விடுகிறேன்.—நாம் ஒருவரை யொருவர் பல முறை பார்க்க வேண்டு மென்று முயன்றதில், நாம் போகும் பாதையைக் கவனியாது, கண்ணெதிர்ப்பட்ட வழியி லெல்லாம் காரை முன்னும் பின்னுமாக ஒட்டி வந்திருக்கிறோம். நம் மிருவருடைய உள்ளங்களும் கட்டுக் கடங்காது அலைந்த மாதிரி, நம் கார்களும் காடு மேடெல்லாந் தவிடு பொடியாக்கி யலைந்திருக்கின்றன. கண்டமங்கலம் சுங்கச் சாவடியருகு வந்த பிறகுதான் நம் தவறு எனக்குப் புலப்பட்டது. இருந்தாலும் பரவாயில்லை; 'எல்லாம் நன்மைக்கே' என்றபடி, இதுவும் ஒரு நன்மைக்காகத் தான் இருக்க வேண்டும்.—புதுச்சேரி மார்க்கமாகக் கூட நாம் செல்லலாம்;—இருந்தாலும் அவ் வழி நமக்கு வேண்டாம். வழி தவறி விட்டால் சரியான பாதை தெரியாது தவிக்க நேர்ந்தாலும் நேரும். தென் மேற்காகவே நாம் சென்றால், திருச்சிப் பாதையைச் சேரலாம். ராஜ பாட்டையாகவே போவது தான் நல்லது" என்று புன்சிரிப்புடன் கூறினன்.

ரமணி இடையிடையே புன்னகை கொண்டாள். பிறகு அவள், "அது சரி; இவ்வளவு தூரம் பழகி விட்ட நாம் ஒருவர் பெயரை மற்ருருவர் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறோமே?—உங்கள் பெயரென்ன!" என்று சாதுர்யமாகக் கேட்டாள்.

கலியாணசுந்தரன், “என் பெயரா? கலியாணசுந்தரன் என்பது என் பெற்றோர் இட்ட பெயர். ஆனால், என்னை ஒரு சிலர், “கலியாணம்” என்றும், வேறு சிலர் “சுந்தரம்” என்றும் அழைப்பார்கள். ஆனால், சுந்தரம் என்ற பெயர்தான் பெரும்பாலும் வழக்கி லிருந்து வருகிறது” என்று கூறினான்.

“கலியாணசுந்தரம்; கலியாணம்; சுந்தரம்” என்று தனக்குள்ளாகவே மனனஞ் செய்தாள் ரமணி. பிறகு அவள், “கலியாணசுந்தரம் என்றால்........” என்று இழுத்தாற்போல் கேட்டாள்.

கலியாணசுந்தரன் புன்சிரிப்போடு, “கலியாணசுந்தரனென்றால், மனிதனென்று அர்த்தம்....” என்று கூறினான்.

“அதுதான் எனக்குத் தெரியுமே! அதைக் கேட்கவில்லை. நீங்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவரென்று கேட்கிறேன்.”

“அதைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமோ!”

“தெரிந்துதான் ஆக வேண்டுமென்ற அவசியம் ஒன்றுமில்லை; உலக வழக்கப்படிக் கேட்டேன்.”

“இந்த வகுப்பு அல்லது சாதிப்பிரிவு ஜனசமூகத்தில் ஒருவருக் கொருவர் உயர்வு தாழ்வைக் கற்பிப்பதால், அதனால் பல கொடுமைகள் நிகழ்வதால், நான் அவ் வகுப்பைக் குறிக்கும் பட்டப் பெயரை வைத்துக் கொள்ளவில்லை; யாராகிலும் கேட்டாலும் கூறுவதில்லை. நான் பிராம்மண வகுப்பில் பிறந்தவன் என்ற காரணத்தால், உயர்சாதிக்குரிய உரிமையையோ, வகுப்புச் சலுகையையோ அடைய விரும்புவதில்லை. கடவுள் படைப்பில்

ஓரறிவுயிர் முதல் ஆறறிவுவரை உள்ள ஜீவராசிகளுக்குள்ளே உயர்வு தாழ்வு பாராட்டக் கூடாதென்று வேதாகமங்களும், ஞானிகளும் கூறி யிருக்கும்போது, பகுத்தறிவுடைய மனிதர்கள் தங்களுக்குள்ளே பேதங் கற்பித்துக் கொள்வது எவ்வளவு அநியாயம்?'' என்று கலியாணசுந்தரன் ஒரு குட்டிப் பிரசங்கஞ் செய்தான்.

ரமணி தன் முத்து போன்ற பற்களை வெளிக்குக் காட்டி நகைத்து, "பெரிய சமூக சீர்திருத்தக்காரரா யிருக்கிறீரே!—இப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால், ஒரு சிலர் நன்கு படித்தும்—உயர்தர ஆங்கிலப் படிப்பு படித்தும்—சாதிச் செருக்கையோ இது போன்ற மூடப்பழக்க வழக்கங்களையோ விடாப் பிடியாகக் கொண்டு வருவதைப் பார்க்கும்போதுதான் எனக்கு ஆச்சரியமும், மற்றொரு பக்கம் ஆத்திரமும் உண்டாவதுண்டு'' என்று சொன்னாள்.

"அது போகட்டும்; உன் பெயரை எனக்குச் சொல்லவில்லையே!'' என்று திடீரென நினைத்துக் கொண்டவன் போல் கேட்டான்.

"என் பெயர் ரமணி'' என்றாள் ரமணி.

"ரமணி; ரமணிக்குத் தகுந்த பெயர்தான். பெண் மணிகளுக்குரிய சிறப்புப் பெயராகிய ரமணி என்பது உனக்கு இயற்பெயராக அமைந்திருப்பது மிகவும் பொருத்த முடையதாகும். பேரழகியாகிய உன்னைப் பெற்று உனக்கு இப் பெயரிட்டார்களே உனது பெற்றோர்கள்; அவர்களை அறிவாளிகள் என்றுதான் சொல்ல வேண்டும். அத்துடன் பாக்கியசாலிகளு மாவார்கள்'' என்று புகழ்ந்து பாராட்டினான்.

அவனது புகழ்மொழி ரமணிக்குக் குதூகலத்தை யுண்டுபண்ணியது. ஆனால் கலியாணசுந்தரன், "உனது

பெற்ரோர்கள் அறிவாளிகள்; பாக்கியசாலிகள்" என்று கூறும்போது மட்டும் அவளை யறியாது கண்களில் நீர் ததும்பின.

கலியாணசுந்தரன் மீண்டும் பேசத்தொடங்கி, "உன்னுடைய பெற்ரோர்கள் யார்? உன் தந்தைக்கு என்ன உத்தியோகம்? நீங்கள் சென்னையில் எங்கு வசிக்கிறீர்கள்?—நாகப்பட்டினத்துக்கு நீ மட்டும் தனியாக ஏன் போகிருய்? கூட யாரையும் ஏன் அழைத்து வரவில்லை?...." என்று கேள்விகளை யடுக்கிக்கொண்டே போனுன்.

இக்கேள்விகள் ரமணியை மூச்சுத் திணறச் செய்தன. ஏனென்ருல், கலியாண சுந்தரன் கேட்ட கேள்விகளுக்குத் தகுந்த பதில் சொல்லக் கூடிய நிலையில் அவள் இல்லை. உண்மையாகப் பதிலளித்து வருவதென்ருல், அவள் கட்டாயம் தான் தாசி சமூகத்தை சேர்ந்தவள் என்றும், தனக்குத் தாய் தந்தையர் யாரென்றே தெரியாது என்றும் சொல்லித் தீர வேண்டும். ரமணிக்குத் தாசி வகுப்பைச் சேர்ந்தவள் என்று கூறிக்கொள்ள எப்போதும் விருப்பமிருந்ததே கிடையாது. அப்பேர்ப்பட்டவள் கலியாண சுந்தரன் போன்ற வாலிபனிடம் தான் தாசிப்பெண் என்று கூறிக்கொள்ள எப்படி சம்மதிப்பாள்? அப்படி உண்மை நிலையை மறைக்காது கூறினுல், கலியாணசுந்தரன் என்ன நினைப்பான்? என்னதான் சமூக சீர்திருத்தக்காரனுயிருந்தாலும், தாசிப்பெண்ணைச் சமத்துவமாகக் கருதுவானு? அத்தகையவளோடு பழகுவது உசிதமென்று எண்ணுவானு? தாசிகள் ஜன சமூகத்திலேயே மிக கேவலமானவர்கள் என்று யாவராலும் வெறுக்கப் படுபவர்களல்லவா!—அப்புறம் அவன் தன்னை உடன் அழைத்துச் செல்லாது உதறித் தள்ளி விட்டுச் சென்ருல் என்ன

செய்வது........? இவ்வா றெல்லாம் ரமணி சில விநாடிகள் எண்ணி இத் தரும சங்கடமான நிலையை எவ்வாறு சமாளிப்பது என்று தீவிரமாக யோசித்தாள்.

இச் சமயத்தில் சிறிது தூரத்தில் ஏதோ பெரிய கூச்சல் கிளம்பியது. ஜனங்களின் ஆரவாரமும், இரைச்சலும் திடீரென உண்டாகவே, ரமணி, "இருங்கள்; இருங்கள். இது என்ன ஆரவாரம்?" என்று கேட்டாள்.

கலியாணசுந்தரன் காரின் வேகத்தை யடக்கிய வண்ணம் பரபரப்போடு நாலா பக்கமும் பார்க்கலானான்.

அப்போது தான் அவ்விருவருக்கும் தாங்கள் ஒரு சிறு கிராமத்தின் பக்கமாக வந்திருப்பது தெரிந்தது. கிராம ஜனங்கள் கும்பல் கும்பலாக கூடிக் கூவிக் கொண்டும், சிலர் பரபரப்பாக ஏதோ பேசிக் கொண்டும் தென் மேற்குப் பக்கமாக ஓடிக் கொண்டிருந்தனர்.

கல்யாண சுந்தரனைக் காட்டிலும், ரமணிக்கு விஷய மென்னவென வறிய ஆவலுண்டாயிற்று. எனவே, அவள் கலியாணசுந்தரனை நோக்கிக் காரை நிறுத்தும்படிக் கூறினாள். உடனே கார் நிறுத்தப்பட்டது. ரமணி கையைத் தட்டிச் சிறிது தூரத்தில் போய்க் கொண்டிருக்கும் கிராம ஜனங்களில் சிலரைக் கூப்பிட்டாள். காரில் செல்லும் யாரோ ஒருவர்—அதிலும் ஒரு பெண்மணி கூப்பிட்டதை யறிந்ததும் அவர்கள் அப்படியே நின்று விட்டனர். அவர்களில் இருவர் காரிருக்கு மிடத்தை நோக்கி விரைந்து வந்தனர்.

ரமணி அவர்களைப் பார்த்து, "இப்படி ஓடுகிறீர்களே, என்ன விசேஷம்?" என்று நயமாகக் கேட்டாள்.

7

"அதுவா! இந்த ஊர் ஜமீன்தார் மாளிகையில் நேற்றிரவு ஒரு பெரிய கொள்ளை நடந்து விட்டது. அதில் சம்பந்தப்பட்ட ஒருவன் எப்படியோ ஜமீன் ஆட்களிடம் அகப்பட்டுக் கொண்டான். கொள்ளை போன சொத்துக்களைப் பற்றியும், அவனது சகாக்களைப் பற்றியும் கேட்டால் ஒன்றுமே சொல்ல வில்லையாம். அதனால் தண்டப் பிரயோகஞ் செய்து அவனிடம் வாக்கு மூலம் வாங்க இவ் வூரையடுத்த தோப்புக்கு ஜமீன் ஆட்கள் அழைத்துப் போகிறார்கள். ஜமீன்தார் கூடப் போகிறார்.—இவர்களிடம் அகப்பட்டிருப்பவன் தான் பிரசித்தி பெற்ற கொள்ளைக் காரன் வீர மார்த்தாண்டன் என்று சிலர் சொல்லுகிறார்கள். இப் பக்கத்திலுள்ள கொள்ளைக்காரர்களுக் கெல்லாம் அவன் தான் தலைவன். அவன் பெரிய பெரிய கொள்ளைகளையெல்லாம் நடத்தியிருக்கிறான். ஆனால், இதுவரை அவனை யாராலும் பிடிக்க முடியவில்லை. போலீஸாரும், துப்பறிபவர்களும் அவனைப் பிடிக்கத் தலை கீழாக நிற்கிறார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. ஆனால் ஒன்று அவன் பெரிய பெரிய கோடீஸ்வரர்கள், லட்சாதிபதிகள், ஜமீன்தார்களிடத்தில் தான் கொள்ளையடிப்பான். யாரையுந் துன்புறுத்த மாட்டான். ஏழைகளிடமே அவன் வருவதே யில்லை. பணக்காரர்களிடமே கொள்ளை யடித்து ஏழைகளுக்கு தானஞ் செய்வதாகக் கூடக் கேள்வி. அப்பேர்ப்பட்டவன் அகப்பட்டுக் கொண்டான் என்று சொல்லவே தான், அவனைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலால் கிராம ஜனங்க ளெல்லாம் இப்படி திரண்டு ஓடுகிறார்கள்" என்று கூறினான்.

இதற்குள் மற்றொருவன், "ஜமீன்தார் வீட்டில் கொள்ளை போய் விட்டால் குடி முழுகியா போய் விட்டது? குடியானவர்களாகிய நம்மிட மிருந்து அநியாயமாக

வாங்கும் கிஸ்திப் பண மெல்லாந் தான் போராகக் குவிந்து பாசி பிடித்துப் போய் கிடக்கிறதே? அது மற்றவர் களுக்குத்தான் உபயோகப் படட்டுமே!—அதற்காக, அக் கொள்ளைக்காரனை ஏன் இப்படி கட்டிப் பிடித்துக் கொண்டு போக வேண்டும்? கொலைபாதகனுன ஜமீன்தார் பாவம்! அவனை என்ன விதமாக சித்திரவதை செய்யப் போகிருனே!—அந்தக் கண்ணராவியை நாம் ஏண்டா போய்ப் பார்க்க வேண்டும்?—வாடா, இப்படியே திரும்பி விடலாம்" என்று பச்சாதாபத்தோடு கூறினன்.

"இல்லையடா! பிடிபட்டிருப்பவன் வீரமார்த்தாண்டன் தானு என்று பார்த்துவிட்டு வந்து விடுவோம்" என்று கூறி விட்டு, "நாங்கள் போய் வரம்மா!" என்று விடை பெற்றுக் கொண்டு சென்றுன். மற்றவனும் அவனைப் பின் தொடர்ந்து நடந்தான்.

குடியானவர்கள் கூறிய தகவலைக் கேட்டதும் ரமணி உள்ளக் கிளர்ச்சியடைந்தாள். அவள் திரும்பிக் கலியாண சுந்தரன் முகத்தை நோக்கினுள். அவன் முக மலர்ச்சியோடு, "விஷயம் தெரிந்து கொண்டாய் விட்டது. இனிப் போகலா மல்லவா!" என்று கேட்டான்.

"இல்லை; இல்லை. நாம் அந்தத் தோப்புக்குப் போய் விட்டுத்தான் போக வேண்டும். ஏதோ பிரசித்தி பெற்ற கொள்ளைக்காரன் என்கிருர்களே! அவனை நாமுந்தான் பார்ப்போமே! அங்கு போனுல் உங்களுக்கு ஏதாயினும் பத்திரிகைக் கெழுத விஷயங் கிடைத்தாலும் கிடைக்கும்" என்று சாதுரியமாகக் கூறி வற்புறுத்தினுள் ரமணி.

கலியாணசுந்தரன் ரமணியை ஒரு விதமாக நோக்கி உதட்டைப் பிதுக்கிக் கொண்டே, "அப்படியே சித்தப்படி.

ரமணி உத்தரவு ராணி உத்தரவல்லவா! அதை எப்படி மீற முடியும்?" என்று ஹாஸ்யமாகக் கூறிக் காரை தென்மேற்கு பக்கஞ் செலுத்தினன்.

சில விநாடிகளில் கார் குடியானவன் குறிப்பிட்ட தோப்பை யடைந்தது. அத் தோப்பின் நடுவே ஒரு பெரிய நீண்ட மரத்தில் கொள்ளைக்காரன் கட்டப்பட்டிருந்தான். அவனைச் சுற்றினும் ஈட்டிகளை நீட்டிக் கொண்டு ஜமீன் ஆட்கள் நின்றிருந்தனர். கிராம ஜனங்கள் ஒருவர் மீதொரு வர் மோதியடித்துக் கொண்டு அவர்களைச் சூழ்ந்திருந்தனர். கொள்ளைக்காரனுக்கு எதிரே நாலைந்து அடி தூரத்தில் ஜமீன் தார் ஆணவத்துடன் நின்று கொண்டிருந்தார். அவரது வலது கரத்தில் ஒரு நீண்ட சாட்டை யிருந்தது.

சிறிது தூரத்தில் வரும்போதே ஆவலுடன் தலையை நீட்டிப் பார்த்துக் கொண்டு வந்த ரமணி இக்காட்சியைக் கண்டு திடுக்கிட்டாள். "வெட்டு!" "குத்து!" "கொல்லு!" என்று ஜனங்க ளிடையே இருந்து கிளம்பும் ஆத்திர மொழிகள் நாராசம் காய்ச்சி ஊற்றப் பட்டது போல் ரமணியின் காதில் நுழைந்தன. அவள் தேகம் படபடத்தது. ஒருவித தீவிர உணர்ச்சியினல் தாக்கப் பட்டவள் போல் காணப்பட்டாள். உடனே, அவள் கலியாணசுந்தரனை நோக்கி, காரை, சம்பவம் நடைபெறு மிடத்துக்கு நேரே சிறிது தூரத்திலுள்ள ஒரு பெரிய ஆலமரத்தின் மறைவில் நிறுத்தும்படி கூறிவிட்டு, மீண்டும் தலையைக் காருக்கு வெளிப்புறத்தே நீட்டிப் பார்த்தாள். கலியாணசுந்தரனும் அவள் சொன்னபடியே காரை ஆலமரத்தின் மறைவில் நிறுத்தி விட்டுச் சம்பவம் நடக்கு மிடத்தையும் ரமணியை யும் மாறி மாறிப் பார்த்தான். ரமணியின் செய்கை அவ னுக்கு வியப்பை விளைத்தது.

ஜமீன்தார் கொள்ளைக்காரனை யடிக்கச் சாட்டையைக் கையால் கெட்டியாக முறுக்கிப் பிடித்து ஆயத்தமானார். அப்போதும் வீரமார்த்தாண்டன்—ஆம்; மரத்தில் கட்டப் பட்டிருப்பது பிரசித்தி பெற்ற கொள்ளைகாரத் தலைவன் வீரமார்த்தாண்டன் தான்—அச்சமின்றியே காணப்பட் டான். சந்தர்ப்பங் கிடைத்தால் அங்கிலையிலும் தப்பிச் செல்லவே அவன் முயன்று கொண்டிருந்தான். ஜமீன்தார் அவனது தறுகண்மையைக் கண்டு சினங் கொண்டு அவன் தலைமயிரைப் பற்றி இழுத்து ஒரு குலுக்கு குலுக்கிவிட்டு, "நாயே! இப்போதும் உண்மையை உரைக்க மாட்டாயா? அப்படியானல், இதோ வாங்கிக் கொள்" என்று சாட்டையால் அடிக்கத் தொடங்கினர். இதைக் கண்டாளோ இல்லையோ! ரமணி ஏதோ ஆவேசங் கொண்டவள் போல், ஒரு எழும்பு எழும்பித் தன் இடையைக் கையினுல் தடவி வெகு ஜாக்கிரதையாகச் செருகி வைத்திருந்த ஒரு சிறு கைத் துப்பாக்கியை எடுத்து எதிர் பக்கத்தை நோக்கிப் பிடித்தாள்.

# ஐந்தாவது அதிகாரம்

## வீராங்கனையும் வீரமார்த்தாண்டனும்

சிறிதும் எதிர்பாரா வகையாக, ரமணி தன் இடையி லிருந்து ஒரு சிறு கைத் துப்பாக்கியை எடுத்து ஜனக் கும்பல் மீது பிரயோகிக்க முயல்வதைக் கண்ட கலியாண சுந்தரன் திடுக்கிட்டுத் திகைத்தான். 'வினையை விலை கொடுத்து வாங்குவது'போல், ரமணி வழியோடு போவதை விட்டு, தனக்குச் சிறிதும் சம்பந்த மில்லாத இவ்விடத்துக்கு வந்தது மல்லாமல், துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யவும் பார்க்கிறாளே! இவளுக்கு ஏதேனும் பைத்தியம் பிடித்து விட்டதா என்ன! இவளது இச் செய்கை நெருக்கடியான நிலைமையை யன்றோ ஏற்படுத்தி விடும்' என்று எண்ணிய வனாய் அவன் ரமணியைத் தடுக்க முயன்றான். அவன் கருதியது போலவே, ரமணியும் இந்நேரம் ஜமீன்தாரையும், அவரது ஆட்களையும் பார்த்து துப்பாக்கிப் பிரயோகஞ் செய்து விட்டிருப்பாள். இதற்குள் முன்யோசனை அதா வது சமயோசித புத்தி அவளை எச்சரித்தது; சிறிது ஆலோ சிக்கச் செய்தது. 'தனது செய்கையால் வீரமார்த்தாண் டன் ஜமீன்தார் தண்டனையி லிருந்து தப்பித்துச் செல்ல முடியுமா? ஒரு வேளை இது தரும சங்கடத்தில் தன்னை மாட்டி வைத்து விட்டால், 'தொழுவத்தை விட்டு விலங்கில் மாட்டிக் கொண்டது' போலல்லவோ ஆகும்?' என்று இவ் விதம் ரமணி சிறிது நேரம் சிந்தித்தாள்.

இதற்குள் ஜமீன்தாரது சாட்டை தன் வேலையை ஆரம்பித்து விட்டது. "சுளீர், சுளீர்" என்று இரண்டு

மூன்று அடி வீரமார்த்தாண்டனுடைய தேகத்தில் விழுந்தது. அவ் வடிகள் அவனது மார்பிலும் தோள்களிலும் பட்டுத் தழும்பை யுண்டாக்கி வேதனை செய்ததாயினும், வீரமார்த்தாண்டன் சிறிதும் மனச் சோர் வடையாது புன்சிரிப்பு கொண்டு தனது வீர வுணர்ச்சியை வெளிப்படுத்தி நின்றான். சாட்டை யடி விழும்போ தெல்லாம், தன் முகத்தில் அவ் வடிபடாதவாறு தடுக்கும் நோக்கத்தோடு தலையை வலப்புறமும், இடப்புறமுமாகத் திருப்பினான். இச் சமயங்களில் ஜமீன்தாரது ஆட்கள் தாங்கள் நீட்டி வைத்திருக்கும் ஈட்டிகளை முகத்தில் பாய்ச்ச முயல்வது போல் மிகவும் சமீபமாகக் கொண்டு வந்து காட்டிப் பய முறுத்திக் கொண்டிருந்தனர். இக் கோரக் காட்சியைக் காண ரமணிக்குச் சிறிதும் சகிக்க வில்லை. அவளையும் மீறி ஆத்திரம் பொங்கி யெழுந்தது. அந்த ஆத்திரத்தில் அவளுக்கு ஒரு யோசனை யுதித்தது. உடனே தான் உட்கார்ந்திருந்த இடத்தினின்றும் தாவிப் பின் ஸீட்டில் குதித்து வலப்புறக் கோடியில் நகர்ந்து உட்கார்ந்து, ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டாள். குண்டு வெடி "டுமீல்" என்ற பெருத்த சப்தத்தோடு வெடித்தது. சிறிதும் எதிர்பாராதவாறு துப்பாக்கி வெடி சப்தத்தைக் கேட்ட ஜமீன்தாரும், மற்றவர்களும் திடுக்கிட்டனர். கிராம ஜனங்கள் கொள்ளைக்காரர்கள் தான் தங்கள் தலைவனை மீட்க வந்து விட்டார்களோ என்று பயந்து நடுநடுங்கி நாலாபக்கமும் ஓடலாயினர். ஜமீன் ஆட்கள் பின்னடைந்து சுற்று முற்றும் பீதியோடு நோக்கினர். அவர்களுக்கு அங்கு நிற்கவும் தைரியமில்லை; ஓடவும் துணிவேற்பட வில்லை. ஜமீன்தார் வில வி்லத்துப் போனார். அவரது கையிலிருந்த சாட்டை நழுவிக் கீழே விழுந்தது. அவரும் அவரது ஆட்களும் ஒன்றுந் தோன்றாது திகைத்து நின்றனர்.

இதே சமயத்தில் வீரமார்த்தாண்டன் கட்டப்பட்டிருந்த ஆலமரத்தின் பின் புறத்தில் "டக்" கென்று சப்தங் கேட்டது. இதன் குறிப்பை யறிந்து கொண்டவன் போல் வீரமார்த்தாண்டன் 'தம்' பிடித்து தோள்களாலும் மார்பினாலும் கயிற்றை ஒரு உலுக்கு உலுக்கி உதறினான். அடுத்த கணம் அவனை வரிந்து கட்டியிருந்த கயிறு அறுந்து விழுந்தது. உடனே வீரமார்த்தாண்டன் தன்னைச் சூழ்ந்து நின்றிருந்த ஜமீன் ஆட்கள் வைத்திருந்த ஈட்டிகளை இரு கைகளாலும் தட்டிவிட்டு ஒரே தாவாகத் தாவி ஓடலானான். அவன் பாய்ந்த வேகத்தில் எதிர்புறத்திருந்த ஜமீன்தார் மோதுண்டு ஒரு பக்கம் போய்ச் சாய்ந்தார். வீரமார்த்தாண்டன் தன்னெதிரே காணப்பட்ட ஒரு பெரிய ஆலம் விழுதைப் பற்றிக்கொண்டு ஊசலாடிச் சிறிது தூரத்திலிருந்த மற்றொரு மரத்துக்குத் தாவினான். இத் தருணத்தில் ஒரு பெரிய ஆரவாரங் கிளம்பியது. இவ்வளவும் இரண்டொரு விநாடிகளில் நிகழ்ந்து விட்டது.

இதைக் கேட்டு ரமணி துணுக்குற்றாள். அவள் துப்பாக்கியை மேல் நோக்கிச் சுட்டதன் நோக்கமே, 'இவ் வெடிச் சப்தத்தைக் கேட்டு ஜமீன்தார் ஆட்கள் உட்பட எல்லாரும் ஓடி விடுவார்கள். நாம் போய் வீரமார்த்தாண்டனைக் கட்டையவிழ்த்து விடுதலை செய்யலாம்' என்ற கருத்தோடேயே யாகும். ஆனால், அவள் எதிர்பாராத வாறு வீரமார்த்தாண்டன் கட்டி னின்றும் விடுபட்டு ஓடியதும், அதை யொட்டி ஆரவாரம் ஏற்பட்டதும் அவளுக்கு அதியாச்சரியத்தை 'புண்டுபண்ணி விட்டது. எனவே, வீரமார்த்தாண்டன் செல்லுந் திசையைக் கூர்ந்து நோக்கினாள். அவன் தரையில் ஓடாது ஒவ்வொரு மரமாகத் தாவித் தாவிச் சென்று கொண்டிருந்ததையும், சிறிது

தூரத்தில் மரங்கள் அடர்ந்த ஓரிடத்தில் பெரிய மரங்களில் கத்தி, கட்டாரி முதலிய ஆயுதங்களோடு கூடிய பத்து பதினைந்து மனிதர்கள் இவனை ஆர்வத்தோடும் ஆவலோடும் வரவேற்றுக் கொண்டிருப்பதையுங் கண்டாள். உடனே அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது. ஏற்கனவே, வீர மார்த்தாண்டனது சகாக்கள் அவனை மீட்க இத் தோட்டத்திற்கு வந்து மரங்களில் மறைந்திருந்து நடப்பதைக் கவனித்து சமயத்தை எதிர்பார்த் திருக்கிறார்கள்; இதே சமயத்தில்தான் ரமணியும் அவனை ஜமீன்தாரின் கொடுமையிலிருந்து காக்க முயன்றிருக்கிறாள். அவள் துப்பாக்கியால் சுட்ட அதே நேரத்தில் மறைந்திருந்த கொள்ளைக்காரர்கள் பின்புறம் குறி பார்த்து கூரிய கத்தி யொன்றை எறிந்திருக்கிறார்கள். அக் கத்தி கயிற்றின்மீது தாக்கி அதை அறுபடச் செய்திருக்கிறது. இக் குறிப்பு அறிந்து, வீரமார்த்தாண்டன் தன் வன்மையால் கயிற்றை இரண்டாக அறுந்து விழும்படி செய்து விட்டு, கட்டை யவிழ்த்துக் கொண்டு ஓடி யிருக்கிறான். 'காக்கை யுட்கார பனம்பழம் விழுந்த' கதைபோல, தான் சுட்டதும், வீரமார்த்தாண்டன் விடுபட்டதும் ஒன்றாக நேர்ந்ததை யறிந்து ரமணி வியப்படைந்தாள். 'மனிதச் செயலால் ஒன்றுமில்லை; எல்லாம் தெய்வச் செயல்' என்னும் உண்மை அவள் மனதில் புலப்பட்டது.

"ஹூம்" என்று ஒரு பெரு மூச்சு விட்டவாறே, ரமணி கைத் துப்பாக்கியை எடுத்துப் பழையபடி, இடையில் செருகிப் பத்திரப்படுத்திவிட்டு, கதவைத் திறந்து கொண்டு காரினின்றும் இறங்கினாள். அதை மறுபடியும் அவள் சாத்திவிட்டு, வலப்புறமாகச் சுற்றிக்கொண்டு வந்து, முன்போலவே கலியாணசுந்தரன் பக்கத்தில் போய்

அமர்ந்தாள். உட்கார்ந்ததும், அவள் கலியாணசுந்தரனை நோக்கி, "உம்; வந்த வேலை முடிந்து விட்டது; இனி நாம் போகலாம்" என்று கூறினாள்.

இதுவரை, ஒன்றன்பின் ஒன்றாக நடந்த திடுக்கிடத் தக்க விபரீத சம்பவங்களைக் கண்டு ஆச்சரியங் கொண்ட கலியாணசுந்தரன் ரமணியின் துணிகரச் செயல்களையும் நோக்கி விழித்த கண் விழித்தபடி வியப்பே வடிவாய் அமர்ந்திருந்தான். அவனது மனதுக்கு ரமணி சாதாரணப் பெண்ணாகத் தோன்றவில்லை. ஒப்பற்ற ஒரு வீராங்கனையாகவே அவளை அவன் மதித்தான். ரமணியின் வீரச் செயலில் ஈடுபட்ட அவனது மனம் மானஸிக உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. "வந்த வேலை முடிந்து விட்டது; இனி நாம் போகலாம்" என்று ரமணி கூறிய பிறகே, அவன் தன்னுணர்வு வரப்பெற்றான். எனவே அவன் ரமணியை ஒருவிதமாக நோக்கிப் புன்சிரிப்பு கொண்ட வண்ணம், "உன் வேலை முடிந்து விட்டதா? அப்படியானல் இதோ காரை 'ஸ்டார்ட்' செய்து விட்டேன்" என்று கூறிக் காரைத் தாங்கள் செல்ல வேண்டிய பாதையை நோக்கித் திருப்பிச் செலுத்தினான். இதே தருணத்தில் ரமணியின் மடிமீது ஏதோ ஒரு பொருள் தொப்பென்று வந்து விழுந்தது. உடனே ரமணி அதை யெடுத்துப் பார்த்தாள். கலியாணசுந்தரனும் திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினான். காகிதத் துண்டொன்று ஒரு சிறு கல்லில் சுற்றிப் போடப்பட் டிருந்தது. இதைக் கண்டு ஆச்சரியமுற்ற ரமணி அதைப் பிரித்துப் பார்த்தாள். அதில்,

"தக்க சமயத்தில் தாங்கள் செய்த பேருதவியை என்றும் மறத்தற்கில்லை. இப்போதுள்ள நெருக்கடியான நிலைமையில் தங்களை நேரில் கண்டு பேசி என்னுடைய

நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதற்குச் சந்தர்ப்ப மில்லை. எனினும், வீரமார்த்தாண்டன் எப்போதும் பிறர் செய்த உதவியை—அது மிகச் சிறிதாயினும்—மறக்கமாட்டான். அதற்குப் பிரதியுபகாரத்தைச் செய்யும் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டேதான் இருப்பான். ஆகவே, எல்லாம் வல்ல கடவுள் 'ஜீவாபிமான'முள்ள தங்களை—ஆம்; ஜீவாபிமானத்தை உண்மையாக வுடையவர்தான்; இல்லாவிடில், ஒரு கொள்ளைக்காரனுக்கு உதவி செய்ய விரும்புவீர்களா!—மீண்டும் சந்திக்கும் சந்தர்ப்பத்தைக் கட்டாயம் ஏற்படுத்துவான் என்றே நம்புகிறேன்.

'வீரமார்த்தாண்டன்.'

என்று எழுதப்பட் டிருந்தது. இதைப் படித்ததும் ரமணியின் உள்ளம் களி கொண்டது. அவள் கல் தாங்கிவந்த அக் கடிதத்தைக் கலியாணசுந்தரனிடம் கொடுத்தாள். அவன் அதை இடக்கையால் வாங்கி ஆவலுடன் படித்தான். இதற்குள் ரமணி தன் தலையைக் காரினின்றும் வெளியே நீட்டித் திரும்பிப் பார்த்தாள். வீரமார்த்தாண்டனும் அவனது தோழர்களும் வெகு தூரத்தில் விரைந்து சென்று கொண்டிருந்தது தெரிந்தது. சிறிது நேரம் அப் பக்கமே நோக்கிவிட்டுக் கழுத்தைத் திருப்பும் சமயத்தில் சமீபத்தில் ஏற்பட்ட ஒரு சிறு சந்தடி அவளது கவனத்தைக் கவர்ந்தது. அது என்ன வென்று அவள் ஆவலோடு பார்த்தாள். ஜமீன்தார் தங்கள் காரை மடக்கும்படி ஆட்களைச் சாட்டையால் அடித்து ஏவ, அவ்வாட்கள் பயத்தோடு ஓடி வந்துகொண்டு இருந்தனர். வீரமார்த்தாண்டனால் தாக்கப்பட்டுக் கீழே விழுந்துவிட்ட ஜமீன்தார் சில விநாடிகளுக் கெல்லாம் தன்னைச் சமாளித்துக்கொண்டு எழுந்தார். அவருக்கு அவமானம் தாங்க முடியவில்லை.

கிராம ஜனங்கள், தனது ஆட்கள் ஆகியவர்கள் முன்னிலையில் தாம் கேவலம் ஒரு கொள்ளைக்காரனால் தாக்கப்பட்டு விழுந்ததைப் அவர் பேரவமானமாகக் கருதித் துடித்தார். அவமான உணர்ச்சி சினமாக மாறியது. கோபத்தால் கொதித்து எழுந்தார். அக் கோபத்தைத் தன் ஆட்கள்மீது செலுத்தினர். தன் ஆட்கள் ஈட்டி முதலியவைகளைக் கீழே போட்டுவிட்டுப் பயந்து நிற்பதைக் கண்டதும் அவருக்கு மேலும் ஆத்திரம் அதிகமாயிற்று. கீழே கிடந்த சாட்டையை எடுத்து அவர்கள் மீது விளாசினர். "நீங்கள் ஜாக்கிரதையாகவும் தைரியமாகவும் இருந்திருந்தால் அந்தக் கள்ளப் பயல் என்னைத் தள்ளிவிட்டுத் தப்பியோடியிருக்க முடியுமா ?—நெஞ்சுரமில்லா பேடிகளே! நன்றி கெட்ட நாய்களே!—அதோ செல்லும் காரையாகிலும் சீக்கிரம் ஓடிப்போய் மடக்குங்கள்; அதனுள் இருந்தவர்கள் தான் துப்பாக்கியை வெடித்து நம்மைப் பயமுறுத்திக் காரியத்தைப் பாழ்ப்படுத்தியவர்கள்; ஒரு வேளை அவர்கள் அக் கொள்ளைகாரனது ஆட்களாகவும் இருக்கலாம்! அவனுக்குப் பதில் இவர்களை இம் மரத்தில் கட்டிச் சாடலாம்; ஓடுங்கள்; சீக்கிரம்" என்று சாட்டையால் ஒவ்வொருவரையும் அடித்துத் துரத்தலானர். காரில் இருப்பவர்கள் எங்கு தங்களைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்திவிடுவார்களோ என்ற பயம் அவ்வாட்களுக்கு இருந்தாலும், தங்கள் எஜமானது கோபத்துக்கும், சாட்டையடிக்கும் முன் எதிர் நிற்கமாட்டாமல் காரைப் பின் தொடர்ந்து ஓடினர். சிறிது தூரம் ஜமீன்தாரும் இவர்களைத் துரத்திக் கொண்டே ஓடிவந்தார். ஜமீன்தாரின் மடத்தனமான இச்செய்கை ரமணிக்குத் தமாஷ் காட்சியாகத் தோன்றியது: அவள் கலகலவென வாய் விட்டுச் சிரிக்கலானள். இதற்குள் கடிதத்தைப் படித்து

முடித்து விட்ட கலியாணசுந்தரன் இவளது சிரிப்புக்குக் காரண மென்ன வெனக் கேட்டான். ரமணி தான் கண்ட விஷயத்தைச் சொல்லி, எதற்கும் காரைச் சிறிது வேகமாகவே விடும்படிக் கூறினுள். கலியாணசுந்தரன் ரமணி கூறியபடியே காரை மணிக்கு 30 மைல் வேகத்தில் விடலானுன். கார் வெகு வேகமாகச் செல்வதைக் கண்ட ஜமீன் ஆட்கள் இனி தங்களால் அதைப் பிடிக்க முடியாது என்று அறிந்து கால் தளர்ந்து நின்று விட்டனர்.

கார் ராஜ பாட்டையில் சென்று கொண்டேயிருந்தது. ரமணி வீரமார்த்தாண்டனுடைய தன்மையைப் பற்றியும் வீரதீர பராக்கிரமத்தைப் பற்றியும் மனதுள் வியந்து கொண்டிருந்தாள். கலியாணசுந்தரன் ரமணியின் மனத்துணிவையும், விபரீதச் செயலையும் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தான். இதனுல் இவர்க ளிடையே மௌனம் நிலவிக் கொண்டிருந்தது.

சிந்தனை கலந்த கலியணசுந்தரன் ரமணியைக் கடைக்கண்ணுல் நோக்கலானுன். தற்செயலாக அவன் பக்கந் திரும்பிய ரமணி இதைக் கவனித்து புன்சிரிப்பு கொண்டாள். பிறகு அவள் கலியாணசுந்தரனை நோக்கி "ஆமாம்; வீரமார்த்தாண்டனைப் பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?" என்று திடுமெனக் கேட்டாள்.

"யார்? அந்தக் கொள்ளைக்காரனைப் பற்றியா?" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டே வினவினுன் கலியாணம்.

"ஆம்; அவன் எழுதிய கடிதத்தைப் பார்த்தீர்க ளல்லவா! அதைக் கொண்டே அவனுடைய தன்மையை—குணஞ் செயல்களை—அறிந்து கொள்ள ஏது விருக்கிற தன்றோ!" என்று கூறினுள் ரமணி.

கலியாணம், "அவனைப்பற்றி நான் என்ன அபிப் பிராயஞ் சொல்வது!........" என்று இழுத்தாற்போல் பேசினன்.

"கிராம ஜனங்கள் மார்த்தாண்டனைப் பற்றிக் கூறிய வைகளையும் கேட்டிருக்கிறீர்கள். அவையனைத்தும் உண்மை தான் என்று மெய்ப்பிப்பதுபோல் இல்லையா அவன் எழுதிய கடிதம்" என்று ரமணி கேட்டாள்.

கலியாணசுந்தரன், "சாதாரணமாக ஒருவருக்கு மற்றொருவர் எதிர்பாரா வகையில் உதவி செய்தால், உதவி பெற்றவர் உதவி புரிந்தவருக்கு நன்றி செலுத்துவது சகஜம். அதிலும், வீரமார்த்தாண்டன் இருந்த பேராபத்தான நிலை யில், நீ அவனைக் காத்தது ஒரு பெரிய காரியமல்லவா! அது தான் நியாயமாகும். அம்முறையில் தான் வீரமார்த்தாண் டன் தன் நன்றியைத் தெரிவித்திருக்கிறன். இதில் ஒன் றும் விசேஷமில்லையே!" என்று கூறினன்.

"அப்படி சொல்லப்படாது; எல்லோருமே நன்றி யறிதலுடையவர்களா யிருக்கிறர்களா என்ன! எத்தனை பேர் தங்களுடைய உயிரைக் காத்தவர்களின் உயிருக்கே உலைவைக்க ஆரம்பித்துவிடுகிறர்கள்! நற்குண சம்பன்னர் களிடத்துத் தான் நன்றியறிதல் என்னும் அரிய குணம் இயற்கையாக அமைந்து கிடக்கும். எனவே, வீரமார்த் தாண்டன் உத்தமன் என்பதில் சந்தேகமில்லை. அவனுடைய கம்பீரதோற்றமே ஆடவர்களில் சுத்த வீரன் என்று தெரிகிறதே" என்று ரமணி வீரமார்த்தாண்டனைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்தாள்.

இது கலியாணசுந்தரனுக்குப் பிடிக்கவில்லை. அவன், "என்ன இருந்தாலும் அவன் கொள்ளைக்காரன் தானே! வழிபறி கொள்ளை யடிப்பவனுக்கு நற்குணமோ, நன்றி

யறிதலோ, நாணயமோ எங்கிருந்து வரும் என்று எனக்குத் தெரியவில்லை" என்று குத்தலாகவும் அலட்சியமாகவும் கூறினான்.

ரமணி, "ஒருவன் கொள்ளைக்காரனாக இருப்பதனாலேயே, அவனிடம் உலகிலுள்ள கொடுங் குணங்களெல்லாம் குடிகொண்டிருக்கும் என்று கூறி விடலாமா என்ன! பெரிய மனிதர்கள், பேரறிஞர்கள், செல்வச் சீமான்கள் என்பவர்களில் எத்தனைபேர் பஞ்சமா பாதகங்களையும் அஞ்சாது செய்யும் காதகர்களா யிருக்கிறார்கள்? அது போல, கொள்ளைக்காரர்களா யிருப்பவர்களில் ஏன் நல்லவர்கள் இருக்கக் கூடாது? ஏதோ ஒரு காரணத்தால் கொள்ளைத்தொழிலை மேற்கொண்டதனாலேயே வீரமார்த்தாண்டன் மிகக் கொடியவன் என்று முடிவுகட்டி விடுவது சிறிதும் நியாயமாகாது. அவனிடம் பெரியோர்கள் விரும்பத்தக்க நற்குணங்களும் உயரிய கொள்கைகளும் நிறைந்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை" என்று உணர்ச்சியோடு வாதித்தாள்.

கலியாணசுந்தரனுக்கு இவளது வாதத்தைக் கேட்டதும் பல பல சந்தேகங்கள் உண்டாய் விட்டன. "ரமணி ஒரு வேளை வீரமார்த்தாண்டன் மீது காதல் கொண்டு விட்டாளோ! இல்லாவிடில், ஏன் அவனைப் பற்றி இவ்வளவு தூரம் பிரமாதமாகப் புகழ்ந்துரைக்க வேண்டும்? வழியே போகும் இவள் கொள்ளைகாரனாகிய அவனை ஜமீன்தாரிடமிருந்து தப்புவித்துக் காப்பாற்ற முயன்றதே தவறு. பெண்கள் இரக்க நெஞ்ச முடையவர்கள் என்று கூறுகிறார்களே! அம்முறையில், அவள் அவனது சங்கடமான நிலையைக் கண்டு மனமிளகி அவனைக் காப்பாற்றம முயன்றாள் என்று வைத்துக் கொண்டாலும், அதற்குப்

பின்னரும், அவனைப்பற்றி பிரமாதமாகப் பேசுவது விபரீத மாக வல்லவோ இருக்கிறது? எவனுகிலும் ஒருவன் கம்பீர தோற்ற முடையவனுகவும், திடகாத்திர தேகியாகவும் இருந்து விட்டால், அவனது குணஞ் செயல் தகுதிகளை ஆராயாமலே அவன் மீது மனத்தைச் செலுத்தி விடுவது பெண்களுக்கு இயல்பு என்று அறிஞர் சிலர் கூறி விட்டுச் சென்றது உண்மைதான்" என்று பலவாறு எண்ணினன். கலியாண சுந்தரன் இதுவரை ரமணியிடம் காதல் கொண்டு விட்டான் என்று சொல்லுவதற் கில்லாவிடினும், அவள் வீரமார்த்தாண்டனைப் பற்றிப் பாராட்டிப் பேச ஆரம்பித்ததும், அவன் மனம் விவரிக்கவொண்ணுத விதமாக வேதனையடைய ஆரம்பித்தது. வீரமார்த்தாண்டன் சாதாரண வழிபறி கொள்ளைக்காரன் மட்டுமல்ல; தனக்குரிமையானவளின் மனதையுங் கொள்ளை கொள்ளும் பெரிய கொள்ளைக் காரன் என்றும், ரமணியை அடையும் விஷயத்தில் அவன் தனக்குப் போட்டியாக வந்திருக்கிருன் என்றும் கருதினன். எனவே, அவன் மீது கலியாணசுந்தரனுக்குப் பொருமை யேற்பட்டது.

எனவே, கலியாண சுந்தரன் சிறிது சினத்தோடேயே, "சரி! அவன் எப்படியாயினும் இருந்து கொண்டு போகிருன்; அவனைப்பற்றி இப்போது என்ன பேச்சு" என்று அலட்சியமாகக் கூறினன்.

ரமணி சடக்கெனத் திரும்பிக் கலியாணசுந்தரனின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள். அந்த ஒரு பார்வையிலேயே அவள் அவனுடைய மனே நிலையை ஒருவாறு ஊகித்து அறிந்து கொண்டாள். உடனே அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது. 'களுக்'கென வாய்விட்டு நகைக்கலானுள். "ஏன் உங்களுக்கு வீரமார்த்தாண்டன் மீது அவ்

வளவு கோபம்? அவன் உங்களுக்குரிய சொத்து எதையாயி னும் கொள்ளை யடித்து விட்டானு? என்ன........!" எனப் பரிகாசமாகக் கேட்டாள்.

இக் கேள்வி கலியாணசுந்தரனின் நெஞ்சில் சுருக் கெனத் தைத்தது. அவன் நினைத்ததையே ரமணியும் கூறியது அவனுக்கு வியப்பை யளித்தது. ஆயினும், அவன் ரமணியின் பரிகாசப் பேச்சைச் செவி யேற்காதவன் போலவும், காரைச் செலுத்துவதில் ஊக்கங் காட்டுபவன் போலவும் பாவனை செய்தான்.

ரமணி கலியாணசுந்தரனின் மன மாறுதலைக் கண்டு, பரிகாசஞ் செய்தாளேயாயினும், பிறகு அவள் அவன் மீது அநுதாபங் கொள்ளலானுள். 'அவன் தன் அழகில் மனதைப் பறிகொடுத்து விட்டிருக்கிறுன்; அதனுல்தான், வீரமார்த்தாண்டனைப் பற்றிப் பேசத் தொடங்கிய தும், நான் ஏதோ அவனது வீர பராக்கிரமத்தைக் கண்டு மயங்கிவிட்டதாகச் சந்தேகித்து அவன் மீது பொருமையும் சினமுங் கொண்டிருக்கிறுன்' என்று ரமணி ஊகித்தாள். இதிலிருந்து அவள், கலியாணசுந்தரன் தன்னை உண்மையாக நேசிக்கிறுன் எனத் தெரிந்து கொண்டாள். எனவே, அவள் கலியாணசுந்தரன் மீது, பரிவு கொண்டதில் ஆச்சரிய மொன்று மில்லை. அதுவன்றி, அவள் மனதிலும் கலியாணசுந்தரன் இடம் பெற்று விட்டான் என்றே கூறவேண்டும். முதலில் அவனை விழுப்புரத்தில் சந்தித்த போது, தனக்கு வழித் துணைவனுகவும், போலீஸாரிட மிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஒரு கருவி யாகவும் இவனைப் பயன்படுத்திக்கொண்டு, கடைசியில் இவனுக்கும் 'டிமிக்கி' கொடுத்து விட்டுப் போய் விட வேண்டுமென்றே எண்ணினுள். பிறகு அவனேடு பலகால்

உரையாடியும், பழகியும் வந்ததி லிருந்தும், கண்டமங்கலம் சுங்கச் சாவடியில் ஏற்பட விருந்த சங்கடமான நிலைமை யிலிருந்து தன்னை அவன் காப்பாற்றியது லிருந்தும் அவன் மீது ரமணிக்கு ஒருவித விஸ்வாசம் ஏற்பட்டது. அமைதியும் அழகும் நிறைந்த அவனது வாலிபத் தோற்றமும், நற் குண நற்செயல்களும் அவளை மெள்ள மெள்ள வசீகரித்து விட்டன. இதுவரை எத்தனையோ விதமான ஆடவர்களைக் கண்டிருந்தும், எத்தனையோ நவநாகரிக வாலிபர்களும், செல்வச் சீமான்களும் இவளது காலடியில் விழுந்து கிடந்தும், காத லென்பதையே கனவிலுங் கருதி யிராத ரமணியின் உள்ளத்தில், கலியாணசுந்தரனைக் கண்ட பிறகு அவளை யறியாமலே காதல் தோன்றி நத்தைபோல் மெள்ள மெள்ள ஊர்ந்து வரலாயிற்று. இவ்விதம் காதல் இடம் பெற்றிருப்பதை ரமணி இப்போதே உணரலானாள்.

ஆனால் முன் பின்னறியாத—ஒருவித சம்பந்தமு மில் லாத—வீரமார்த்தாண்டன் மீது தனக்கு ஒருவித பரிவு ஏற்பட்டதுதான் ரமணிக்கு வியப்பை விளைத்தது. அதற்குக் காரணம் யாதா யிருக்கும் என்று அவளால் நிச்சயிக்க முடியவில்லை. 'சாதாரணமாக எவரேனும் ஒருவர் விபத்தில் சிக்கிக் கொண்டிருப்பதைக் கண்டால், அவரைக் காப் பாற்ற வேண்டு மென்று மனிதர்களுக்கு எழுகிற ஜீவ காருண்ய உணர்ச்சி மட்டுமல்ல, தான் வீரமார்த்தாண்ட னைக் காப்பாற்ற முயன்றதற்குக் காரணம்; இன்னும் ஏதோ ஒன்று இருக்கிறது. இல்லாவிடில், அவனைக் காப் பாற்ற முயல்வதால், தனக்குப் பேராபத்து வருமென்று நன்கு தெரிந்தும், அதில் தலையிடத் துணிவேற்படுமா? ஆகவே, அவனிடம் ஏதோ ஒருவிதமான அன்பு ஏற்பட்ட தால்தான் அவன் விஷயத்தில் இவ்வளவு தூரம் ஈடுபாடு

உண்டாயிற்று. அவனைக் காணாத முன்பே—அவன் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே—அவன் மீது பரிவு ஏற்பட்டதை எண்ணிப் பார்க்கும் போது ரமணிக்கு மேலும் ஆச்சரிய முண்டாயிற்று. 'இது என்ன! காதலுணர்ச்சியா? சாதாரண நேசமா? அப்படியானால், கலியாணசுந்தரனிடம் ஏற்பட்டிருக்கும் பற்று எவ்விதமானது? இது காதலாயின், வீரமார்த்தாண்ட னிடமும் எவ்விதம் காதல் உண்டாக முடியும்? ஒரு பெண் இரு ஆடவர்களிடம் ஏக காலத்தில் எவ்விதங் காதல் கொள்ள முடியும்? அவ்விதம் இருவரிடமும் மனஞ் செல்லுமாயின், அது காதலென்று கூறத்தக்க தகுதி யுடைய தாகாதே! உண்மைக் காதல் ஒரே ஒருவரிடத்தில்தான் உண்டாகுமே யொழிய, பலபேர் மீது ஏற்படாது. உத்தமப் பெண்மணியானவள் தனக்குத் தகுதியான—அதாவது குணம், செயல், கல்வி, தகுதி முதலிய அனைத்தும் ஒத்த—ஆண்மக னொருவனிடந் தான் காதல் கொள்வாள். ஆகவே, முதன் முதலில் நம்மை யறியாமலே நம் உள்ளத்தைக் கவர்ந்தவன் கலியாணசுந்தரனே யாவன். வீரமார்த்தாண்டனிடம் ஏற்பட்டிருக்கும் அன்பு சகோதர நேயமாகத்தான் இருக்க வேண்டுமே யன்றி, வேறொன்றாக இருக்க முடியாது. இறைவன் செயலை நாம் எவ்வாறு அறிய முடியும்? நாம் எதிர்பாராத எவரிடமோ எவ்வித சம்பந்தத்தையேனும் ஏற்படுத்தி விடுகிறான். போகப் போகத்தான் வீரமார்த்தாண்டன் விஷயம் நமக்கு விளங்கும். இதனிடையே, நாம் மடத்தனமாக, கலியாணசுந்தரனுக்குச் சந்தேக முண்டாகும்படி நடந்து கொண்டது தவறாகும். இனியேனும், அவ்விதம் அவன் மனம் வருந்தும்படி நடந்து கொள்ளக் கூடாது.—ஆமாம்; இன்னொரு முக்கிய விஷயத்தை அடியோடு மறந்து விட்டோமே! சுங்கச் சாவடி

யண்டை நாம் தப்பித்துக் கொள்வதற்காக, வைரமாலையை அவனுடைய ஜேபியில் போட்டோமே! அதை எப்படி மீண்டுங் கைப்பற்றுவது! கலியாணசுந்தரன் கோட் பாக் கெட்டில் கை விடும்போது தப்பித்தவறி அது அவன் கையில் அகப்பட்டு விட்டால், 'அது எவ்வாறு தன் ஜேபி யில் வந்தது?' என்று திகைப்பும் வியப்பு மடைய மாட் டானு? அவனேடு இருக்கும் நம் மீது தானே அவன் சந்தேகங் கொள்வான்? பிறகு, அது சிக்கலான பிரச்சினை யாக வல்லவோ வந்து முடியும்? அவ்வளவு தூரத்துக்கு நாம் இடங் கொடுக்கக் கூடாது? அம்மாலையை அவன் ஜேபியிலிருந்து அகற்றி வசப்படுத்த ஏதாகிலும் வழி தேட வேண்டும்' என்று தனக்குள்ளாகவே கூறிக்கொண்டாள்.

பிறகு, சிறிது நேரம் ஏதோ ஆழ்ந்து சிந்தித்து விட்டுக் கடைசியாக ஒருவித தீர்மானத்துக்கு வந்தவளாய் ரமணி கலியாணசுந்தரனிடம் நெருங்கிச் சேர்ந்தாற் போல் அவன் தோளில் உராய்ந்தவாறு உட்கார்ந்து, "கல்யாணம்! நான் வீரமார்த்தாண்டனைப் பற்றிப் பேசியதைத் தவருகக் கருதி விட்டாய் போலிருக்கிறது! அவ்வித மொன்றும் நினை யாதீர்கள்..............................!" என்று அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தவாறு பேசினுள்.

இருவரும் ஒரே காரில் ஒருவர் பக்கத்து ஒருவர் அமர்ந்து இவ்வளவு நேரம் பிரயாணஞ் செய்து வந்தாலும், இதுவரை ஒருவர் தேகம் மற்ருெருவர் மீது படவில்லை. ரமணியின் மெல்லிய தோள், கலியாண சுந்தரனின் தோள் மீது அழுந்தியது இதுவே முதல் தடவையாதலால், ஸ்பரிச உணர்ச்சி, கலியாண சுந்தரனைத் தலை கிறுக்கச் செய்தது. அவன் உடல் புளகாங்கித மடைந்தது. எனவே, தேன் குடித்த நரிபோல் அவன் பற்களைக் காட்டி அசட்டுச்

சிரிப்பு சிரித்து, "அதெல்லாம் ஒன்று மில்லை. ரமணி! எதற்காக ஒரு மனிதனைப் பற்றி அனாவசியமாகப் பேசிக் கொண்டிருப்பது என்று அலுப்போடு கூறினேனே யொழிய வேறில்லை. எனக்கென்ன வீரமார்த்தாண்டன் விரோதியா? அல்லது பங்காளியா? அவன் மீது பொருமையோ, கோபமோ கொள்வதற்கு. அது மட்டுமல்ல; இவ் விஷயத்தில் உன்மீது தப்பபிப்பிராயங் கொள்வதற்கு என்ன இருக்கிறது?..............." என்று இழுத்தாற் போல் பேசினன்.

"அது போகட்டும்; சுந்தர்! எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது. மயக்கம் தலையைச் சுற்றுகிறது. உள்ளே என்னமோ பண்ணுகிறது........ஆ!...........ஆ!!" என்று கூறியவாறே மயக்கமுற்றவள் போல் திடீரென கலியாணசுந்தரனின் மீது குப்புறச் சாய்ந்து விட்டாள்.

எதிர்பாராதவாறு இதைக் கண்ட கலியாணசுந்தரன் திடீரென 'பிரேக்' போட்டுக் காரை நிறுத்திவிட்டு, ரமணியை கைகளில் தாங்கித் தூக்கியெடுத்து மார்போடு சார்த்திக்கொண்டு மூர்ச்சை தெளிவிக்க முயன்ருன்.

கண்களை மூடிக்கொண்டு மூர்ச்சை யுற்றவள்போல் பாசாங்கு செய்த ரமணி இதற்குள் கலியாண சுந்தரன் அறியாவாறு அவனது இடது கோட் பாக்கெட்டில் கையை விட்டுத் துழாவி வைர மாலையை யெடுத்துப் பக்குவமாக மார்புக் கச்சத்திற்குள் செருகிக் கொண்டாள். இவ்வளவும் ஒரு விநாடிக்குள் செய்து முடித்தாள்.

இவளது சூழ்ச்சியை யறியாத கலியாணசுந்தரன் இவளை மடியி லிருத்திக் கைக் குட்டையை யெடுத்து முகத்தில் விசிறலானன். பிறகு தான் கொண்டுவந்திருந்த கூஜாவைத் திறந்து அதிலிருந்த தண்ணீரை யெடுத்து அவ

ளது முகத்தில் தெளித்தான். ரமணி எதிர்பாராதவாறு மூர்ச்சை யுற்றதற்காக அவன் வருந்தினான்; ஆயினும், அவள் தன்மீது சாய்ந்திருக்கும் சந்தர்ப்பங் கிடைத்ததே என்று ஒருவிதத்தில் மகிழலானான். அம் மகிழ்ச்சியில் அவன் ரமணியை மேலும் மார்போடு சேர்த்து அணைத்த வாறே கைக்குட்டையால் விசிறலானான். அப்போது அவனுக்கு இருந்த ஆர்வத்தில் — உணர்ச்சியில்—ரமணியி னுடைய அழகிய வதனத்தில்—அவளது செங்கனி வாயித ழில் கணக்கற்ற முத்தங்கள் இட்டிருப்பான். இதற்குள் அவனது உணர்ச்சியை யறிந்து கொண்டு விட்ட ரமணி, தனக்கும் அவனது அன்பு அணைப்பில் இருப்பது பேரா னந்தத்தை யுண்டு பண்ணக்கூடியதா யிருந்ததாயினும். இன்னமும் பூரணமாக அவனது நிலைமையை அறிந்து கொள்ளாதிருக்கும் இச் சமயத்தில், அவனது உணர்ச் சியை மீற விடக்கூடிய சந்தர்ப்பத்தை யளிக்கலாகாது என்று கருதி, அப்போதுதான் மூர்ச்சை தெளிந்தவளைப் போல் பாவனை செய்து மெதுவாகக் கண்களைத் திறந்து எழுந்திருக்க முயன்றாள்.

இதைக் கண்ட கலியாணசுந்தரன் சடக்கென தன் தலையை நிமிர்த்திக் கொண்டு, "ரமணி! இப்போது உடம்பு எப்படி யிருக்கிறது? அவசரப்படாதே! இன்னுஞ் சிறிது நேரம் அப்படியே படுத்திருந்தால் சௌகரியமாக இருக்கும்.—கொஞ்சம் காப்பி யருந்தினால் களை தீரும்.— காலையி லிருந்து நெடுந் தூரம் பிரயாணஞ் செய்ததல்லவா! இடை நடுவே ஒன்றும் சாப்பிடவே இல்லை போல் தோன்றுகிறது. இப்போது மணி நாலுக்கு மேலாய் விட்டது!—பசி களை தான் வந்து மூடிக்கொண்டது........" என்று நீட்டிப் பேசிக் கொண்டே போனான்.

ரமணி விஷமச் சிரிப்பு கொண்டு எழுந்து, "அப்படியொன்றும் பசி வந்து காதை அடைக்கவில்லை. விவரிக்க முடியாத ஏதோ ஒருவித உணர்ச்சிதான் என்னை இப்படி மூர்ச்சை யடையச் செய்தது.—அது கிடக்கட்டும். இங்கு சமீபத்தில் கிராமமோ ஊரோ இருந்தால் பாருங்கள். ஏதேனும் ஆகாரத்துக்கு வழி தேடலாம். ஏதாகிலும் சிறிது வயிற்றுக்குப் போட்டால் தான் சரியாயிருக்குமென நினைக்கிறேன்" என்று கூறினாள்.

கலியாணசுந்தரன், "ஆகாரத்துக்குத் தானே! இதோ நான் கொஞ்சம் தயிர் சாதமும் சில ரொட்டிகளும் கொண்டு வந்திருக்கிறேன். காப்பி, நீர் எல்லாம் இருக்கின்றன. உனக்கு எது விருப்பமோ அதைச் சாப்பிடலாம்" என்றான்.

ரமணி குதூகலமாக, "சரி; அப்படியானால் நாம் இருவரும் அதோ அந்த மரத்தடிக்குப் போய் உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு வருவோம்; ஏதோ ஆகாராதிகளை எடுங்கள்" என்று கூறினாள்.

கலியாணசுந்தரன் தான் கொண்டு வந்திருந்த ஆகார மூட்டையையும் தர்மாஸ் பிளாஸ்க், ரயில் கூஜா ஆகியவைகளையும் எடுத்துக்கொண்டு வந்தான். இருவரும் உற்சாகமாகப் பேசிக் கொண்டே உணவு வகைகளை யுண்டு நீரருந்தினர்.

ஆகாரத்தை முடித்துக்கொண்டதும் அத்தோழர்கள் தங்கள் பிரயாணத்தை மீண்டும் ஆரம்பித்தனர். பொழுது சாய்வதற்குள் அவர்கள் தஞ்சையை அடையும் நோக்கத்தோடு கலியாணசுந்தரன் காரை வேகமாக விட்டான். தஞ்சையில் தன் உறவினர் வீடு இருக்கிறதென்றும் அங்கு

அன்று தங்கி மறுநாள் நாகப்பட்டினம் போகலாம் என்றும் ரமணி கலியாணசுந்தரனிடம் சொல்லி வைத்தாள். தான் புறப்படுஞ் சமயத்தில் தன் மாமனிடம் குறிப்பிட்ட ஹம்ஸ தமயந்தி வீட்டுக்குப் போகும் நோக்கத்தோடேயே அவள் அவ்வாறு கூறினுள். அவ்வேற்பாட்டைக் கலியாண சுந்தரன் ஒப்புக்கொண்டான்; ஆதலால், கடைசியாக, அவர்க ளிருவரும் இரவு ஏழு மணிக்கெல்லாம் ரமணி குறிப்பிட்ட வீட்டை யடைந்தனர். எதிர்பாராதவாறு ரமணி தன்னிருப்பிடத்துக்கு வந்ததை யறிந்த ஹம்ஸ தமயந்தி, அவளையும் அவளுடன் வந்த கலியாணசுந்தரனையும் குதூகலமாக வரவேற்ருள்.

## ஆருவது அதிகாரம்

### கள்வன் உள்ளத்தைக் கவர்ந்த காரிகை

அன்று கிருஷ்ணபக்ஷம் பத்தாவது நாள். தேய் பிறைச் சந்திரன் அடிவானத்தில் உதயமாக வெகு நேர மிருந்தது. சூரியன் மேற்றிசையில் சாய்ந்தானே இல்லையோ இடை நேரத்தில் இருள் அரக்கி நக்ஷத்திரங்களாகிய 'சிம்கி' உடையைத் தரித்துக்கொண்டு தன் ஆட்சியைச் செலுத்தத் தொடங்கி விட்டாள். மணி ஆறரை தான் ஆயிற்று. ஆகவே, மாலையொளி இங்குமங்கும் தலை காட்டிக் கொண்டிருந்தது. இன்னமும் நன்ருக இருட்டி விடுவதற்குள், தாங்கள் ஊர் போய்ச் சேர்ந்துவிட வேண்டு மென்ற நோக்கத் தோடு ஒரு கலியாண கோஷ்டி மரங்கள் அடர்ந்த காட்டு வழியாக வண்டிகளில் சென்று கொண்டிருந்தது. வண்டி களிலிருந்த விளக்கெண்ணெய் விளக்குகள் விர்ரென்று அடிக்கும் காற்றில் இந்த விநாடியோ அடுத்த விநாடியோ நின்று விடுமோ என்ற நிலையில் மினுக்கு மினுக்கு என மின்னிக் கொண்டிருந்தன. வண்டியோட்டிகள் வேகமாக ஓட்டவேண்டுமென்ற நோக்கத்தோடு எவ்வளவு தூரம் சாட்டையா லடித்து வாலைப் பிடித்து முறுக்கி மாடுகளை ஊக்கியும், அவை பையவே நகர்ந்து கொண்டிருந்தன. நடுவண்டியில் மணப்பெண் தோழிகளோடு இருந்தாள். வண்டிகளில் இருந்த ஆண்களும் பெண்களும் கூச்சலிட்டுப் பேசிக் கொண்டிருந்தனர். திடகாத்திர தேகிகளான சில ஆடவர்கள் அவ்வண்டிகளுடன் இரு பக்கமும் நடந்து வந்துகொண் டிருந்தனர். அவர்கள் அடிக்கொரு தரம் கைதட்டியும் "ஹஸ்; ஹஸ்" என்று சிற்றொலி செய்தும்

வண்டியி லிருப்பவர்களைப் பேசாமல் வரும்படிக் குறிப் பிட்டுக் கொண்டு வந்தனர். இதிலிருந்து அவர்கள் அக் காட்டில் கள்வர்களோ கொள்ளைக்காரர்களோ பதுங்கி இருப்பார்கள் எனப் பயப்படுவதாகத் தெரிந்தது. ஆண்க ளாயினும் சிறிது பயந்து பேசாதிருந்தனர். பெண்கள் இவ்வெச்சரிக்கையைப் பொருட் படுத்தவேயில்லை. அவர் கள் பாட்டுக்கு ஏதோ 'சள சள' வென்று பேசிக் கொண்டிருந்தனர்.

வண்டிகள் இரு பக்கமும் மரங்கள் வளர்ந்து அடர்ந் துள்ள ஓரிடத்தை யடைந்தன. அங்கு திடீரென ஒரு பேரொலி கிளம்பியது. ஒரு பெரிய ஆலமரத்தி லிருந்து கிளையைப் பிடித்துத் தாவிக் கொண்டு வந்து நடு வண்டியின் மீது ஒரு உருவம் தொப்பெனக் குதித்தது. வண்டியின் இரு பக்கமும் வந்து கொண்டிருந்தவர்கள், "ஐயோ, திருடன்! திருடன்!! வீரமார்த்தாண்டன்!!!" எனக் குழறிக் கூவிக்கொண்டு நாலா பக்கமும் பயந்து ஓடினர். இச் சப்தத்தைக் கேட்டதுமே வண்டியோட்டிகளும், வண்டி களில் இருந்தவர்களும் வண்டிகளை விட்டுக் குதித்து ஓட லாயினர். பெண்கள் "குய்யோ முறையோ" எனக் கூவியவாறு விழுந்து அடித்துக்கொண்டு ஓடினர். வீரமார்த் தாண்டன் "கலகல"வெனப் பயங்கரமாகச் சிரித்து விட்டு வண்டிமேலிருந்து கீழே குதித்தான்.

வீரமார்த்தாண்டன் நடு வண்டியி லிருந்து குதித்த வேகத்தில் மாடுகள் மருண்டு தாமாகவே வண்டிகளை இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கின. எனவே, அவன் முன் பக்கம் ஓடி முதலில் போகும் எருதை மூக்கணாங் கயிற்றைப் பிடித்து இழுத்து நிறுத்தினான். முன்னே சென்ற எருது நிற்கவே, மற்ற மாடுகளும் தாமாக நின்று

விட்டன. பின்னர், வீரமார்த்தாண்டன் முன் வண்டியை ஆராயலானுன். இரண்டொரு டிரங்கு பெட்டிகளே காணப்பட்டன. அவைகளில் ஒன்றைத் தன் இடையில் செருகி யிருந்த கூரிய கத்தியினுல் பூட்டை நீக்கித் திறந்து பார்த்தான். அதில் சாதாரண துணிமணிகளே இருந்தன. ஆகவே, அவைகளை அலட்சியத்தோடு உதறி எறிந்து விட்டு, மற்ற பெட்டிகளையும் திறக்க மனமின்றி அவன் அங்கிருந்த படியே மற்ற வண்டிகளையும் கண்களால் ஆராய்ந்தான். அந்த கும்பிருட்டில் எல்லாம் வெறும் வெளியாகத் தெரிந் ததே யொழிய, உள்ள பொருள்கள் சரியாகப் புலப்பட வில்லை. கூர்ந்து கவனித்ததில் அவ் வண்டிகளில் ஏதோ படுக்கை ஜமக்காளம் முதலிய இரண்டொரு சில்லரை சாமான்களைத் தவிர, வேறு எதுவுங் காணப்பட வில்லை. எனவே, ஏமாற்றத்தால் அவனது முகம் சுருங்கியது.

வீரமார்த்தாண்டன் தன் சகாக்களோடு இரண்டு நாட்களுக்கு முன் ஜமீந்தார் வீட்டில் கொள்ளை யடிக்கப் போய் எக்க சக்கமாக மாட்டிக் கொண்டு ரமணியின் உதவியால் தப்பிய பிறகு, வெளியே எங்கும் போகாமல் தன்னிருப் பிடத்திலேயே இருந்து வந்தான். அன்று மாலைதான் சிறிது நேரம் வெளியே பொழுது போக்காகச் சுற்றி விட்டு வரலாமென்று மேற்படி காட்டில் ஏதேச்சை யாகத் திரிந்து கொண்டிருந்தவன் நாலைந்து மாட்டுவண்டி கள் சேர்ந்தாற்போல் செல்வதையும், அவற்ருேடு சில ஆட்கள் தொடர்ந்து செல்வதையும் கண்டு விட்டான். ஆகவே, அவ் வண்டிகளை மடக்கினுல் ஏதாகிலும் பொருள் கிடைக்கலாம் என்று அவன் நினைத்தான். அத்துடன் சில நிமிஷ நேரம் தமாஷாகவுங் கழியும்; தன் சோம்பலை முறித்துக் கொள்வதற்கும் ஏதுவாக இருக்கும் என்பது

அவன் கருத்து. அவன் இவ்விதம் நினைத்தானே இல்லையோ, அவனது தோள்கள் பூரித்தன. கைகள் தினவெடுத்தன. அவ் வண்டிகளில் ஏராளமான பேர் இருப்பார்களே! அவர்களை எவ்விதம் விரட்டி யடித்து விட்டுப் பொருள் களைச் சூறையாடுவது என்ற தயக்கமோ பயமோ அவனுக் குச் சிறிதும் உண்டாகவே யில்லை. ஜமீந்தார் ஈட்டிகள் தாங்கிய முரட்டு ஆட்கள் புடைசூழ மரத்தில் கட்டிவிட்டு சாட்டையால் அடிக்க முயலும் போதுகூட அஞ்சாதவனா இச்சிறு கூட்டத்துக்குப் பயப்படுவான்? இந்த மாதிரி எத்தனை மக்கள் கூட்டத்தை அவன் பார்த்திருக்கிறான்? அவர்களை யெல்லாம் தான் ஒருவனே தனியாக நின்று வழிமறித்து அவர்களிடமிருந்த பொருள்களைக் கொள்ளை யடித் திருக்கிறான்? அத்தகையவன் இக் கலியாண கோஷ்டியைத் திரணமாக மதித்ததில் ஆச்சரிய மொன்று மில்லை. நெடுந் தூரத்திலுள்ள ஒரு மணல் மேட்டின் மீது நின்று இவ் வண்டிகளைக் கவனித்த அவன் ஒரே பாய்ச்ச லாகப் பாய்ந்து சிறிது தூரம் நிலத்தில் ஓடி எதிர்ப்பட்ட ஒரு ஆலமரத்தின் விழுதைப் பற்றி ஊஞ்சலாடி மரத்திற்கு மரம் தாவிச் சில நிமிஷங்களுக்குள் கடைசியாக ஒரு விழு தைப் பற்றிக் கொண்டு மேற் குறித்தவாறு ஊங்காரஞ் செய்து கொண்டு நடு வண்டியில் குதித்தான். அப்படி வந்தவனுக்கு ஒன்றுங் கிடைக்க வில்லை யென்றால், ஏமாற்ற மும் ஆத்திரமும் ஏற்படுவது இயற்கைதானே?

ஆகவே, அவன் சிந்தனையோடு வண்டிகளிலிருந்த மக் கள் ஓடிய திக்கைச் சிறிது நேரம் நோக்கி விட்டுத் திரும்பி நடக்கலானான். அதே சமயத்தில் ஆகாயத்தில் சந்திரனின் வருகையை முன்னதாக உலக மக்களுக்கு அறிவிக்க வேண்டியே போலும் நட்சத்திரங்கள் ஒன்றன் பின் ஒன்

ருகத் தோன்ற ஆரம்பித்தன. நட்சத்திரங்களின் உதயத் தால் ஏற்பட்ட சிறு வெளிச்சத்தில் தான் ஆலமரத்தினின் றும் விழுதுகளைப் பிடித்துக் கொண்டு குதித்த வண்டியின் முன் பக்கம் திரையிடப் பட்டிருப்பது மார்த்தாண்டன் கண்களுக்குத் தெரிந்தது. உடனே அவனது மூளை தீவிர மாக வேலை செய்யத் தொடங்கியது. 'மற்ற நான்கு வண்டிகளும் இயற்கையாக இருக்க, அவ் வண்டி மட்டுந் திரையிட் டிருப்பானேன்? ஆகவே, அதில் ஏதோ விசேஷ மிருக்க வேண்டும்; அதில் என்ன இருக்கிற தென்று பார்த்து விடுவோம்' என்று அவன் மனம் எண்ணியது. உடனே அவன் வேகமாக அவ் வண்டியை நோக்கி நடந் தான். அதன் பின் பக்கத்தை யடைந்தான். முன் பக்கம் போலவே பின் புறமும் திரையிடப் பட்டிருந்தது. அவன் வியப்போடு திரைச் சீலையை நீக்கினான். அக்கணமே வண்டியின் உட்புற மிருந்து "ஆ" என்று அபயக் குரல் எழுந்தது.

எதிர்பாராத இத்தீனக் குரலைக் கேட்டு வீரமார்த் தாண்டன் திகைத்து சிறிது பின் வாங்கினான். பிறகு அவன் தன்னைச் சமாளித்துக்கொண்டு இதற்குள் காற்றி னால் பழையபடி மூடிக்கொண்ட திரைச் சீலையை மீண்டும் விலக்கித் தூக்கி வண்டிமீது எறிந்து விட்டு உள்ளே நோக்கினான். ஆ! அவன் கண்ட காட்சி யென்ன! அவன் முகம் ஏன் அவ்வளவு விகசித மடைகிறது? அவனது வாய் ஏன் அவ்விதம் வியப்பொலியால் விரிகிறது? வண்டி யின் முன் கோடியில் இடது மூலையில் சுமார் 16-வயதுள்ள ஒரு மங்கை கால்களை மடக்கிக் கொண்டு உட்கார்ந்திருந் தாள். பயத்தால் அவளது உடம்பு முழுதும் நடுங்கிக் கொண்டிருந்தது. அவளது யௌவனம் ததும்பும் அழகிய

முகம் வெளுத்திருந்தது. அவள் சர்வாலங்கிருத பூஷிதை யாக விளங்கினுள். எனவே, அவள் மணமகளாய் இருக்க வேண்டு மென்பதில் சந்தேகமில்லே. பாவம்! அவளே அவளது தோழிகளும் உறவினரும் நிராதரவாக விட்டுச் சென்றனர். அவள் காதுகளிலும், கழுத்திலும் அணிந் திருந்த வைர நகைகளின் பிரகாசம் வீரமார்த்தாண்டனின் கண்களேப் பறித்தன.

வீரமார்த்தாண்டனுக்கு மணப்பெண்ணேப் பற்றியோ அவளது அழகைப் பற்றியோ கருத்தே செல்லவேயில்லே. அவள் முடிமுதல் அடிவரை அணிந்திருக்கும் ஆபரணங்கள் தாம் அவனது ஆவலேத் தூண்டின. இது பொதுவாக கொள்ளேக் காரர்களுக்குரிய இயற்கைக் குணமன்ருே! எனவே, அவன் ஒருவித மூர்த்தன்னியத்தோடு தனது நீண்ட கரங்களே வண்டியின் உள்ளே நீட்டி அவ்வனிதை யைப் பற்றித் தூக்க முயன்ருன். அவள் இன்னும் பெரும் பீதியோடு, “ஐயோ! ஆ! ஆ!” என்று வாய்விட்டுக் கதறினுள். வீரமார்த்தாண்டன் அவள் கத்துவதைப் பொருட் படுத்த வில்லே. அவளேக் கைகளால் பற்றி யிழுத்து வெளியே கொண்டு வந்தான். அப்பெண்ணின் கூக்குரல் அதிகமாயிற்று. அவள் இவனது பிடியினின்றும் திமிறிக்கொண்டு ஓட முயன்ருள். அவளது பரிதாபக் கூக்குரல் அவ்விருட்டில் ஜன சஞ்சாரமற்ற அக் காட் டையே அதிரச் செய்து மேல் கிளம்பி ஆகாயத்தை ஊடுரு விச் செல்வது போல் முழங்கியது. இப் பெண் போடும் கூக்குரலேக் கேட்டு ஒரு வேளே இங்கிருந்து ஓடிய மக்கள் பக்கத்தூர் கிராம ஜனங்களேத் துணேயாகக் கொண்டு இவளே மீட்க முயலலாம்; ஆதலால் அதற்குள் இவள் அணிந்திருக்கும் ஆபரணங்களே யெல்லாம் கழற்றிக்

கொண்டு விடவேண்டும் என்று எண்ணிய வீரமார்த் தாண்டன் அவளை அப்படியே தூக்கிக்கொண்டு வேகமாக ஓட ஆரம்பித்தான். அவன் ஓட ஓட, அப் பெண்ணின் கூக்குரலும் அதிகமாயிற்று. அவன் நடைபாதை வழியே செல்லாது, குறுக்கு வழியாக ஓடியும் செடி கொடிகளையும், புதர்களையும் தாண்டிக் கொண்டும் ஓடியதால் அப் பெண் ணின் முகத்திலும் உடம்பிலும் பச்சிலைகளும், பூக்களும் உராய்ந்தன. வீரமார்த்தாண்டன் ஓடும் வேகத்தில் தாக் குண்டு சிறு மரங்களின் கிளைகள் பல முறிந்தன. வீர மார்த்தாண்டன் செடி கொடி மரங்களின் ஊடே உராய்ந்து ஓடுவதால் ஏற்படும் சப்தமும், மரக்கிளைகள் முறிந்து விழும் "சட சட" வென்ற சப்தமும், அம் மணப் பெண்ணின் கதறலும் சேர்ந்து அக் காட்டையே அல்லோல கல்லோலப் படச் செய்தது. மரக் கூடுகளில் அடங்கி யிருந்த பறவைக் கூட்டங்கள் பயத்தால் "கீச்கீச்" சென்று கத்திக்கொண்டு நாலா பக்கங்களிலும் ஓடின. ஆந்தைகள் மரக்கிளைகளில் அமர்ந்து பயங்கரமாக விழித்துக்கொண்டு கத்தின. புதர் களிலும், செடி கொடிகளிலும் பம்மியிருந்த விஷ ஜெந்துக் களின் சீறல்கள் கேட்டன. இவைகளெல்லாஞ் சேர்ந்து அப் பெண்ணை இன்னுங் கதிகலங்கச் செய்தன. அவள் மேலும் மேலும் வாய் விட்டுக் கதறினாள். அவளது பரிதாபக் கூக்குரல் வீரமார்த்தாண்டனது மனதை எவ் விதத்திலும் இளகச் செய்ததாகத் தெரியவில்லை. அவன் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டு மென்ற ஒரே குறிக்கோளோடு, அவளைக் கூவ வொட்டா வாறு மார்போடு சேர்த்துக் கட்டிக்கொண்டு ஓடினான். தனது வெறுங் கூச்சலால் ஒரு பயனுமில்லை யென்று அறிந்த அப் பெண் சிறிது ஆத்திரமும் தைரியமும் அடைந்து தனது மெல்லிய கரங்களால் அவனது மார்பிலும் தோள்

களிலும் குத்தியும், கால்களால் உதைத்தும் அவனது பிடியி னின்றும் விடுபட முயன்றுள். இந்தக் குத்தும் அடியும் உதையும் அவனுக்குப் பூச்செண்டால் தட்டுவதுபோல் உற்சாகத்தை யளித்ததே தவிர, கோபத்தை யுண்டு பண்ண வில்லை. அப் பெண்ணின் பேதைமைக்காக அவன் அடிக் கடி அவளை நோக்கி ஏளனமாகச் சிரித்தான். அவன் பல குறுகலான வழிகளிலும் அவளைத் தூக்கிக் கொண்டு அலக்கழித்தான். அப் பெண்மணி தொண்டை கிழிய வாய்விட்டுக் கதறியும், பலவிதமாக அவனைக் குத்தியும் உதைத்தும் கைகால்க ளெல்லாம் சோர்ந்து கடைசியாகச் செயலற்றுப் போனுள். இந்த நிலையில் வீரமார்த்தாண்டன் ஒரு அடர்த்தியான புதரைத் தாண்டுகையில் அதனுள் இருந்த ஒரு நாகப் பாம்பு படமெடுத்துச் சீறி வந்ததைக் கண்டு அவள் மூர்ச்சையாய் விட்டாள். இதற்குள் வீர மார்த்தாண்டன் அவ்விடத்தினின்றும் ஒரே தாவாகத் தாவி அதைக் கடந்து விட்டான். அப் பெண்மணி உணர்விழந்து விட்டதால் கைகால்கள் எல்லாம் துவண்டு விட்டன. தலை தொங்க ஆரம்பித்தது. உடம்பு சில்லிட்டது. ஸ்பரிச உணர்ச்சியால் இம் மாறுதலை யுணர்ந்த வீரமார்த்தாண்டன் ஓடிக்கொண்டே அவளது முகத்தை நோக்கினுன். அப் போதுதான் அவள் மூர்ச்சையுற்று இருக்கிறுள் என்பது அவனுக்குத் தெரிந்தது. வீரமார்த்தாண்டன் அப் பெண் மணியைக் கைப்பற்றி மார்போடு சேர்த்து தூக்கிக் கொண்டு ஓடி வந்த சிறிது நேரத்திற்கு எல்லாம், தனது தேகத்தில் ஏதோ ஒருவித சக்தி ஊடுருவிப் பாய்ந்து தேக மெங்கணும் பரவுவது போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற் பட்டது. அதன்பயனுக, அவனது உள்ளத்திலும் அவனை யறியாமலே ஒருவிதக் கிளர்ச்சி யுண்டாயிற்று. இம்மாறு தலை அவன் ஆரம்பத்தில் உணரவில்லை. போகப் போகத்



.........நீரோடையை நோக்கி அப் பெண்ணைத் தூக்கிச் சென்றான்.
—பக்கம் 129.

தான் இவ் வுணர்ச்சியின் வேகத்தை யறிந்தான். அப் பெண்மணியின் உடம்பு தன்மீது அழுந்த அழுந்த தனது தோள்களும் மார்பும் குழைவதைக் கண்டு அவன் அதிசயித் தான். இம்மாறுதல் அப் பெண்மணியின் ஸ்பரிசத்தால் ஏற் படுவது என்பதை அவன் அறியவில்லை. தான் ஒரு பொரு ளையோ ஒரு மனிதனையோ பற்றினல் இரும்புப்பிடிபோல் அசைய முடியாத நிலையை யுண்டுபண்ணி யிருப்பதை அவன் தன் அநுபவத்தில் பல முறையுங் கண்டிருக்கிருன்; ஆத லால் ஒரு சாதாரண பெண்மணி—அதிலும் ஒரு இளம் பெண்—தன் கட்டுக்கு அடங்காமல் தனது உடம்பையே குழையச் செய்வதை யறிய அவனுக்குப் பெரு வியப்புண் டாயிற்று. மலை போன்ற வன்மை வாய்ந்த தனது திட காத்திர தேகத்தைக் குழையச் செய்யக்கூடியவாறு அப் பெண்மணியிடத்தில் என்ன அற்புத சக்தி இருக்கிறது? என அவன் பலவிதமாகக் கருதினன். அதன்மீதுதான் அவ னுக்கு அப் பெண்ணின்மீது அநுதாப முண்டாயிற்று. அவ ளது மூர்ச்சையைத் தெளிவிக்க வேண்டுமென்ற எண்ண மும் ஏற்பட்டது.

எனவே, அவன் சுற்றுமுற்றும் பார்க்கலானன். சிறிது தூரத்தில் ஒரு சிறு நீரோடை அவனது கண்களுக்குப் புலப் பட்டது. உடனே அவ்விடத்தை நோக்கி அப் பெண்ணைத் தூக்கிச் சென்முன். நீரோடை யருகு சென்றதும், அவன் அவளைப் பசும்புற்றரையில் கிடத்தினன். பிறகு நீரோ டைக்குச் சென்று இரு கைகளிலும் நீரை முகந்து வந்து அப் பெண்ணின் முகத்தில் சிறிது தெளித்துவிட்டு, கொஞ் சம் நீரை அவளது வாயில் ஊற்றினன். பின்னர் அவளது சேலைத் தலைப்பை யெடுத்து முகத்தில் மெள்ள ஒத்தி நீரைத்

துடைத்துவிட்டு அத் தலைப்பினாலேயே முகத்தில் விசிற லானான்.

சிறிது நேரத்திற்கு முன்பே ஆகாயத்தில் தோன்றி யும் மேகங்களால் மறைப்புண்டிருந்த சந்திரன் அவைகளி னின்றும் விடுபட்டுத் தோன்றினான். வளர்பிறைச் சந்திர னின் ஒளி திடீரென்று ஏற்பட்டதும், அப் பெண்ணின் முகத்தை நன்ருகக் கவனிப்பதற்கு வீரமார்த்தாண்டனுக்கு வாய்ப்பு கிடைத்தது. உடனே அவன் பிரமித்துப் போனான். வான வீதியில் தாரா கணங்கள் புடை சூழ வெள்ளிய சந் திரிகைகளைக் கக்கிக்கொண்டு ஒளி வீசும் குளிர்மதிதான் பூமியில் பிரதிபலிக்கிறதோ என்றுகூட அவன் அப் பெண் ணின் அழகிய முகத்தைக் கண்டு அதிசயித்தான். அவளது உருண்டு திரண்ட முகமும், செழுமையும் பொன்னிறமும் வாய்ந்த தேகமும் சோழ நாட்டுப் பெண்களின் சிறந்த அழகுக்கு உதாரணமாக விளங்கியது. அவளுக்குச் செயற்கை யழகை யுண்டுபண்ணச் செய்யப்பட்டிருந்த அலங்காரங்களும், ஆபரணங்களும் அவளது இயற்கை யழ கைக் குறைப்பதற்கு ஏதுவாயிருந்தன வென்றே சொல்ல வேண்டும். பேரழகியான அவளது இளமையின் சிறப்பும் உடலின் வனப்பும் வீரமார்த்தாண்டனின் உள்ளத்தைக் கவர்ந்தன. இதுவரை எதற்கும் எப்பொருளுக்கும் வசப் படாத அவன் காந்தத்தைக் கண்ட இரும்புபோல, அவ்வனி தையின் ஒப்பற்ற அழகில் வசப்பட்டுப் போனான்.

வீரமார்த்தாண்டனுக்கு அவ்வித அநுபவம் இதுவே முதல் தடவையாகும். ஆதலால் அவன் உள்ளிருந்து எழும் உணர்ச்சியின் எழுச்சியால் ஆவேசங் கொண்டு அம் மங் கையை ஆர்வத்தோடு வாரியெடுத்து மார்போடு அணைத்துக் கொண்டான். இதே சமயத்தில் உணர்ச்சி பெற்றெழுந்த

அப் பெண்மணி மெல்ல கண் விழித்துப் பார்த்தாள். வீர மார்த்தாண்டன் தன் முகத்தைக் கூர்த்து கவனித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் அவள் பெரும் பீதி கொண்டு வாய் விட்டு அலறினுள். வீரமார்த்தாண்டன் அவளை இடது கையால் இன்னும் இறுகக் கட்டிக்கொண்டு வலக்கரத்தால் அவளது பவள வாயைப் பொத்தினுன்.

தனது வாயை யடைத்துக் கொல்லத் தான் முயல் கிருன் என்று எண்ணிய அம் மங்கை தன் கைகளால் வாயை மூடி யிருக்கும் அவனது கையை விலக்கி விட்டு, "ஐயோ! என்னைக் கொல்லாதே! ஒன்றுஞ் செய்யாதே!— என் நகைகளை வேண்டுமானுல் எடுத்துக்கொள். நானே கழற்றிக் கொடுத்து விடுகிறேன்.—அவைகளை வாங்கிக் கொண்டு என்னை உயிரோடு விட்டு விட்டால் உனக்குப் புண்ணியமுண்டு.—ஐயா! என்னை விட மாட்டாயா! பெண் பாவம் பொல்லாது..............." என்று அவனை நோக்கிப் பரிதாபமாகக் கூறினுள்.

வீரமார்த்தாண்டன் அப் பெண்மணியினது பேச்சைக் கேட்டு, கலகல வென்று நகைத்தான். "என்னைப் பார்த்தால் உன் கண்களுக்குக் கொலைஞுகவா தோன்று கிறது? நீ அணிந்திருக்கும் நகைகளைக் கவரவேண்டுமானுல், உன்னைக் கொன்றுதான் ஆகவேண்டுமா?.........." என்று கேட்டான்.

அப் பெண்மணி இவ் வார்த்தையைக் கேட்டுத் திகைத்தாள். அவனது இப் பேச்சை அவள் அர்த்தம் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் அவள் மன அச்சத்தோடேயே, "உன் வரவை யறிந்து ஓடிய எனது உறவினர்கள், 'கொள்ளைக்காரன்,' 'வீரமார்த்தாண்டன் வந்து விட்டான்'

என்றெல்லாம் கூவினர்களே!—கள்வர்களும் கொள்ளைக் காரர்களும் பிறர் பொருளைக் கவர வேண்டி சமயம் நேர்ந் தால் கொலை செய்யவும் அஞ்ச மாட்டார்கள் என்று கேட் டிருக்கிறேன்; கதைகளிலும் படித்திருக்கிறேன். ஆத லால் தான், நீ எங்கே என் நகைகளுக்காக என்னைக் கொன்று விட முயல்கிருயோ! என்று பயந்தேன். மற்றப் படி, உன்னைக் கொலைகாரன்.......என்று..............." எனக் கூறிக் கொண்டே வந்தவள், அவனது முகமாறுதலைக் கண்டு தன் பேச்சை நிறுத்தினுள்.

அப் பெண்மணியின் ஒவ்வொரு சொல்லும் வீரமார்த் தாண்டனது நெஞ்சில் அம்பு பாய்வது போல் சுருக்கு சுருக்கு எனத் தைத்தது. அவன் எத்தனையோ கொள்ளை களை நடத்தி யிருக்கிருன்; திருவத்திபுரம் ஜெமீந்தாரிடம் அகப்பட்டுக் கொண்டது போல், பலர் பால் சிக்கிக் கொண்டு எத்தனையோ பேர் வசவுகளைக் கேட்டிருக்கிருன்; மலைபோல் வரும் ஆபத்துகளையும், வண்டி வண்டி யாகக் கிடைக்கும் வசைமாரிகளையும் அவன் சிறிதும் லட்சி யஞ் செய்ததே யில்லை. ஆனுல் அம் மங்கை அவனைக் கொலை செய்பவனென்றும், கொள்ளைக்கார னென்றும் கள்வனென்றும் சுட்டிக் காட்டிப் பேசியதை அவனுல் சகிக்க முடியவில்லை. அதிலும், அவளது வாய்மொழி வாயி லாக, மனித சமூகம் கள்வர்களையும், கொள்ளைக் காரர்களை யும் என்னவிதமாக நினைத்திருக்கிறது என்பதை அறிந்து அவன் சிந்தித்து உணர்ந்து பார்த்தபோது அவன் மனங் கரைந்தது. அவனை யறியாமலே அவனது கண்களிலிருந்து இரண்டு சொட்டு நீர் துளித்தது. அவன் தன்னுடைய தன்மையையும், தான் செய்யும் செயல்களால் ஜன சமூகத் துக்கு விளையும் விபரீதங்களையும் எண்ணிப் பார்ப்பதற்கு

அவனுக்கு இதுவரை அவகாசம் கிடைத்ததில்லே; அதற்கேற்ற சந்தர்ப்பமும் வாய்த்ததில்லே. இப்போது ஒரு இளம் பெண்—அழகிய மங்கை—தன் தன்மையை—தன் செயலேச் சுட்டிக் காட்டிப் பேசியதும், தீய சகவாசத்தால் இதுவரை மேலோங்கி யிருந்த மிருக சுபாவம் அடங்கி, இயற்கை மனித உணர்ச்சி வெளிப்படலாயிற்று. அதனுலேயே இரும்பை யொத்திருந்த அவன் நெஞ்சம் இப்போது வெண்ணெய் போலுருகிக் கண்ணீராக வழிந்தது.

வீரமார்த்தாண்டன் கண் கலங்குவதைக் கண்ட நம் பெண்மணி ஆச்சரியமும் அச்சமும் ஒருங்கே கொண்டவளாய், "ஐயோ, நான் ஏதேனும் தவருகப் பேசி உன் மனத்தைப் புண்படுத்திவிட்டேனு? அப்படியாளுல் என்னே மன்னித்துவிடு. நான் ஒன்றும் அறியாப் பேதைப் பெண். —என்மீது கோபங்கொண்டு ஒன்றும் செய்யாதே!........" என்று அவன் முகத்தை நோக்கிக் கெஞ்சினுள்.

வீரமார்த்தாண்டன் வாய் திறவாது உன்மத்தன் போல் உட்கார்ந்திருந்தான். ஆனுல் அவனது கைகள் மட்டும் அப் பெண்ணேத் தாங்கிப் பிடித்தபடியே இருந்தன. இந்நிலேயில் வீரமார்த்தாண்டனே அவனது சகாக்களோ மற்றவர்களோ கண்டால் ஆச்சரியமடையாமல் இருக்க மாட்டார்கள்.

மீண்டும் அப்பெண்மணி இரக்க மொழிகளால் பேசத் தொடங்கி, "ஐயா, என்ன யோசிக்கிருய்? என்னே என்ன செய்யலா மென்ரு?—ஐயோ! என்னேத் துன்புறுத்த நினேக்கவேண்டாம்.—உனக்கு என்ன வேண்டும்? நான் பூண்டிருக்கும் ஆபரணங்கள் தானே! அவைகளேக் கவர்ந்து கொள்ளத்தானே என்னேத் தூக்கிக் கொண்டுவந்தாய்? இந்தா! (தன் கழுத்திலும் காதுகளிலும் தரித்திருந்த

நகைகளை யெல்லாம் கழற்றி யெடுத்து அவன் முன் வைத்துவிட்டு) இவைகளை நீயே எடுத்துக் கொள். என்னை விட்டு விடு. என்னைக் காணுது என் தாயாரும் சுற்றத்தாரும் கதறுவார்கள். நான் போகிறேன்'' என்று கூறியவண்ணம் அவனது பிடிகளினின்றும் விடுபட்டு ஓடத் தொடங்கினுள். அவளுக்கு இவ்வளவு தைரியமும் சமயோசித புத்தியும் எப்படி யுண்டாயின என்று தெரியவில்லை.

சிந்தனைக் கடலில் அழுந்தித் தன்னை மறந்திருந்த வீர மார்த்தாண்டனுக்கு அப் பெண்மணி அவனிடமிருந்து விடுபட்டு ஓடியது சில விநாடிகள்வரை தெரியவே தெரியாது. அவன் விழித்த கண் விழித்தபடியே இருந்தும், அவள் தன்னை விட்டுவிடும்படி மன்ருடியதும் நகைகளைக் கழற்றி வைத்ததும், கடைசியாக ஓடியதும் ஆகியவற்றை அறிந்து கொள்ளவே யில்லை. அவ்வளவு தூரம் அவனது அறிவு மனப் போராட்டத்தில் லயித்துப் போயிருந்தது. சிறிது நேரம் ஆனதும், அவன் வெளியுலக உணர்வு பெற்று விழித்துப் பார்த்தான். தனது கரங்களில் இருந்த பெண்மணி காணவில்லை யென்று அறிந்தான். அவன் காலடியில் நகைக்குவியல் இருப்பதைக் கண்டான். ஆனுல் இச்சமயம் அவனது மனம் அந்நகைகளைச் சிறிதும் நாடவே யில்லை. எழுந்து சுற்றுமுற்றும் நோக்கினுன். தனக்கு நேர் திக்கில் அப் பெண்மணி தட்டுத் தடுமாறி ஓடிக்கொண் டிருப்பது அவனது கூரிய கண்களுக்குப் புலப்பட்டது. உடனே ஆவேசங் கொண்டவன்போல் ஓடினுன். இரு நிமிடங்களில் இராஜாளி மாடப் புருவைக் கௌவுவது போல் அவளைத் தாவித் தூக்கிக்கொண்டு திரும்பினுன். அப் பெண்மணி இதை எதிர்பார்த்தே ஓடினுளாயினும் வீரமார்த்தாண்டன் அருகில் வந்து தூக்கியபோது அவள் பெரும் பீதி கொண்டு அலறி

ளுள். அக்கதறல் அவ்வனத்தில் எதிரொலியை யுண்டு பண்ணியது.

முன்போலவே வீரமார்த்தாண்டன் அப் பெண் மணியை நீரோடை யருகு கொண்டுவந்தான். ஆனால் இப் போது அவன் அந்நங்கையை ஒரு மணல் மேட்டின் மீது உட்காரவைத்தான். பிறகு அவன் அவளைப் பார்த்து தலையை யாட்டி, "என்னிடமிருந்து தப்பித்து ஓடவா பார்த்தாய்? இந்த இரவில் எங்கு ஓடி என்ன செய்வாய்? என்னிட மிருந்து தப்பிச் சென்றாலும் செடி கொடி மரங்களும் புதர் களும் அடர்ந்த இவ் வனாந்தரத்தில் உலவும் கொடிய மிரு கங்க ளிடையேயும், விஷ ஜந்துக்க ளிடையேயும் இருந்து தப்பிச் செல்ல முடியாது. அவைகளில் எவற்றினு லாயி னும் ஒன்றினால் வீணாக உன் ஆருயிரை இழப்பாய். தங் கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டி உன்னை நிரா தரவாக விட்டுச் சென்ற உன் உறவினர்கள், இந்த இருட் டில் அதுவும் இக் காட்டில் உன்னைத் தேடிக்கொண்டு திரும்பி வருவார்கள் என்று நினைக்கிறாயா, என்ன........?" என்று பேசிக் கொண்டே வந்தவன், திடுமென பேச்சை நிறுத்தி அப் பெண்மணியின் முகத்தைக் கூர்ந்து நோக் கினான்.

அம்மங்கை ஒன்றும் தோன்றாது பரக்கப் பரக்க விழித்துக்கொண் டிருந்தாள். அவளது அழகிய முகம் பயத்தால் வெளுத்துக் காணப் பட்டது.

வீரமார்த்தாண்டன் மீண்டும் பேசலானான். "நான் உன்னை இப்போது என்ன செய்தேன்? என்னைக் கண்டு நீ ஏன் பயப்பட வேண்டும்? ஓடவேண்டும்? நான் என்ன பயங்கர மனிதனாகவா—கோர சொரூப முடையவனாகவா காணப் படுகிறேன்?—நிலவொளியில் தகதகவென மினுக்

கும் நகைகளைக் கொடுத்து என்னை மயக்கிவிட்டு ஓடி விடலா மென்றல்லவா நினைத்தாய்? நீ மகா சமர்த்திதான்..........." என்றான்.

இப்பேச்சு அப் பெண்மணிக்கு ஆத்திரத்தை யுண்டு பண்ணியது. அந்த ஆத்திரத்தில் பயம் இருந்த இடந் தெரியாமல் மறைந்து போய்விட்டது. எனவே, அவள் வீர மார்த்தாண்டனை நிமிர்ந்து நோக்கி, "நீ என்ன செய்தாய் என்று கேட்கிறாய்? எனக்கு நீ என்ன செய்யவில்லை. திருமணத்துக்கு உறவின் முறையாரோடு வண்டியில் போய்க் கொண்டிருந்த என்னைத் தனியே தூக்கிக் கொண்டு வந்ததற்கு என்ன அர்த்தம்? இதைவிட நீ எனக்கு என்ன தீங்கு புரிய வேண்டும்? இக் கொடிய செயலைச் செய்த கிராதகனான உன்னைக் கண்டு பயப்படாது வேறெவ்விதமிருக்க முடியும்?—நான் அணிந்திருக்கும் நகைகளைக் கவர்வதற்காகத் தானே என்னை அலற அலறத் தூக்கிக் கொண்டு வந்தாய்? அப்படியிருக்க, நகைகளைக் கொடுத்து உன்னை மயக்கி விடப் பார்க்கிறேன் என்கிறாயே? இதென்ன அறிவற்ற பேச்சு!" என்று சீற்றத்துடன் பேசினாள்.

வீரமார்த்தாண்டன் புன்சிரிப்புடன் தலையை யசைத்து, "நீ கோபமாகப் பேசுவதும் அழகாய்த்தா னிருக்கிறது! ஆனால், மலர்போன்ற உன் மெல்லிய உடம்பை வீணாக அலட்டிக் கொள்ளாதே! இப்போது கூறியது முற்றும் உண்மை. நான் முதலில் உன்னை வண்டியில் கண்ட போது உன் நகைகளைக் கண்டே மயங்கினேன். அவைகளைக் கவர்வதற்கே உன்னை இவ்வளவு தூரம் தூக்கிவந்தேன். ஆனால் இப்போது அவ்வித எண்ணமில்லை. உலகையே வெண்மை மயமாக்கிப் பிரகாசிக்கும் சந்திர னொளி

யில் ஒப்பற்ற பேரழகு வாய்ந்த உனது மதிமுகத்தைப் பார்த்த பிறகு மனம் அதில் லயித்துப்போய் விட்டது. உன்னைக் கொள்ளையடிக்க வந்த நீ என்னைக் கொள்ளை யடித்து விட்டாய். என்னைக் கொள்ளைக்கார னென்றும், கள்வனென்றும் இழித்துக் கூறினாயே! உன்னைக் கண்ட மாத்திரத்தில் என் உள்ளத்தைக் கவர்ந்து விட்ட உன்னை ஏன் நான் கொள்ளைக்காரி யென்றும், கள்ளி யென்றும் கூறக் கூடாது?....” என்று தனது தற்போதைய உண்மை நிலையைக் கூறும் முறையில் ஹாஸ்யமாகப் பேசினான்.

நம் பெண்மணிக்கு இருந்த ஆத்திரத்தில் அவனது பேச்சின் உட் பொருள் விளங்கியதோ என்னவோ! அவள் மேலும் ஆத்திரத்துடனே, “என் நகைகளைக் கவர எண்ண மில்லை யெனில், என்னை வேறு என்ன செய்ய உத்தேசித் திருக்கிறாய்?....அதைக் கூறி விடு. அதற்கேற்ப என் மன தைத் திடப்படுத்திக் கொள்கிறேன். அதை விட்டு, என் னைக் கொள்ளைக்காரி யென்றும், கள்ளியென்றும் ஏதேதோ அர்த்தமற்ற வார்த்தைகளை அளக்கிறாயே! நான் என்ன உன்னைப்போல் பிறர் அஞ்சி நடுங்கும்படியாகவா—வெறுக் கும்படியாகவா இருக்கிறேன்; நீ என்னைக் கொள்ளைக்காரி யென்று வருணிப்பதற்கு?...........” என்று கேட்டாள்.

வீரமார்த்தாண்டன், “நான் மட்டு மென்ன? பிறர் கண்டு நடுங்கும் படியாகவா —வெறுக்கும் படியாகவா இருக்கிறேன்?” என்று வினவினான்.

“சந்தேகமென்ன? தூரத்திலேயே உன்னைக் கண்ட தும், உன் குரலைக் கேட்டதுமே மக்கள் அஞ்சியோடுகிறார் களே! உன் பெயரைக் கேட்டதும் வெளியே கூற அஞ்சினாலும், மனதிலாயினும் வெறுக்கிறார்களே” என்று சிறிது தைரியத்தோடேயே எதிர்த்துக் கூறினாள்.

வீரமார்த்தாண்டன், "மனித சமூகத்தில் பிறந்துள்ள என்னைக் கண்டு மக்கள் பயப்படுவானேன்? பீதி கொண்டு ஓடுவானேன்! நான் என்ன பூதமா? பேயா? நான் அவர்களைப் போல் மனிதனில்லையா? அல்லது அவர்கள் கண்களுக்கு நான் மனிதனாகத் தோன்றவில்லையா! மக்கள் என்னைக் கண்டு நடுங்குவதற்கு—வெறுப்பதற்குக் காரணமென்ன?" என்று கேட்டான். இப்போது அவனது குரல் கம்மியிருந்தது. இதிலிருந்து அவன் மனதிலெழுந்த துக்கத்தைக் தாங்க மாட்டாது பேசுகிறான் என்று தெரிந்தது.

அப்பெண்மணி ஏளனமாக, "இதற்குக் காரணம் தெரியவில்லையா? உன் புத்தியை நீ இழந்து விட்டாயா என்ன! நீ ஒரு பூதமென்றோ பேயென்றோ அரக்கனென்றோ எண்ணி யாரும் பயப்படவில்லை. எங்களைப் போல் மனிதனாக இருந்தாலும், பேய் பூதம் அரக்கர்களைக் காட்டிலும் கொடிய தன்மை உன்னிடத்தில் இருப்பதால் தான் உன்னைக் கண்டு நடுங்குகிறார்கள். வழி போக்கர்களையும் ஊரார்களையும் வழிமறித்து அவர்களை ஹிம்சை செய்து அவர்களிட மிருக்கும் பொருள்களைக் கொள்ளையடிப்பது கொடிய காரியமில்லையா! இதைவிட வேறென்ன வேண்டும் உன்னைக் கண்டு பயப்படுவதற்கு? கள்வனாகிய நீ மனித சமூகத்துக்கே பெரும் பகைவ னல்லவா? பயங்கர மனித னல்லவா? மனித சமூகத்துக்கே சனியன்களாகவுள்ள உன் போன்ற கொள்ளைக்காரர்கள் ஒழிந்தால் தான் நாடு க்ஷேமமடையும்? நான் மட்டும் இவ்வுலகைக் கட்டியாளும் அரசியாக விருந்தால், மனித சமூகமாகிய பசிய பயிர்களிடையே அவைகளுட னிருந்தே அழிக்கும் கொடிய புற்களைப் போல விருக்கும் உங்கள் பூண்டையே வேரோடு

களைந்தெறிந்து விட்டுத் தான் மறு வேலை பார்ப்பேன்" என்று வீராவேசத்தோடு பேசினாள்.

இவளது வீர வுரையைக் கேட்டு வீரமார்த்தாண்டன் திகைத்துப் போனான். நாட்டுப் புறத்திலுள்ள ஒரு பெண்ணுக்கு இவ்வளவு நெஞ்சுரமும் வீராவேசமும் உண்டா என்று அதிசயித்தான். பிறகு அவன் "அப்படியா! அவ்வளவு கொடியவர்களா நாங்கள்? நாங்கள் செய்யும் கொள்ளைகளா மக்கள் வெறுப்புக்கும் பயத்துக்கும் காரணமா யிருக்கின்றன? ................" எனச் சிறிது ஆலோசனையோடேயே கேட்டான்.

"அதில் என்ன ஐயம்?" என்றாள்.

வீரமார்த்தாண்டன் "ஹூம்" என்று கூறிப் பெருமூச்சு எறிந்து விட்டுப் பிறகு, "அதிருக்கட்டும்; நீ யார்? எங்கிருப்பது? உறவினர்களோடு இப்போது எங்கு போகிறாய்?" என்று கேள்விகளை யடுக்கிக் கொண்டே போனான்.

"எங்கள் ஊர் பெண்ணுகடம்; அந்த ஊரில் என் தகப்பனார் வேதாசல முதலியார் தான் பெரிய மிராசுதார். முனிசீப்பாகவு மிருந்தார். ஆனால் அவர் நாலைந்து வருஷத்துக்கு முன் காலஞ்சென்று விட்டார். ஆதலால், நானும் என் தாயாரும் தாய் மாமன் ஆதரவில் இருந்து வருகிறோம். எங்கள் சொத்தை யெல்லாம் அவர் தான் மேற்பார்வை செய்து வருகிறார்; என் பெற்றோருக்கு நான் ஒரே பெண்; என் பெயர் பிரஹதாம்பாள் என்று கூறுவார்கள். நாங்கள் விவாகத்தை முன்னிட்டு திருவத்திபுரம் போகிறோம்" என்று அவள் தன்னைப் பற்றி விவரமாகக் கூறினாள்.

"யாருக்குக் கலியாணம்? திருவத்திபுரத்தில் யார் வீட்டில் நடக்கிறது?" என்று ஆவலோடு கேட்டான்.

பிரஹதாம்பாள், "எனக்குத்தான். திருவத்திபுரம் ஜமீன்தார் தெய்வசிகாமணி முதலியார் மாளிகையில் நடக்கிறது" என்று கூறினாள்.

"யாருக்கு உனக்கா ?....உனக்கா ?" என்று பெருவியப்போடு வினவினான் வீரமார்த்தாண்டன்.

"ஆம்; எனக்குத்தான். அதில் என்ன உனக்கு இவ்வளவு ஆச்சரியம்? நான் கலியாணஞ் செய்து கொள்ளக் கூடிய நிலையில்—தகுதியில்—இல்லை என்று நீ கருதுகிறாயா? அல்லது நான் கலியாணமே செய்து கொள்ளக் கூடாது என்பது உன் எண்ணமா ?..............." என்று பிரஹதாம்பாள் கேட்டாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை..........." என்று கூறி வீரமார்த்தாண்டன் சிறிது நேரம் மௌனஞ் சாதித்தான். அவன் மனதில் மீண்டும் ஒரு பெரும் புரட்சி யேற்பட்டு வேலை செய்யலாயிற்று. பிறகு அவன் மனக் கிளர்ச்சியை ஒருவாறு அடக்கிக் கொண்டு, "ஆமாம்; மாப்பிள்ளை யாரென்று சொன்னாய் ?" என்று மெதுவாக வினவினான். தனக்கு விவாகம் என்று சொன்னதும் இவன் ஏன் இவ்விதம் படபடப்பை யடையவேண்டுமென்று ஆச்சரியத்தில் மூழ்கியிருந்த பிரஹதாம்பாள் இதைக் கேட்டதும் திடுக்கிட்டு அவனை நிமிர்ந்து பார்த்து, "அது தான் அந்த ஜமீன்தாரது ஏக புதல்வன்" என்று முகச்சுளிப்போடு கூறினாள்.

மீண்டும் அவன் விதிர்ப்புற்று, "என்ன ! அந்த ஜமீன்தார் குமாரனுக்கா? தறுதலை; தூர்த்தன்; பெருங்குடியன் ஆகிய அவனுக்கா உன்னை விவாகஞ் செய்து தரப் போகிறார்கள் ? அட அநியாயமே!..........." என்று கூறிய வண்ணம் அப்படி உட்கார்ந்து விட்டான்.

இச்சமயம் பிரஹதாம்பாளின் உடம்பு நடுக்கத்தால் வெட வெட வென ஆடியது. அவள் தன் நிலைமையைச் சமாளிக்க சிறிது நேரமாயிற்று. பின்னர் அவள், "அவனது தன்மை இன்னதென என் காதுக்கும் எட்டியது. அவன் யோக்யதை முழுதும் நான் அறிந்து தான் இருக்கிறேன். பல தீய குணங்களுக்கும் இருப்பிடமாய் விளங்கும் அந்த அயோக்கியனை விவாகஞ் செய்துகொள்ள எனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லைதான். இருப்பினும், நான் என்ன செய்ய முடியும்? எனது விருப்பமின்மையை-ஆட்சேபத்தை —என் தாய்க்கு—ஏன்? மற்ற உறவினர்களுக்கும்—தெரிவிக்கலாம்; உணரும்படி செய்யலாம். அதனால் பலனொன்றும் ஏற்படுமென்று நான் கருதவில்லை. நான் முரண்டினால் என் அருமைத் தாய்க்குத் தான் துன்பம் ஏற்படும். ஏனென்றால், அவர்கள் தற்போதிருக்கும் நிலையில் சுயேச்சையாக ஒன்றுஞ் செய்ய முடியாது. என் அம்மான் என்ன கூறுகிறாரோ அதன்படித்தான் அவர்கள் நடக்கவேண்டி யிருக்கிறது. என் அம்மான் தான் இவ் விவாக ஏற்பாட்டைச் செய்திருக்கிறார். "நமது அந்தஸ்துக்கு மேற்பட்ட பெரிய இடத்து சம்பந்தம்; இது நம்மைப் போன்றவர்களுக்குச் சாமானியமாகக் கிடைக்கக் கூடியதில்லை; பிரஹதாள் ஜமீன்தார் பிள்ளைக்கு வாழ்க்கைப் பட்டு விட்டாளானால், உச்சி முதல் உள்ளங்கால் வரையில் வைர மயமாய் பூணாரம் பூட்டிக் கொண்டு சந்தோஷமாய் வாழ்வாள். பிறகு, ஜமீன்தாரினியாகவும் ஆகிவிடக் கூடும்; இதில் நமக்கெல்லாம் கௌரவமும் மகிழ்ச்சியுமல்லவா"? என்றெல்லாம் வருணித்து என் தாயின் மனதைக் கரைத்து விட்டார். அவரது விருப்பத்துக்கு விரோதமாகப் போவதற்கில்லை யாதலால் என் தாயும் ஒப்புக் கொண்டார். இவ்வித ஏற்பாட்டை மறுப்பேனானால், என் அம்மான்,

மற்ற உறவினர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு என் தாய்க்கு யாதொரு விதத்திலும் உதவியா யில்லாமல் பலவகையிலும் துன்புறுத்துவார்கள். இதனுல் அவர்கள் மனம் மிகவும் வருந்தும். இதெல்லாம் எனக்கு நன்கு தெரியும். ஆகவே தான், இவ்விவாகத்தில் எனக்குச் சிறிதும் விருப்பமில்லாதிருந்தும் என் மன வேதனையை யெல்லாம் ஒருவாறு அடக்கிக்கொண்டு வாளா விருக்கிறேன். எனக்காகவே உயிர்வாழும் என் தாய்க்காக—எனது நன்மையையே தனக்கு இன்பமாகக் கருதும் என் அருமந்த அன்னைக்காக—நான் எனது எதிர்கால வாழ்க்கையை மட்டுமல்ல ; என் இன்னுயிரையும் தியாகஞ் செய்யக் காத்திருக்கிறேன்.—ஆனுல் நான் என் தாயின் பொருட்டு இவ்வக்கிரம விவாக ஏற்பாட்டுக்கு இசைந்து என் வாழ்க்கையைப் பலி கொடுக்கத் தயாராக இருந்தாலும், ஆண்டவனுக்கு இவ்விதம் நடைபெறுவது இஷ்டமில்லை போலும். ஆதலால் தான், நாளை நடைபெறும் விவாக முகூர்த்தத்திற்கு இன்றிரவு போகும் எங்களை வழி மறித்து கொள்ளையிடவும்—என்னை என் உறவினர்களிட மிருந்து பிரித்து அலக்கழிக்கவும்—உன்னைத் தூண்டி யிருக்கிருன் என்று நான் கருதுகிறேன். இவ்வித எதிர்பாரா சம்பவத்தால், இக் கலியாணம் தடை படுமானுல் என்னை விட சந்தோஷப் படுபவர்கள் வேறு யார் இருக்க முடியும்? ஆனுல் இச் சம்பவத்தின் எதிரொலி—பின் விளைவு—எவ்வாறு ஆகுமோ என்று தான் நான் அஞ்சுகிறேன்" என்று உருக்கமாகப் பேசினுள்.

இதுவரை தலைகுனிந்து ஆழ்ந்த யோசனையி லிருந்த வீரமார்த்தாண்டன் உடனே நிமிர்ந்து பிரஹதாம்பாளை ஏறிட்டுப் பார்த்து, "உண்மையாக உனக்கு இவ்விவாக

ஏற்பாட்டில் விருப்ப மில்லையா? உண்மையாகவா நீ இதைச் சொல்லுகிறாய்?........" என்று படபடப்பாகக் கேட்டான்.

"என் அவ்வளவு சந்தேகம்? உண்மையாகவே தான் சொல்கிறேன். நான் இப்போது கூறிய தனைத்தும் உண்மையே. என் மனதில் உள்ளவைகளையே திறந்து கூறினேன்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

"அப்படியானால் நான் உன்னை ஒன்று கேட்கலாமா? அதற்கு அநுமதிப்பாயா?"

"அது என்ன?................"

"என்னைக் கலியாணஞ் செய்து கொள்ள நீ விரும்புவாயா?—"

இச்சமயம் அவனது வாய் குழறியது. நெஞ்சந் தழு தழுத்தது.

"என்ன! என்ன!! உன்னை விவாகஞ் செய்துகொள்ள எனக்கு விருப்பமா வென்று கேட்கிறாய்? உன்னையா—கொள்ளைக்காரனாகிய உன்னையா—மக்களுக்குத் துன்பம் விளைப்பதையே தொழிலாகக் கொண்ட உன்னையா நான் கலியாணஞ் செய்து கொள்ள வேண்டும்?...........ஊர் பேர் தெரியாத உன்னை—பஞ்சமா பாதகங்களையும் அஞ்சாது செய்யும் கொடியவனாகிய உன்னைக் கலியாணஞ் செய்து கொள்வதைக் காட்டிலும், ஒரு பாழுங் கிணற்றில் விழுந்து சாகலாமே!" என்று உள்ளம் பதறப் பேசினாள். பிரஹதாம்பாள் கூறிய வார்த்தை யொவ்வொன்றும் கூரிய அம்பு பாய்வது போல் அவன் நெஞ்சைப் புண்ணாக்கின. அதனால் ஏற்பட்ட உணர்ச்சி அவனது உடம்பைப் பட படக்கச் செய்தது. வேறொருவர் இவ்விதம் அவனை இழித்

துக் கூறி யிருப்பின், அவளை ஒரே அறையில் எமலோகம் அனுப்பி யிருப்பான். ஆனால் அவன் உண்மையிலேயே பிரஹதாம்பாள் காதலில் கட்டுண் டிருந்தானதால், அவளை ஒன்றுஞ் செய்தற்கு அவன் மனம் இடந்தரவில்லை. மேலும் அவள் கூறிய மொழிகள் பெரும்பாலும் அவனது நிலைமையையே பிரதிபலித்துக் காட்டுகின்றமையால், தன்னிடம் உள்ளவற்றைக் கூறுவதில் அவளை நொந்து கொள்வதில் பயனென்ன என்று அவன் மனம் அவனுக்கு அறிவுறுத்தியது. ஆயினும், உள்ளிருந் தெழுந்த உணர்ச்சி தாங்க மாட்டாது மனம் வெதும்பினான். கண்களில் நீர் துளும்பியது. அந் நிலையில் அவன் வாய் பேசலாயிற்று. "பிரஹதா! நான் கொள்ளைக்கார னென்று பயப்படுகிறாய். நீ கூறுகிறபடி, நான் கொள்ளைகாரனா யிருந்தது உண்மைதான். ஆனால் இப்போது கொள்ளைக்காரனில்லை. சில நிமிடங்களுக்கு முன்பே அவன் மாண்டு விட்டான். இப்போது இருப்பது வெறும் வீரமார்த்தாண்டன் தான். எனக்குப் புனர்ஜன்மத்தை—புத்துயிரை—உண்டுபண்ணியது நீயே! எனது இம் மாற்றத்துக்கு நீயே காரணமா யிருப்பதால் தான், நான் உன்னை விரும்புகிறேன்.—நீ நினைக்கலாம். நான் ஏதோ உனது பேரழகைக் கண்டு மதிமயங்கித் தலை கிறுகிறுத்துப் போய் வாயில் வந்தவாறு பிதற்றுகிறே னென்று. அவ்வாறு நீ கருதுவாயின் அது தவறு எனக் கூற விரும்புகிறேன். என்னை உன் வசப்படுத்தியது—உன் அடிமையாகச் செய்தது—உனது ஒப்பற்ற பேரழகு மட்டு மன்று; உனது உயரிய குணங்களும், நுண்ணறிவும், சமயோசித புத்தியுமே என் உள்ளத்தை முக்கியமாகக் கவர்வதற்கு ஏதுவாக இருந்தன என்று நான் கூறினால், அதை நீ நம்பவேண்டும்.—நான் இதுவரை கொள்ளைக்காரனாய் இருந்த போது கூட, நீ

கூறுவது போல் பஞ்சமா பாதகங்களை அஞ்சாது செய்யக் கூடிய கொடியவனு யில்லை என்பதை நீ அறியவேண்டும். மற்றக் கொள்ளைக்காரர்களுக்கும் எனக்கும் மிகுந்த வித்தியாச முண்டு. நான் முன்னமேயே கூறி யிருக்கி றேன்; பணக்காரர்களையும், ஜமீன்தார் முதலியவர்களையுங் கொள்ளை யடிப்பதைத் தவிர, ஏழை எளியவர்களையும், பெண் களையும் வழிமறித்து ஒன்றும் கொள்ளையிடுவதும், துன் புறுத்துவது மில்லையென்று............"

பிரஹதாம்பாள் இடைமறித்து, "என்னை வழிமறித்து தூக்கிவந்து இதோ துன்புறுத்துகிருயே! நான் உன் கண் களுக்குப் பெண்ணுகத் தோன்றவில்லை போலும்! அத்து டன் நடுத்தர நிலையிலுள்ள எனது உறவினர்களும் பெரிய பணக்கார கோஷ்டியாக உனக்குப் புலப்பட்டார்களோ? —இதிலிருந்து நீ பேசுவதனைத்தும் பொய்யென்று ஏற்படு கிறதே!" என்று கூறினுள்.

"தூரத்தி லிருந்து உங்கள் வண்டிகளைப் பார்க்கும் போது, ஏதோ பணக்கார கோஷ்டி தான் போகிறதென்ற எண்ணத்தோடு தான் வழிமறித்தேன். இல்லாவிடில் உண்மையாக உங்களை—அதுவும் கலியாண கோஷ்டி என்று தெரிந்தால் வழி மறித்தே இருந்திருக்க மாட்டேன். ஆனுல் உன்னை—பெண்ணுகிய உன்னை—க் கண்டு தூக்கி வந்த தென்னமோ, எனது பிரதிக்ஞைக்கு மாருனது தான்; என் வாழ்க்கையில் இதுவரை நடை பெருதது.—என்னை யறியாமலே இக் காரியம் நடந்திருக்கிறது; ஆதலால் இதை நான் விதிவசமென்று தான் கூறுவேன். இவ்விதம் நிகழாவிடில் நான் இவ்வித மனமாறுதலை யடைந்திருக்க முடியுமா?—நீ என் வாழ்விலேயே ஒரு பெருமாறுதலை யுண்டு பண்ணி விட்டாய்; என்னைப் புனிதனுக்கி விட்டாய்

நீ மட்டும் என்னை ஏற்றுக்கொள்வாயாயின்—என் காதலை அங்கீகரிப்பாயாயின்—நான் இன்றே கிருதார்த்தனாகி விடுவேன். நான் வாழ்வதும், கெடுவதும் உன் வசத்தில் தான் இருக்கிறது. இனி நான் உன் அடிமை. நீ எவ்வழியில் விடுகிறாயோ அதன்படி நடக்கக் காத்திருக்கிறேன்.—பிரஹதா! என்னை ஏற்றுக்கொள்; ஏற்றுக்கொள். இல்லையேல் உன் முன்னிலேயே உயிர் விடுவேன் என்பது நிச்சயம்................'' என்று கதறினான்.

பிரஹதாம்பாள் பிரமித்துப் போய் விட்டாள்.

பிரஹதாம்பாள் பொற் பதுமை போல் செயலின்றி யமர்ந்திருந்தாள்; ஆயினும் அவளது மனத்திலுண்டான உணர்ச்சிகளைச் சொல்லத் தரமன்று. அவள் உள்ளக் கிளர்ச்சியைத் தாங்கமாட்டாது பொருமினாள். உடம்பெல்லாம் வியர்வை யரும்பி வழிந்தது. சில விநாடிகள் இந்நிலையிலேயே இருந்தாள். பிறகு, அவள் வீரமார்த்தாண்டனை நிமிர்ந்து நோக்கி அவனது முகத்தை யாராய்ந்தாள். வீரமார்த்தாண்டனின் அச்சமய நிலைமை, செல்வந்தன் ஒருவன் முன்னிலையில் யாசித்து நிற்கும் பிச்சைக்காரனின் நிலையைப் பெரிதும் ஒத்திருந்தது. வீரமே யுருவா யமைந்து விளங்கிய அவன் முகத்தில் இப்போது ஏக்கமும் துக்கமும் குடி கொண்டிருந்தது. அவனது இந்நிலையைக் கண்டு பிரஹதாம்பாள் மனம் இளகிவிட்டது. அவளை யறியாமலே அவளது கருவிழிகளில் நீர் ததும்பிக் கண் பார்வையை மறைத்தது.

“ஐயா! உமது வார்த்தைகள் என்னைப் பிரமிப்படையச் செய்திருக்கின்றன. கண்ணைக் கட்டி காட்டில் விட்ட மாதிரியாக இருக்கிறது. எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. உம்முடைய வேண்டுகோளுக்கு என்ன விதமான

பதிலளிப்பதென்றே விளங்கவில்லை................................."
என்று கூறி அவள் நிறுத்தினுள்.

வீரமார்த்தாண்டன் அவள் வாயிலிருந்து வரும் மொழிகள் ஒவ்வொன்றையும் ஊக்கமாகக் கேட்டுக் கொண்டே வந்தானுதலால், அவள் பேச்சு தடைப்பட்டதும் அவளைக் கூர்ந்து நோக்கினுன். அப்பார்வை பிரஹதாம்பாளின் இருதயத்தை ஊடுருவிச் செல்வதேபோ லிருந்தது. அவள் பேசாமல் அமர்ந்திருக்கவே, மார்த்தாண்டன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். இதற்குள் அவள் மீண்டும் பேசத்தொடங்கி, "ஐயா! நீர் கூறிய மொழிகள் அனைத்தும் மனப் பூர்வமாகக் கூறப்பட்டதா? அல்லது, கொள்ளைக்காரர்கள் மக்கள் மனத்தை மயக்கித் தாங்கள் விரும்பும் பொருளைச் சூறையாடுவதற்குக் கையாளும் உபாயங்களிலொன்ரு? என்போன்ற பேதைப் பெண்கள் மனத்தைப் பேதுறச் செய்து வசப்படுத்துவதற்கு உபயோகிக்கும் சாகஸ மொழிகள் என்பதா? எது என்று என்னுல் நிர்ணயிக்க முடியவில்லை. உமது பேச்சை நான் எவ்வாறு நம்புவது?..........." என்று கூறிக்கொண்டே போனுள்.

வீரமார்த்தாண்டன் இதைக் கேட்டதும் துள்ளிக் குதித்து, "இன்னுமா என் பேச்சை நம்பவில்லை? இவ்வளவு தூரம் உள்ளத்தைத் திறந்து பேசியும் என் மொழிகளில் உனக்கு நம்பிக்கை யேற்படவில்லை யென்ருல் ...........?... பிரஹதா? நான் ஒன்று சொல்கிறேன். நீ கூறுகிறபடி, நான் உன்னை என் வசப்படுத்த வேண்டுமென்று எண்ணுவேனுனல், அதற்குச் சாகஸ மொழியைக் கூற வேண்டியதில்லை. அல்லது வேறெவ்வித சாதாரண உபாயங்களையும் உபயோகப்படுத்த வேண்டிய அவசியமில்லை.—நீ இப்போது நிராதரவாய் என் வசத்தில் இருக்கிருய். ஜன நடமாட்ட

மற்ற இவ்வனத்தில்—அதுவும் இந் நள்ளிரவில்—நான் உன்னை என்ன வேண்டுமானாலுஞ் செய்யலாம். என்னைத் தடுப்பார் யாருமில்லை. இந்நிலையில், நான் உன்னிடம் பலாத்கார முறையைக் கைக்கொண்டு, என் இச்சையை வெகு எளிதில் பூர்த்தி செய்து கொள்ளலாம். அதற்காக உன்னை இவ்விதங் கெஞ்சவேண்டிய தில்லை. இதை நீ சிறிது யோசித்துப் பார்க்கவேண்டும். நான் பழைய கொள்ளைக்காரனாக இருந்திருப்பேனாயின், அவ்விதந்தான் கட்டாயஞ் செய்திருப்பேன். ஆனால், நான் உண்மைக் காதலுக்கு அடிமைப்பட்டு விட்டேன்; ஆதலால்தான், உன்னிடம் இப்போது காதல் பிச்சை கேட்டு நிற்கிறேன். ..............." என்று உணர்ச்சி ததும்ப பேசலானான்.

பிரஹதாம்பாள் மனத்தில் வீரமார்த்தாண்டனது இவ் வாசகங்கள் நன்கு பதிந்து விட்டன. ஆதலால், அவனது நிலைமையை இப்போது உணர்ந்து கொண்டாள். எனவே அவள் இடைமறித்து, "சரி; சரி; ஐயா! உமது உண்மை வாசகங்கள் என்னை ஒருவாறு தெளிவித்திருக்கின்றன. —ஆயினும், உமது வேண்டுகோளுக்குத் தக்க பதில் சொல்ல—அதாவது என் நிலையைச் சிந்தித்துப் பார்த்துக் கொள்ள—எனக்கு சிறிது அவகாசங் கொடுக்கவேண்டும். கிணற்று நீரை வெள்ளம் ஒன்றும் அடித்துக்கொண்டு போய்விடாது. நீர் இவ்விஷயத்தில் சற்று பொறுமை காட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.-நீர் எனக்கு இப்போது ஒன்று செய்யவேண்டும்.—எனது உற வின ரெல்லாம் இந்நேரம் எங்கள் ஊர் திரும்பி யிருப்பார் களென்று நினைக்கிறேன். என் கதி என்னாயிற்றோ என்று கருதி மற்றெல்லோரைக் காட்டிலும் என் தாய்தான் மிக வும் வருந்துவாள். என் பிரிவு அவளுக்குச் சகிக்க முடி

யாத துயரத்தைத் தந்திருக்கும் என்பது நிச்சயம். ஆத லால், நீர் தயவு செய்து என்னைக் கொண்டுபோய் என்னு டைய வீட்டில் விட்டு விடுவீரானால், உமக்கு மிகவும் புண்ணியமாயிருக்கும்.—நான் அங்கு போனதும் உம்மை மறந்து விடுவேனென்று நினைக்க வேண்டாம். நீர் கூறிய மொழிகளைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டு தானிருப்பேன். எனது முடிவான கருத்தை இன்னும் மூன்று நாட்களுக் குள் உமக்குக் கூறுகிறேன். இன்றைய மூன்றாம்நாள் மாலை எனது வீட்டுப் பின்புறத்திலுள்ள சோலையில் என்னை வந்து நீர் சந்திக்க வேண்டும். அப்போது என் மனம் உமது காதலை நாடுவதும் நாடாததும் தெரிந்துகொள்ளலாம். —ஏதோ நான் உன்னிடமிருந்து தப்பித்துச் செல்வதற்கு இவ்விதமெல்லாங் கூறுகிறேன் என்று நீர் சந்தேகிக்கக் கூடாது. பேதைப் பெண்ணேயாயினும் நான் அவ்விதக் கோழைப்பெண்ணல்லள் என்பதை நீர் அறிய வேண்டும். நான் அவ்விதம் வஞ்சகமாகப் பேசி உன்னிட மிருந்து தப் பிச் சென்று உயிர் வாழ்வதைவிட, இங்கேயே உன்னால் என் உயிர் பலியாக்கப்படுவதையே பெரிதும் விரும்பு வேன்.—மக்களிடையே அந்நியோந்நியமாக இருந்து நீர் வாழாமையால், உமக்கு ஜனசமூகத்தின் நிலை—அதிலும் நமது சமூகத்தின் நிலை தெரியாது. நமது சமூகக் கட்டுப்பாடுகளையும், சட்ட திட்டங்களையும் நீர் அறியமாட் டீர்.— பிறனொருவனால்— அதுவும் திருடன் அல்லது கொள்ளைக்காரன் ஒருவனால்—தக்க பருவம் வாய்ந்த ஒரு மங்கை, அம் மங்கையின் சம்மதம் பெற்றோ அல்லது பலாத்காரமாகவோ தூக்கிச் செல்லப்படுவாளானால், அவள் அவனிடமிருந்து மீண்டு வந்து விட்டாலும், எவ்விதக் களங்கமுமின்றித் தப்பித்துக் கொண்டு வந்து விட்டாளானு லும் அவளை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவள்

ஜன சமூகத்தால் தீண்டப் படாதவர்களாகவே கருதப்படு வாள். பெற்றோர் பரிந்து அவளைச் சேர்த்துக்கொண்டாலும், உறவினர் யாரும் மகட் பேச வரமாட்டார்கள். ஆகவே, நான் உன்னிடமிருந்து தப்பித்துச் சென்றாலும், என்னை உவந்து ஏற்றுக்கொள்ள உறவினர் எவரும் முன் வர மாட்டார்கள். இந் நேரம் என் கலியாண ஏற்பாடு எல் லாம் தகர்ந்து போய் எனக்கு பதிலாக வேறொரு பெண் தேர்ந் தெடுக்கப்பட்டு இருப்பாள் என்பது திண்ணம். பெற்ற மனம் தான் பிள்ளைப் பித்தினால் பரதவித்துக் கொண்டிருக்கும். இனி, என் வாழ்க்கை பாலைவனத்தை யொத்ததேயாகும். இயற்கையாகவோ, என் தாய் முதலி யோர் முயற்சியாலோ ஒரு வேளை ஜமீன்தார் குடும்பமே என்னைப் பழையபடி ஏற்றுக்கொள்ள முன் வந்தாலுஞ் சரி; அல்லது வேறெவரேனும் என்னைக் கலியாணஞ் செய்து கொள்ள இசைந்து வரினும் சரி; நான் அதற்குச் சிறிதும் உடன்படேன். இது சத்தியம். உமது காதலை ஏற்றுக் கொள்ளப் போவதால் இவ்வித முடிவுக்கு வந்து விட்டேன் என்று நீர் கருதக்கூடாது. இது வரை நடந்த நிகழ்ச்சிகளின் பயனாக, என் மனம் சலனமடைந்திருக்கி றது உண்மையாயினும், இன்னும் என் கருத்துமுழுவதையும் நீர் கவர வில்லை. என் உள்ளம் உமது வீரத்திலோ, கம் பீரத் தோற்றத்திலோ பறி போய் விடவில்லை. எனது தீவிர முடிவுக்குப் பின்னரும், உம்மை வாழ்க்கைத் துணை வாராக ஏற்றுக்கொள்ள என் மனம் இசையாவிடினும் பிறன் ஒருவனை என் உள்ளம் நாடாது. ஏனென்றால், நான் எவ் விதத்திலோ-அன்னியனாகிய-ஆடவனாகிய—உன்னால் தீண் டப் பட்டு விட்டேன்; உன் இரு கைகளாலும் சேர்த்துக் கட்டித் தூக்கி வரப்பட்டேன். என் மனங் களங்க மடையாவிடினும், உன் ஸ்பரிசத்தினால் உடல் மாசுற்று

விட்டது. இவ்விதம் ஏற்கனவே மாசுற்ற என் உடம்பைப் பரிசுத்தமான தென்று சொல்லி எனக்குக் கணவனென வரும் பிறனொருவனுக்கு ஆட்படுத்துவது சிறிதும் சரியல்ல. என் மனமும் அதற்கு ஒருப்படாது. எனவே, என் மனதில் உம்மை என் காதலராக ஏற்றுக் கொள்ள முடியாது என்று முடிவு ஏற்பட்டாலும், உமக்கு எனது கருத்தைக் கூறிவிட்டு, என் வாணாள் முழுதும் கன்னியாகவே இருந்து காலங்கழித்து வருவேன். உம்மைப் புறக்கணித்து விட்டு, வேறு ஆடவனை விவாகஞ் செய்து கொள்வேனென்று மட்டும் சிறிதும் நினையாதே........" என்று பெரிய பிரசங்கம் செய்தாள்.

பிரஹதாம்பாளது மன உறுதியையும் தூய உள்ளத்தின் தன்மையையும் அறிந்து வீரமார்த்தாண்டன் ஆச்சரியமுற்றான். அவளது வார்த்தையில் அவனுக்குப் பூரண நம்பிக்கை யேற்பட்டு விட்டது. எனவே, வேறொன்றுஞ் சொல்லாது அவன், "பிரஹதா! உன் விருப்பப்படியே ஆகட்டும். வா போகலாம். பொழுது புலர்வதற்குள் உன்னை வீட்டில் ஒருவரு மறியாமல் சேர்த்து விடுகிறேன். அதுதான் சரி! நீ மட்டும் பாதையைப் பார்த்து நடந்து வா; விஷ ஜந்துக்கள் இருக்கப் போகிறது. துஷ்ட மிருகங்களைப்பற்றி நீ ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை. அவை என்னைக் கண்டால் பயந்தோடும்.—நீ மட்டும் அநுமதி தந்தால்—உனக்கு விருப்ப மிருக்குமாயின்—உன்னைத் தோளிலோ அல்லது கரங்களிலோ தூக்கிக்கொண்டு ஒரு நொடியில் உன்னை உன் கிராமத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பேன்........" என்று ஆர்வத்தோடு கூறினான்.

பிரஹதாம்பாள் இவனது பேச்சைக் கேட்டு தனக்குள் நகைத்துக் கொண்டாள். "வேண்டாம்; வேண்

டாம். அவ்வளவு சிரமம் உமக்கு வேண்டாம். ஏற்கனவே தான் அக் கைங்கரியத்தைச் செய்திருக்கிறீரே! நான் உம் பின் நடந்தே வருகிறேன். போகலாம், வாரும்'' என்று எழுந்து நடக்கத் தொடங்கினுள். வீரமார்த்தாண்டன் செடி கொடிகளை விலக்கி வழி செய்து கொண்டும், கரங்களைத் தட்டி ஓசை செய்து விஷ ஜந்துக்களை விரட்டிக் கொண்டும் மதம் கொண்ட யானை போல் முன்னே நடந்தான். பிரஹதாம்பாள் தலைமயிரைக் கோதிய வண்ணமும், உடைகளைச் சீர்திருத்திக்கொண்டும் நடையில் துரிதத்தைக் காட்டி, மருட்சி கொண்ட மான்போல் நாலா பக்கமும் பீதியோடு நோக்கிக்கொண்டே அவனைப் பின் தொடர்ந்து நடந்தாள். வீரமார்த்தாண்டன் அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு வழி காட்டிச் சென்றான். காலில் முள் தைத்து அதனுல் அவள் நின்று முள்ளை யெடுப்பாள். அது அவன் கண்களில் உறுத்துவது போலிருக்கும். அவள் முள்ளை யெடுத்துவிட்டு வருவதற்குள் அவன் தேகம் துடி துடிக்கும். அவ்வளவு தூரம் பிரஹதாம்பாள் அவனை அடிமை கொண்டு விட்டாள். கொடிய கள்வர் உள்ளங்களையும் கவருஞ் சக்தி மாதரார்க்கு உண்டு போலும்!

# ஏழாவது அதிகாரம்

## "நீ தாசியா? தாசிப் பெண்ணு?"

தஞ்சாவூர் சின்னமணிக் கூண்டுக் கெதிரில் ஒரு சிறு சந்து. அச் சந்தில் ஒரு சிறு வீடு. அது தான் ஹம்ஸ தமயந்தியின் வாசஸ்தலம். ரமணியின் வருகையால், ஹம்ஸ தமயந்தியின் இல்லம் அல்லோல கல்லோலப்பட்டது. என்றும் வராத—எத்தனையோ முறை அழைத்தும் வராத—ரமணி சிறிதும் எதிர்பாராதவாறு வந்தது ஹம்ஸதமயந்திக்கும் அவளது சகோதரிகளுக்கும், மிகுந்த மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் அளித்தது. ரமணியையும் கலியாண சுந்தரனையும் தேவலோகத்தி லிருந்து வந்தவர்களாகவே அவர்கள் கருதி ராஜோபசாரஞ் செய்தனர்.

ரமணியும், கலியாண சுந்தரனுஞ் சென்றதற்கு மறுநாள் காலை தாமோதரம் பிள்ளையும் சரசாங்கியும் வந்து சேர்ந்தனர். அவர்கள் ரமணியோடு ஒரு வாலிபனும் வந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டனர். அவ் வாலிபனேடு ரமணி சிநேகங் கொண்டு தன்னுடன் அழைத்து வந்திருப்பது அவர்களுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. இருந்தாலும், அதை அவர்கள் வெளிக்குக் காட்டிக்கொள்ள வில்லை. தாமோதரம் பிள்ளை அசட்டுச் சிரிப்பு சிரித்த வண்ணம், "ரமணி, நீ எப்படி, எப்போது தஞ்சை வந்து சேர்ந்தாய்?" என்று விசாரித்தார். அத்துடன், "அவ்வாலிபன் யார்? அவனை எங்கு சந்தித்தாய்?" என்று மெதுவாகக் கேட்டார். ரமணி அதற்குச் சரியாகப் பதில் சொல்லவில்லை. அடுத்து கேட்கவும் தாமோதரம் பிள்ளைக்குப் பயம். சரசாங்கியின் தூண்டு

தலோ அவருக்குச் சகிக்க முடியவில்லை. இருதலை கொள்ளி எறும்புபோல் அவர் தவிக்கலானார். சந்தர்ப்பம் வாய்க்கும்போது ரமணியை விவரமாகக் கேட்டுக்கொள்ள லாம் என்று வாளா விருந்தார்.

ரமணி பெரும்பாலும் கலியாணசுந்தர னோடேயே காலங் கழிக்கலானாள். தஞ்சை நகரின் பல பாகங்களை யும் இருவரும் சென்று சுற்றிப் பார்த்தனர். திருவையாறு போன்ற காணத்தக்க இடங்களுக்கு ரமணி கலியாண சுந்தரனுடன் சென்று இயற்கை யன்னையின் அற்புதக் காட்சியைக் கண்டு களித்தாள். இவ்வித இணைபிரியாக் கூட்டுறவால் இருவ ரிடையேயும் முகிழ்த்திருந்த காதல் வளர்ச்சி யடையலாயிற்று. தக்க சமயம் வாய்த்த காலத் தும் ஒருவருக்கொருவர் தங்கள் காதற் குறிப்பை வாய் விட்டுப் பேசிக் கொள்ள இருவரும் துணியவில்லை. ஆயி னும், அவர்கள் மானத உலகில் உரையாடித் தங்கள் காதலைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

கலியாணசுந்தரன் தான் வந்த காரியத்தை அறவே மறந்து விட்டான். ரமணியோடு இருப்பதையே சுவர்க்க போகமாக—பேரின்பமாகக் கருதினான். ரமணியை ஒரு கணமும் பிரிந்து உயிர் வாழ முடியாது என்ற நிலைக்கு அவன் வந்துவிட்டான். ரமணிக்கும் அவனது தோழமை பெருங்களிப்பை யளித்ததாயினும், ஒரு விஷயம் மட்டும் அவள் மனத்தை உறுத்திக்கொண்டே யிருந்தது. அதாவது, தன்னுடன் இவ்வளவு அந்நியோந்நியமா யிருக்கும் கலியாணசுந்தரன், தான் ஒரு தாசியின் பெண் என்று அறிந்தால் என்ன நினைப்பான்? அவன் தன்னை விரும்பு வானா? அல்லது உதறிதள்ளிவிட்டுச் செல்வானா? தான் இப்போது தங்கியிருக்கும் வீட்டுக்குத் தலைவியான ஹம்ஸ

தமயந்தி வேசைத் தொழிலே வியாபாரமாகக் கொண்டு இல்லாவிடினும்—ஒரு கனவானுக்கு வைப்பாக இருந்தாலும்—அவளுடையவும், அவளது சகோதரிகளுடையவும் செய்கைகள் எங்கு கலியாண சுந்தரனுக்குத் தாங்கள் தாசிக்கூட்டம் என்று சந்தேகிக்கக் கூடிய நிலையை யுண்டு பண்ணி விடுமோ? அவ்விதம் வெளிவந்தால் அவன் அத்தகைய இடத்தில் தன்னோடு இருக்க விரும்புவானு? என்றெல்லாம் எண்ணி அவள் மனம் வருந்திக்கொண்டிருந்தாள். ஆனுல், அவளது மன சங்கடத்தைச் சிறிதும் வெளிக்காட்டிக் கொள்ளாது ரமணி எப்போதும் மகிழ்ச்சியாக, கலியாணசுந்தரனுடன் பழகிவந்தாள்.

ஒரு நாள் மாலே ரமணியும், கலியாண சுந்தரனும் கருந்தட்டாங்குடி என்னும் ஊர் பக்கஞ் சென்றனர். அங்கு கரந்தை தமிழ்ச் சங்கம் என்று ஒரு கழகம் தாய் மொழி வளர்ச்சிக்காக நன்கு தொண்டு புரிந்து வருவதை ஏற்கனவே, கலியாண சுந்தரன் கேள்வியுற்றிருக்கிறுன்; ஆதலால், முதலில் அச் சங்கத்துக்கும், அதன் சார்பாக நடைபெறும் பாடசாலேக்கும் சென்று ரமணிக்கு அவைகளே யெல்லாம் காட்டினுன். ரமணியும் அவற்றின் சிறந்த சேவையை யுணர்ந்து பாராட்டினுள்.

பிறகு, அவர்கள் அதன் சுற்றுப் பக்கங்களிலுள்ள இடங்களே யெல்லாம் பார்வையிட்டு விட்டுத் திரும்ப முயன்றனர். உலக மக்கள் இழைக்கும் கொடுமைகளாகிய மாசுகள் தன்னே யடைந்து தன் பரிசுத்தத்தைக் கெடுத்து விட்டதால், சந்தியாகால ஸ்நானஞ் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு செல்வது போல் சூரியன் விரைந்து சென்று மேற் கடலில் மூழ்கினுன்; இச் சமயத்தில் மாலே

யாகிய சைத்ரீகன் நீலவானத்தைப் பொன்னிறத்தால் தீட்டி அழகுபடுத்தத் தொடங்கினன்.

அந்தி மாலையின் அற்புத அழகும், கண் கொள்ளாக் காட்சியும் ரமணியின் கருத்தைக் கவர்ந்தது. எனவே, அவள் இயற்கை யன்னை ஆனந்த தாண்டவம் புரியும் அவ்விடத்தில் சிறிது நேரம் இன்பமாகக் கழித்துச் செல்லலாமென்று கூறவே, இருவரும் திருவையாற்றங் கரையில் பசும் கம்பளம் போர்த்தாற் போலுள்ள சோலை சூழ்ந்த பசும் புற்றரையில் அமர்ந்தனர். இருவரும் முதலில் இறைவனின் மாபெருஞ் சக்தியையும், இயற்கை யன்னை வாயிலாக அவன் புரிந்து வரும் திருவிளையாடல்களையும் பற்றி உற்சாகமாகப் பேசலாயினர். இடையிடையே இருவரும் ஏதோ சிந்தித்த வண்ணம் கள்ளத்தனமாக ஒருவரையொருவர் நோக்கி மௌனஞ் சாதித்து வந்தனர்.

கலியாணசுந்தரன் ரமணியிடம் ஏதோ கூற பல முறை வாயெடுத்தான். ஆயினும், பேசத் துணிவேற்படவில்லை. இவ்விதம் சிறிது நேரம் தத்தளித்து, கடைசியாக ஒருவாறு தைரியங் கொண்டு, "ரமணி, நான் உன்னிடம் ஒன்று கேட்க வேண்டுமென்று இரண்டு மூன்று நாட்களாகவே ஆசை............" என்று இழுத்தான்.

"அது என்ன !" என ஆவலோடு கேட்டாள்.

"என்னைப்பற்றி நீ என்ன நினைக்கிறுய் ? எவ்விதமாகக் கருதுகிறுய் ?"

"நீங்கள் சொல்வதன் பொருள் எனக்கு விளங்கவில்லையே !"

"விளங்க வில்லையா ?.......................என்னை நீ ஒரு சிநேகிதனுகக் கருது.........."

"அதில் என்ன சந்தேகம்? நான் உங்களை என் அத்யந்த நண்பராக வல்லவோ கருதி யிருக்கிறேன்?"

"அப்படியானல், நான் உன்னிடம் ஒன்று கேட்கலாமா? உன்னை என் மனமாரக் காதலிக்கிறேன்; அக்காதலை அங்கீகரிப்பாயா?" என்று கலியாணசுந்தரன் மிகத் தயக்கத்தோடு கேட்டான்.

கலியாணசுந்தரனே தன்னைக் காதலிக்கும்படி எப்போது கேட்பான் என்று எதிர் பார்த்திருந்தா ளாயினும், ரமணி அவன் இச் சமயம் வாய் விட்டுக் கேட்டதும், வியப்பும் திகைப்பு மடைந்தவளாய், "என்ன! நீங்கள் என்னை மனதாரக் காதலிக்கிறீர்களா? என்னையா?........" என்று கேட்டாள்.

"ஆமாம்; ரமணி! என் அவ்வளவு ஆச்சரியத்தோடு கேட்கிருய்? நான் உன்னைக் காதலிக்கத் தகுதியுடையவனில்லையா?...........நான் உன்னை எவ்வளவு ஆர்வத்தோடு காதலிக்கிறேன் தெரியுமா? அதை யுணர்ந்தால் நீ இவ்விதம் கேட்க மாட்டாய்!" என்று இரக்கமாகக் கூறினன்.

"அதற்குச் சொல்லவில்லை; நீங்கள் என்னைக் காதலிக்கக் கூடிய அவ்வளவு தகுதி என்னிடத்தில் என்ன இருக்கிறது என்ற சந்தேகத்தால் தான் அவ்விதங் கேட்டேன்..........." என்று தலை குனிந்த வண்ணம் கூறினள் ரமணி.

"என் தகுதியில்லை?..........." என்று ஆச்சரியத்தோடு கேட்டுவிட்டு, "பெருந்தன்மையான குணமுடையவர்களெல்லாம் அவ்விதம் தான் அடக்கமாகக் கூறுவார்கள்" என்று சமாதானங் கூறிக் கொண்டான்.

ரமணி நாணத்தால் முகஞ் சிவக்க முகத்தை ஒரு பக்கமாகத் திருப்பிக்கொண்டு, "அப்படி யொன்றும் எனக்குப் பெருந்தன்மை ததும்பி வழிந்துவிடவில்லை........ நீங்கள் உயர்குலமென்று கருதப்படும் பிராம்மண வகுப் பைச் சேர்ந்தவர்கள். நானே..........." என்று கூறி வருகை யில் கலியாணசுந்தரன் இடை மறித்து, "அது பழைய பாடம். அப்படி சொல்லித் தட்டிக்கழிக்குங் காலமெல்லாம் மலையேறிவிட்டது. நான்தான் உன்னிடம் ஏற்கனவே கூறி னேனே! நான் பிராம்மண வகுப்பைச் சேர்ந்தவனாயினும், எனக்குச் சாதி வேற்றுமை கிடையாதென்று. அப்படி யிருந்தும், நீ இவ்விதம் பேசுவது சரியல்ல; நீ மட்டும் சம்மதித்தால் நான் கட்டாயம் உன்னைச் சட்டப்படி—முறைப்படி—விவாகஞ் செய்து கொள்வேன் என்பது உறுதி" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினான்.

ரமணி முன்னையினும் நாணி, "நீங்கள் சொல்வது சரி; ஆயினும், நான் எந்த சாதியையும் சேர்ந்தவ ளல்லவே! ............" என்று மெல்ல இழுத்தாள்.

"எந்த சாதியையுஞ் சேர்ந்தவளல்ல வென்றால்............?" என்று கலியாணசுந்தரன் வினவினான்.

"நான் பொதுமகள்; ஒரு தாசிப் பெண்........."

"என்ன! நீ தாசியா? தாசிப் பெண்ணா? உண்மை யாகவா?..........."என்று பேராச்சரியத்தோடு கேட்ட வண்ணம் துள்ளிக் குதித்தான்.

"ஆம்; நான் தாசிப் பெண்தான்; வயிற்றுப் பிழைப் புக்காக விபசாரஞ் செய்வதையே தொழிலாகவுடைய விலை மாதர் வம்சத்தைச் சேர்ந்தவள்தான்" என்று ரமணி சாவதானமாகக் கூறினாள். அவள் முகத்தில் இப்போது ஜீவகளையே இல்லை.

கலியாணசுந்தரன் அப்படியே சோர்ந்து உட்கார்ந்து விட்டான். அவன் கொண்டிருந்த உற்சாகமும், குதூகலமும் எங்கேயோ ஓடி யொளிந்தன. அவற்றிற்குப் பதிலாக அவனது முகத்தில் ஏமாற்றமும், துயரமுமே குடி கொண்டிருந்தன. தலை குனிந்தவாறு நெடுநேரம் சிந்தனுவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அவன், நீண்ட பெருமூச்சு எறிந்த வண்ணம் நிமிர்ந்து ரமணியை ஒருவாறு நோக்கினுன்.

ரமணி கலியாணசுந்தரன் என்ன சொல்லப் போகிருனோ என்று அவனது வாயசைவையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது மார்பகம் விம்மி விம்மித் தணிவதை நோக்கும்போது, இருதயம் அதிகமாகத் துடிதுடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

கலியாணசுந்தரன் மெதுவாகப் பேச ஆரம்பித்தான். "ரமணி! என் திகைப்பைக் கண்டு நீ ஆச்சரிய முற்றிருக்கலாம். அல்லது வேறு விதமாகவும் நினைத்திருக்கலாம்...... ......நீ ஒரு தாசிப்பெண் என்பதைக் கேட்டு நான் உண்மையிலேயே திகைத்துப் போனேன். அதை என்னுல் எளிதில் நம்ப முடியவே இல்லை. நீ என் மனதைச் சோதிப்பதற்காக விளையாட்டுக்காகத்தான் கூறினுயா? அல்லது உண்மையிலேயேதான் கூறினுயா? என்பது எனக்கு இன்னமும் சந்தேகந்தான். நீ உன் வாயால், 'நான் பொதுமகள்; ஒரு தாசிப்பெண்' என்று கூறும் போது நான் கனவுதான் காண்கிறேனு? அல்லது நனவிலே தான் கேட்கிறேனு? என்றே அயிர்த்தேன். உண்மையில் சொல்கிறேன்; என் மனம் இன்னமும் நீ ஒரு விலைமகள் என்பதை நம்பவே மாட்டேனென்கிறது ........"

ரமணி இடை மறித்து, "இன்னுமா சந்தேகம்? நான் தாசிப்பெண் என்பதில் நீங்கள் சிறிதும் ஐயங் கொள்ள வேண்டியதில்லை; என்னைப் பெற்ற தாய் தகப்பன்மார்— எங்கள் வம்சத்தில் பிறந்தவர்களுக்குத் தகப்பன் இன்னான் தான் என்று குறிப்பிட்டுக் கூற முடியாதே!—யார் என எனக்குத் தெரியாவிடினும், நான் தாசிக ளிடையே வளர்ந்தவள் என்பதை எனக்கு அறிவு வாய்த்த நாள் முதல் நன்கு அறிவேன்.........நாம் இப்போது வந்து தங்கி யிருக்கிறோமே; அந்த வீட்டுக்கு உடையவளான ஹம்ஸ தமயந்தியும், அவளுடன் இருக்கும் மற்றவர்களும் தாசி மரபைச் சார்ந்தவர்களே; எனக்கு உறவினர்களே!— நமக்குப் பின் சென்னையி லிருந்து வந்தார்களே; அவ் விருவரும்தான் எனது பாதுகாப்பாளர்கள்; அக் கிழவி தான் எனது வளர்ப்புத்தாய்; அந்த மனிதர் எனக்கு மாமாவாக வேண்டும். நான் தாசிப்பெண்தான் என்ப தற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?......" என்று கூறினாள்.

கலியாணசுந்தரன், ". நீ என்னதான் கூறினாலும், உன் குணஞ் செயல்களையும், அறிவையும், கம்பீரத் தோற் றத்தையும் நோக்குபவர்கள், யாரும் நீ ஒரு தாசிப்பெண் என்பதை ஒருகாலும் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள்; நான் முகஸ்துதிக்காகச் சொல்லவில்லை. நீ ஒரு அரச குடும்பத்தில் பிறந்து உலகை யெல்லாம் கட்டியாளும் பேரரசியாக இருக்கத் தகுந்தவள்; அவ்வித மில்லா விடினும் உயர் குடும்பத்தில் உதித்து மகோன்னத நிலையி லிருக்க வேண்டியவள் என்பது, உனது ஒப்பற்ற அழகு, கம்பீரத் தோற்றம் இவைகள் மட்டுமல்லாது; உன்னுடைய ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு சொல்லும், உன்னுடைய

உணர்ச்சி மிக்க தீவிரப் போக்கும் நன்கு அறிவிக்கின்றன. அவ்வித மிருக்கும்போது எந்த மடையன்தான் உன்னைப் பொருளாசையால் தன் உடலை விற்கும் சாதாரண வேசையின் வயிற்றி லுதித்தவள் என்று கூற முன்வருவான்? .........நான் இவ்விதம் தாசிகள் சமூகத்தை மிகக் கேவலமாகக் கருதி இழித்துக் கூறுவதைக் கேட்டு, உன் மனம் புண்படலாம். 'நான் சாதி சமய வேற்றுமைகளையும், மற்றெவ்வித பேதத்தையும் பொருட் படுத்ாதவன்; பெரிய சமூக சீர்திருத்த கொள்கைகளை யுடையவன்' என்றெல்லாம் பிரமாதமாகக் கூறிக்கொண்ட இவன், நம் சமூகத்தை மட்டும் இவ்வளவு கேவலமாகப் பேசுவதேன்? என்றுகூட நீ கருதி உன் மனதுக்குள் வையலாம்—ஆனல்; ஆனல்... .........உண்மையாகச் சொல்கிறேன்; ரமணி! இந்த தாசிகள் சமூகத்தைப் பற்றி மட்டும் எனக்கென்னவோ சிறிதும் பிடிப்பதில்லை; தாசி என்ற பெயரைக் கேட்டாலும் அப்பெயர் பூண்ட மகளிரைக் கண்டாலும் என் மனம் எவ்வளவு அருவருப்பு அடைகிறது தெரியுமா! உள்ளமும் உடலும் நடுங்குகின்றன தெரியுமா! தாசிகள் என்றுல் ஜன சமூகத்தை அழிக்கும் விஷப் புழுக்கள் என்பது என் எண்ணம். கொலைகாரர்கள், கொள்ளையடிப்பவர்கள், கள்வர் முதலியோரைக் காட்டிலும் இத் தாசிகள் மிகக் கொடியவர்கள்; ஏனென்றுல், கொலை, கொள்ளை முதலிய மாபெரும் பாதகங்களைச் செய்பவர்களால் ஏற்படும் தீமையைக் காட்டிலும், ஜன சமூகத்துக்கு இந்தத் தாசிகளால் உண்டாகும் தீமைகள் மிக அதிகம். அப்பப்பா! இத் தாசிகளால் நம் ஜன சமூகத்துக்கு விளையும் தீங்குகளை எண்ணிப் பார்த்தால்........" என்று உணர்ச்சியோடு பேசிக்கொண்டே வருகையில், ரமணி ஆத்திரத்தோடு, "அப்படியானல் இத்தாசிகள் கொடிய மிருகங்

களிலும் மிகக் கொடியவர்கள் என்பது உங்கள் எண்ணமா? இவர்கள் மக்களினத்தைச் சேர்ந்தவர்களில்லையா? ஜன சமூகத்தினின்றும் இவர்கள் புறம்பானவர்களா? அவ்விதமானல், இவர்கள் எங்கிருந்து தோன்றினர்கள்? ஆகாயத்தினின்றும் அப்படியே குதித்து விட்டார்களா? ...........” என்று குறுக்கிட்டுக் கேட்டாள்.

கலியாணசுந்தரன் திகைப்புற்ருனயினும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, “நான் இவர்களை மனித சமூகத்தினின்றும் வேறுபட்டவர்களென்று சொல்லவில்லையே! இவர்களால் நம் சமூகத்துக்கு விளையுந் தீங்குகள் அதிகம் என்றுதான் சொல்ல வந்தேனே யொழிய வேறில்லை...... ரமணி, கோபித்துக்கொள்ளாதே!.........” என்று சமாதானங் கூறினன்.

ரமணி :—“நான் ஒன்றும் கோபித்துக் கொள்ளவில்லை...............விஷயத்தை விளக்கமாகத் தெரிந்து கொள்ளவே இடை மறித்துப் பேசினேன். மற்ருென்று உங்களைக் கேட்க விரும்புகிறேன். தாங்கள் வர்ணிக்கிறபடி கொடிய குணம் வாய்ந்த இந்தத் தாசிகள் எப்படி மனித சமூகத்தில் தோன்றினர்கள்? இவர்களை யெல்லாம் ஒரு பிரிவாகக் கடவுளே படைத்தாரா?.........”

கலியாணம் :—“அபேத நிலையிலுள்ள கருணகரனகிய கடவுள் இவ்விதம் ஒரு கூட்டத்தைத் தனியாகப் படைத்திருப்பானென்று நான் கருதவில்லை.........”

ரமணி :—(மேலும் உணர்ச்சியோடு) கடவுள் இவ்விதம் ஒரு பிரிவைத் தனியாகப் படைத்திருக்க முடியாது என்று நாம் கருதுவதானல், இவர்கள் மக்கள் இனத்திலிருந்தே பிரிந்திருக்க வேண்டும் என்று ஏற்படுகிற

தல்லவா! அப்படியானல், இக்கூட்டத்தாரது ஆரம்ப சரித்திர மென்ன? உங்களுக்குத் தெரிந்தால் கூறக் கூடுமா?"

கலியாணம்:—"எனக்குத் தெரியாது. பலர் பலவித மாகக் கூறக் கேட்டிருக்கிறேனே யொழிய, இதுபற்றி முடிவான அபிப்பிராய மெதையும் நான் தீர்மானிக்க வில்லை..........."

ரமணி:—"எவர் எவ்விதமாயினும் கூறிக் கொள் ளட்டும். எனக்கு என்ன தோன்றுகிற தென்றால், திமிர் பிடித்த ஆடவர் சிலரது காமவெறிக் கிரையாகிய மகளிரே நாளடைவில் தாசிகளாகப் பரிணமித்தனர்; சுயநலமிக்க ஆடவர்கள் தங்கள் கூடா வொழுக்கத்துக்கு இன்னும் சௌகரியத்தை யேற்படுத்திக் கொள்ள கடவுள் பெயரை யும், சமயத்தின் பெயரையும் ஆதரவாகக் கொண்டனர். ஆதலால், இக் கூட்டம் அதிகமாகி ஒரு தனி சமூகமாய் விட்டது. என்ன, நான் சொல்வது சரிதானு?"

கலியாணம்:—"இருக்கலாம். நீ கூறும் காரணம் பொருத்தமாகவே இருக்கிறது."

ரமணி:—"இது வெறும் வாய் வேதாந்தமன்று; கற்பனைத் தத்துவமோ, தர்க்கவாதமோ அல்ல. எனது சிறிய அநுபவத்தி லிருந்து நான் அறிந்த உண்மையையே இப்போது கூறினேன். எனக்கு அறிவு வாய்த்த நாளி லிருந்தே தாசி சமூகத்திடையே நடக்கும் நிகழ்ச்சிகளையும், அவர்களை அடையும் பணக்காரர்கள், ஜமீன்தார் முதலிய வர்களின் போக்கையும் கூடுமான வரை உணர்ந்து வந் திருக்கிறேன். நல்லது, கெட்டது என்று பகுத்தறியக் கூடாத இளம் பருவத்திலேயே எனக்கு இத்தாசிகள்

வாழ்க்கை விபரீதமாகக் காணப்பட்டது. அறிவு முதிர முதிர, இக்கொடுமைகளைக் கண்டு என் மனம் புண்பட லாயிற்று. இவைகளைப் பற்றி நான் தீவிரமாகச் சிந்திக்க லானேன். இச் சிந்தனையின் பயனாக, தாசிப் பெண்கள் எனப் படுவோர், உழைப்பின்றித் தின்று கொழுத்த ஆடவர்களாலும், பணத்திமிர், அதிகாரத் திமிர் பிடித்த ஆடவர்களாலும் விபசாரம் என்னும் படுகுழியில் நிர்ப்பந்த மாகத் தள்ளப் படுகிறார்கள் என்ற முடிவுக்கு வந்தேன். உண்மையில் தாசிகள் நிலை பரிதபிக்கத் தக்கதாக இருக்க, அவர்கள் உலக அபவாதத்துக்கு ஆளாகி வருவதை நினைக்க என் நெஞ்சம் பதறியது. சிறிது நேரத்திற்கு முன் நீங்கள் கூட சொல்லவில்லையா? தாசிகள் ஜன சமூகத்தை அரிக்கும் விஷப் பூச்சிகள் என்று............உலகம் இப்படித் தான் நிரபராதிகள் மீது பெரும் பழியைச் சுமத்துகிறது. ............அறத்தின் வழியாக வரும்—அதாவது முறைப்படி மணந்த மனைவி வாயிலாக அநுபவிக்கும்—இன்பத்தோடு அமையாது, காம வெறி கொண்டலையும் ஆடவர்கள் இருக் கும்போது, தாசிகள் என்று ஒரு கூட்டம் எப்படி இல் லாமல் போய் விடும்? தங்கள் காமத்தைத் தணித்துக் கொள்ள பல மாதரை விரும்பி யலையும் ஆடவர் கூட் டம் இல்லாவிட்டால், பொதுமகளிர் என்போர் இருப் பார்களா? நீங்களே சொல்லுங்களேன்?............"

கலியாணம் ரமணியின் பேச்சைக் கேட்டுப் பிரமித் துப் போய் உட்கார்ந்திருந்தபடியால் உடனே அவனால் பதில் கூற முடியவில்லை. ரமணி மீண்டும் பேசத் தொடங்கி னாள்:—" அது போகட்டும்.—அப்பா! தாசிப் பெண்களா! வஞ்சகர்க ளாயிற்றே! மிகக் கொடியவர்க ளாயிற்றே! என்றெல்லாம் கூறினீர்க ளல்லவா? ஜன சமூகத்திலுள்ள

மற்றவர்களைவிட இவர்கள் என்ன அவ்வளவு கெட்டவர்கள்; வஞ்சகர்கள் என்று எனக்குப் புரியவில்லை. சமூகத்தில் நயவஞ்சகமும் பொய்யும், சூதும், கள்ளமும் கபடமும், மோசக் கருத்தும் துரோக சிந்தனையும் கொண்டவர்களல்லவா அதிகமாக இருக்கிறார்கள்? இக் கொடுமைகளுக் கெல்லாம் மூல காரண மென்ன வென நீங்கள் அறிவீர்களா? இந்தப் பாழும் வயிற்றை நிரப்புவதற்கே இவ்வளவு கொடுமைகளும் பெரும்பாலான மக்களால் கையாளப் படுகின்றன. வியாபாரி பிறரிட மிருக்கும் பொருளைக் கவர்வதற்கு நயவஞ்சகத்தை யுபயோகப்படுத்தவில்லையா? அரசன் மேலும் நாடுகளைப் பெருக்குவதற்கு தந்திரத்தைக் கையாள வில்லையா? எது சூழ்ச்சி யில்லாமல் நடைபெறுகிறது? அதுபோல, தாசிகளும் தங்கள் வயிற்றைக் கழுவுவதற்குத் தந்திரத்தையும், சூழ்ச்சியையும் கடைப் பிடிக்கிறார்கள். இதில் என்ன புதுமை இருக்கிறது? குற்றஞ் சொல்ல இருக்கிறது? அரசன் சூழ்ச்சியைக் கையாண்டால் அதற்கு ராஜதந்திரம் என்று பெயர்; வியாபாரி வஞ்சகமாக வியாபாரஞ் செய்தால் வர்த்தக முறை, வியாபார தந்திரம் என்று பெயர். அதுவே தாசிகள் கையாண்டால் தாசிகள் தளுக்கு; மாயா ஜாலம்; வஞ்சகம் என்று பலவிதமாகக் கூறுவது? என்ன நியாயம்? என்ன மனித சமூகம்! என்ன உலகம்!" இச்சமயம் ரமணியின் முகத்தில் வியர்வை யரும்பி வழிந்தது. அதைத் தன் முந்தானையால் அவள் துடைக்கலானாள்.

கலியாணசுந்தரன் மன நெகிழ்ச்சி தாங்காதவனாய், "ரமணி! எனது பொருளற்ற வார்த்தைகள் உன் உணர்ச்சியை மிகவும் தூண்டிவிட்டது அறிந்து வருந்துகிறேன். நான் கூறிய அபிப்பிராயம் மேல் போக்காகப் பார்த்து

கூறிய தாதலால், ஒருதலை பட்சமாக இருக்கிறது. இப்போதுதான் விஷயம் விளங்கியது. நீ கூறியது ஒவ்வொன்றும் உண்மையானது தான். இவ்விஷயத்தில் ஆண்மகன் என்று கூறிக் கொள்ளும் எவனும் வெட்கித் தலைகுனிய வேண்டியவனாகத் தான் இருக்கிறான்..............." என்றான்.

ரமணி அவனைத் தடுத்து, "அப்படியொன்றும் கருதுவதற்கில்லை. யாரோ ஒரு சிலர் தவறிழைத்தால் ஆணுலகமே அதற்குக் கட்டுப்பட வேண்டுமா, என்ன! அதெல்லாம் ஒன்றுமில்லை...............ஜன சமூக அமைப்பின் அடிப்படையிலேயே கோளா றிருக்கிறது. குறைபாடுகளை ஆராய்ந்து அதைத் தக்கபடி அறிஞர்கள் மாற்றி யமைத்தால் இவ்வித ஆபாசங்க ளெல்லாம் அடியோடு ஒழியும்............தாசி மரபைச் சேர்ந்த எந்தப் பெண்ணாயினும், விபசாரத் தொழில் மிக இழிவானது என்று கருதி அதிலிறங்காமல் நாணயமாக—மானமாக—வாழ்க்கை நடத்த முன் வந்தால், தற்போதுள்ள ஜன சமூகம் அதை ஒப்புக்கொள்ளுகிறதா? அவர்களுக்குப் புகலிடந் தருகிறதா? விபசாரப் படுகுழியி னின்றும் மேலேற முயலும் அவளைத் தூக்கிவிட ஜன சமூகத்திலுள்ள எவரேனும் முன் வந்து கை நீட்டுகிறார்களா? உலகானுபவமும், சீர்திருத்த நோக்கமுங் கொண்ட நீங்களே 'தாசிப் பெண்' என்றால் பாம்பைக் கண்டு பயந்தோடுவதுபோல், துள்ளி யோடுகிறீர்க ளென்றால், அறியாமை மிக்க மற்றவர்கள் நிலை என்ன?..........." என்று கூறி அவனைக் கடைக்கணித்தாள்.

கலியாணசுந்தரன் குறுக்கிட்டு, "சரியான சாட்டை கொடுத்துவிட்டாயே, ரமணி!..........." என்றான்.

ரமணி புன்சிரிப்புடன், "இல்லை; விவகாரத்துக்குச் சொன்னேனே ஒழிய, உங்களைக் குறை கூற வேண்டு மென்ற நோக்கத்தோடு கூறவில்லை. என் போன்று இனி வரும் பெண்களாயினும், மற்ற மகளிரைப்போல் நல்வாழ்வு வாழ்வதற்கு—விபசார வாழ்க்கையில் இறங்காது விடுபட்டு கௌரவ வாழ்க்கையை நடத்துவதற்கு—நான் புரட்சி செய்ய வேண்டு மென்று கங்கணங் கட்டிக்கொண்டேன். இதனால் தான், நான் மங்கைப் பருவம் வாய்த்ததும், என்னை நச்சி வந்த கனவான்களை யெல்லாம் உதறித் தள்ளினேன்; அவமானப்படுத்தி யனுப்பினேன்; எத்தனையோ செல்வந் தர்கள், என்னிடமிருந்து ஒன்றும் பெருமலே—ஒரு மொழி யும் பெருமலே என் முக தரிசனத்துக்காக மட்டும், ஆயிரக் கணக்கான ரூபாய்களைக் காணிக்கையாகக் கொடுத்து விட் டுச் சென்றனர். ஜமீந்தார், ராஜாக்களுங்கூட என் காலடியில் சொர்ணபிஷேகஞ் செய்துவிட்டு இவ்விதமே ஏமாந்து திரும்பி யிருக்கின்றனர். மற்றும் பலரிடம் யானே பகல் கொள்ளை யென்று சொல்கிறுர்களே; அவ்விதம் பொருளைச் சூறையாடி, அவர்களை ஏமாந்த சோணகிரிக ளாக்கி யனுப்பி யிருக்கிறேன்............"

கலியாணசுந்தரன் முகத்தில் ஏதோ ஒரு நம்பிக்கையும் மகிழ்ச்சியும் தோன்றியது. அவன், "அப்படியா!............" என்று வாயைப் பிளந்துவிட்டுப் பிறகு, "அப்படியானல் இதுவரை உன்னை யாரும் ஸ்பரிசித்தது கூட இல்லையா?" என்று கிலேசத்தோடு இழுத்தாற்போல் கேட்டான்.

ரமணி:—(கலகலவென நகைத்து) "ஊஹூம்; அவ் விஷயத்தில் உங்களுக்குச் சந்தேகமா?............"

கலியாணம்:—"இல்லை; இல்லை; நீ ஒன்றும் தப்பாக நினைத்துக்கொள்ளாதே!............"

ரமணி :—"இது உங்கள் தப்பில்லை; பொதுவாக ஆடவரே மகளிரை நம்புவதில்லை; ஏனென்றால் அவர்களில் பெரும்பாலார் கூடா வொழுக்கத்தை யுடையவர்களா யிருப்பதனால்..........."

கலியாணம் :—"போதும்; போதும்; ரமணி! என்னையும் அந்த கோஷ்டியில் சேர்த்து விடாதே!........... அதிருக்கட்டும். உன் தீவிர உணர்ச்சி மிக்க பேச்சு என் அகக் கண்ணைத் திறந்துவிட்டது. இல்லாவிடில், நான் இச் சிக்கலான பிரச்சினையைத் தீர்க்க வழி தெரியாமல் இருட்டில் தான் தடவிக் கொண்டிருக்க வேண்டும்."

ரமணி :—"என்ன சிக்கலான பிரச்சினை?"

கலியாணம் :—"நம் காதல் பிரச்சினைதான்."

ரமணி :—"இன்னுமா காதல் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது?"

கலியாணம் :—"ஏன்?..........."

ரமணி :—"நான் தாசிப்பெண் என்று தெரிந்ததும் அறுந்துபோய் விடுமென் றன்றோ..........."

கலியாணம் :—(அவசரத்துடன்) "அதெல்லாம் ஒன்று மில்லை. நான் முடிவுக்கு வந்தாய்விட்டது ......."

ரமணி :—"என்ன முடிவுக்கு வந்துவிட்டீர்?........"

கலியாணம் :—"உன்னை விவாகஞ் செய்துகொள்வ தாக..........."

ரமணி :—"என்ன! என்னை விவாகஞ் செய்து கொள்வதாகவா? உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்ன? நீங்கள் இப்படி அவசரப் படாதீர்கள். என் நிலையையும் உங்கள் நிலையையும் நன்கு யோசித்துப் பார்த்து நிதானமாக..........."

கலியாணம் :—(ஆத்திரத்தோடு) "நீ என்னைக் காதலிக்கிருயா? இல்லையா? இரண்டி லொன்று கூறு. மற்ற விசார மெல்லாம் உனக்கு எதற்கு?........உனக்கு விருப்பமில்லை யென்ருல் இப்போதே போகிறேன்."

ரமணி :—"ஏன் இவ்வளவு ஆத்திரம்?..........."

கலியாணம் :—"பின் என்ன?........"

ரமணி :—"நான் எதற்காக ஆட்சேபிக்கிறே னென்ருல், உங்கள் எண்ணம் அவ்வளவு எளிதில் நிறைவேறுமா? உங்கள் உறவின் முறையார் இதற்குச் சம்மதிப்பார்களா? எதிர்க்க மாட்டார்களா? என்றே..........."

கலியாணம் :—"உலகமே எதிர்க்கட்டுமே! எனக்கு லட்சியமில்லை. உன் அபிப்பிராயத்தை முதலில் கூறு."

ரமணி :—"நீங்கள் இவ்வளவு உறுதியாகப் பேசும் போது, நான் மறுத்துக் கூற முடியுமா?........ஆயினும், இதில் மற்ருெரு விஷய மிருக்கிறது..........." என்று தலை குனிந்தவாறு கூறினுள். இச்சமயம் மீண்டும் அவள் முகம் இருண்டது.

கலியாணம் :—(படபடப்போடு) "என்ன அது?"

ரமணி :—"நான் ஒரு குற்றவாளி! என்னைப் போலீஸார் தேடிக்கொண் டிருக்கிருர்கள்..........."

கலியாணம் :—(மீண்டுந் திகைத்தவனுய்) என்ன! நீ குற்றவாளியா? எந்தக் குற்றத்துக்காகப் போலீசார் உன்னைத் தேடுகிருர்கள்?..........."

ரமணி, "ஆமாம்; நான் விளையாட்டாக ஒரு காரியஞ் செய்தேன். அதன் விளைவு இது............." என்று குனிந்த தலையை நிமிராமலே கூறினுள்.

கலியாணம், "அது என்ன? விஷயத்தை விவரித்துக் கூறேன்" என்று முக வேறுபாட்டோடு கேட்டான்.

ரமணி:—"நான் சமீபத்தில் ஒருநாள் சென்னை குமரப்ப செட்டியார் நகைக் கடைக்குச் சென்றேன். அங்கு வைக்கப்பட்டிருந்த விலையுயர்ந்ததும், மிகவும் பிரகாசம் பொருந்தியதுமான வைரமாலை யொன்று என் கண்களைப் பறித்தது. அச்சமயம் அங்கு நகை வாங்குபவர்களைத் தங்கள் சாகஸப் பேச்சுகளால் மயக்கி அவர்கள் தலையில் எதையாகிலும் கட்டி யனுப்பும் காரியஸ்தர்களை ஏமாற்ற வேண்டுமென்ற விஷம புத்தி எனக்கு ஏற்பட்டது. அக் குறும்புத் தனத்தால் ஒரு சிறு நாடகம் நடத்தி அதைக் கைப்பற்றிக்கொண்டேன். அதன் பிறகு தான், நான் செய்த இக் காரியம் எத்துணை ஆபத்தை விளைவிக்கக் கூடியது என்று உணர்ந்தேன். அதனால் ஏற்பட்ட நடுக்கமே என்னைச் சென்னையை விட்டு ஓடி வரும்படிச் செய்தது..." என்று, தான் அவ்வைரமாலையைக் கவருவதற்குக் கையாண்ட முறையை விவரித்துக் கூறினாள். ஆனால், அவள் அம் மாலை தன்னோடிருப்பதையும், சுங்கச் சாவடியில் பரிசோதனையின் போது, அதை அவன் ஜேபியில் போட்டு விட்டுத் தான் தப்பித்துக் கொள்ள முயன்றதையும், பின்னர், மயக்க முற்றதுபோல் பாசாங்கு செய்து அதை மீண்டும் அவனிடமிருந்து எடுத்துக்கொண்டதையும் மட்டும் அச் சமயம் கூறாது மறைத்தாள்.

கலியாணசுந்தரன் (சிந்தனை கொண்ட முகத்தோடு)—"ஆமாம்; அந்த நகைக்கடைக்காரர்கள் போலீஸில் பிராது செய்திருப்பார்க ளென்று உனக்குத் தெரியுமா? அல்லது அவ்விதம் நீ நம்புகிறாயா?"

ரமணி:—(வியப்புத் தோன்ற) "இதென்ன கேள்வி? பொருளை—அதுவும் விலையுயர்ந்த நகையை—ப் பறி கொடுத்தவர்கள்—போலீஸுக்குத் தெரிவிக்காம லிருப்பார்களா? இதற்குக் கூட ஜோஸியம் பார்க்க வேண்டுமா? என்ன!"

கலியாணம்:—அது இல்லை; விலையுயர்ந்த பொருள் களவோ, கொள்ளையோ போய் விட்டாலும், போலீசுக்கோ, மற்றெவ்விதமாகவோ அதைப் பகிரங்கப்படுத்துவது வியாபார முறைக்கு உகந்ததல்லவென்று சில வியாபாரிகள் கருதுகிறார்கள். அதுவும் குமரப்ப செட்டியார் அண்டு ஸன்ஸ் நகைக் கடையைப் போன்ற ஒரு பெரிய கம்பெனியார் தாங்கள் பட்டப் பகலிலேயே—அதுவும் ஒரு பெண்ணால் — ஏமாந்து போய் விட்டதை வெளிப்படுத்துவதே தங்களுக்கு இழிவு என்று கருதி யாருக்குந் தெரியாது அடக்கி விடவே பார்ப்பார்கள்.—ஆனால், இதில் ஒரு டாக்டரும் சம்பந்தப்பட் டிருப்பதால்தான்............"

ரமணி (வியப்பும் சிறிது துணிவுங் கொண்டவளாய்):—"அந்த நகைக் கம்பெனிக்காரர்கள் விஷயத்தை வெளிப்படுத்தாவிட்டால், டாக்டரும் சும்மா இருப்பாரென்றுதான் நான் கருதுகிறேன். ஏனென்றால், தாம் ஒரு பெண்ணால் ஏமாற்றப் பட்டதைப் பிறரிடம் கூற அவரும் வெட்கப்படுவா ரல்லவா!................"

இச் சமயம் அவள் முகத்தில் புன்னகை மிளிர்ந்தது. கலியாண சுந்தரனும் சிரித்துக்கொண்டே, "நீ பலே கெட்டிக்காரி தான். இவ்வளவு பேரை ஏமாற்றும்படியாகச் செய்த நீ என்னையும் ஏமாற்றிவிட்டால் என்ன செய்வது என்றுதான் இப்போது எனக்கு யோசனையாக இருக்கிறது" என்று பரிகாசமாகக் கூறினான்.

"இனிமேல்தான் உங்களை ஏமாற்றவேண்டுமா? எப்போதே உங்களை ஏமாற்றியாய் விட்டதே!........" என்று கூறத்தொடங்கியவள், எங்கு தான் முன் அவனிடம் நடந்துகொண்ட விதத்தைச் சொன்னால் அவன் தன் மீது தப்பபிப்பிராயங் கொண்டு விடுவானோ என்று அஞ்சித் தன் பேச்சை யடக்கிக்கொண்டாள்.

"எதைச் சொல்கிறாய்? உன் அழகில் என் உள்ளத்தைப் பறிகொடுத்ததைத் தானே? படே படே ஆசாமிகளெல்லாம் உன்னைக் கண்டு மயங்கி விடுகிறார்களென்றால், நான் எந்த மூலை?......அதிருக்கட்டும்; நீ கைப்பற்றிய அந்த வைரமாலையை இப்போது எங்கு வைத்திருக்கிறாய்?' என்று அவன் கேட்டான்.

"இதோ என்னிடத்திலேயே தான் வைத்திருக்கிறேன்" என்று கூறி, ரமணி தான் இடையில் செருகி வைத்திருந்த வைரமாலையை எடுத்து அவன் கையில் கொடுத்தாள்.

அவ் வைரமாலையின் பிரகாசத்தைப் பார்த்து பிரமித்துப் போய்விட்ட கலியாணசுந்தரன் ரமணியையும், அம் மாலையையும் ஆச்சரியத்தோடு மாறி மாறி நோக்கினான். பிறகு அவன், "ரமணி, உன்னுடைய தைரியத்தையும் துணிகரச் செயலையும் பார்க்கும்போது, நீ எனக்கு ஒரு சாதாரண பெண்ணாகத் தோன்றவில்லை. ஒரு ஆடவனுக்குக் கூட இவ்விதத் துணிச்சல் ஏற்படாதே!—உன்னை ஒரு வீராங்கனையென்றே நான்..." என்று கூறி வருகையில், ரமணி இடைமறித்து, "போதும்; போதும். எனது ஏமாற்றுச் செயலுக்கு ஒரு புகழ்ச்சியா?—என்னை நீங்கள் பரிகாசஞ் செய்து என் தவறான செயலைச் சுட்டிக் காட்டுகிறீர்கள் என்றே நினைக்கிறேன்" என்று சொன்னாள்.

கலியாணம், "அவ்விதமில்லை; நான் உண்மையில் நினைத்ததையே கூறுகிறேன். அவ் விஷயத்தைப்பற்றி அதிகம் பேசினால் உன் மனம் ஆயாச மடையலாம்..." என்று கூறி நிறுத்திக் கையிலிருக்கும் மாலையைத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, "ரமணி, இம் மாலையை அதன் சொந்தக்காரர்களிடம் கொடுத்து விட விரும்புகிறாயா? அல்லது... ..." என்று இழுத்த வண்ணம் அவளை ஒருவிதமாக நோக்கினான்.

ரமணி, "நீங்கள் கேட்கும் கேள்வியின் அர்த்தம் எனக்குப் புரியவில்லை" என்று கூறினாள்.

கலியாணம், "இல்லை; அந்த குமரப்ப செட்டியார் அண்டு சன்ஸ் சொந்தக்காரர்களை எனக்குத் தெரியும். அவர்கள் நான் தொழில் பார்க்கும் பத்திரிகைக்கு விளம்பரம் கொடுத்து வருபவர்க ளாதலால், அம் முறையில் அவர்கள் என்னிடம் நன்கு பழகி யிருக்கிறார்கள். ஆதலால் நான் சொல்வதை அவர்கள் கேட்கக்கூடும்.—இம் மாலையைத் திருப்பிக்கொடுத்துவிட உனக்கு விருப்ப மிருந்தால், நான் அவர்களுக்குத் தக்க விதமாக ஒரு கடிதம் உடனே எழுதி இவ் விஷயம் பிரமாதமாகாதவாறு சரிப்படுத்தக் கூடும் என்று நினைக்கிறேன்........" என்றான்.

ரமணி முகமலர்ச்சி கொண்டவளாய், "அப்படியே செய்யலாம். எப்படி யாயினும் இம் மாலையைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்பதுதான் எனது எண்ணம். ஆனால், அது எவ்விதம் சாத்தியப்படும் என்று தோன்றாமல் தான் இதுவரை இருந்து வந்தேன்......உங்களுக்கு நான் மாலையைத் திருப்பிக் கொடுக்க விரும்புவேனோ மாட்டேனோ? என்ற சந்தேகம் போலிருக்கிறது. ஊர் பொருளை

அபகரிப்பதில் நான் அவ்வளவு பேராசைக்காரி என்று நினைத்துக் கொண்டீர்களா என்ன ?" என்று கூறினாள்.

கலியாணம், "இல்லை; இல்லை. அந்த வைரமாலை உனக்கு வேண்டுமானாலும் நான் வாங்கித் தருகிறேன். உன் உள்ளத்தைக் கவர்ச்சிகொண்ட அம்மாலையைத்தான் கலியாணப் பரிசாக உனக்குக் கொடுக்க நான் தீர்மானித்து விட்டேன். அவ்விலையுயர்ந்த வைரமாலை உன் அழகிய கழுத்தில் மிளிர்வதே பொருத்தமானதாக இருக்கும். பெண்ணரசியான உன்னை அலங்கரித் திருப்பதால் அவ் வைரமாலைக்கே பெருமையாகும். வேண்டுமானால் பார்த் துத்தான் விடுவோமே! அம்மாலையை அணிவதால் உன் பேரழகு சிறக்கிறதா? அல்லது உன் கழுத்தி லிருப்பதால் அம்மாலையின் அழகு அதிகரிக்கிறதா? என்று" எனக் கூறியவண்ணம், ரமணி சிறிதும் எதிர்பாராத வகையில் தன் கையி லிருந்த வைரமாலையை அவளது கழுத்தில் அணிந்துவிட்டான்.

ரமணி நாணத்தால் முகஞ் சிவப்புற்று தலை குனிந் தாள். அந்நிலையில் அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. விவரிக்க வொண்ணாத உணர்ச்சி வயப்பட்டிருந்த அவள், கலியாண சுந்தரன், "இருள் சூழ்ந்து விட்டது; நாம் போக லாம்" என்று அழைத்தபிறகே, தன் நிலை யடைந்து எழுந்து, அவனைப் பின் தொடர்ந்தாள்.

## எட்டாவது அதிகாரம்

### சரசாங்கியின் சாகஸச் செயல்

மறுநாள் ஹம்ஸ தமயந்தி ரமணியைக் கௌரவிக்க வேண்டி, ஒரு பெரிய விருந்தை யேற்பாடு செய்திருந்தாள். தனக்கு வேண்டியவர்களில் முக்கியமான சிலரையும் அவள் விருந்துக்கு அழைத்திருந்தாள். எனவே, சம்பிரமமாக அவ் விருந்தை நடத்தவேண்டி, அவளும் அவளது சகோதரிகளும் தடபுடல் பண்ணிக்கொண் டிருந்தனர். அதனால் அவ்வீடு அமளிப்பட்டுக்கொண் டிருந்தது.

இதனிடையே, கிழவி சரசாங்கியும், தாமோதரம் பிள்ளையும் தனியிடத்தில் கூடிக் 'குசு குசு'வென இரகசியம் பேசிக்கொண் டிருந்தனர். அவர்களது அந்தரங்கப் பேச்சு ரமணியைப் பற்றியதுதான் என்று நாம் கூறாமலே வாசகர்கள் அறிந்துகொள்வர். ரமணி கலியாண சுந்தரனுடன் அந்நியோந்நியமாகப் பழகுவது அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே பிடிக்கவில்லை. இவர்களுடைய தொடர்பை எவ்விதமாயினும் அறுத்துவிட வேண்டுமென்று அவர்கள் இந்த நாலைந்து நாட்களாகவே முயன்று வந்தனர். கலியாண சுந்தரனைத் தனியாகப் பார்த்து அவனைப் பயமுறுத்தி மருட்டி விரட்டிவிட வேண்டுமென்றும் எத்தனித்தனர். ஆனால், இதெல்லாம் பலிதமாகவில்லை. ரமணியிடம் அவர்களுக்கிருந்த பயமே அவர்கள் எண்ணிய சூழ்ச்சியை நிறைவேற்ற முடியவில்லை.

சரசாங்கி உலகாநுபவம் நிரம்பப் பெற்றவளாதலால்! நாளுக்கு நாள் ரமணிபால் ஏற்படும் மாறுதலையும் போக்

கையுங் கண்டு, காரியம் வெகுதூரம் மிஞ்சிப்போய் விட்ட தென்று அறிந்து கொண்டாள். எனவே, அவள் பதை பதைப்போடு தாமோதரம் பிள்ளையை நோக்கி, "அடே, தாமு! விவகாரம் வெகு தூரத்துக்கு முற்றிப் போய் விட்டது. ரமணி நம் பிழைப்பில் மண் போட்டுவிட்டாள். அவளால் கூட கோபுரம், மாடமாளிகையெல்லாம் பெற்று இந்திரபோகம் அநுபவிக்கலாம் என்று நாம் கட்டியிருந்த மனக் கோட்டைகளையெல்லாம் அவள் இடித்துத் தள்ளத் தீர்மானித்து விட்டாள் என்றே அவளது நடத்தையிலிருந்து தெரிகிறது.—அந்தப் பையனோடு அவள் கூடிக் கும்மாளமடிப்பதைப் பார்த்தால், அவன் அவளுக்கு மந்திரம் போட்டு மயக்கி விட்டானென்றே தோன்றுகிறது. இல்லாவிட்டால், பெரிய பெரிய ராஜாதி ராஜர்களுக்கெல்லாம் தீண்டா நெருப்பாக இருந்துவந்த இவள் ஒன்றுமற்ற ஒருவனோடு கொஞ்சிக் குலாவுவாளா?" என்று நீட்டிப் பேசிக்கொண்டே போனாள்.

தாமோதரம், "அதற்கு என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்? நானும் தான் என்னென்னமோ பண்ணிப் பார்க்கிறேன். முடியவில்லையே!" என்று கவலையோடு கூறினார்.

சரசாங்கி, "என்ன செய்வதென்றா என்னைக் கேட்கிறாய்? நீ உதவாக்கரை. உன்னால் ஒரு பிரயோஜனமுங் கிடையாது. ரமணியை அவள் போக்கில் விட்டுவிட்டால் நம் கதி என்னவாகுமென்று உனக்கு இன்னமுந் தெரியவில்லையே!......முன்னையாகிலும் நம் விருப்பப்படி வேசைத் தொழிலில் ரமணி ஈடுபடாவிடினும், அவளை நச்சி வருபவர்களிடமும், மற்றவர்களிடமும் இருந்து பணத்தைத் தட்டிப் பிடுங்கி நமக்கு அளித்து வந்தாள். அதனால் நாம் பழைய

படி நான்கு பேரிடையே கௌரவமாகவும் யாதொரு குறை வுமின்றிச் சுகமாகவும் காலங்கழித்து வந்தோம். இப்போது இருக்கும் நிலையில் அப்பையன் பேச்சைக் கேட்டு, காதல் கீதல் என்று சொல்லி வேறு வழியில் திரும்பிவிட்டால், அப்புறம் நாம் நடுத் தெருவில்தான் நிற்கவேண்டும். கிழவி நான் எப்படியாகிலும் போகிறேன். இன்றோ நாளையோ நான் சரகப் போகிறவள். கடைசியில் நீதான் திண்டாட வேண்டும். அதனால் ஜாக்கிரதை.................” என்று கூறி எச்சரித்தாள்.

தாமோதரம் ஆத்திரத்தோடு “என்னைத் தான் மருட்டு வாய்; அந்தச் சிறுக்கியை அடக்க உனக்கு வகையில்லை. என் உயிரை வாங்கித் தொலைக்கிறாய். உன் ஜம்பப் பேச்சை யெல்லாம் அவளிடங் காட்டேன். அதற்குத் தைரியங் கிடையாது. அவளைக் கண்டால் ஓடிப் பதுங்குகிறாயே!” என்று வெறுப்பாகக் கூறினார்.

சரசாங்கி கோபத்தால் கொதித்தவளாய், “நீ மாத்திரம் சூரப் புலியாக்கும். ஒரு சாண் பெண்ணுக்குத் துடை நடுங் கித் துதி செய்கிறாய். பேச்சைப் பார்; பேச்சை...தடிக் கழுதைக்கு...” என்று கூறித் தன் கூனல் முதுகை மிடுக்கா கத் திருப்பிக்கொண்டு நடக்க முயன்றாள். தாமோதரம் தன் தாயின் கோபத்தைக் கண்டு நடுங்கி விட்டார். எனவே அவர், “அம்மா! அம்மா!! கோபத்தால் என் னமோ உளறி விட்டேன்........”என்று கூறிக்கொண்டே அவளைப் பின் தொடர்ந்து போகவொட்டாது தடுத்தார்.

சரசாங்கி நின்று, “நமக்குள் சண்டை போட்டுக் கொண்டிருப்பதற்கு இது சமயமில்லை. தாமு! நீ போய் ரம்ணியை நான் கூப்பிடுவதாக அழைத்து வா. நான் அவ ளைத் தந்திரமாகவே நம் வழி திருப்பப் பார்க்கிறேன். முத

லில் அவளிடமிருக்கும் அந்த வைரமாலையை நாம் வாங்கி விடவேண்டும். இல்லாவிடில் அவள் சிறுபிள்ளைத் தனமாக எங்காகிலும் வெளிக்குக் காட்டிச் சங்கடத்தில் மாட்டிக் கொள்ளப்போகிருள்! எனக்கு இதே பெரிய கவலையாக இருக்கிறது.—நீ ஒரு காரியஞ்செய். ஹம்ஸதமயந்தி இன்று விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிரு, ளல்லவா! அதற்குச் சில கனவான்கள் வருவார்கள். அவர்க ளிடையே அந்தப் பையனை புரளி பண்ணி அவமானப்படுத்தி யனுப்பிவிட வேண்டும். அங்கு ஏற்படுகிற அவமானத்தில் அவனே சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடவேண்டும். அப்படியு மில்லையென்ருல் ஆளைப் பைசல் செய்துவிட வழி செய்ய வேண்டும். தெரிகிறதா!............நீ இப்போது போய் அவனை அழைத்துவா" என்று கூறியனுப்பினுள்.

தாமோதரம் பிள்ளை அவ்விதமே ரமணியின் அறையை நோக்கி நடந்தார். அறையில் ரமணி இல்லை. ஆகவே, அவர் கலியாணசுந்தரம் இருக்கும் பக்கத்தறைக்குப் போனுர். அவ்வறையண்டை போனதும், எப்படி கதவைத் திறந்துகொண்டு உள்ளே போவது என்ற யோசனையோடு சிறிது தயங்கி நின்ருர். உள்ளே கலியாணமும் ரமணியும் குதூகலமாகப் பேசிக்கொண்டிருப்பது அவர் காதில் நன்கு விழுந்தது. அச்சமயம் அவர்கள் என்ன நிலைமையி லிருக்கி ருர்கள் என்று அறிய அவருக்கு ஆவலுண்டாயிற்று. எனவே, அவர் அவ்வறையில் ஒரு சிறிது திறந்திருந்த மேல் ஜன்னல் வழியாக உள் நோக்கினுர். அப்போதுதான் ஒரு சோபாவில் கலியாண சுந்தரனுடன் அமர்ந்து உரை யாடிக் கொண்டிருந்த ரமணி விடைபெற்றுச் செல்லும் நோக்கத்தோடு எழுந்தாள். கலியாணமும் அவளுடன் எழுந்து அவள் பிரிவைச் சகிக்க மாட்டாதவன்போல்

அவளது மெல்லிய கைகளைப் பற்றிக்கொண்டு ஏதோ கூற முயன்முன். இக்காட்சியைக் காண தாமோதரம் பிள்ளைக்குச் சகிக்கவில்லை. கோபத்தோடு பற்களை நறநறவெனக் கடித்தார். அவரது மீசை துடித்தது. எனினும், என்ன செய்வது? ரமணியின் முன் இவரது அதிகாரம் செல்லாதே! ஆகவே, அவர் நகர்ந்து பழையபடி கதவண்டை வந்தார். தன் பயங்கொள்ளித்தனத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாது சிறிது அமர்த்தலாகவே கதவின்மீது கை வைத்தவண்ணம், "ரமணி! ரமணி!!" என்று கூப்பிட்டார்.

கலியாணமும், ரமணியும் திடுக்கிட்டனர். என்ன இருந்தாலும் களவொழுக்கத்தில் இருப்பவர்க ளல்லவா? பய முண்டாவது இயற்கைதானே! இருப்பினும், ரமணி தன் இயற்கை மனத் திண்மையோடு, "யாரது?" என்று கேட்டுக்கொண்டே கதவைத் திறந்தாள்.

"ஹிஹிஹி! நான்தான், ரமணி! அம்மா உன்னை என்னமோ பார்க்கணுமாம்; கூப்பிடுகிருள்" என அசட்டு நகை நகைத்தவண்ணம் தாமோதரம் பிள்ளை கூறினர்.

ரமணியின் முகம் சடக்கென மாறியது. சரசாங்கியின் சமாசாரத்தை அவள் நன்கு அறிந்தவ ளல்லவா! எதுவாயிருப்பினும் சமயமறிந்து தன்னை நேரில் வந்து கண்டு பேசுபவள், இப்போது தன்னைக் கூப்பிடுகிருள் என்ருல், அதில் ஏதோ விஷயமிருக்கிறது என்று ஊகித்தறிந்தாள். அவளுடன் கட்டாயம் போராட்டம் செய்ய வேண்டி நேரிடும் என்றும் எதிர்பார்த்தாள். இதை எண்ணியபோது அவள் உடல் நடுங்கியது. இதுவரை சரசாங்கியையும், தாமோதரத்தையும் நடுங்க வைத்து வந்த ரமணி காதல் விவகாரம் ஏற்பட்டதிலிருந்து அவர்களுக்குப் பயப்பட ஆரம்பித்தாள். இதனுலேயே அவள் அவர்கள் கண்

களில் கூடுமானவரை படாமலும், அவர்களாகப் பேசவந்தாலும் அதற்கு இடங்கொடாமலும் இருந்துவந்தாள். இப்போது சரசாங்கி வலுவந்தமாகக் கூப்பிடவும், என்னதான் கூறுகிருள் ; பார்ப்போம் என்ற எண்ணத்தோடு, ரமணி கலியாணத்தை அங்கேயே இருக்கும்படி சைகை செய்துவிட்டு மாமாவைப் பின் தொடர்ந்தாள்.

ரமணியின் வருகையைத் தூரத்தேயே கண்டுவிட்ட சரசாங்கி, "வா, அம்மா! வா!! எங்கே கண்ணிலேயே படமாட்டேன் என்கிருயே!" என்று எதிர்கொண்டு வரவேற்கலானுள்.

அவளது சாகஸச் செயல் ரமணிக்குப் பின்னும் பீதியைக் கொடுத்தது.

"ரமணி கண்ணு! உடம்புக்கென்ன? முகம் ஒரு மாதிரியாக இருக்கிறதே!" என்று பரிவு காட்டிக் கேட்டாள் சரசாங்கி.

ரமணி சிறிது ஆத்திரத்தோடு, "எனக்கு ஒன்றுமில்லே ;—என்னே எதற்காகக் கூப்பிட்டாய்? சொல்; சீக்கிரம்" என்ருள்.

சரசாங்கி :—"துரைசானிக்கு என்ன இவ்வளவு கோபம்? எப்போதும் உனக்கு அவசரந்தானு?— நாம் எப்போது சென்னேக்குப் போவது என்று கேட்க........"

ரமணி :—அதுதான் நாளேக்குப் புறப்படப் போவதாகக் கூறினேனே! ஒன்றுந் தெரியாததுபோல் கேட்கிருயே. பாட்டி, உன் சாகஸத்தை என்னிடம் கூடவா காட்டவேண்டும்?"

சர :—"எப்போ புறப்படுவது என்று கேட்பது கூடவா சாகஸம்?—உம் ; என் தலேவிதி........அதிருக்கட்

டும்; அவர் கூடவா நம்முடன் வரப்போகிருர்?—ஆமாம்; அந்தப் பிள்ளை யார்?"

ரமணி:—(ஆத்திரம் பொங்க) "அவர் யாராய் இருந்தால் உனக்கென்ன? கூப்பிட்ட காரணத்தைக் கூறுவதை விட்டு என்னமோ உளறுகிருயே!"

சர:—"இல்லை, நீ வைரமாலை வைத்திருக்கிருயே! அது சம்பந்தமாகத் தகவல் தெரிந்து விட்டால் என்ன செய்வது? இக்காலத்தில் யாரையும் நம்பப்படாது என்று தான் சொல்ல வந்தேன்."

ரமணி:—"பாவம்! எனக்காக இவ்வளவு பரிந்து பேசுகிருயே! அதுவே போதும்—அவர் வேறு யாருமில்லை. என் சிநேகிதர்; காதலர்..............."

சர:—(படபடப்போடு) "என்ன? காதலரா! யார்! அந்த ஊர் பேர் தெரியா—ஒன்றுமற்ற வாலிபனு உன் காதலன்....?"

"ரமணி:—ஆம்; அவர்தான் என் காதலர் அவரைத் தான் கூடிய சீக்கிரம் கலியாணம் செய்து கொள்ளப்போகிறேன்...."

சர:—"கலியாணங் கூடச் செய்து கொள்ளப் போகிருயா?...........ரமணி! உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்ன! வேசைகளாகிய நமக்குக் கூடக் கலியாணமா? இவ் விந்தையை எங்கேயாகிலுங் கேட்டிருக்கிருயா? விபசாரத்தையே வாழ்க்கையாகவுடைய நம் குலப் பெண்களை யார் கலியாணஞ் செய்துகொள்வார்கள்?—சுதந்தரமாக இருந்து பெரும் பொருள் சம்பாதிக்க வேண்டியவர்களாகிய நாம் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு வாணுள் முழுதும் அடிமையாக இருப்பது என்பது எவ்வ

ளவு கேவலம்? பெரிய பெரிய ராஜாக்களை—ஜமீன்தார்களை —சீமான்களை யெல்லாம் துச்சமாக நினைத்து அல்லிராணி போலிருந்து வந்த நீ ஒரு பஞ்சைப் பார்ப்பாரப் பயலைக் கட்டிக்கொண்டு அழ ஆரம்பித்திருப்பதுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அவன் உனக்கு மந்திரம் போட்டு விட்டானா, என்ன!—"

சரசாங்கியின் பேச்சைக் கேட்டு, ரமணி திகைப்புற்று நின்று விட்டாள். அவளை யறியாமலே அவளது தேகம் விதிர்ப்புற்றது. இதற்குமுன், சரசாங்கியையும், தாமோ தரத்தையும் எவ்வளவுக் கெவ்வளவு நடுங்க வைத்து வந் தாளோ, அவ்வளவுக்கவ்வளவு இப்போது ரமணி அவர்களை முக்கியமாக சரசாங்கியைக் கண்டு நடுங்கலானாள். சரசாங் கியின் ஒவ்வொரு பேச்சும் அம்புபாய்வதுபோல் ரமணியின் மனதில் பாய்ந்து புண்படுத்தியது. பயத்தோடு ஆத்திரம் ஒரு பக்கம் பொங்கவே, அவளது செவ்விதழ்கள் துடித் தன. "எனக்கா பைத்தியம் பிடித்து விட்டது? இல்லை இல்லை. நீ தான் பணப் பைத்தியங் கொண்டு, இருப்பது போதாதென்று இன்னமும் வாரிக் குவிக்கப் பேயாய் அலைகிறாய்? அப் பாழும் பணத்துக்காக என்னை விலைக்கு விற்க வேண்டு மென்கிறாய்? தூய வாழ்க்கையை மேற் கொள்ள முயலும் என்னை ஈனத்தொழிலில் ஈடுபடுத்த ஏவுகிறாய்? வேசைகள் விவாகஞ் செய்துகொள்ளக் கூடா தென்று எந்த வேதத்தில் விதித்திருக்கிறது? பிரமன் நம் மைப் பிறப்பிக்கும்போதே, "நீங்கள் வேசி குலத்தைச் சேர்ந்தவர்கள்; வேசை மகளிர் விபசாரத் தொழிலை வாழ்க் கையாகக் கொள்ளவேண்டுமேயன்றி, விவாகஞ் செய்து கொள்ளக்கூடா"தென்று போதனை செய்தனுப்பினரா? தக்க ஒருவனுக்கு மனைவியாகிக் கௌரவமாக வாழ்க்கை நடத்து

வது சுதந்தர வாழ்க்கையாக உனக்குத் தோன்றுது அடிமைப் பிழைப்பாகப் புலப்படுகிறது. தங்களது மிருக இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ள வரும் காமவெறியர்களுக்கு—அவர்கள் துஷ்டர்களோ, குடியர்களோ, குஷ்டரோகிகளோ யாராக இருந்தாலும்—அவர்கள் தரும் பொருளைப் பெரிதாகக் கருதி அவர்கள் விருப்பப்படியெல்லாம் உபயோகப் படுத்திக்கொள்ள உடலை ஆட்படுத்தி அல்லது அடிமைப் படுத்தி நிற்பது—மதங்கொண்ட ஆடவர்களுக்குக் 'காமக் கழிவிடங்'களாக இருப்பது—சுதந்தர வாழ்க்கையாகத் தோன்றுகிறது; இல்லையா? மலத்தில் புழுத்த புழுக்களைப் போல, விபசாரத்தில் பிறந்த உனக்கு—விபசாரத் தொழிலையே உயிர் வாழ்க்கையாகக் கொண்ட உனக்கு—மிகக் கேவலமான இவ் விபசார வாழ்க்கை சுதந்தர வாழ்க்கையாகவும், மேன்மையான வாழ்க்கையாகவும் தோன்றுவதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை..............." என்று ஆவேசத்தோடு பேசிக்கொண்டே வந்தவள் தன்னை யாரோ கூப்பிடுவது கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

ஹம்ஸ தமயந்தி தன் இரு சகோதரிகள் பின்னே வர, "ரமணி! ரமணி!!" என்று அழைத்துக்கொண்டே வந்தவள் சிறிது தூரத்தில் வரும்போதே, ரமணி சரசாங்கியோடு கோபமாகப் பேசுவதையும், சரசாங்கியும், தாமோதரமும் நடுங்கி நிற்பதையுங் கண்டு தயங்கி நின்று விட்டாள். அவர்கள் ஏதோ தனிப்பட்ட விஷயங்களில் தலையிட்டுப் பேசிக்கொண் டிருக்கும்போது, தான் போவது உசிதமல்லவெனக் கருதி அவள் திரும்பிவிட முயன்றாள்.

வேற்றிடத்தில் வந்து விபரீதம் விளைத்துக் கொண் டிருப்பது அநுசிதமானதெனக் கருதிய ரமணி வெட்கத்தால் ஹம்ஸதமயந்தியை ஏறிட்டு நோக்கவுங் கூசினாள்.

தன் உணர்ச்சியை மீறவிடக் கூடிய ஆபாச நிலையை யுண்டாக்கிய சரசாங்கியின்மீது அவளுக்கு அளவிலாத கோபம் ஏற்பட்டது. இதற்குள் ஹம்ஸ தமயந்தி தங்களை நோக்கி வந்து திரும்பிப் போவதைத் தனது கபடக் கண்களால் கண்டுவிட்ட சரசாங்கி, அவளை நோக்கிக் கைகாட்டி நிறுத்திய வண்ணம் அசட்டு நகை நகைத்து, "என்னம்மா! ஹம்ஸா! வாயேன்........" என்று கூப்பிட்டுக் கொண்டே போனாள். ரமணி எங்கு தன்மீதும் சீறி விழுவாளோ எனக் கருதி எதிரில் நிற்கவும் அஞ்சிய தாமோதரம் இதுதான் சமயமென்று தன் தாயுடனேயே மெல்ல நழுவலானார்.

ஹம்ஸ தமயந்தி அப்படியே நின்று, "இல்லை. எல்லாரும் வந்துவிட்டார்கள். நம்ம ரமணியையும், உங்களையுங் கூப்பிட வந்தோம். நீங்கள் என்னமோ பேசிக்கொண்டிருக்கவே.................." என்று இழுத்தாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. குழந்தை இப்படியே குற்றாலம் போகவேண்டுமென்று சொன்னாள். நான், 'இது காலமில்லை; இன்னொரு முறை போகலாம்' என்றேன். அதற்கு ரமணி...........ரமணி குழந்தை பருவத்தில் எவ்வளவு துடுக்காகவும், பிடிவாதமாகவும் இருந்தாளோ அதே குணந்தான் இவ்வளவு வயதாகியும் இருக்கிறது........ உம்........இதோ நாங்கள் வந்துவிட்டோம். ரமணி, வா அம்மா; போகலாம்........ஏன் ஹம்ஸா! அந்தப் பிள்ளையாண்டானைக் கூப்பிட்டீர்களா?........இன்னும் இல்லையா? ........அப்படியானால் ஏ தாமு! நீ போய்க் கலியாணத்தைக் கூட்டி வா" என்று கண் சிமிட்டியவாறு கூறினாள்.

இவளது சாகஸப் பேச்சையும் தளுக்கையுங் கண்டு ஹம்ஸதமயந்தி புன்னகை கொண்டாள். பிறகு அவள்

ரமணியை எதிர் நோக்கிச் சென்று, "ரமணி, வா அம்மா! போகலாம்" என்று கூறியவாறு அவளது அழகிய கரங்களைப் பற்றி யழைத்தாள். அவளது சகோதரிகளும் அன்பும் ஆர்வமுந் ததும்பும் முகத்தோடு ரமணியை நோக்கினர்.

ரமணி இதற்குள் தனது முகவேறுபாட்டை மாற்றிக் கொண்டு நகைமுகத்தோடு, "இதோ வந்து விட்டேன்" என்று கூறி அவர்களோடு கலந்து சென்ருள்.

ஹம்ஸதமயந்தி ரமணியை விருந்துக்கு வந்திருந்த கனவான்களுக்கும் பெண்மணிகளுக்கும் அறிமுகப்படுத்தி வைத்தாள். அவர்களில் பெரும்பாலார் ரமணியின் பேரழகையும், கம்பீரத் தோற்றத்தையுங் கண்டு பிரமிப் படைந்தனர். அவளைக் கண்டவுடனே அவர்களுக்கெல்லாம் ஒருவித மதிப்புண்டாயிற்று. இச் சமயத்தில் தாமோதரம் கலியாண சுந்தரனை யழைத்து வந்தார்.

எல்லோரும் விருந்துண்ண அமர்ந்தனர். ஹம்ஸ தமயந்தியும் அவளது சகோதரிகளும் ரமணியைத் தங்கள் குலத்தை விளக்க வந்த தேவியாகக் கருதியமையால், ஒவ்வொரு செயலிலும், மொழியிலும் அவளிடத்து தங்களுக்குள்ள அன்பையும் மதிப்பையும் வெளிப்படுத்தி வந்தனர். இந் நிலைமை மற்றவர்களுக்குப் பொருமையைக் கூட உண்டுபண்ணியது என்ருல், அது மிகையாகாது. சரசாங்கி உண்மையிலேயே இதைக் கண்டு அருவருப்பு கொண்டாள். கண்டவர்களெல்லாம் ரமணியிடம் அன்பும், நட்புங் கொள்வதால் தான் அவள் அகம்பாவமும் அஞ்சாமையுங் கொண்டு திரிகிருள் என்று அக் கிழவி கருதினுள். அவள், ரமணியையும் கலியாணசுந்தரனையும் மாறி மாறி விஷமத்தோடு நோக்கிக் கொண்டிருந்தாள். அவர்கள் குதூகலமாகப் பேசிக் கொள்வது ஒவ்வொன்றும் அவளுக்கு வயிற்

றெரிச்சலைக் கிளப்பியது. "அவர்கள் தொடர்பை எவ்வாறு அறுப்பது?" என்பதுபற்றி அவளது மனம் தீவிரமாக யோசித்த வண்ண மிருந்தது.

விருந்து சம்பிரமமாக முடிந்தது. பின்னர், கூடத்தில் விரிக்கப்பட்டிருந்த ரத்தின கம்பளத்தின்மீது தாம்பூலம் போட்டுக்கொள்ள அனைவரும் அமர்ந்தனர். இதனிடையே சரசாங்கி தாமோதரத்தின் காதில் ஏதோ 'குசு குசு' வென இரகசியம் ஓதினள்.

விருந்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் ரமணியோடு உரையாடி மகிழ்வதையே தங்கள் நற்பேருகக் கருதி 'நான் முந்தி ; நீ முந்தி' என மேல் விழுந்து பேச முயன்றனர். பெண்மணிகள் கூட ரமணியின் இனிய மொழியைக் கேட்பதில் ஆர்வங் காட்டினர் என்ருல், எல்லோரும் ரமணியின்பால் எவ்வளவுதூரங் கவர்ச்சி கொண்டிருக்கின்றனர் என்பது நன்கு புலனுகும். ரமணி கலியாண சுந்தரனேடு உற்சாகத்துடன் உரையாடுவது மற்றவர்கள் கவனங்களைக் கவர்ந்தது. மேலும், அவன் யார் என்று ஆரம்பத்திலிருந்தே அறிய பலர் ஆவல் கொண்டனர். பெண்களில் சிலரது கடைக்கண் நோக்குகள் அவன்மீது பலமாக விழுந்தன. கலியாணி சுந்தரன் ரமணியோடன்றி, மற்றவர்களிடம் இரண்டொரு வார்த்தைகளுக்கு மேல் அதிகமாகப் பேசவில்லை. அமர்த்தலாகவே இருந்தான். அவ்விருந்துக்கு வந்திருந்தவர்கள் பலர் பெரிய பணக்காரர்களும் உயர்தர உத்தியோகஸ்தர்களுமாகவே இருந்தாலும், அவர்களது மனப் போக்கும் தோரணையும், கலியாணசுந்தரனுக்குப் பிடிக்கவில்லை. ஸ்ரீமான்களும், உத்தியோகஸ்தர்களுமாயுள்ள அவர்கள் பெரும்பாலும் தாங்கள் வைப்பாக வைத்திருக்கும் கணிகையர் அல்லது காதற் கிழத்தியர் சகிதமே வந்திருந்தனர்.

எத்தகைய தகுதியுடையவர்களாயினும், எவ்வளவு பெரிய வர்களாயினும் தாசி யுறவுடையோர் மதிக்கத் தக்கவர்க ளல்லர் என்பது அவனுடைய எண்ணம். ஆனல், இவன் ரமணியிடஞ் சிநேகங்கொண் டிருக்கிருனே யென்ருல், அது வேறு விஷயம். ரமணியை அவன் தாசிப் பெண்ணுகக் கருதவில்லை; அவளாகத் தான் தாசிமகள் என்று அழுத்த மாகக் கூறிக் கூட, அவனது மனம் அதை ஒப்புக்கொள்ள இசையவில்லை. ஏனென்ருல், அவளிடங் கேவலம் தாசிக ளிடங் குடிகொண்டிருக்கும் இழிந்த குணஞ் செயல்கள் ஒன்றையும் அவன் காணவில்லை. உண்மையிலேயே அவள் உயர் குணங்களும், செயல்களும் உடையவளாய் இருக் கிருள் என்பதை யாரும் மறுக்க முடியாதல்லவா! தீமை யைக் கண்டால் சீறுவதும் நன்மையைக் கண்டால் நகை முகத்தோடு வரவேற்பதும் அவளது இயற்கையா யமைந் திருப்பதை அவளுடன் பழகும் எவரும் ஒரு நொடியில் அறிந்துகொள்வர். ஆதலால், தீய சகவாசத்தை வெறுக் குங் கலியாணசுந்தரன் ரமணியிடத்தில் கட்டுண்டு பெரு மதிப்பு கொண்டிருப்பதில் வியப்பில்லை யல்லவா!

விருந்தினரில் ஒரு கனவான் கலியாணசுந்தரனை ஒரு விதமாக நோக்கிய வண்ணம், “நமது நண்பர் நம்மூரில் இருப்பவராகக் காணப்பட வில்லையே! இவர் எந்த ஊரோ! இவரது நாமதேயத்தை நாம் அறியலாமோ?” என்று கேட்டார்.

ஹம்ஸதமயந்தி, “இவரா? இவர் நமது நண்பர்தான். சென்னையிலுள்ளவர்...........” என்று கூறி நிறுத்தினுள்.

இதற்குள் தாமோதரம்பிள்ளை குறுக்கிட்டு, “இவர் எங்களுக்கு மிகவும் வேண்டியவர். அதிலும் ரமணிக்கு.... ...........(ரமணியின் முக மாறுதலைக் கண்டுவிட்டுத் தாம்

சொல்ல வந்ததை அடக்கிக்கொண்டு)...........அவ்வளவெல்லாம் ஏன்? எங்கள் குடும்ப..........." என்று இழுத்தார். ரமணி உக்கிரமாக நோக்கிய பார்வையே அவரை அவ்வளவோடு பேச்சை நிறுத்தச் செய்தது. தாமோதரம் எங்கு அசட்டு பிசட்டென்று ஏதேனும் உளறிக் கொட்டி கலியாணசுந்தரனுக்கு வெறுப்பை யுண்டாக்குவாரோ என்றுதான் ரமணி ஆத்திரத்தோடு அவரைக் குறிப்பாக நோக்கினாள்.

மற்றொரு கனவான், "நண்பரது பெயரென்னவோ?" என்று வினவினார்.

சரசாங்கியின் தூண்டுதலின்படி கலியாணசுந்தரத்தை எவ்விதமேனும் அவமானப்படுத்தி யனுப்பிவிட வேண்டுமென்று கருதிய தாமோதரம் ரமணியின் உருட்டலுக்கு இப்போது பயப்பட்டுக் கொண்டிருப்பதில் பயனில்லை என்று கருதி மீண்டும் பேசத் தொடங்கி, "அவர் பெயரா? அவர் பெயர் கலியாணசுந்தரம்..........." என்று கூறினார்.

"கலியாணசுந்தரம் என்றால்...........? முதலியாரா? பிள்ளையா? ஐயரா? எந்த வகுப்பைச் சேர்ந்தவர்?........" என்று முன் பேசிய கனவானே கேட்டார்.

இதற்கு தாமோதரம் பதில் சொல்ல வாயெடுப்பதற்குள் மற்றொரு பிரமுகர், "அவரைப் பார்த்தாலே தெரியவில்லையா, எந்த ஜாதியைச் சேர்ந்தவரென்று? அவர் பிராம்மணர்தான். என்ன சார், நான் கூறுவது சரிதானே!" என்று தாம் ஏதோ பெரிய அற்புதத்தைக் கண்டுபிடித்து விட்டதுபோல் பெருமையோடு தாமோதரத்தைப் பார்த்துக் கேட்டுவிட்டு எல்லோரையும் ஒருவிதமாக நோக்கினார்.

கலியாணசுந்தரன் முகத்தைச் சுளித்தான். மற்றவர்கள் தன்னைப்பற்றிப் பேசுவது அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ரமணிக்கோ அதற்குமேல் ஆத்திரம் பொங்கியது. அவள் கோப நகை நகைத்து, "எப்படியோ கண்டு பிடித்துவிட்டீர்களே! நீங்கள் மிகவும் கெட்டிக்காரர்கள் தான்—ஆமாம்; அவரைப் பார்த்தாலே பிராம்மணர் என்று தெரிகிறது என்றீர்களே! அவர் பிராம்மண குலத்தைச் சேர்ந்தவர் என்று அவரது நெற்றியிலா எழுதி வைத்திருக்கிறது? அல்லது ஒவ்வொருவர் நெற்றியிலும் இவர்கள் இன்னின்ன இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொறித்து வைத்தா இருக்கிறது? அல்லது கடவுள் படைப்புக் காலத்திலேயே ஒவ்வொருவருக்கும் ஜாதி முத்திரை போட்டு அனுப்புகிறாரா? எங்கள் மனிதர்கள் தான் இடை நடுவே கடவுள் பெயரால் தாசி என்று முத்திரை போட்டு, பொட்டு கட்டுகிறார்கள்..........." என்று எளனமாகவும் ஆவேசமாகவும் பேசலானாள்.

ரமணியின் பேச்சைக் கேட்டு மேற்படி கனவான் வெட்கித் தலை குனிந்தார். மற்றொரு கனவான், "குழந்தை சொல்வது நியாயந்தான். மனிதர்கள் என்றால் எல்லாம் மனிதர்கள் தான். எல்லாருக்குந் தான் கண் இருக்கிறது; மூக்கு இருக்கிறது; வாய், கை, கால் எல்லாம் இருக்கின்றன. இதில் என்ன சார், வேற்றுமை?—அந்தக் காலத்தில் நமது பெரியவர்கள் என்னமோ பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று பேத மேற்படுத்தி விட்டுப் போனார்கள். நான்கு சாதி நாலாயிரஞ் சாதிகளாய் நம்மவர்கள் நாளடைவில் பெருக்கி விட்டார்கள். அதற்குத் தகுந்தபடி ஆசார அனுஷ்டானங்களை ஏற்படுத்தினார்கள். அவைகளை யெல்லாம் இப்போது எண்ணிப் பார்த்தால்

அர்த்தமும் விளங்கவில்லை; ஆபாசமாகவும் காணப்படு கின்றன. இந்த அர்த்தமற்ற வேற்றுமைகளையும், ஆசார அனுஷ்டானங்களையுங் கண்டுதான் அயல் நாட்டார் நம்மை எள்ளி நகையாடுகிறார்கள். அடிமைகளாகவும் அடக்கி யாண்டு வருகிறார்கள்..........." என்று சரமாரியாகப் பேசிக்கொண்டே போனார்.

வேறொரு கனவான் இடைமறித்து, "அதெல்லாம் ஒன்றுமில்லை, சார்! நமது முதலியார் உலக சம்பிரதாயத்தை யொட்டி அவர் பிராம்மணரா யிருக்க வேண்டுமென்று அநுமானத்தோடு கூறினரே யொழிய, பேதங் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு சொல்லவில்லை, சார்!........ முன்னராயினும் இவர்கள் இன்னின்ன வகுப்பைச் சேர்ந்த வர்கள் என்பதை அவர்களது நடை யுடை பாவனைகளால் சுலபமாகத் தெரிந்துகொள்ள ஏது விருந்தது. இப்போது தான் ஐரோப்பிய நாகரிகம் ஆதிக்கங் கொண்டு, எல்லாம் ஒரே 'ஹாட் பூட்', கிராப் மயமா யிருக்கிறதே! எவரை யும் இவர் இன்ன வகுப்பார் என்று கூற முடியவில்லையே! அவ்வளவு ஏன்? இவர் தமிழரா? இந்துவா? முஸ்லிமா? கிறிஸ்தவரா? அல்லது ஐரோப்பியரா? என்று கண்டு பிடிக்கவே முடியவில்லையே! எல்லாரும் இப்போதுதான் சீமையிலிருந்து கப்பலில் வந்திறங்கிய துரைகள் போல வல்லவா காணப்படுகிறார்கள்? கலிகாலம் அவ்வளவு தூரம் மாறுதலை யுண்டுபண்ணி விட்டிருக்கிறது. காலச்சக்க ரத்தின் வேகம் இன்னும் என்னென்ன கோலாகலத்தை யேற்படுத்துமோ?" என்று ஆற்றாமையோடு கூறினர்.

இன்னொரு கனவான், "பேச்சு எங்கேயோ ஆரம் பித்து எங்கேயோ போய்விட்டதே! அதிருக்கட்டும் சார்! புதுசாக ஒரு மனிதரைப் பார்த்தால் அவரைப் பற்றித்

தெரிந்துகொள்ள எல்லாருக்கும் அவா ஏற்படுவது இயற்கை யல்லவா! அம் முறையில்தான் நம் நண்பர் கலியாணசுந்தரம் ஐயரைப்பற்றி நாமெல்லாம் பேசத் தொடங்கினேம்.—என், மிஸ்டர் கலியாணம்? நீங்கள் என்ன உத்தியோகத்தி லிருக்கிறீர்கள்?..........." என்று கேட்டார்.

கலியாணம் அதைக் கவனியாதது போலிருந்தான். இதற்குள் தாமோதரம் குறுக்கிட்டு, "எங்கள் கோஷ்டியில் எப்போதும் இருப்பவருக்கு என்ன உத்தியோகம் இருக்குமென்று நினைக்கிறீர்கள்?..........." என்று குறும்பாகக் கூறினர்.

சரசாங்கி பொக்கை வாயை யசைத்துப் புன்னகை கொண்டாள். ஹம்ஸதமயந்தியோ இவ் வம்பளப்பினுல் ஏதேனும் விபரீதம் நேருமோ என மனங் குழம்பினுள். ரமணி சீறியெழ முயன்ருள். இதற்குள் கலியாணசுந்தரன் பெருங் கோபத்தோடு, "என்ன சொன்னுய்?" என்று கைகளை முஷ்டி செய்துகொண்டு எழுந்தான்.

"பின் என்ன! உனக்கு வேலை யிருந்தால், எங்களோடு சுற்றித் திரிவாயா? மாமா வேலை செய்ய உன்னை நாங்கள் அழைத்தோமா, என்ன!...........கனவான்களே! இந்த மகாநுபாவரைப்பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள ஆவல்கொண்டீர்க ளல்லவா! அவரைப்பற்றி முக்கியமான விஷய மொன்றை உங்களுக்குக் கூறுகிறேன். இவர் ஒரு குற்றவாளி! சென்னையில் ஒரு நகைக் கடையில் வைரமாலை யொன்றை அடித்துக்கொண்டு ஓடிவந்து எங்களோடு வலிய வந்து..........." என்று எழுந்து சற்று பின்வாங்கி நின்றவாறு பேசிவந்தவர் கலியாணசுந்தரன் தன்னை ஓங்கிக்

குத்த வருவதைக் கண்டு பேசுவதை நிறுத்திவிட்டு ஓட ஆரம்பித்தார்.

தன்னைத் தாமோதரம் அவமானமாகப் பேச ஆரம்பித்த முதலெடுப்பிலேயே கோபந் தாங்காது எழுந்தவன், ரமணியைக் கருதித் தன் சினத்தை அடக்கிக் கொண்டான். ஆனால், தாமோதரம் அத்துடன் நில்லாது மேலும் அளவு கடந்து போவதைக் கேட்டுப் பொறுக்காது அவர் மீது பாய்ந்தான். இதற்குள் மற்றவர்கள் அவனைப் பிடித்துக் கொண்டு சமாதானப்படுத்த முயன்றனர். ரமணி, ஹம்ஸ தமயந்தி ஆகியவர்களின் நிலைமை விவரிக்க வொண்ணாத விதமாகப் போய்விட்டது. சரசாங்கி ஒன்று மறியாதவள் போல் பரக்கப் பரக்க விழிக்கலானாள்.

தாமோதரம் பிள்ளை தன் தாயின் ஏவுதலால் அச்சமயம் ஏதோ அசட்டுத் தைரியங் கொண்டு பேசிவிட்டாராயினும், பிறகு பெரும் பீதி கொண்டு விட்டார். கைகால் விலவிலக்க அவர் வெளியே ஓடுகையில், அவ்வீட்டு வேலையாள் ஒருவன் எதிரே வந்து, "பெரியம்மாவை யாரோ தேடிக்கொண்டு வந்திருக்கிறார்கள்" என்று அவரிடம் கூறினான். அவனுக்கு உள் நடந்த விஷயம் என்ன தெரியும்?

தாமோதரம் 'இச்சமயத்தில் தன் தாயைத் தேடிக் கொண்டு யார் வந்திருப்பார்கள்?' என்று ஆவலோடு மேலும் நடந்தவண்ணம் நோக்கினார். அப்போது தான் கோச்சு வண்டியிலிருந்து இறங்கிய அம்மையார் தன்னைக் கைலாகு கொடுத்து இறக்கிய தோழியோடு உள் நுழையலானார். அந்த அம்மாளைக் கண்டதும் தாமோதரத்தின் முகம் இன்னும் விகார மடைந்தது. உடனே பரபரப்பாக, வேலைக்காரனை அருகழைத்து, "சேத்தூர் ஜமீந்தாரினி வருகிறார்கள் என்று உள்ளே அம்மாளிடம் சீக்கிரம் போய்ச்

சொல்; ஓடு" என்று மெல்லக் கூறி யனுப்பிவிட்டு, வருகிற அம்மாள் கண்ணில் படாதவாறு இடப்பக்கத்துள்ள அறை யொன்றில் நுழைந்து மறைந்து கொண்டார்.

வேலைக்காரன் உள்ளே போய் ஹம்ஸதமயந்தியிடம், "யாரோ சேத்தூர் ஜமீந்தாரினியாம்; வந்திருக்கிறார்கள் ............" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, சரசாங்கி இதைக் கேட்டுவிட்டுப் பரபரப்போடு, "என்ன! சேத்தூர் ஜமீந்தாரினியா?...........அவர்களா........வந்திருக் கிறார்கள்?" என்று வாய் குழறக் கேட்டாள்.

'வந்திருப்பவர் யார்? சரசாங்கி அவர் வரவைக் கேட்டு இவ்விதம் நடுங்குவானேன்?' என்று தெரியாது ஹம்ஸ தமயந்தி திகைத்தாள். ஆயினும், அவள் விருந்தினரை யெல் லாம் மேன்மாடிக்குப் போகும்படி நயமாகக் கூறித் துரி தப்படுத்தினாள். அவ்விதமே அவர்கள் கலியாணசுந்தரனோடு மேன்மாடிக்குச் சென்றனர்.

ரமணி மட்டும் ஹம்ஸதமயந்தியின் சகோதரிகளுடன் எதிர்த்த அறைக்குப் போகலானாள். இதே சமயத்தில் சேத்தூர் ஜமீந்தாரினி தோழியோடு அங்கு வந்துவிட்டார். அவரை நேரில் கண்டதும், சரசாங்கி மேலும் நடுங்க லானாள். "யாரு! ஜமீந்தாரினியம்மாளா?........நமஸ்காரம். வாருங்கள்...................." என்று கூறினாள். அவளது நா உலர்ந்தது.

# ஒன்பதாவது அதிகாரம்

## மர்மம் வெளியாதல்

சேத்தூர் ஜமீந்தாரினி சரசாங்கியை ஒரு விதமாக நோக்கிப் புன்சிரிப்பு கொண்ட வண்ணம், "ஆமாம்; என்னை அடையாளந் தெரிகிறதா? எங்கே என்னை மறந்து விட்டாயோ என்று அஞ்சி யிருந்தேன். அந்த மட்டும் என் விஷயத்தில் இவ்வளவு தூரமாயினும் தயவு வைத்திருக்கிறாயே!.........." என்று கூறிக்கொண்டே சரசாங்கியண்டை சென்றாள்.

சரசாங்கிக்கு இன்னும் நடுக்கம் நீங்கவில்லை. இருப்பினும், தன்னைச் சமாளித்துக்கொண்டிருந்த அவ் வஞ்சகக் கிழவி ஜமீந்தாரினியின் பேச்சைக் கேட்டதும். திடுக்கிட்டு உதட்டைக் கடித்தாள். 'அடாடா! நாம் சிறிது அவசரப் பட்டு விட்டோமே! ஜமீந்தாரினியை முன் பின் அறியாதவள் போல் நடித்திருந்தால், எதிலும் அகப்பட்டுக் கொள்ளாமல் ஒரே யடி அடித்திருக்கலாமே' என்று தனக்குள் எண்ணி மனவேதனை யடைந்து கொண்டிருந்தாள். பிறகு 'இப்போதுதான் என்ன முழுகிப் போய்விட்டது? பார்த்து விடுவோம் நம்மாலானவரை. திருடனைத் தேள் கொட்டினால் அவன் எந் நிலையி லிருப்பானே, அந் நிலையிலல்லவா அந்தம்மாள் இருக்கிறார்கள்? ஆதலால், ஒரே பிடியாய்ச் சாதித்து விட்டால் அவர்கள் ஒன்றும் நம்மைச் செய்து விட முடியாது..........' என்று தனக்குள்ளாகவே சமாதானஞ் செய்து கொண்டாள்.

இதற்குள் ஜமீந்தாரினி பேசி முடித்ததும், சரசாங்கி மிகச் சிரமத்தோடு பொக்கை வாயைத் திறந்து அங்கொன்

றும் இங்கொன்றுமாக உள்ள ஒன்றிரண்டு பற்களைக் காட்டி, "ஏழையாகிய என் தயவு என்னம்மா உங்களுக்கு வேண்டி யிருக்கிறது? செல்வச் சீமாட்டியாகவுள்ள உங்கள் தயவல்லவா இந்த அடிமைக்கு வேண்டும்?..........." என்று இழுத்தாள்.

ஜமீந்தாரினி எதிர் அறையில் அப்போது தான் நுழையப்போகும் ரமணீயைக் கூர்ந்து கவனித்து விட்டுப் பிறகு சரசாங்கியை நோக்கி, "ஆமாம்; நீ இந்த ஊருக்கு வந்து இரண்டு மூன்று நாட்களாகின்றனவாமே! ஏன் என்னை வந்து பார்க்கவே யில்லை? எஸ்டேட் மானேஜர் சொன்ன பிறகல்லவா எனக்கும் நீ வந்திருப்பது தெரிந்தது? நீ இப்போது கூறியபடி உண்மையிலேயே விஸ்வாசங் கொண்டிருந்தால் என்னை வந்து பார்க்காம லிருப்பாயா? அதுவும் என் குழந்தை காலராவில் போய் விட்டதென்று கடிதம் எழுதிய பிறகு, இந்த நான்கைந்து வருஷங்களாக நீயோ உன் மகன் தாமோதரமோ என்னிடம் வராமலே இருந்தவர்கள், இப்போது ஏதோ காரியார்த்தமாக இங்கு வந்தும் என் ஜமீனுக்கு வராம லிருப்பதற்குக் காரண மென்ன? அப்போதாயினும் மாதம் மாதம் பணம் வந்து கொண்டிருந்தது? இப்போது போனால் என்ன கிடைக்கப் போகிற தென்ற எண்ணமா?........" என்று படபடப்பாகச் சோகத்தோடு பேசினாள்.

ஜமீந்தாரினி உள் நுழையும்போதே மற்றவர்களைக் காட்டிலும் ரமணியையே விடாது பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டதுமே, சரசாங்கி அவ் வம்மையாரை அங்கிருந்து தனி யறைக்கு அழைத்துச் செல்ல முயன்று கொண்டிருந்தாள். மேலும், தாங்கள் பேசுவதை ஹம்ஸ தமயந்தியும் தோழிப் பெண்ணும் கவனிக்கக் கூடாது

என்பது அவளுடைய எண்ணம். ஆகவே, அவள் இம்முறை ஜமீந்தாரினியின் கையைப் பிடித்து, "நின்றுகொண்டே பேசுகிறீர்களே! அந்த அறைக்கு வாருங்கள்; உட்கார்ந்து சாவகாசமாகப் பேசலாம்" என்று சாதுரியமாகக் கூப்பிட்டாள்.

"அதிருக்கட்டும்; இப்போது எதிர் அறைக்குப் போனளே; அந்த குழந்தை யார்?..........." என்று ஆவல் தோன்ற ஜமீந்தாரினி கேட்டாள். தான் அவ்விடத்தினின்றும் நீங்குவதற்குள் ரமணியைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவள் கருதினுள்.

தாமோதரத்தின் குறும்புத் தனத்தால் கலியாணசுந்தரனுக்கு ஆத்திர முண்டாகும் வகையில் ஏற்பட்ட ரஸாபாஸ நிலைமை ரமணியின் மனதைக் குழப்பி யிருந்தது; ஆயினும் எதிர்பாராவாறு விஜயஞ் செய்த யாரோ ஓர் அம்மையாரின் வருகையை யறிந்து சரசாங்கி நடுங்குவதைக் கண்டதும், இவள் அவ்வம்மையார் யார்? என அறிய அவள் ஆவல் கொண்டாள். மேலும் ஜமீந்தாரினியின் களங்கமற்ற முகம் ரமணியின் உள்ளத்தைக் கவர்ந்தது. ஆகவே, அவள் மற்றவர்களைப் போல் தானும் எதிர் அறையில் நுழைவது போல் தயங்கித் தயங்கிச் சென்றுகொண்டிருந்தாள். இந்நிலைமையில் அவ்வம்மையாரே தன்னைப்பற்றி யறிய விரும்பியதைச் செவியுற்றதும் திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினுள்.

இச் சமயத்தில் சரசாங்கி ஆடு திருடிய கள்ளனைப் போல் திருட்டு விழி விழித்து, "அப்பெண்ணு?.......... சொல்கிறேன் வாருங்கள்; தாங்கள் வெகு நேரமாக நிற்கிறீர்களே! பாதம் நோவப் போகிறது? தங்களை நிற்க வைத்துப் பேசுவது எனக்குச் சிறிதும் அழகன்று......... (ஜமீந்தாரினியுடன் வந்த தோழியை நோக்கி) நீ இங்கே

தான் இரு பொண்ணு, அம்மா வந்துவிடுவார்கள்;-வா அம்மா நாம் போகலாம்" என்று கூறி வற்புறுத்தி யழைத்துச் சென்ருள். ரமணியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஜமீந்தாரிணி வேண்டா வெறுப்பாய்ச் சரசாங்கி பின்னே செல்லலாளுள். ஹம்ஸ தமயந்திக்குச் சரசாங்கியின் செய்கைகள் ஒன்றும் புரியவேயில்லை. ஆதலால் தோழிப் பெண்ணை யழைத்துக்கொண்டு தன் சகோதரிகள் இருக்குமிடம் அடைந்தாள். உள்ளே அடி யெடுத்து வைத்திருந்த ரமணி திரும்பவும் வெளியே வந்து ஹம்ஸதமயந்திக்கு வழிவிட்டு, "ஹம்ஸா! அந்த அம்மாள் யார்?......" என்று கேட்டாள்.

ஹம்ஸதமயந்தி, "யாரோ சேத்தூர் ஜமீந்தாரிணியாம் நம்ம பாட்டிக்குப் பழைய சிநேகம் போலிருக்கிறது" என்று கூறிய வண்ணம் தோழிப் பெண்ணை நோக்கிளுள். அவளும் ஹம்ஸதமயந்தி கூறியதை ஆமோதிப்பவள்போல் தலையை யசைத்தாள்.

ரமணி அத்துடன் திருப்தி யடையாமல், "நீங்கள் உள்ளே போங்கள்; நான் இதோ வருகிறேன்" என்று கூறிவிட்டு வேகமாக நடந்து ஆனல் ஓசை கேட்காதவாறு அடியெடுத்து வைத்து நடந்து சரசாங்கி சென்ற அறையை யணுகினுள். அவ்வறை உள்தாளிடப்பட்டிருந்ததை யறிந்ததும் சிறிது தைரியமாக, கதவோரத்தில் நின்று உள்ளே நடக்கும் சம்பாஷணையை யறிய ஒற்றுக் கேட்கலானுள்.

"சாசா! உண்மையாகவா என் மகள்—என் அருமைக் கண்மணி—என் குல விளக்கு—காலராவால் இறந்துவிட்டாள்? உண்மையாகவா? தெய்வத்தின்மேல் ஆணையாகச் சொல். என் அருஞ்செல்வி இறந்து விட்டாளா?"

"என்ன அம்மா! இப்படிப் பன்னிப் பன்னிக் கேட்கிறீர்கள். என் வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கை யில்லையா?—கடவுள் சாட்சியாகச் சொல்கிறேன், அம்மா! அவள் உங்கள் குமாரி மட்டுமல்ல; எனது அருமை மகள் என்றும் அவளைச் சொல்வேன். அவ்வாறு கூறிக்கொள்ள எனக்கு உங்களைக் காட்டிலும் உரிமை யதிக முண்டு. நீங்கள் பெற்றுவிட்டீர்களே யொழிய, நானல்லவா ஈ எறும்பு நாடாதவாறு கண்ணுங் கருத்துமாய் அருமையாய் இத்தனை வருடங்களாய் வளர்த்து வந்திருக்கிறேன். நீங்கள் மாதம் மாதம் நூறு ரூபாய் அனுப்பி வந்தது அவ்வளவு பெரிதல்ல. நீங்கள் வேண்டுமானுல் சொல்லலாம்; நானும் இரண்டு மூன்று வயது வரை வளர்த்து வந்தேனே யென்று. 16 வயது வரை அதாவது தக்க மங்கைப் பருவம் வாய்க்கும் வரை நோய் நொடி முதலிய ஆபத்துகளி லிருந்தெல்லாங் காப்பாற்றி வந்தது அருமையா? இரண்டு வருஷ காலம் அதுவும் தோழிப் பெண்களால் வளர்க்கப்பட்டு வந்தது அருமையா?—அப்படி வளர்த்து வந்ததனுல்தான் அவள் திடீரென்று அகால மரண மடைந்தது உங்களைக் காட்டிலும் எனக்குப் பன்மடங்கு வருத்தத்தை யளித்திருக்கிறது. இது தெரியாமல் நீங்கள் என்னிடம் நம்பிக்கை யில்லாது என் மனம் பெரிதும் புண்படும் வகையில் பலவிதமாகக் கேட்பது சிறிதுஞ் சரியல்ல........." என்று சரசாங்கி நீட்டிப் பேசினுள்.

ஜமீந்தாரிணி தன்னை மீறிப் பொங்கிவரும் அழுகையை அடக்கிக்கொண்டு, " அப்படியானுல் என் குலக்கொழுந்து இறந்து விட்டாள் என்று தான் சாதிக்கிருயா?—நீ என் அருமைக் கண்மணியை உன் குலத் தொழிலாகிய தாசித் தொழிலுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளவே, இவ்விதம்

கர்லராவால் இறந்துவிட்டதாகப் பொய்த் தகவல் கொடுத் திருக்கக் கூடும் என எஸ்டேட் மானேஜரின் தாயார் கூறினளே! அது உண்மையா யிருக்குமோ என்றே நான் எண்ணி, உன்னை இவ்விதம் வற்புறுத்திக் கேட்டேன்....... ஐயோ! அந்தப் பாவி மைத்துனனுகிய எமன் கையிலிருந்து தப்புவிப்பதற்காக, என் கலி தீர்க்க வந்த கட்டிக்கரும்பை, உன் வசத்தில் ஒப்படைத்தால், நீ உண்மையான எமனுக் குப் பலி கொடுத்துவிட்டதாகச் சொல்கிருயே?—முன்னே யிருந்த எஸ்டேட் மானேஜர் சந்திரசேகர ஐயரின் பேச் சைக் கேட்டு, சிறிது காலம் கண் மறைவாயிருந்து எங் காயினும் வளர்ந்து உயிர் பிழைத்துவிட்டால், உரிய காலத் தில் வந்து ஜமீனை யேற்றுக்கொண்டு என் பாப ஜன்மத்துக் குச் சாபல்யத்தை யுண்டுபண்ணுவாள் என்று என் குல தீபத்தை உன்னிடம் ஒப்படைத்ததற்குச் சரியான பலனை அநுபவித்து விட்டேன். அந்தச் சண்டாள மானேஜர் தாசி லோலனென்று எனக்கு அப்போது தெரியாது போயிற்று. அவனது மனைவி—பாவம்; உத்தமி—சொல்லிய பிறகல்லவோ உண்மை தெரிந்தது. அவன் உன்னிடங் கொண்டிருந்த தொடர்பாலோ என்னவோ, உன்னை ஒரு குல மாதென் றும், உனக்குப் பெண் குழந்தை யில்லா திருப்பதால், நம் குழந்தையை அருமையாய் வளர்ப்பா ளென்றும், நம்பிக் கைக்குப் பாத்திரமா யிருப்பா ளென்றுங் கூறி, உன் வசம் என் குழந்தையை வாங்கிக் கொடுத்து விட்டான். அந்தக் கிழவன் எப்படி யிருந்தானே அப்படியே அவன் மகனுந் தாசிகள் வீடே கதியென்று இருந்து வருகிருன். இந்த வீட்டுக் குடையவளான ஹம்ஸதமயந்தியை அவன்தான் வைப்பாக வைத்துக்கொண் டிருக்கிருனும்; அவள் உன் சகோதரியின் மகளாமே. இதெல்லாம் அவனது தாய்தான் சொன்னள். இந்த இழவெல்லாம் எனக்கென்ன தெரியும்?

.........உம்.......இன்னென்று. உங்களுடன் ஒரு அழகிய மங்கையும் வந்திருக்கிறுளாமே! அவள் யார்? நான் வரும் போது போனுளே, அந்தப் பெண்ணு? அவள் உனக்கு என்ன வேண்டும்?........." என்று படபடவென்று ஜமீந்தாரினி பேசினுள்.

சரசாங்கியின் இருதயம் 'படக் படக்'கென்று அடித்துக்கொண்டது. ஆயினும், அவள் மார்பைப் பொத்திக் கொண்டு, "அ....வ....ள...ா! அவள் என் சினேகிதையின் மகள் ......தஞ்சாவூரைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப் பட்டாள்........அதனுல், அவளும் அவள் சகோதரனும் எங்களுடன் வந்திருக்கிறுர்கள்..........அவர்கள் பிராம்மண மரபைச் சேர்ந்த..........." என்று தயங்கித் தயங்கிப் பேசினுள்.

ஜமீந்தாரினி தன் மன உணர்ச்சியைத் தாங்கமாட்டாது, "என்னமோ சரசா! அந்தப் பெண்ணைப் பார்த்ததிலிருந்து என் மனம் என்னமோ போல் தாபத்தால் துடி துடித்துக் கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு விதமாக பாசம் என்னை அவளிடம் இழுத்துக் கொண்டு போகிறது.........." என்று கூறி வருகையிலேயே சரசாங்கி குறுக்கிட்டு, "அந்தப் பெண்ணைப் பார்க்கும் ஆண் பெண் எல்லோருமே இப்படித்தான் ஆசை கொள்கிறுர்கள். அவளது சௌந்தரியம் அவ்விதம் எல்லோரையும் மயக்கி......." என்று சாகஸமாகப் பேசிக் கொண்டே வந்தாள்.

இச் சமயத்தில் அவ் வறையின் கதவு பலமாகத் தட்டப்பட்டது. இதுவரை இவர்களது சம்பாஷணையை ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்த ரமணி அதனு லேற்பட்ட உணர்ச்சியை தாங்க மாட்டாது ஆவேசங் கொண்டவள் போலானுள். எனவே, ஆரம்பத்தில் அவர்கள் பேசுவது

அவளுக்கு அவ்வளவாக விளங்க வில்லையாயினும், சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்களுடைய சம்பாஷணையி லிருந்து இப்பேச்சு தன்னைப்பற்றியதாகவே இருப்பதை யறிந்ததும் இன்னும் அதிக ஆவலாகக் கூர்ந்து கேட்கலானாள். தன் வாழ்க்கையில் ஏதோ மர்மம் அடங்கி யிருக்கிறது; சந்திரனை இராகு, கேதுக்கள் மறைத்துக்கொள்வது போல், தன்னை யறியாமலே இருள் கவிந்து கொண்டிருக்கிறது என்று ஊகித்துக் கொண்டாள். மேலும், அவ்விருவருடைய பேச்சுகளி னின்றும் தான் இதுவரை நினைத்திருந்ததுபோல் சரசாங்கி தன்னுடைய பாட்டி யல்ல வென்றும் வஞ்சனையாக இவளிடம் தான் சேர்க்கப் பட்டிருப்பதாகவும் அறிந்து கொண்டாள். ஆனால், தான் ஜமீந்தாரினியின் மகள் என்று எண்ண அவள் மனந் துணிய வில்லை. ஆயினும், அவர்கள் பேச்சிலிருந்து அவ்விதந்தானே ஏற்படுகிறது? சரசாங்கி தன்னைக் குறித்து மறைத்துப் பேசி வருவதிலிருந்தே இது உறுதிப் படுகிறதே! தான் ஜமீந்தாரினியின் அருமை மகள்தான் என்ற முடிவுக்கு வந்ததும் ரமணிக்கு ஏற்பட்ட குதூகலத்தைச் சொல்லி முடியாது. ஆனால் அடுத்த கணம் 'அவ்வித அதிர்ஷ்டமும் எனக்கு ஏற்படுமா!' என்று நம்பிக்கை யிழந்து அவள் மனம் ஏங்கியது. எனினும், தன் உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவள் துடி துடித்தாள். அவர்கள் இன்னமும் என்ன பேசுகிறார்கள் என்று அறிந்துகொள்ளவோ, அவர்கள் பேசி முடியும் வரை காத்திருக்கவோ அவளால் முடியவில்லை. எனவே, அவள் உணர்ச்சி தாங்கமாட்டாது கதவைத் 'தட தட' வென்று பலமாகத் தட்டினாள்.

இப் பலத்த சப்தத்தைக் கேட்டு சரசாங்கியும், ஜமீந்தாரினியும் திடுக்கிட்டனர். வெளியே என்ன விபரீதம் நேர்ந்துவிட்டதோ என்ச் சரசாங்கி மிகவும் பயந்து

போனாள். இல்லாவிடில், தாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது யாரும் கதவை இவ்விதம் தட்ட மாட்டார்களே என்று அவள் எண்ணினாள். இச் சிந்தனையிலேயே அவள் மனதோடு போராடிக் கொண்டிருந்ததால் கதவை உடனே திறக்க வேண்டுமே என்ற எண்ணம் உண்டாகவில்லை. ஆகவே, ஜமீந்தாரினியே எழுந்து போய்க் கதவைத் திறக்கலானாள்.

கதவு திறக்கப்பட்டதோ இல்லையோ, ரமணி அதைத் தள்ளிக்கொண்டு பெண் புலிபோல் உள்ளே பாய்ந்தாள். அவளது ஆவேச நிலையைக் கண்டு முன் பின் பழக்கமில்லாத ஜமீந்தாரினியே பயந்துவிட்டாள். சரசாங்கிக்கோ சொல்லவே வேண்டியதில்லை. உண்மையிலேயே உதறலெடுக்க ஆரம்பித்து விட்டது. ரமணி தாங்கள் பேசியவற்றையெல்லாம் ஒற்றுக் கேட்டிருந்தாளா? இல்லாவிடில், ஏன் அவள் இவ்விதம் அசந்தர்ப்பமாகக் கதவைத் தட்டி ஆவேசத்தோடு வரவேண்டும்? ஐயோ! எங்கு இவளால் தன் சூழ்ச்சி, சூட்டு எல்லாம் வெளிப்பட்டு விடுகிறதோ! தான் இத்தனை நாள் பிழைத்த பிழைப்பையெல்லாம் நாய் பிழைப்பாக்கி விடுவாளோ! ஐயோ! இவள் அல்லி ராணியாயிற்றே! அவள் இயற்கையான துடுக்கு சுபாவம் தெரிந்தேயிருக்கிறதே! அவள் யாருக்கும் அஞ்சமாட்டாளே! இத் தர்ம சங்கடமான நிலைமையை எவ்விதம் சமாளிப்பது! என்றெல்லாம் எண்ணி அவள் மனங் குழம்பியது.

ஆவேசத்தோடு வந்த ரமணி ஜமீந்தாரினியை நோக்காமலே, சரசாங்கி பக்கந் திரும்பி, "நான் யார்? பக்கத்து வீட்டுப் பிராமணப் பெண்ணா? பாட்டி! நீ அந்த அம்மாளோடு என்னென்ன சொல்லிக் கொண்டிருந்தாய் என்

பதை யெல்லாம் நான் கேட்டு விட்டேன். உன் சூழ்ச்சியும் சாகஸமும் எனக்கு நன்கு தெரிந்துவிட்டது. என்னிடம் நீ ஒன்றும் மறைக்க முடியாது. மரியாதையாக நான் இப்போது கேட்பதற் கெல்லாம் உள்ளது உள்ளபடி பதில் சொல்ல வேண்டும். தெரிகிறதா? மறைத்துப் பேச முயன் ருயோ, அப்புறம்.........." என்று அதட்டிப் பேசினுள்.

சரசாங்கி உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவு மில்லை; குனிந்த தலையை நிமிரவுமில்லை. அவள் ஊகித்த படியே ரமணி விஷயத்தை யறிந்து கொண்டாள் என்று தெரிந்ததும், அவள் வயிறு கலங்கியது. ஜமீந்தாரினிக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் ரமணியையும் சரசாங்கியையும் ஆச்சரியத்தோடு மாறி மாறிப் பார்க்கலானுள்.

ரமணி ஜமீந்தாரினியைக் கடைக்கண்ணுல் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு சரசாங்கியை நோக்கி, "பாட்டி, வஞ்சகமே உருவான உன்னைப் பாட்டி யென்று கூப்பிடவும் வாய் கூசுகிறது.—உண்மையில் நான் யார்? உன் மகளின் மகளா? உண்மையா?—இல்லாவிடில், இந்த அம்மாள் குறிப்பிடும் பெண் நான்தானு? அல்லது வேறு யாரேனுமா? இந்த அம்மாள் யார்? உயர்ந்த தகுதியி லுள்ள அவர்கள் கேவலம் தாசியாகிய உன் உதவியை நாடியதேன்? அதன் விவரத்தை நான் அறிய வேண்டும். அவர்களது புதல்வி காலராவில் போய் விட்டது உண்மை தானு? அல்லது அவர்களுக்கும் எனக்கும் ஏதேனும் சம்பந்த முண்டா?.........என்ன, நான் கேட்பதற் கெல்லாம் மௌனஞ் சாதிக்கிருயே! இன்னமுமா உண் மையை மறைக்கப் பார்க்கிருய்? கௌரவமாக விஷயத் தைக் கூறிவிடு. இந்தக் கிழ வயதில் உனக்கு ஏன் இந்தக் கபட நாடகம்? உண்மையைக் கூறிவிட்டால் நான் உன்னை

ஒன்றுஞ் செய்வதில்லை. மற்றவர்களையும் ஒன்றுஞ் செய்ய விடேன். இது உறுதி..........." என்று வெங்கலமணி ஒலிப்பது போல் பேசினாள்.

ஜமீந்தாரினிக்கு இஃதெல்லாம் கனவு காண்பதுபோலிருந்தது. ரமணியின் வீர மொழிகள் அவளை இன்னுங் கவர்ச்சி கொள்ளச் செய்தது. அவளை அப்படியே சேர்த்துத் தழுவிக் கொள்ளலாமா? என்று கூட ஜமீந்தாரினி எண்ணினாள்.

சரசாங்கி தீவிர மனப் போராட்டத்தினிடையே தலை நிமிர்ந்தாள். அவளது முகம் வியர்வையால் நனைந்திருந்தது. அவள் ரமணியை ஏறிட்டுப் பார்க்கத் துணியாமலே மெள்ளப் பேசத் தொடங்கினாள். "ரமணி! நீ உண்மையில் என் பேத்தியல்ல; அதோ நிற்கிறார்களே ஜமீந்தாரினி யம்மாள்; அவர்களது அருமை மகள். அவர்கள் மாதமாதங் கொடுத்து வந்த பணத்தால் பிழைத்து வந்த நன்றியையும் மறந்து, தீய நினைவு கொண்டு இவ்வித மாறாட்டங்க ளெல்லாஞ் செய்து வந்தேன். என் சூழ்ச்சியால் நான் நினைத்தபடி யெல்லாம் வெற்றி பெற்று வந்தேன். ஆயினும் உன்னை மட்டுந் தாசித் தொழிலில் ஈடுபடுத்த முடியவில்லை..........."

"என்ன, சரசா! இவள் என் அருமை மகளா?..............." என்று அலறினாள் ஜமீந்தாரினி.

"இவரா என் அன்னையார்? ஜமீந்தாரினி யம்மாளா?.........." என்றாள் ரமணி ஆத்திரத்துடன்.

"ஆம்; ஆம்." என்றாள் சரசாங்கி எழுந்தவாறே.

இதற்குள் ஜமீந்தாரினியும் ரமணியும் ஒருவர்மீது ஒருவர் பாய்ந்து ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு கண்ணீர் விட்டுப் பொருமினர். யார் முன்னதாகத் தழுவிக் கொண்டனர் என்று சரசாங்கியால் அறிய முடியவில்லை.

வெகு நேரத்திற்குப் பிறகே அவர்கள் பழைய நிலைமைக்கு வந்தனர். இச்சமயத்தில் சரசாங்கி ஜமீந்தாரிணியின் காலில் விழுந்து, "அம்மா, என்னை மன்னிப்பீர்களா? நான் உங்களுக்கு இழைத்த தீங்கையும், துரோகத்தையும் மறந்து எனக்கு உயிர் பிச்சை யளிப்பீர்களா?" என்று வெகு இரக்கமாக வேண்டினுள்.

"ஆமாம்; அம்மா. என்னை வளர்த்த—ஏதோ சுயநல நோக்கத்தோடு வளர்த்தாலும்—பாட்டி உங்களுக்குப் பல விதங்களில் துரோகஞ் செய்து தாங்க முடியாத துன்பத்தைக் கொடுத்திருந்தாலும், அவைகளை யெல்லாம் மறந்து மன்னித்து விடும்படி நானும் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று ரமணியும் சரசாங்கிக்காகப் பரிந்து கேட்டுக்கொண்டாள். அவள் தனக்கு இயற்கையாகவுள்ள தயாள குணத்தால் இதுவரை சரசாங்கி தனக் கிழைத்து வந்த தீங்குகளை யெல்லாம்ஒரு கணத்தில் மறந்து அவளுக்காக வாதாடினுள். ஜமீந்தாரிணியும் இரக்க நெஞ்சமும் ஈகை குணமு முடையவளாகையால், "என் கண்ணே! உன்னைப் பெற்ற மகிழ்ச்சியில் எல்லாவற்றையும் மறந்து விட்டேனே! இழந்து விட்டதாகக் கருதி ஏங்கிய எனக்கு விலை மதிப்பில்லா மாணிக்க மணியாகிய உன்னை மீண்டும் அளித்த சரசாங்கிக்கு என் உயிரையே கேட்டாலும் தரத் தயாரா யிருக்கும்போது, அவளை மன்னிப்பதா பெரிது?........சரசாங்கி! நீ ஒன்றுக்கும் பயப்படாதே! இனியும் உன்னை நான் காப்பாற்றுவேன்..............." என்று கூறினுள்.

இதற்குள் ரமணி எதையோ நினைத்துக் கொண்டவள் போல் ஜமீந்தாரிணியை நோக்கி, "அதிருக்கட்டும்; அம்மா!—என்னை ஏன் நீங்கள் இவ்வளவு காலம் வேறொருவரிடம் விட்டுவிட்டுப் பிரிந்திருக்க வேண்டும்? அதுபற்றி நீங்கள் பாட்டியிடம் கூறியது எனக்குச் சரியாக விளங்க

வில்லை. அதை முன்னே எனக்கு விளக்கமாகக் கூறுங்கள் ...............” என்று ஆர்வத்தோடு கேட்டாள்.

“அதுவா! உன் சிற்றப்பனின் கொடுங் கோலாட்சிக்குப் பயந்து உன்னை மட்டுமன்று; உன் சகோதரனையும் இவ்விதம் மறைத்து வைக்க நேர்ந்தது...............” என்று துயரங் கலந்த குரலில் ஜமீந்தாரினி கூறி வருகையில், ரமணி இடைமறித்து, “என்ன! எனக்குச் சகோதரன் கூட இருக்கிறனு? அப்படியானல் அவன் எங்கே?...........” என்று துடிதுடிப்போடு கேட்டாள்.

“இருக்கிறன்; ஆனல் அவன் எங்கிருக்கிறனென்று தெரியவில்லை. உன்னைப் பற்றியாகிலும் சிறிது நம்பிக்கை வைத்திருந்தேன். அவனைப் பற்றியோ...........? அவன் உயிரோடு இருக்கிறனு? உயிரோ டிருந்தால் எங்கு யாருடன் இருப்பான்? என்று ஊகிக்கக்கூட முடியவில்லை........உம்; உம்........அதிருக்கட்டும்; பிறகு சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம்...........நான் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறேன்...........சரசா! நாங்கள் போய் வரட்டுமா? ...........” என்று ஜமீந்தாரினி பெருமூச்சு விட்ட வண்ணங் கேட்டாள்.

சரசாங்கியால் ஒன்றும் பேசவே முடியவில்லை. அவள் எவ்வளவுதான் கொடியவளா யிருந்தாலும் பெண்ணல்லவா? வளர்த்த பாசம் அவளை விடவில்லை. ரமணியைப் பிரிய அவள் மனஞ் சகிக்கவில்லை. அவளது உலர்ந்த உதடு துடி துடித்தது. நா தழு தழுத்தது.

“சரசா! இதுவரை நடந்ததை யெல்லாம் மறந்துவிடு. .........நீ சென்னைக்குப் போகும்போது, என்னை வந்து பார்த்துவிட்டுப் போ. நாங்கள் போய் வருகிறேம்........”

என்று கூறி ஜமீந்தாரிணி ரமணியைத் தழுவிப் பிடித்த வண்ணம் நடக்க முயன்றாள்.

ரமணி அவள் பிடியினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டு சரசாங்கியிடஞ் சென்று, "பாட்டி! எனக்குப் போக விடை கொடு........உன்னை ஒரு கணமும் மறக்க மாட்டேன்...........கூடிய சீக்கிரம் உன்னை என்னிடம் அழைத்துக் கொள்கிறேன்........" என்று கூறினாள். ஆயினும் அவள் கண்களுநங் கலங்கின. சரசாங்கி ரமணியைக் கட்டிக்கொண்டு 'கோ'வென வாய்விட் டலறினாள். அவர்களது பிரிவுக் காட்சி காண்போர் உள்ளங்களை உருக்கக் கூடியதா யிருந்தது.

தவிர்க்க முடியா நிலையில் சரசாங்கி, " ரமணி! போய்வா அம்மா! உனக்கு ஒருவித குறைவும் இனி ஆண்டவன் வைக்க மாட்டான். இந்த ஏழையின் நினைவு மட்டும் இருக்கட்டும்........" என்று கனிவாகக் கூறி விடை கொடுத்தாள்.

ரமணி ஈன்ற அன்னையுடன் போகும் உற்சாகத்தில் ஹம்ஸதமயந்தி முதலியோரிடம்—அவ்வளவு ஏன்? அவளது ஆருயிர்க் காதலன் கலியாணசுந்தரனிடங் கூட—சொல்லிக்கொள்ள மறந்துபோய் விட்டாள். அவள் தன்னையே மறந்திருக்கும் நிலையில், மற்றவர்களை எப்படி நினைக்க முடியும்?

ஜமீந்தாரிணி புறப்பட்டு விட்டதை யறிந்து தோழிப் பெண்ணும் இவர்களுடன் வந்து கலந்துகொண்டாள். ஹம்ஸ தமயந்தி இன்னமும் விஷயம் புரியாது இவர்கள் செய்வதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். எல்லோரும் ஏறி யமர்ந்ததும், கோச்சு வண்டி ஹம்ஸ தமயந்தி வீட்டைவிட்டு நகர்ந்தது.

---

# பத்தாவது அதிகாரம்

## பிரஹதாம்பாளின் புத்திமதி

பெண்ணாகடம் சிவபெருமான் கோயில் கொண் டெழுந் தருளியிருக்கும் க்ஷேத்திர ஸ்தலங்களில் ஒன்ருகும். ஆகவே, அவ்வூர் மிகச் சிறியதாக இருப்பினும், சுற்றிலும் கண்களுக்கு இனிமையைத் தரும் பச்சை பசேலென்ற பயிர் பச்சைகளும், குளிர்ந்த நீரோடைகளும், குளங்களும் நிறைந்து இயற்கை யன்னை களி நடம் புரிந்திருந்ததாலும் சிற்பக் கலை யழகிற் சிறந்த கோபுரங்களோடு கோயில் கம்பீரமாக விளங்கிக்கொண் டிருந்ததாலும் காண்பதற்கு அழகா யிருந்தது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த ஊரில் ஒரு வீதியில் ஒரு அழகிய சிறு வீட்டில் பின்புறச் சோலையில் ஒரு அழகிய மங்கை தாழ்ந்து வளைந்திருந்த மாமரக்கிளை யொன்றன் மீது அமர்ந்திருந்தாள். அவளது அழகிய முகம் கவலையால் வாடி யிருந்தது. அவளுடைய நெற்றியின் சுருக்கம் மனதினுள் நடைபெறும் பெரும் போராட்டத்தைத் தெளிவாகக் காட்டியது. அவளது நீலவிழிகள் நீரை நிரப்புவேன் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தன. எதிரேயுள்ள மரங்களில் தத்தம் பேடைகளோடு அமர்ந்து குலாவிக் கொண்டிருந்த குயில் முதலிய பறவைகளின் 'கீச் கீச்' என்ற சப்தம் கூட அவளது எண்ணங்களைக் கலைக்கவில்லை; துயரத்தை மாற்றவில்லை. அவற்றிற்குப் பதிலாக, குயில் முதலியவைகளின் கூக்குரல் அவளது துயரத்தையே அதிகரிக்கச் செய்தது.

கிளைமீ தமர்ந்து இருந்த அப்பெண்மணியின் அழகிய கரங்கள் ஏதோ விஷமஞ் செய்துகொண் டிருந்தன வாயி னும், அவள் மனம் மட்டும் எதையோ தீவிரமாக யோசனை செய்துகொண் டிருந்தது. அவள் உட்கார்ந்திருந்த மரக் கிளை மிகவும் பலம் பொருந்தி யிருந்ததாயினும், பளுவைத் தாங்கமாட்டாது வளைந்து கொடுத்து தாழ்ந்தும், மேலெழும் பியும் ஊசலாடிக் கொண்டிருந்தது. அது உட்கார்ந்திருக் கும் பெண்மணியின் அழகிய தோற்றத்தை மேலும் சிறப் பிப்பதா யிருந்தது. மற்ற சமயமா யிருந்தால் அப் பெண் மணியின் உள்ளமும் கிளை ஊசலாடுவதுபோல் குதூகலத் தால் ஊசலாடிக் கொண்டிருக்கும். அவ் வழகியைக் காண் போர் மனங்களும் பரவச மடைந்திருக்கும் ஆயின், இப் போதோ அவள் துயர மிக்க முகத்தைக் காண்போர் அவள் பால் பச்சாதாபமே கொள்வர்.

அப் பெண்மணி ஏன் துயரத்தால் வாடவேண்டும்? அவளுக்கு உற்ற வருத்தந்தான் யாது? மணமாகப் போகும் மணப்பெண்ணைப்போலன்றோ அவள் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் நவநவமான அணிபணிகளால் அலங் கரிக்கப்பட் டிருக்கிறாள்? கோடி குலையாத விலையுயர்ந்த பட்டாடைகளும், நவமணி யாரங்களும், பொற் கடகங் களும், காற் சிலம்புகளும் தரித்திருக்கிறாள்? கூந்தலில் சூட் டப்பட் டிருக்கும் நறுமண மிக்க மலர்கள் கூட சிறிதும் வாடவில்லையே? நெற்றியில் இடப்பட் டிருக்கும் திலகமும் சிறிதும் கலையவில்லையே!

ஆம்; அவள் மணப்பெண்தான்; அவளுக்கு விவாக மாகப் போகிறபடியாலேயே தினந்தோறும் இவ்விதம் பல்விதமாகச் சிங்காரிக்கப் படுகிறாள்? என்ன சிங்காரித் தும் அலங்காரஞ் செய்தும் பயனென்ன! அப் பெண்மணி

யின் மனம் மகிழ்ச்சியா யிருந்தால் தானே எல்லாம் சோபிக்கும்? பூணாரங்களும், நவரத்ன கசிதமான நகைகளும் பட்டாடைகளும், நறுமண மலரும், திலகமு மெல்லாம் ஒரு மங்கையின் மனத் துயரை மாற்ற வல்லனவாமோ!

அப்பெண்மணி என்னமோ வாய் திறந்து முணு முணுக்கிறாள்; அது என்னவென்று கவனிப்போம். அவள் மனதில் நிறைந்திருக்கும் துயர மெல்லாஞ் சேர்ந்து பாடல்களாகப் பரிணமித்து வெளிவருகின்றன:—

தேன்பழச் சோலைபயிலுஞ் சிறுகுயிலே!
இது கேள் நீ!
வான்பழித்து இம்மண்புகுந்து
மனிதரை யாட்கொண்ட வள்ளல்
ஊன்பழித்து உள்ளம் புகுந்து என்
உணர்வதுவாய ஒருத்தன்
மான்பழித்து ஆண்ட மென்னோக்கி
மணாளனை நீவரக் கூவாய்.

இன்பந் தருவன் குயிலே!
ஏழுலகும் முழு தாளி
அன்பன் அமுதளித்து ஊறும்
ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச் சுவடுஒத்த
நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே
கோகழி நாதனைக் கூவாய்.

உன்னை யுகப்பன் குயிலே உன்துணைத்
தோழியும் ஆவன்;
பொன்னைப் பழித்த நன்மேனிப்
புகழில் திகழும் அழகன்

மன்னன் பரிமிசை வந்தவள்ளல்
பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப்புயங்கன் வரக் கூவாய்.

ஆ! என்ன இனிமை! என்ன உருக்கம்! கேட்பார் உள்ளங்களைக் குழையச்செய்யும் தன்மைவாய்ந்த மாணிக்க வாசகப் பெருந்தகையாரது திருவாசகப் பாடல்களின் உருக்கத்துக்குக் கேட்கவா வேண்டும்? அவள் பாடிய பாடல்களில் உள்ள சோகந்தானென்ன? அவ்வருமைப் பாடல்களின் வாயிலாக அவள் தன் மனத்துயரை யாற்றிக் கொள்ள முயல்கிருள் போலும்!

ஆ! அப்பெண்மணி அமர்ந்திருக்கும் மரத்துக்குப் பின் புறத்தில் சிறிது தூரமாக உள்ள ஒரு பெரிய மரத்தின் மறைவில் யாரோ ஒரு வாலிபன் நின்றுகொண்டிருக் கிருப்போலிருக்கிறதே! அவன் கண்களில் ஏன் நீர் அவ் விதம் வழிந்தோடுகின்றது? அவன் ஏன் அப் பெண்மணி பாடும் பாடலைக் கேட்டுக் கண்ணீர் வடிக்க வேண்டும்? பாட்டைக் கேட்டு பரவசமா? ஆனந்தக் கண்ணீர் விடுக்கி ருனு? அல்லது அப்பெண்ணின் மன நிலையை யறிந்துதான் —அவளது மன உருக்கத்தைக் கண்டுதான்—மன முருகு கிருனு? அவன் ஏன் மறைவிலிருந்து அப் பெண்மணியைக் கவனித்து நிற்க வேண்டும்? அவ் வாலிபனுக்கும் அம்மங் கைக்கும் என்ன சம்பந்தம்? ஆம். அவன் தான் இருக்கு மிடத்தை விட்டு நகர்கிருன். ஏதோ ஒரு ஆவேசத்தால் உந்தப்பட்டவன்போல் அப் பெண்மணியை நோக்கி விரைந்து நடக்கலானுன். காந்தத்தை நோக்கி இரும்பு செல் வதுபோல் அப் பெண்மணியை நோக்கி அவன் நெருங்கி விட்டான்.

அவ்வாலிபன் தன் இருகைகளையும் மேலே தூக்கிக் கொண்டு ஆவலோடு அப் பெண்மணியின் சேல்விழிகளைப் பொத்தப் போனான். இதற்குள் பின்னே காலடியோசை யைக் கேட்டு அம்மங்கை திடுக்கிட்டுத் திரும்பினாள். எனவே, அவன் கைகளைத் தொங்கவிட்டு, "பிரஹதா!" என்று ஆர்வத்தோடு அழைத்தான்.

"யார் நீயா? வந்துவிட்டாயா?" என்று தன்னை மறந்து கேட்டாள் பிரஹதாம்பாள். ஆம்; நமக்கு முன் னமே அறிமுகமான மணப்பெண் பிரஹதாம்பாள் தான். அவளை நாடிவந்த வாலிபனும் வீரமார்த்தாண்டனே யாவன் என்று சொல்லாமலே வாசகர்கள் அறிந்திருப்பார்கள்.

பிரஹதாம்பாள் மரக்கிளையை விட்டு இறங்குவதற்குள் வீரமார்த்தாண்டன் தன் இரு கரங்களாலும் அவளை அப் படியே தூக்கி ஆர்வமுறத் தழுவிக்கொண்டான். இந்நிலை யைச் சிறிதும் எதிர்பாராத பிரஹதாம்பாள் ஒரு கணம் ஒன்றுந் தோன்றாது அவனது பிணைப்பில் கட்டுண்டு தன்னை மறந்திருந்தாள். அவள் தேகங் குதூகலத்தால் பூரித்தது. வீரமார்த்தாண்டன் நிலையோ விவரிக்க வொண்ணாததா யிருந்தது. எத்தனையோ பராக்கிரமச் செயல்களைச் செய் திருந்தாலும், பேரும் புகழும் பெற்று பிரசித்தி யடைந்திருந் தாலும், அவனது ஆயுளிலேயே இதுவரை இவ்விதப் பேரின்ப நிலையை அநுபவித்ததில்லை; மனத்தாலும் நினைந்து பார்த்ததில்லை. ஆதலால், அவள் பூங்கொடிபோன்ற பெண் கொடியைச் சேர்த்தணைத்து, தேன்குடித்து மலரில் மயங்கிக் கிடக்கும் வண்டுபோல் சொக்கிக் கிடந்தான்.

சில விநாடிகளுக்கெல்லாம் பிரஹதாம்பாள் தன்னிலை யடைந்தாள். தற்போது தானிருக்கும் நிலைமையை யுணர்ந் ததும் அவள் துடிதுடித்தாள். ஒரு உந்து உந்தி வீரமார்த்

தாண்டன் பிணைப்பி லிருந்து தன்னை விடுவித்துக்கொண் டாள். அவள் உடல் பதறியது. முகம் கோபத்தால் சிவந் தது. அவள் சிறிது தூரம் போய் நின்று வீரமார்த்தாண்டனை நோக்கி, "ஐயா! என்ன காரியஞ் செய்தாய்? உனக்கு என்ன நெஞ்சத் துணிவு? என்னுடைய அநுமதி யில்லாது என்னை எவ்வாறு தொடலாம்? தீண்டலாம்?..............." என்று படபடப்போடு கேட்டாள். ஆத்திரத்தால் மேலே பேசவொட்டாதவாறு அவளது நெஞ்சு அடைத்துக் கொண்டது.

வீரமார்த்தாண்டன் பிரஹதாம்பாளது கோபத்தைக் கண்டு திகைத்துப் போனன். தான் அவளிடம் நடந்து கொண்ட விதம் ஒழுங்கு மீறிய செயல்தான் என்று அவன் சிறிது நேரத்துக்கெல்லாம் உணர்ந்தான். ஒரு மங்கையிடம் வாலிபனெருவன் எவ்விதம் லளிதமாக நடந்து கொள்வது என்பதைத் தன்னல் தெரிந்துகொள்ள முடியவில்லையே என்று அவன் உள்ளூற வருந்தினன். எனினும், அவன் தன்னைச் சமாளித்துத்கொண்டு, "பிரஹதா! நான் என்ன தவறு செய்து விட்டேன்? என் மனதைக் கவர்ந்து கொண்ட கண்மணியை நான் ஆர்வமுறத் தழுவிக் கொள் வதா தவறு? தேவாமிர்தத்தைப் பருகுவதற்கு அதை யநு மதி கேட்பாருண்டோ? என் உயிரைத் தழைக்கச் செய்யும் இன்பக் கொழுந்தைக் களைகண்ணைகப் பற்றிக்கொள்ள எனக்கு உரிமை யில்லையா?—எனக்குப் புத்துயிரளிக்கப் போகும் உன் மொழியை எதிர்பார்த்தன்றோ வந்தேன்?...." என்று இரக்கமாகக் கூறினன்.

பிரஹதாம்பாள் கோப மடங்கி மனச்சலிப்பு கொண் டவளாய், "என் மொழியை எதிர்பார்த்து ஒன்றும் பிர யோஜனமில்லை; என்னைக் கட்டியிருக்கும் தளை இன்னும்

அறுபடவில்லை.—உன் தலையீட்டால் அந்தத்தளை அறுபடு மென்று நம்பினேன்.—ஆனால் அத்தளை இப்போது இன்னும் அதிகமாக இறுகி முடி போடப்பட்டிருக்கிறது. ஏன் ஏன் மறைமுகமாகப் பேசவேண்டும்? விளக்கியே கூறி விடுகிறேன். நான் உன் துணையால் இங்கு வந்த பிறகு, நிலைமை எவ்வித மிருக்கிறது என்று அறிய முயன்றேன். அன்றிரவு போகும் வழியில் பிரபல கொள்ளைக்காரன் வழி மறிப்பால் மணப்பெண் வரவில்லை என்று அறிந்த ஜமீந்தார் கோபங்கொண்டு, மணப்பெண்ணைக் கொண்டுசென்ற உன்னைக் கண்டுபிடித்துக் கட்டிக்கொண்டுவர, ஆட்களை நாலா பக்கமும் ஏவினாராம். என்னை மீட்டு மீண்டும் விவாகஞ் செய்து விடுவதென்றே தீர்மானித்தாராம். நான் வீடு திரும்பிவிட்டதை யறிந்ததும் ஜமீந்தார் மகிழ்ச்சியுற்று திருமணத்தை அடுத்த வாரத்துக்கு ஒத்திவைத்திருக்கிறாராம். இத்தகவலைக் கேட்டதும் என் மனம் இடிந்துவிட்டது.—கொஞ்சநஞ்சமிருந்த நம்பிக்கையும் போய்விட்டது.—இந்த இரண்டு நாட்களாக என் மனம் என்னமோ உன்னையே அடிக்கடி நினைந்து கொண்டிருக்கிறது. உன்னைப் பற்றி நினைப்பது உசிதமல்ல என்று நான் கருதி மறக்க முயன்றாலும், உன் உருவம் என் உள்ளத்தைவிட்டு அகல மாட்டேனென்கிறது. இந்நிலைமையை எவ்விதந் தவிர்ப்பது? எனது தற்போதைய நிலை இருதலைக்கொள்ளி எறும்பு போலிருக்கிறது. எனவே நான் கலியாண நாள் நெருங்குவதற்குள் என் உயிரை எவ்விதமாயினும் மாய்த்துக் கொள்வதென்ற முடிவுக்கே வந்துவிட்டேன்......." என்று உணர்ச்சியோடு கூறிக்கொண்டே போனாள்.

"ஐயோ! இவ்வித முடிவுக்கா வந்து விட்டாய்?" என்று அலறினான் வீரமார்த்தாண்டன்.

பிரஹதாம்பாள் கண்களில் நீர் ததும்ப, "ஆம்; வேறு வழி யில்லை. இவ் வசுர மணத்தினின்றும் விடுபட வேண்டு மானல், தற்கொலையைத் தவிர தாரகமில்லை......" என்று கூறினுள்.

வீரமார்த்தாண்டன் சிறிது நேரம் சிந்தனையி லாழ்ந் திருந்தான். பிறகு அவன் பிரஹதாம்பாளின் ஒளியிழந்த முகத்தை உற்று நோக்கினுன். "பிரஹதா! உண்மையாகச் சொல். இதைத் தவிர உனக்கு வேறு மார்க்கந் தோன்ற வில்லையா?—ஏன்? என்னுடன் வந்து விடேன். உன்னை நான் என் அரசியாக வைத்துக் காப்பாற்றுகிறேன்! என்னிடம் போதிய பொருளிருக்கிறது; குற்றேவல் புரிய ஆட்கள் இருக்கிருர்கள். நீ மட்டும் தலையசைத் தால் உன்னை இந்திர பவனத்து இந்திராணியாக்கி இன்ப வாழ்வில் இருத்துவேன். என்ன சொல்கிருய்........?" என்று துடி துடிப்போடு கேட்டான்.

இருண்ட வானத்தில் மின்னெளி தோன்றி மறைவது போல் பிரஹதாம்பாளின் துயர மிகுந்த முகத்தில் புன்னகை தோன்றி மறைந்தது. "அன்ப! இன்னும் நீ என் மன நிலையை யறியவில்லை. நான் பலவிதமாக யோசித்துப் பார்த்தே இவ்வித முடிவுக்கு வந்தேன் என்பதை நீ யறிய வேண்டும்.—என் மீது கொண்டுள்ள அடங்காக் காதலால் (அவ்விதங் கொண்டிருப்பதாகத்தான் உண்மையாக நம்பு கிறேன்.) ஏதேதோ கூறுகிருய்? உன் விஷயமாக எனக்கு ஏற்பட்டுள்ள மனமாறுதலில் இப்போது நீ கூறுகிறபடி, என் தன்னலத்தையே பெரிதாகக் கருதி உன்னுடன் வந்து விடுகிறேன் என்று வைத்துக்கொள்வோம். அதன் விளைவு என்ன ஆகுந் தெரியுமா? நான் யாரோ ஒருவனுடன் ஓடி விட்டதாக ஊரார் என்னைப்பற்றி அலர் தூற்றுவார்கள்.

அவ்விதம் ஊரார் இகழ்ந்துரைப்பார்களே யென்பதற்காக நான் வருந்தவில்லை; வருந்தப்போவதுமில்லை. ஊரார் பெரும்பாலும் ஒருவருடைய உண்மை நிலைமையை உணராமலே அபவாதங் கூறுகின்றனர்; வாய்க்கு வந்தவாறு பிதற்றுகின்றனர். ஆதலால், என் போன்றவர்கள் ஊரார் பேச்சை அவ்வளவாக லட்சியஞ் செய்வதற்கில்லை. ஆனால், நான் உன்னுடன் வந்து விட்டால், என் தாயின் நிலை தான் மிகக் கேவலமானதாய்ப் போய் விடும். என் பிரிவொன்றே என் அம்மையின் உயிரைக் கொள்ளை கொள்ளப் போதியதாகும். அத்துடன், உற்றார், உறவினர், நண்பர்கள், ஊரார் அனைவரும் என் தாயைப் பலவாறு ஏளனமாகப் பேசித் துன்புறுத்துவார்கள். இவ் விழி மொழிகள் ஏற்கனவே மனம் நொந்துள்ள என் தாயை இருதயம் வெடித்து இறக்கச் செய்யும் என்பது திண்ணம். இவ்விதப் பரிதாப நிலையை என் தாய் அடைய நான் ஒருபோதும் இணங்கேன். இவ்வுலகில் என்னை யன்றி உற்ற துணையில்லாத என் தாயைவிட்டு, இந்திர லோகமே என்னை எதிர்கொண்டழைத்தாலும் போகேன். ஆகையால், ஐய! என்னை உன்னுடன் வரும்படி அழைக்காதே! நீ உண்மையாக என்மீது காதல்கொண்டிருப்பது மெய்யானால், எனது தற்போதைய நெருக்கடியான நிலையை யுத்தேசித்து என்னை விட்டு அகல்வாயாக! நம் காதல் கைகூடும்படி நான் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். நீயும் அவனை நோக்கி முறையிடுவாயாக! ஆண்டவன் மனம் வைத்தால், நாம் நியாயமான முறையில் எல்லோருமறிய தெய்வ மணத்தால் ஒன்று பட்டு இன்ப வாழ்க்கை வாழலாமல்லவா! நாம் விரும்புகிறபடி, ஊழ்வினை கூட்டவில்லை யானல், என் ஏற்பாட்டின்படி தற்கொலை செய்துகொள்ள வேண்டிய அவசிய மேற்படுமாயின், அதற்காக நீ மனம் தள

ராதே! நீ இனி தீய வழியில் செல்லாது ஜன சமூகத்துக்குச் சேவைசெய்து கொண்டிருப்பாயாக! இப்பிறப்பில் நாம் காதலர்களாய் களித்திருக்க இயலாவிடினும் அடுத்த பிறவியிலாயினும் கட்டாயம் காதலர்களாவோம் என்பது திண்ணம்......" என்று கூறி நிறுத்தினுள். பேச்சின் முடிவில் அவள் விட்ட பெருமூச்சினுல் கொங்கைகள் மேலெழுந்து அமர்ந்தன.

வீரமார்த்தாண்டனது முகம் கணத்துக்குக் கணம் விபரீதமாக மாறிக்கொண்டே யிருந்தது. கடைசியில் ஏமாற்றத்தாலும் நம்பிக்கையற்ற தன்மையாலும் அவன் ஓய்ந்து அப்படியே உட்கார்ந்துவிட்டான். அவன் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை.

பிரஹதாம்பாள் வீரமார்த்தாண்டனது மனோவேதனை யான நிலையை ஒரு கணத்தில் உணர்ந்துகொண்டாள். அவள் நெஞ்சம் நெகிழ்ந்தது. "காதலா!—ஆம்; என் காதலுக்குரியவர் தாம்! என் உள்ளக் கமலத்தில் உனது கம்பீரமான உருவம் கோயில்கொண்டு வெகு காலமாய் விட்டது. என் மன உணர்ச்சியை மறைத்து வைத்துப் பயனில்லை.—என்னை யறியாமல் என் உள்ளத்தை எப்படியோ கொள்ளைகொண்டு விட்டாய். புறப்பொருள்களைக் கொள்ளை கொள்வது அவ்வளவு பெரிதல்ல; அகப்பொருள்களைக் கொள்ளை யடிப்பதுதான் அருமை. அவ்வரிய காரியத்தை என் விஷயத்தில் நீ செய்து காட்டிவிட்டாய். எல்லார்க்கும் கொடியவராயும், வெறுக்கத்தக்கவராயுமுள்ள நீ எனக்கு இனியவராயும், விரும்பத்தக்கவராயுமானது விந்தை யன்றோ! இவ்வளவு தூரம் ஐக்கிய மனோபாவத்தை யுண்டுபண்ணிய இறைவன் நமது முடிவான லட்சியத்தையும் முடிக்காது போகான் என்பது என்னு

டைய திடமான நம்பிக்கை. ஆகவே, தற்போதைய நிலையைக் கண்டு நீ மனந் தளராதே. நம்பிக்கையை யிழந்தால் ஒரு காரியமுஞ் செய்ய முடியாது. ஜமீன்தார் தன் குமாரனுக்கு என்னை விவாகஞ் செய்துவிடுவது என்று இப்போது தீர்மானித்திருக்கலாம். அவ்விதந் தீர்மானித்திருக்கும் அவரே இதனிடையே இறந்து விடலாம்; அல்லது வேறு ஏதேனும் அசந்தர்ப்பம் ஏற்படலாம் அல்லவா! அவ்வளவு தூரம் போவானேன்! நான்கு நாட்களுக்கு முன் நிச்சயிக்கப்பட்டிருந்த கலியாணம் திடீரென்று உன்னுடைய தலையீட்டால் தடைபடும் என்று யாரேனும் அதற்குமுன் நினைத்திருப்பார்களா? அல்லது நான்தான் உன்னைச் சந்திக்க நேரும் என்று எண்ணியிருப்பேனா? அதுபோல தற்போதைய ஏற்பாடும் தடங்கலின்றி நிறைவேறும் எனக் கூறுவதற்கில்லை யாதலால், நான் தற்கொலை செய்து கொள்வதற்கு அவசியமின்றியே போய்விடலாம். பின்னர், உன்னைக் கிரமப்படி மணவாளனாகவும் அடைய நேரலாம். இந்நம்பிக்கையோடேயே நீ இப்போது இவ்விடத்தை விட்டுப் போய்வா...." என்று பெரிய வேதாந்தம் பேசித் தேறுதல் கூறினாள்.

வீரமார்த்தாண்டனது செவியில் இவளது தத்துவப் பேச்செல்லாம் ஏறவில்லை. அவன், "பிரஹதா! இருட்டான பாதையில் சென்றுகொண்டிருந்த எனக்குத் தேவதைபோல் தோன்றி ஒளி காட்டினாய். படுகுழியில் விழுந்து மேலேற வகையறியாது திகைத்துக்கொண்டிருந்த என்னை நீ கைதூக்கி விட்டாய். ஆனால்...........! மீண்டும் அப் பழைய திணிந்த இருட்டிலும், படுகுழியிலும் தான் தள்ளி விட்டாய். இனி, நான் உய்வதேது.......?" என்று ஆற்றாமையோடு கூறினான்.

இச்சமயத்தில் யாரோ வீட்டின் புறக்கடையிலிருந்து, "பிரஹதா! அம்மா! பிரஹதா! எங்கே இருக்கிருய்.......?" என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தனர்.

இக்குரலைக் கேட்டதும் பிரஹதாம்பாள் திடுக்கிட்டு, வீரமார்த்தாண்டனிடமிருந்து விலகி நின்று, "என் அன்னை கூப்பிடுகிருள். அன்ப! நீ போய் வா. சீக்கிரம் யாராகிலும் பார்த்துவிடப் போகிருர்கள்......." என்று பரபரப்பாகக் கூறினுள்.

வீரமார்த்தாண்டன் தான் சார்ந்திருந்த மரக்கிளையினின்றும் நிமிர்ந்து எழுந்தான். அவன் ஏதோ கூற வாயெடுக்கையில் மீண்டும், "ஓ! பிரஹதாம்பா! எங்கே அம்மா இருக்கிருய்? உன்னைப் பார்க்க வேண்டுமென்று சிற்றப்பா வந்து காத்துக்கொண்டிருக்கிருர். எங்கே போய்விட்டாய்?............" என்று கூப்பிட்டவண்ணம் வயது முதிர்ந்த ஒரு மாது புறக்கடையிலிருந்து சோலைக்குள் தட்டுத் தடுமாறிக்கொண்டு வந்தாள்.

பிரஹதாம்பாள் மிகவும் பதறிப் போய், "காதலா! போ! போ! இவ்விடத்தை விட்டுப் போய்விடு. அம்மா நாம் இருக்கும் பக்கமாய்த்தான் வருகிருள். உன்னுடன் நானிருப்பதைப் பார்த்துவிட்டால் விபரீதமாய் விடும்.—பிறகு சந்திக்கலாம்..........." என்று கூறிக்கொண்டே போக முயன்ருள்.

"மீண்டும் எப்போது உன்னைப் பார்ப்பது..........?" என்று கேட்டவாறு காலெடுத்து வைத்தான் வீரமார்த்தாண்டன்.

இதற்குள் பிரஹதாம்பாளின் தாய் அவர்கள் இருக்குமிடத்தைச் சமீபித்து விடவே, அவள், "அம்மா? என்னையா

கூப்பிடுகிருய்? இதோ வந்து விட்டேன்" என்று குரல் கொடுத்த வண்ணம் வீரமார்த்தாண்டன் பக்கந் திரும்பிப் போகும்படி கையால் சைகை செய்துவிட்டு தாயை எதிர் நோக்கி ஓடினுள்.

வீரமார்த்தாண்டன் ஒன்றுந் தோன்ருது திகைத்து நின்று விட்டான். பிரஹதாம்பாள் மான்குட்டிபோல் துள்ளியோடு மழகைக் கண்டு அதில் அவன் மனம் லயித்துப் போய்விட்டது. அவள் தன் தாயைச் சேர்ந்து அவளது கைகளைப்பற்றிக் கொஞ்சிக் கொஞ்சிப் பேசிய வண்ணம் வீட்டுக்குள் போகும்வரை அத்திக்கையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் வீட்டினுள் போன பின்னரும் வீரமார்த்தாண்டனின் கண்களை விட்டு அவளது அழகிய உருவம் மறையாமல் நடனமாடிக்கொண்டிருந்தது.

நெடுநேரத்துக்குப் பிறகு வீரமார்த்தாண்டன் தான் நின்றிருந்த இடத்தை விட்டு, மெல்ல நடக்கலானுன். இதற்குள் இருள் சூழ்ந்துவிட்டது. அவன் ஏதோ விலை மதிப்பில்லா பொருளை யிழந்து விட்டவன்போல் காணப்பட்டான். அவனது அப்போதைய நிலை உன்மத்தனுடைய சித்த சபல நிலையினும் கேவலமா யிருந்தது.

# பதினோராவது அதிகாரம்

## தியாக புத்தியும் திருட்டுத்தனமும்

ஒருநாள் இரவு பதினொரு மணியிருக்கும். சேத்தூர் ஜமீன்; ஜமீந்தாரினியின் மாளிகையின் ஓர் அழகிய அறையில் பஞ்சணையில் ரமணி படுத்துக்கொண்டிருந்தாள். அவள் வாழ்க்கையில் ஏற்பட்ட பெரிய மாறுதல் ஒரு பக்கம்; தாயுடன் வருகிற வேகத்தில் கலியாண சுந்தரனோடு கூடச் சொல்லாமல் வந்து விட்டோமே என்ற கவலை ஒருபக்கம்; அவளை அலைத்துக்கொண் டிருந்ததால் மன அமைதியின்றி யிருந்தாள். அதனால் வெகு நேரம் வரை அவள் உறக்கங் கொள்ளாது படுக்கையில் புரண்டுகொண் டிருந்தாள். பணிப்பெண் ணொருத்தி அவளுக்குக் குற்றேவல் புரிய காத்திருக்கும் நிலையில் அவளது அறைக்கு வெளியே படுத் துக்கொண் டிருந்தாள். அடுத்த அறையில் ஜமீந்தாரினி தன் மகளைத் திரும்பப் பெற்ற மகிழ்ச்சியால் ஆனந்தக் கனவு கண்டவாறு கவலை யற்று உறங்கிக்கொண் டிருந் தாள்.

மணி பன்னிரண்டரை யாயிற்று. நல்ல உறக்கத்தில் இருந்த ரமணி ஏதோ சப்தங் கேட்டுத் திடுக்கிட்டு விழித் துக் கொண்டாள். அரவஞ் சற்று பலமாய்க் கேட்கவே, அவள் எழுந்து உட்கார்ந்து விளக்கைப் பொருத்தினாள். அவள் எதையோ கண்டுவிட்டு, "ஆ" வென அலறிக் கொண்டு துள்ளி யெழுந்தாள். ஆ! அவள் கண்ட தென்ன? முகமூடி யணிந்த ஒரு திருடன் அறையின் மூலையி லிருந்த இரும்புப் பெட்டியைத் திறக்க முயன்று

கொண்டிருந்தான். திடீரென விளக்கு பொருத்தப் பட்டதையும் ஒரு பெண் அலறியதையுங் கண்டதும் அவன் துணுக்குற்று திரும்பிப் பார்த்தான். ரமணியைக் கண்டதும் அவன் ஸ்தம்பித்து அப்படியே உட்கார்ந்து போனான். எழுந்தோடவோ அல்லது ரமணியைத் தாக்கவோ முயலாது மந்திரத்தால் கட்டுண்ட பாம்புபோல் இருந்தான். இதற்குள் ரமணியின் கூக்குரலைக் கேட்டு வெளியே இருந்த பணிப் பெண் கதவைத் திறந்துகொண்டு ஓடி வந்தாள்.

அப் பணிப் பெண் உள்ளே அடியெடுத்து வைத்ததும், திருடனைக் கண்டு திடுக்கிட்டு நின்று விட்டாள். சிறிதும் எதிர் பாரா வகையில், தரன் படுத்திருந்த அறையில் திருடன் புகுந்து ஏதோ திருட முயல்வதைக் கண்டதும், மனப் பீதியடைந்த ரமணி சில விநாடிகளுக் கெல்லாம் இயற்கையான தைரியத்தைக் கொண்டாள். அடுத்த கணமே அவள் இரும்புப் பெட்டியின் எதிரே யிருக்கும் திருடனைக் கூர்ந்து நோக்கினாள். அவனது தோற்றமும் உருவச் சாயலும் அவனை இதற்கு முன் எங்கோ பார்த்த ஞாபகம் ரமணிக்கு உண்டாயிற்று. எனவே, அவன் முகமூடியை நீக்கினால் யாரென ஒருவேளை தெரிந்து கொள்ளலாம் என்ற ஆவ லுண்டாயிற்று. அவள் தான் நின்ற விடத்தை விட்டுப் பெயர்ந்து அப்போதும் அசைவற்று உட்கார்ந்திருக்கும் திருடனை யணுகினாள். அவன் அருகு சென்றால், தன்னை ஏதாயினுஞ் செய்துவிட்டால், என்ன செய்வது? என்ற பயஞ் சிறிதுமின்றி, ரமணி அவனை நெருங்கியதும், அவனது முகமூடியைப் பற்றி யிழுத்தெறிந்தாள். திருடன் ரமணியின் இச் செயலைச் சிறிதும் எதிர்பார்க்க வில்லை யென்பது அவனுடைய உடல் விதிர்ப்பால்

தெரிந்தது. ரமணி, "ஆ! நீயா?" என்று பேராச்சரியத்தால் வாய் விட்டு அலறினாள்.

"ஆம்; நான்...ன்......தா...ன்" என்று அவனையறியாமலே வாய் விளம்பியது. திருடனின் தோற்றமும், உருவ அமைப்பும் பார்ப்பவர் அஞ்சக்கூடிய விதமாக இருப்பினும், அச் சமயத்தில் அவன் ஒரு சித்த சபலங் கொண்ட உன்மத்தன் போலவே தோன்றினான். அவன் ரமணியின் கேள்விக்குப் பதிலாக, "ஆம்; நான் தான்" என்று கூறும்போது, அவன் நா தழுதழுத்தது. அவனது பதிலிலிருந்து அவனும் ரமணியை அறிந்தவன் போலவே தோன்றியது. இருவரும் வியப்பாலும் திகைப்பாலும் விழுங்கப் பட்டவர்களாய் ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு நின்றனர்.

இவர்களது மன நிலைமையும், செயலும் பணிப் பெண்ணுக்கு ஒன்றும் புரியவேயில்லை. பயத்தால் ஸ்தம்பித்து நின்ற அவள் எஜமானியிடந் தகவலைத் தெரிவித்து திருடனைப் பிடிப்பதற்கு இதுதான் சமயமென்று வெளியே ஓடினாள். அவள் எஜமானியை அணுகிய அதே சமயம் ஜெமீந்தாரினி கதவைத் திறந்துகொண்டு பரபரப்பாக வெளியே வந்தாள். அந்தம்மாள் பணிப் பெண்ணை நோக்கி, "எங்கேயடி வருகிறாய்? குழந்தை என்னமோ கூச்சல் போட்டாற் போலிருக்கிறதே! தூக்கத்தில் பயங்கர கனவு ஏதேனுங் கண்டு பயந்து விட்டாளா, என்ன!..........." என்று கேட்டுக்கொண்டே முன்னே நடந்தாள்.

பணிப் பெண், "இல்லேம்மா! தி—ரு—ட—ன்...... வந்து......" என்று வாய் குழறலோடு ஏதோ கூற ஆரம்பித்தாள்.

ஜமீந்தாரினி துடிதுடித்து, "என்ன திருடனு? எங்கே? குழந்தை ரமணியின் அறையிலா..................?" என்று கேட்ட வண்ணம் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ரமணியின் அறையை அடைந்து விட்டாள்.

பின்னுலேயே ஓடி வந்து கொண்டிருந்த பணிப் பெண், "ஆமாம்; அம்மா!" என்று பின்னும் பயத்தோடு கூறினுள்.

இதற்குள் அறையின் உள் நோக்கித் திருடனைக் கண்டுவிட்ட ஜமீந்தாரினி, "என்ன! இவனு திருடன்? இவனு திருட வந்தான்?———உம்.———கமலி! சீக்கிரம் ஓடு; நம் ஆட்களைக் கூட்டிவா" என்று உத்தர விட்டாள்.

தன் தாய் வருகையைக் கண்டதும் ரமணியின் முகம் குழப்பத்தால் மாறியது. அவள் உத்தரவைக் கேட்டதும் ரமணி மேலும் மனங் கலங்கினுள். எனவே, அவள் உடனே ஓடிப்போய் பணிப் பெண்ணைக் கைகாட்டி நிறுத்திவிட்டு, ஜமீந்தாரினி யண்டை சென்று அவள் கைகளைப் பற்றிக்கொண்டு, "அம்மா! ஆள் ஒன்றும் வேண்டாம்; இவனுல் நமக்கொன்றும் தீங்கு விளையாது.—இங்கே வாருங்கள்.—இவனைப் பாருங்கள்; இவனைக் கண்டால் உங்களுக்குத் திருடனுகத் தோன்றுகிறதா?—சமீபத்தில் தான் ஓரிடத்தில் ஆபத்தில் சிக்கிக்கொண் டிருந்த இவனை நான் தப்புவித்தேன். ஆதலால், இவன் நம்மை யொன்றுஞ் செய்ய மாட்டா னென்றே நம்புகிறேன். ஆனுல், இவனை அப்போது திருடனுகவோ கொள்ளைக்கார னுகவோ நினைக்கவில்லை. ஒரு ஜமீந்தார் கொடுமையாக இவனை ஒரு மரத்தில் கட்டிச் சாட்டையால் அடித்து இம்சிக்க முயன்று கொண்டிருந்தார்.—இப்போது இவன் நம் மாளிகையிலும் திருட வந்திருப்பதி லிருந்து, இவன் திருட்

டுத் தொழிலையேதான் பிழைப்புக்கு வழியாக மேற்கொண்டிருக்கிறான் என்று தெரிகிறது. ஆயினும் இவன் துஷ்ட சகவாசத்தாலோ பிழைக்க வேறு வழி யில்லாமையாலோதான் இத் திருட்டுத் தொழிலைக் கொண்டிருக்கிறான் என்று நம்புகிறேன். மேலும் நம் சமூக அமைப்பும், அதன் சீர்கேடான தன்மையுமே இவனைப் போன்ற வாலிபர்களை இவ்வித தீய தொழில்களில் ஈடுபடுத்துவதற்குக் காரணமாயிருக்கின்றன என்பது என் கருத்து. தகுந்த சந்தர்ப்பமும், போதிய உதவியுஞ் செய்தால் இவனும் இவனைப் போன்றவர்களும் நல் வழியில் திரும்பிக் கௌரவமான வாழ்க்கையை மேற்கொள்வார்கள் என்பது திண்ணம். இத்தகையோர் தங்கள் குற்றமுணர்ந்து திருந்துவதற்கு நம் போன்றோர் அவகாச மளிக்க வேண்டும்.—என்ன அம்மா சொல்கிறீர்கள்? நான் சொல்வது நியாயமானதென்று படவில்லையா?'' என்று கேட்டாள்.

ரமணியின் துணிவையும், திருட னெதிரிலேயே தத்துவம் பேச ஆரம்பித்ததையுங் கண்டு ஜமீன்தாரினி பிரமித்து விட்டாள். அவளால் ஒன்றும் பேசவே முடியவில்லை.

ரமணி மௌனமா யிருக்கும் தன் தாயை ஒருவிதமாக நோக்கி விட்டு, "என்னமோ அம்மா! இவன் திருடன் என்று அறிந்தும்—அதுவும் நம் வீட்டிலேயே திருட வந்ததைக் கண்டும்—அவன் மீது எனக்குக் கோபம் வரவில்லை. அதற்குப் பதிலாக அவன்மீது இரக்கமே யுண்டாகிறது.... ஏன் அம்மா! உங்கள் பிள்ளையே ஒருவன் இருந்து அவனே இதுபோன்ற குற்றஞ் செய்துவிட்டால் அவனைத் தண்டிக்கவா செய்வீர்கள்? மன்னிக்க மாட்டீர்களா அம்மா! அதுபோல, உங்கள் மகனைப் போன்றிருக்கும் இவனை மன்னித்து விட்டு விடுங்கள்; அம்மா! இல்லாவிடில், நம் ஆட்கள் இவ

னைக் கண்டபடி இம்சிப்பார்கள்" என்று உருக்கமாகக் கூறினுள்.

ரமணியின் உருக்கமான பேச்சு திருடனை வாய்விட்டுக் கதறச் செய்துவிட்டது. அவன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டான். இதிலிருந்து ரமணி கூறியதுபோல் அவன் தன் குற்றத்தை யுணர்ந்து வருந்துகிருன் என்று தெரிந்தது. ஜமீந்தாரினியும் தன்னை யறியாமலே கண்ணீர்விட்டாள். ரமணி பேசிய ஒவ்வொரு சொல்லும் அவள் மனதைப் பாகாய் உருக்கிவிட்டது. 'உங்கள் பிள்ளை ஒருவனிருந்து அவனே இதுபோன்ற ஒரு குற்றஞ் செய்துவிட்டால் அவனைத் தண்டிக்கவா செய்வீர்கள்? மன்னிக்க மாட்டீர்களா அம்மா' என்ற வாக்கியம் அவளது புத்திர வாஞ்சையைக் கிளறிவிட்டது. அவள் தன்னைவிட்டுப் பிரிந்து காணுமற் போன அருமை மகனை நினைந்து மனம் ஏங்கினுள்.

ரமணியின் அறையில் திருடவந்த திருடன் யார்? என்பதை வாசகர்கள், ரமணியின் சம்பாஷணையி லிருந்து ஒருவாறு அறிந்திருப்பார்களென்று நம்புகிருேம். அவன் வேறு யாருமில்லை; நமக்கு முன்னமே அறிமுகமான பிரபல கொள்ளைக்காரன் வீரமார்த்தாண்டன் தான். என்ன! வீரமார்த்தாண்டனு? அவனு? அவன் இங்கு எப்படி வந்தான்? அவன் பிரஹதாம்பாளோடு அல்லவா இருந்தான்? அவன் தான் இனி திருடுவதில்லை யென்றல்லவா அவளுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிருன்? அவ் வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு மீண்டும் திருட ஆரம்பித்துவிட்டான் போலும்! திருடனுக்கும், கொள்ளைக்காரனுக்கும் வாக்குறுதியும், சத்தியமும் ஏது? என்றெல்லாம் வாசகர்கள் நினைக்கலாம். வீரமார்த்தாண்டன் அவ்வளவு கேவல மனப்

பான்மை கொண்டவ னல்லன்; அவனை இந்நிலைமைக்குக் கொண்டு வரச் செய்தவர்கள் அவனது கூட்டாளிகளே யாவர். அவனே தன் இச்சையாக இத் திருட்டுத் தொழி லில் மீண்டும் புகவில்லை.

வீரமார்த்தாண்டன் பிரஹதாம்பாளைச் சந்தித்த பிறகு நடந்த நிகழ்ச்சிகளை இங்கு கவனிப்பது இக் கதைத் தொடர்புக்கு மிகவும் இன்றியமையாததாகும். ஆகவே, ரமணி, ஜமீந்தாரினி, வீரமார்த்தாண்டன் ஆகியவர்களை இந் நிலையிலேயே விட்டுவிட்டுப் பின் நோக்கிச் செல்வோம்.

* * * *

"என்ன அண்ணேன்! நம்ம தலைவன் கொஞ்ச நாளா இப்படி இருந்து வாரரே! இதுக்கு ஒன்னும் மாத்து இல்லியா?" என்று கவலையோடு கேட்டான் முனியன்.

"ஆமாண்டா முனியா! அந்தப் பய வீரன் திடீருன்னு இருந்தாப்பலே இருந்து இப்படி யாயிட்டது, எனக்குங் கவலையா தான் இருக்கு. நம்ம தொழிலையே கவனிக்க மாட்டேன்கிறன். எங்கேயே போருன்; வரான். நம் மண்டை யெல்லாம் ஒன்னும் பேசமாட்டேன்கிறன். என்னமோ பயித்தியமாதிரி தனக்குத்தானே பேசிக்கிறன்; தனியே உட்கார்ந்துண்டு பெரிய யோசனையி லிருப்பவன் போல் தலைகுனிந்திண் டிருக்கிறன்...." என்று நீட்டிக் கொண்டே போனன் மாயாண்டி.

நாகன் என்னும் மற்றொருவன், "அதெல்லாம் ஒன் னும் இல்லே அண்ணேன்! நம் தலைவனை மோஹினி பிடிச் சுக்கிட்டு ஆட்டுது. இல்லாட்டி இம்மாதிரி ஒரு தினுசா இருக்கமாட்டாரு. இதுக்கு முன்னே இப்பிடி இருந்தாரா? —உம். என்ன இருந்தாலும் வயசு புள்ளெ இல்லியா?" என்று கேலியாகக் கூறிக் கண்ணடித்தான்.

இவனது குறும்புப் பேச்சை மெய்யென்று நம்பிய கறுப்பண்ணன் என்பவன், "ஆமா அண்ணேன்! நம்ம நாகன் சொல்றது மெய்தா. இல்லாட்டி, சிங்கக்குட்டி போலேருந்து பெரிய இடத்தெல்லாம் தீரமா கொள்ளை யடித்து, நமக்கெல்லாம் ரொம்ப ரொம்ப பங்கு கொடுத்துக் காப்பாத்தி வந்த நம் தலைவன் இப்படி பூனைக்குட்டி மாதிரி யாயிட்டதைப் பார்த்தா எனக்கு வயிறு எரியுது, அண்ணேன்............அவரைக் காட்டேறி பிடிச்சிக்கிச்சா; மோஹினி பிடிச்சிக்கிட்டிருக்கா இன்னு, அந்தச் சாமியாடி பூசாரியைக் கூட்டிவந்து பார்க்கச் சொல்லணும், அண்ணேன்........." என்று அநுதாபத்தோடு கூறினன்.

"போடா! போடா!! பைத்தியக்காரா! நம்ம தலைவனுக்கு மோஹினி பிடிச்சிக்கிச்சாம்; காட்டேறி பிடிச்சிக்கிச்சாம்.—அவன் ஏதோ மனசிலே வச்சிண்டு நமக்கு ஜோக்கு காட்டறுன்; ஒருவேளை அவன் நம்மை யெல்லாம் ஏமாத்திட்டு இருக்கிற நகை, நட்டு, துட்டெல்லாம் சுருட்டிக்கிட்டு ஓடிடப் பார்க்கருனே இன்னு கூட எனக்குச் சந்தேகம். மேலும், போலீசு அவன் மேலே மோப்பம் வைச்சு தீவிரமாத் தேடிக்கிட்டிருப்பதை அறியவே ஆசாமி பயந்து போயிட்டான்.—என்ன இருந்தாலும் பஞ்சத்தாண்டி பஞ்சத்தாண்டிதான்; பரம்பரையாண்டி பரம்பரை யாண்டிதான். அந்த முட்டாள்தலைவன் நேத்து முளைச்ச இந்தப் பயலை—ஊர் பேர் தெரியாது வந்து சேர்ந்த இந்தப் பயலை—தனக்குப் பின்னுலே காலாகாலமாக இருக்கும் நமக்கெல்லாம் தலைவனுக்கிட்டுப் பூட்டான். என்னைத் தலைவனுக்கி யிருந்தா நான் இப்படி யெல்லாம் செந்தலைப் பூச்சிக்கும், மற்றதுக்கும் பயப்படுவேனு! பலே பலே 'தில்' வேலை யெல்லாஞ் செய்து நம்ம தொழிலை அஞ்சாது நடத்தி உங்களுக்கெல்லாம் பிழைப்பை யுண்டுபண்ண

மாட்டேனு! என் உசிரைக் கொடுத்தாயினும் உங்களைக் காப்பாத்த மாட்டேனு!...............இப்போ பாரு! இந்த இரண்டு வாரமா நமக்கெல்லாம் வயிற்றுப் பாட்டுக்கு ஒன்னுமில்லே...............நம்மையெல்லாம் இப்படித் திண்டாட விட்டுட்டு அவன் பாட்டுக்குக் குசாலா திரிந்துகிட்டு வரான். அவன் வரட்டும்; சொல்றேன். லேசில் விடறேனு பார்? ஒரு கை பார்ப்பதே சரி...............” என்று ஆக்ரோஷமாய்ப் பேசினன் இடும்பண்ண தேவன்.

இதுவரை இவர்கள் பேசுவதையெல்லாம் சாவதானமாகக் கவனித்து வந்த வயது முதிர்ந்த கிழவனுன முருகன் என்பவன் கோபத்தோடு இடும்பனை நோக்கி, “என்னடா! சும்மா அளக்கிறே! உன் சமாசாரம் யாருக்குந் தெரியாதுன்னு நினைச்சிகிட்டையா. மகா பெரிய வீரன்மாதிரி பேசறையே! உன்னைத் தலைவனு ஏற்படுத்தி யிருந்தா மலையைப் புரட்டிடுவையோ! தெரியாது போலேருக்கு உன்னைப் போன்ற திருட்டுப் பயல்கள் சமாசாரமெல்லாம். உங்களுக்கெல்லாம் இருட்டிலே பதுங்கிப் பதுங்கிக் கன்னம் வைத்துத்தான் திருடத் தெரியும்; புதரிலும், மரத்தின் மறைவிலும் ஒளிந்திருந்து வழிப்போக்கர்களை முன்னே போகவிட்டுப் பின்னுல் பாய்ந்து தாக்கி வீழ்த்தி அவர்களிடமிருக்கும் மூட்டை முடிச்சுகளைச் சூறையாடத்தான் தெரியும். வீரமார்த்தாண்டனைப்போல முன்னே அறிவித்து விட்டுச் செல்வந்தர்கள் மாளிகையில் கொள்ளை யடிக்கத் தெரியுமோ? எவ்வளவு பேரா யிருந்தாலும் தைரியமாய் எதிரே போய் பெரும் பொருள் வைத்திருக்கும் வழிப்போக்கர்களை வழி மறித்துச் சூறையாடத் துணிச்சலுண்டோ! உன் போன்றவர்களுக்குத் திருடுவதில் எவ்வளவு கெட்டிக்காரத் தனமுண்டோ அவ்வளவுக் கவ்வளவு கோழைத்தனமு

முண்டு. அவ்விதக் கோழைத்தனத்தால்தானே நீங்கள் ஏழை எளியவர்களையுங் கொலை செய்கிறீர்கள்; சித்திர வதை செய்கிறீர்கள். வீரமார்த்தாண்டன் இதுவரை நடத்திய கொள்ளைகளில் யாருக்கேனும் சிறு தீங்காயினுஞ் செய்ததைப் பார்த்திருக்கிருயா? தலைமுறை தலைமுறையாய் வழி பறி கொள்ளையிலும், திருடுவதிலும் நன்கு பழகியுள்ள நம் போன்றவர்கள் போவதற்குப் பயப்படும் இடங்களி லெல்லாம்—நாம் தலையிட அஞ்சிப் பின் வாங்கும் சமயங் களி லெல்லாம் தீரத்தோடு சென்று காரியத்தைச் செய்யும் அவனைப் பயங்காளி யென்கிருயே! அவன் கொள்ளை யடித்த பொருள் எவ்வளவு இருந்தாலும் அவ்வளவையும் நம்மெல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்து விட்டு, தன் பங்கை ஏழை எளியவர்களுக் கெல்லாம் தானம் செய்யும் தயாளகுண முள்ளவனை மோசக்காரன் என்று கூறும் உன்னைப்போன்ற நன்றிகெட்ட பிராணியை உலகத்திலேயே பார்க்க முடியாது. உனக்கு எப்போதும் பொருமையும், கபடமும் அதிக மாயிற்றே! அது தெரிந்து தான் வீரகேசரி தன் ஸ்தானத்தில் உன்னை நியமிக்க விரும்பவில்லை. நீ மட்டும் தலைவனு யிருந்தால் இந்நேரம் எங்கள் பாடெல்லாம் என்ன ஆயிருக்குமோ!..............." என்று கூறினன்.

இச்சமயத்தில் நாகன், "அடேடே; சும்மா இருங்கள் அண்ணேன்! அதோ பாரு! வீரன் தள்ளாடித் தள்ளாடி வருவதை!..........." என்று கூறி எச்சரித்தான்.

இதுவரை ஒன்று கூடிப் பேசிக்கொண்டிருந்த கொள் ளைக் கூட்டத்தாரெல்லாம் நாகன் காட்டிய திக்கை நோக்கி ஞர்கள். வீரமார்த்தாண்டன் தலை குனிந்த வண்ணம் மெது வாக வந்துகொண் டிருந்தான்.

இச்சமயத்திலும் தன்னுடைய ஆத்திரத்தை விடாத இடும்பண்ணதேவன், "என்னடா! பூச்சாண்டி காட்டுறே! வரட்டுமே! எனக்கென்ன பயம்? நான் அவனைக் கேட்கிறேனா இல்லையா! பாரேன்" என்றான்.

இதற்குள் வீரமார்த்தாண்டன் இவர்கள் இருக்குமிடத்தை யணுகிவிட்டான். எல்லோரும் பயபக்தியோடு ஒதுங்கி நின்றனர்.

வீரமார்த்தாண்டன் தன் சகாக்களை ஏறெடுத்துக் கூடப் பார்க்காமல் தன் இருப்பிடத்தை நோக்கிப் போகலானான். அவனது கவலை ததும்பிய முகமும், தளர்ந்த நடையும் பார்க்கப் பரிதாபமா யிருந்தது. அவனை இந்நிலையில் கண்ட அக் கொள்ளைக் கூட்டத்தார் மனம் வருந்தினர். இரக்கத்தோடும் பயபக்தியோடும் அவனை நோக்கிக் கொண்டு நின்றனர். இடும்பண்ண தேவன் மட்டும் அப்போதும் கடுகடுத்த முகத்தோடு மனதுக்குள் முணுமுணுத்துக்கொண்டிருந்தான்.

வீரமார்த்தாண்டன் குகையினுள் நுழையப் போகும் சமயம். இடும்பண்ணத்தேவன் திடு திடுவென ஓடி, "என்ன அண்ணேன் சொல்றே; நீ இப்படி யிருந்தா நாங்க போற வழி என்ன?..........." என்று வீரமார்த்தாண்டனை நோக்கிக் கேட்டான்.

வீரமார்த்தாண்டன் திரும்பி இடும்பண்ணனை ஒரு விதமாக நோக்கினான். இருவரது சுபாவத்தையும் நன்கறிந்த மற்ற கொள்ளைக்காரர்கள் இதனால் என்ன விபரீதம் விளையுமோ என்ற பீதியோடு ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு நின்றனர்.

இடும்பண்ணன் மீண்டும், "பின்னே என்ன அண்ணேன்! எங்க பிள்ளை குட்டிங்கெல்லாம் சோறில்லாம

பட்டினியாலே சாவுது! வூட்டுக்குப் போனு பொம்மனுட்டிங்க எங்களைப் பிச்சிப் புடுங்கருங்க.—நீ தலைவனின்னு பேர் வச்சிகிட்டு எங்க வயிற்றுப் பிழைப்புக்கு வழி பண்ணுமே இருக்கறையே! நாங்க என்னுதான் பண்ணறதுன்னு நினைச்சிக்கிட்டிருக்கிறே;—நாம்ப வெளியே கொள்ளைக்குப் போய் ஏறக்குறைய ரெண்டு வாரமாவப் போவுது! நீ என்னமோ வர்ரதும் போறதுமா இருந்தா நாங்க என்ன பண்றது?" என்று துணிகரமாகக் கேட்கலானுன்.

மற்ற கொள்ளைக்காரர்களுக்கு இடும்பண்ணன் உக்கிரமான தோரணையில் பேசுவது பிடிக்கவில்லையே யொழிய தங்க ளெல்லாரது வயிற்றுப்பாட்டுக்கும் வழி பண்ணும் படிக் கேட்பது திருப்தியாகவே இருந்தது. வீரமார்த்தாண்டன் இடும்பண்ண தேவனைப் பார்த்தவாறே நின்றிருந்தானே யொழிய, வாய் திறந்து ஒன்றுங் கூறவில்லை.

இவ்விதம் இவன் மௌனஞ் சாதிப்பது இடும்பண்ணனுக்கு இன்னுந் தைரியத்தைக் கொடுத்தது. எனவே அவன், "என்ன அண்ணேன்! நான் என்னமோ கேட்கறேன்; நீ பேசாம இருக்கறையே!—உம்.—உன்னுலே ஒன்னுஞ் செய்ய முடியவில்லை யின்னு, சொல்லிடேன் அண்ணேன்! அதுக்கு ஏன் தலைவன்னு பேர் வச்சிக்கிட்டு இருக்கிறே?—செந்தலைப் பூச்சிங்க உருட்டல் மருட்டலைப் பாத்துட்டுப் பயமாயிடுது போலிருக்கு. உனக்குப் பயமாகியமா இருந்தா என்னண்டை விட்டுடு, அண்ணேன்! எல்லாத்தையும். என்னைத் தலைவனுக்கிட்டு நீ சும்மா இரு; நான் எம்பிட்டு வேலை செய்யறேன் பார்! ஊரிலே உலவத்திலே இருக்கிற பொருளெல்லாம் இஞ்சே போர் போரா வந்து குவிய வைச்சிடறேன்........" என்று நீட்டி முழக்கி வீரப்பிரதாபம் பேசலானுன்.

அப்போதும் வீரமார்த்தாண்டன் மூச்சு விடவில்லை. இடும்பண்ணனைக் கூர்ந்து நோக்கி விட்டு, மற்ற சகாக்களையும் திரும்பிப் பார்த்தான். பிறகு என்ன நினைத்தானே அவன் பழையபடி அவ்விடத்தை விட்டு நடக்கலானன்.

வீரமார்த்தாண்டனது அப்போதைய நிலையைக் கண்ட கொள்ளைக்காரர்கள் அவனுக்குச் சித்த சபல மேதேனும் ஏற்பட்டு விட்டதோ என்று சந்தேகித்தனர். தொண்டு கிழவனான முருகன் மட்டும் வீரமார்த்தாண்டனுடைய இவ்விதப் பெருமாறுதலுக்கு ஏதோ காரண மிருக்க வேண்டுமென்று ஊகித்தான்.

தான் சொல்லிய வார்த்தைகளைப் பொருட்படுத்தாது வீரமார்த்தாண்டன் செல்வதைக் கண்ட இடும்பண்ண தேவன் ஆத்திரம் பொங்கியவனாய் ஒரே தாவாகத் தாவி அவன் எதிரே போய் நின்று வழி மறித்துக்கொண்டு, "என்ன! நான் சொல்றேன்; நீ பாட்டுக்கு நடையைக் கட்டுறயே! நான் என்ன மனுஷன்னு நினைச்சிட்டையா! உன் மனசிலே. என்னமோ நம்ம தலைவனாச்சே—பழைய தலைவன் நம்ம கையிலே பிடிச்சு கொடுத்துட்டு போனானே; அவன் சொல்லுக்கு மதிப்பு கொடுக்கணுமே இன்னு பார்த்தா, நீ சும்மா ஓடறையே!—நீ ஆச்சி; நானாச்சி. இன்னக்கு இரண்டிலே ஒன்னு பாத்திடறதே, சரி.........." என்று கூறியவாறு அவன் கைகளைப் பற்றலானான். இதைக் கண்டு மற்ற சகாக்கள் துடி துடித்தனர். அவர்களில் இரண்டொருவர் 'இடும்பண்ணன் செய்வது தான் சரி; வீரமார்த்தாண்டனுக்கு வேண்டும்' என்று எண்ணி அவனை ஆதரித்துக் கை தட்டலாயினர். கிழவன் முருகனுக்கு இந்நிலைமை மிகவும் கவலையைத் தந்தது. எனவே, அவன் இடும்

பண்ணனை விலக்க பதை பதைப்போடு அவர்களை நெருங்கி ஞன். மற்றவர்களும் கிழவனைப் பின் தொடர்ந்தனர்.

இடும்பண்ணன் கைகளைப் பற்றியதுமே வீரமார்த் தாண்டன் பாயப்போகுமுன் பிடரியை உதறிக் குலுக்கும் சிங்கத்தைப் போல் ஒரு குலுக்கு குலுக்கிக் கைகளை உதறி விடுவித்துக்கொண்டு வலது கையை முஷ்டி செய்து இடும் பண்ணன் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான். அவ் வொரு குத்திலேயே ஆஜாநுபாகுவான இடும்பண்ணன் நெடுமரம்போல் ஒரு மூலையில் போய் சாய்ந்துவிட்டான். பொறி தட்டும் நேரத்திற்குள் இவை யாவும் நடந்து விட்டன.

இதைக் கண்டு மற்றவர்கள் நடுநடுங்கிவிட்டனர். இடும்பண்ணன் தலை கிறுகிறுத்தது. அவனால் உடனே சமாளித்துக்கொண்டு எழுந்திருக்க முடியவில்லை. அவன் கை குத்துண்ட கன்னத்தைத் தடவியது. வீரமார்த்தாண் டன் கோபத்தால் முகஞ் சிவக்க நின்றுன். சும்மா இருந் தால் எங்கு இன்னும் விபரீதமான நிலைமை ஏற்பட்டு விடுமோ எனப் பயந்த முருகன் மெள்ள வீரமார்த் தாண்டன் அருகு சென்று, "வீரா! இடும்பன் தெரியாது ஏதோ சொல்லிவிட்டான்; அதை மனதில் வைக்காதே! வா, நாம் போகலாம்" என்று கூறிக் கையைப் பற்றி அவ்விடத்தை விட்டு அழைத்துப்போக முயன்றுன். வீர மார்த்தாண்டனுக்கு முருகனிடம் தனிப்பட்ட மதிப்புண்டு. அவன் திருடர் கோஷ்டியைச் சேர்ந்தவனு யிருந்தாலும், பல நல்ல குணங்கள் நிறைந்தவன்; இனிமையாக யாவ ரிடமும் பழகுபவன்; இங்கிதமாகப் பேசி மற்றவர்களைக் களிக்கச் செய்பவன். அதிலும் வீரமார்த்தாண்டனிடம் அத்யந்த அன்புடையவன்; பழைய தலைவன் வீரகேசரி

யிடம் எவ்விதம் மதிப்பும் அன்பும் வைத்திருந்தானோ அவ் விதமே இவனிடமும் வைத்திருந்தான். ஆதலால், அவன் அழைக்கவும், அவனது வேண்டுகோளை மறுக்க முடியாமல் அவன் பின்னே செல்ல முயன்றான். இதற்குள் அவனது கோபம் ஒருவாறு தணிந்தது. 'இடும்பண்ணன் வரம்பு மீறித் தன்னிடம் மரியாதைக் குறைவாக நடந்துகொண்டா லும், தான் அவ்விதம் அவன்மீது கோபங் காட்டியிருக்கக் கூடாது. வயிற்றுப் பிழைப்புக்காகத்தானே அவன் தன் னிடம் மன்றாடினான்' என்று பலவாறு எண்ணி அவன் மனம் வருந்தியது. இடும்பண்ணனிடம் அவன் இரக்கங் காட்டலானான்.

ஆகவே, அவன் முருகனைக் கை பிடித்து நிறுத்தி, "அண்ணா! இடும்பண்ணன் மீது ஒரு தப்பிதமுமில்லை. நான் நடந்துகொண்டது தான் தவறு; வயிற்றுச் சோற் றுக்கு வழி யில்லை என்றால் அவன்தான் என்ன செய்வான்? நீங்கள்தான் என்ன செய்வீர்கள்?......." என்று கூறி மனம் பொருமி, இடும்பண்ணன் இருக்குமிடத்தை நோக்கி னான். அவன் அப்போதுதான் தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்திருக்க முயன்று கொண்டிருந்தான். வீர மார்த்தாண்டன் திடீரென முருகன் கையை விட்டுவிட்டு ஓடிப்போய் இடும்பனைத் தன் இரு கைகளாலும் தூக்கி அப்படியே தழுவிக் கொண்டான்.

"இடும்பா! கோபித்துக்கொள்ளாதே! நான் உன்னி டம் மிருகத்தனமாக நடந்து கொண்டேன். என்னை மன் னித்துவிடு........உனக்கு......உன் குடும்பத்துக்குப் பணம் தானே வேண்டும்; உனக்குத் தேவையான பொருளை என் பெட்டியிலிருந்து எடுத்துக்கொள்கிறதுதானே!—ஓஹோ! அதிலிருந்தது எல்லாம் போன வாரமே செலவாய்விட்டது

இப்போதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. பக்கத்தூர் ஏழைகளுக்கு என்னிடமிருந்ததைப் பகிர்ந்து கொடுத்து விட்டேனன்ரே!—அது போகட்டும்; இதோ போய் எங் காயினுங் கொள்ளை யடித்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறியவன் மற்றவர்களையும் நோக்கி, "ஏன்? உங்க ளுக்கும் கூடத்தான்; நீங்களெல்லாம் இங்கேயே இருங் கள்; நான் இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்" என்று தேறுதல் கூறினன்.

இடும்பண்ணன் கண்ணீர் சிந்தினன். இவ்வளவு நற் குணம் வாய்ந்த தலைவனிடம் தான் நடந்துகொண்ட விதம் எவ்வளவு கேவலமானது என்று உணர்ந்து வெட்கித் தலை குனிந்தான். அவனது நன்றி யறிதலும் மன நெகிழ்ச்சியும் கண்ணீராக வழிந்தோடின. வீரமார்த்தாண்டன் அவனைத் தட்டிக் கொடுத்து விட்டு, முருகன் முதலியவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியேறினன்.

"இவனன்ரே தலைவன்! இவனன்ரே வீரன்! வள் ளல்!" என்று வாய்விட்டு வாழ்த்தினன் முருகன். மற்ற கொள்ளைக்காரர்களும் நன்றியும் விசுவாசமும் முகத்தில் பிரகாசிக்க அவன் செல்லுந் திசையே நோக்கிக்கொண்டு நின்றனர்.

தன் சகாக்களை விட்டு வந்த வீரமார்த்தாண்டன் பல மைல் தூரம் நடந்து கடைசியாக, சேத்தூர் ஜமீனை யடைந்து, ஜமீந்தாரினி மாளிகையில் புகுந்து மேலே கூறிய வாறு கொள்ளையிட முயன்ருன். பிரஹதாம்பாளிடம் 'தான் இனி கொள்ளை யிடுவதில்லை; திருடுவதில்லை' என்று கொடுத்த வாக்குறுதியையும் மீறிப் பழையபடி கொள்ளைத் தொழிலில் ஈடுபடலானுன். காதல் மேலோங்கிய நிலையில் கொடுத்த வாக்குறுதி, கடமை யுணர்ச்சியில் கட்டுண்டு

மறைந்தது. காதல் பெரிதா? கடமை பெரிதா? என்ருல், தன் சொந்த காதலை விட—தன்னொருவனுக்கு மட்டுமே இன்பமளிக்கக் கூடிய காதலை விட—பலர்க்கும் நன்மை செய்யக்கூடிய கடமையே பெரிதென கண்டான். அத் தீர்மானத்தில் முன்னைய உறுதி அடிபட்டுப் போய்விட்டது. கடமை யுணர்ச்சியோடு, மனித ஜீவாபிமானமும் அவன் மனதில் ஆதிக்கங் கொண்டு மேலோங்கிய நிலையில் அவன் கொள்ளையிடத் துணிந்ததில் ஆச்சரிய மென்ன இருக்கிறது?

* * * *

இனி, முன்னைய கதைத் தொடர்புக்கு வருவோம். ரமணி, "என் அம்மா! உங்கள் பிள்ளையே ஒருவன் இருந்து அவனே இது போன்ற குற்றஞ் செய்து விட்டால் அவனைத் தண்டிக்கவா செய்வீர்கள்? மன்னித்துவிட மாட்டீர்களா அம்மா! அது போல, உங்கள் மகனைப் போன்றிருக்கும் இவனை மன்னித்து விட்டுவிடுங்கள், அம்மா! இல்லாவிடில் நம் ஆட்கள் இவனைக் கண்டபடி இம்சிப்பார்கள்" என்று உருக்கமாகக் கூறியது, வீரமார்த்தாண்டனது உணர்ச்சியைத் தூண்டி விட்டு விட்டது. எனவே, அவன் மனமுருகி வாய் விட்டுக் கதறத் தொடங்கி விட்டான். அவன் தான் இருக்கும் ஆபத்தான நிலையைச் சிறிதும் பொருட்படுத்தவே யில்லை.

தாயன்பினுல் தாபங் கொண்டு ஜமீந்தாரிணி மனம் உள்ளுக்குள் பிரலாபித்துக் கொண்டிருந்தது. அவளது விழிகளிலிருந்து பனி போல் நீர் துளித்துக் கொண்டிருந்தது. இந் நிலைமையில் அங்கு சிறிது நேரம் அமைதி நிலவிக் கொண்டிருந்தது. வீரமார்த்தாண்டன் என்ன நினைத்தானே தெரியவில்லை. திடீரென எழுந்து ஜமீந்தாரிணி

இருக்குமிடம் ஓடி அவள் முன் மூழந்தாளிட்டு, "அம்மா! உங்கள் ஜமீன் ஆட்களைக் கூப்பிட்டு என்னைப் பிடித்துக் கொடுத்து விடுங்கள்; நான் பாவி; பஞ்சமா பாதகமும் அஞ்சாது செய்பவன்; அன்னமிட்ட வீட்டில் கன்னம் வைப்பவன்; நன்றி செய்தவர்களுக்குத் துன்பம் விளை விப்பவன்; தஞ்சமென அடைந்தோரை நெஞ்சார நாசஞ் செய்பவன். நான் சமூகத்துக்கே விரோதி; எனக்குக் குத்தும் உதையும் கொடுப்பதுதான் வெகுமானம்; கை கால்களுக்குத் தளையிட்டுக் காராக்கிருகத்தில் தள்ளுவது தான் நியாயம். சகோதரி கூறுவதைக் கேட்காதீர்கள். பாதகனுக்கு மன்னிப்பளிப்பது மகா பாவம். கூப்பிடுங்கள்; உங்கள் ஆட்களை; கட்டிக்கொண்டு போகச் சொல்லுங்கள் என்னை" என்று கூறி மன்றாடிக்கொண்டே வந்தவன், உணர்ச்சி தாங்க மாட்டாது மூர்ச்சித்து ஜமீந்தாரினியின் காலடியிலேயே விழுந்துவிட்டான்.

இதைக் கண்டு ஜமீந்தாரினியும் ரமணியும் வியப்புந் திகைப்பும் கொண்டனர். ரமணி வீரமார்த்தாண்டனிடம் ஓடோடியும் வந்தாள். இதற்குள் ஜமீந்தாரினி துடிதுடிப் போடு அவனைத் தூக்க முயன்றாள். எஜமானியும் அவளது குமாரத்தியும் திருடனை மூர்ச்சை தெளிவிக்க முயல்வதைக் கண்ட பணிப்பெண் தான் இதுவரை கொண்டிருந்த பயத்தை யுதறிவிட்டு ஓடோடியும் வந்து அவர்களுக்கு முன் வீரமார்த்தாண்டனைத் தூக்கிப் படுக்கையில் கிடத்த முயன் றாள். ரமணி நீர் கொண்டுவரச் செய்து அவன் முகத்தில் தெளித்தாள். பணிப்பெண் விசிறினாள். எனினும், இன்னும் மூர்ச்சை தெளியவில்லை. ஜமீந்தாரினி அவனுக்குச் சுவாசம் வருகிறதா எனப் பார்த்தாள். சந்தேகத்தால் இருதயத் துடிப்பையுங் கவனித்தாள்.

வீரமார்த்தாண்டன் முகத்தை நோக்க நோக்க ரமணிக்கு அவன் பால் அதிக அநுதாபமும், விசுவாசமும் உண்டாயின. மிகக் கொடிய ஜமீந்தார் மரத்தில் கட்டி விட்டுச் சாட்டையால் அடித்த போதும் மனங் கலங்காது வீரத்துடன் நின்ற வீரமார்த்தாண்டன்—இங்கு பெண்களாகிய தங்களிடையில் இவ்விதம் மனம் பேதலித்து தன்னைத் தண்டிக்குமாறு வேண்டுவானேன்? இம் மாறுதலுக்குக் காரணமென்ன? என்று அவள் வெகுவாக யோசிக்கலானாள்.

வீரமார்த்தாண்டனுக்கு உபசரணை செய்வதில் மிகக் கருத்தூன்றி நின்ற ஜமீந்தாரினி அவனது வலது புஜத்திலுள்ள தழும்பைக் கண்டு, "ஆ" என வாய்விட்டுக் கூவினாள்.

இதைக் கேட்டு ரமணி, "என்ன அம்மா!" எனத் தன் தாயின் முகத்தை நோக்கிய வண்ணம் பரபரப்போடு கேட்டாள்.

வீரமார்த்தாண்டனின் முகத்தையும் உருவ அமைப்பையும் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த ஜமீந்தாரினி ரமணி என்னமோ கேட்டதைச் செவியுற்றுத் திடுக்கிட்டவளாய், "ஒ—ன்—று—மி—ல்—லை.........." என்று இழுத்தாள்.

இச்சமயத்தில் வீரமார்த்தாண்டனுக்குச் சிறிது சிறிதாக உணர்வு வரவும், இப்படியும் அப்படியுமாக புரண்டு கொடுக்கலானான். பிறகு அவன் மெதுவாகக் கண்ணை விழித்துப் பார்த்தான். தன்னெதிரே ஜமீந்தாரினியும் ரமணியும் இருந்து தன்னை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அப்போது தான் அவனுக்கு மெல்ல மெல்ல பழைய நினைவு வரலாயிற்று. எனவே, அவன் இரு

பக்கமுந் திரும்பிப் பார்த்துக் கொண்டு எழுந்திருக்க முயன்முன்.

"அப்பா, உடம்பை அலட்டிக்கொள்ளாதே! இன்னும் சிறிது நேரம் அப்படியே படுத்திரு................" என்று பரி வோடு கூறினுள் ஜமீந்தாரினி.

"இப்போது உடம்பு எப்படி யிருக்கிறது?..........." என்று ஆதரத்தோடு கேட்டாள் ரமணி.

"எல்லாம் சரியாய் விட்டது. எனக்கு இப்போது ஒன்றுமில்லை" என்று கூறியவண்ணம் எழுந்தான். பின்னர் அவன் ஜமீந்தாரினியையும் ரமணியையும் மாறி மாறிப் பார்த்த வண்ணம், "அம்மா! உங்கள் மாளிகையில் கன்ன மிட்டுக் கொள்ளையிட வந்த இந்தப் பாவியிடத்திலா உங்க ளுக்கு இவ்வளவு பரிவு? நான் அதற்குப் பாத்திரமானவனு? தன்னைக் கடிக்கவந்த நாகப்பாம்புக்குப் பாலூட்டி வளர்க்க முயல்வாரும் உலகி லுண்டா...............?" என்று கேட் டான். அவன் கண்களி லிருந்து பொல பொல வென நீர் சிந்தியது. இதைக் கண்டு வீராங்கனையான ரமணியும் கண் ணீர் வடித்தா ளென்ருல், ஜமீந்தாரினியின் நிலையைக் கேட் கவா வேண்டும்? அவள் கண்களில் ததும்பிய நீரைத் தன் முந்தானையால் துடைத்த வண்ணம், "அது கிடக்கட் டும், குழந்தாய்! நீ யார்? உனக்குப் பெற்ருே ரில்லையா? நீ என் மிகவும் கேவலமானதும், ஆபத்தானதுமான கொள்ளை யடிக்குந் தொழிலை மேற்கொண் டிருக்கிருய்? உன்னுல் கௌரவமான வேறு எத் தொழிலும் செய்து பிழைக்க முடியாதா!.............." என்று கேட்டு வந்தவள் தன் மன எழுச்சியைத் தாங்க மாட்டாது விம்மித முற்ருள். இச் சமயத்தில் ரமணி பணிப் பெண்ணுக்கு எதோ ஒரு வேலை யிட்டு மெள்ள அவ்விடத்தி னின்றும் அனுப்பி விட்டாள்.

கண்ணீர் பார்வையை மறைக்க வீரமார்த்தாண்டன் ஜமீந்தாரிணியை நோக்கி, "தாயே!—ஆம்; பெற்ற தாயில்லா எனக்குத் தாய் போன்றுதான் காணப்படுகிருய்.—நான் யாரென்று எனக்கே தெரியாது. இந் நிலேயில் என்னே ஈன்றெடுத்த தாய் தந்தை யார் என்று எனக்கு எப்படித் தெரியும்? ஆனல், எனக்குத் தந்தை ஸ்தானத்தி லிருந்து அருமையாக வளர்த்தவன் பிரபல கொள்ளேக்காரத் தலேவனுன வீரகேசரி என்பதை நான் அறிவேன். அவன் ஏவிய வழிதான் இவ்வளவு காலமாக இக் கொள்ளேத் தொழிலே நடத்தி வருகிறேன். கொள்ளேக்காரர்களிடையே வளர்ந்து —அவர்களுடனேயே அல்லும் பகலும் பழகிவந்த எனக்கு இந்தக் கொள்ளே யடிக்குந் தொழில் மிகவும் கேவலமானதென்றும் ஆபத்தானதென்றும் எப்படி தெரியும்............?" என்று உணர்ச்சியோடு கூறிக்கொண்டே வந்தான்.

இச்சமயத்தில் ஜமீந்தாரிணி இடைமறித்து ஏதோ கேட்க வாயெடுத்தாள். அதே தருணத்தில் சாளரத்தின் வழியே இருந்து யாரோ ஒரு ஆள் உள்ளே குதிக்குஞ் சப்தங் கேட்டது. மூவரும் திடுக்கிட்டு ஏக காலத்தில் திரும்பிப் பார்த்தனர். அவர்கள் முன் ஒரு கிழவன் நின்று கொண்டிருந்தான். "ஆ! முருகா! நீயா?" என்று வீரமார்த்தாண்டன் வியப்போடு கேட்டான்.

"ஆம், நான் தான்" என்று கூறிவிட்டு முருகன் ஜமீந்தாரிணி பக்கம் திரும்பி வணங்கி, "அம்மா! உங்கள் அநுமதி யில்லாது உள்ளே வந்ததற்காக என்னே மன்னிக்க வேண்டும்.—உங்கள் மனதில் இப்போது என்ன சந்தேகம் எழுந்து வாட்டிக்கொண் டிருக்கிறதோ அதைத் தீர்க்கவே நான் துணிந்து வந்தேன்..........." என்று பீடிகை போட்டு பேச ஆரம்பித்தான்.

மூவரும் வியப்பே வடிவாய் நின்று முருகனை நோக்கினர். ஒவ்வொருவரது உள்ளமும் விவரிக்க வொண்ணுத எண்ணங்களால் நிரம்பி யிருந்தது.

முருகன் இங்கு எப்படி வந்தானென்று வாசகர்களும் ஆச்சரிய முறலாம். வீரமார்த்தாண்டன் இவர்களை விட்டு வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் முருகனுக்கு, இவன் ஆத்திரத்தில் எங்காயினும் போய் எக்கசக்கமாய் மாட்டிக்கொள்ளப் போகிருனென்ற சந்தேக முண்டாகவே, அவனைப் பின் தொடரலானுன். வீரன் சேத்தூர் ஜமீனில் புகுந்ததும் இவனுக்கு ஒருபக்கம் மகிழ்ச்சியும், ஒரு பக்கம் பயமும் ஏற்பட்டது. ஆயினும், அவன் அறியாமலே பின் தொடர்ந்து மேலும் என்ன செய்கிருனெனக் கவனிக்கலானுன். கடைசியில் நடந்தவை நாமறிந்ததே.

முருகன் மீண்டும் பேசத் தொடங்கி, "அம்மா! வீரமார்த்தாண்டன் யாரென்பதைப் பற்றி இனியும் சந்தேகம் வேண்டாம். அவன் நீங்கள் சில விநாடிகளுக்கு முன் நினைத்தபடி உங்கள் செல்வக்குமாரனே யாவன். அவன் என் மகனு யிருக்கக்கூடாதா என்று உங்கள் மனம் தாபப்பட்ட தல்லவா? அதன்படியே, அவனை உங்கள் மைந்தனுய் அடைந்து விட்டீர்கள்..............." என்ருன்.

ஏககாலத்தில் மூவரும் முருகன் பேச்சை இடைமறித்து நிறுத்தினர்.

"வீரமார்த்தாண்டன் என் புத்திரன் தானு? அது உனக்கு எப்படி தெரியும்?........" என்று ஜமீந்தாரிணி கேட்டாள்.

"முருகா! என்ன நானு ஜமீந்தாரிணியின் புதல்வன்? நானு?......" என்று பேராச்சரியத்தோடு கேட்ட வண்ணம் பஞ்சணையில் சாய்ந்தான் வீரன்.

"அப்படியானல், வீரமார்த்தாண்டன் என் சகோதரனு? உண்மையாகவா?......" என்று ரமணி தனக்குத் தானே கேட்டுக்கொண்டாள். அதே சமயத்தில் அவளுக்கு ஜமீந்தாரினி அன்று பகல் தனக்கு ஒரு புத்திரனும் உண்டென்றும், அவன் காணுமல் போய்விட்டா னென்றும், அவன் எங்கிருக்கிரு னென்றே தெரியவில்லை யென்றும் கூறியது நினைவுக்கு வந்தது.

முருகன், "எனக்கு எப்படி தெரியுமென்று கேட்கிறீர்கள்? எங்கள் தலைவன் வீரகேசரி எல்லா விஷயங்களையும் கூறி யிருக்கிருன். அத்துடன், வீரமார்த்தாண்டன் நாலைந்து வயதா யிருக்கும்போது, இந்த ஜமீன் சின்ன ஐயாவும், ஐய ரொருவரும் என் தலைவனிடம் வந்து இவனைத் தூக்கிக்கொண்டு வந்து கொலை செய்து விடும்படியும், அதற்குத் தகுந்த வெகுமானம் தருவதாகவும் ஒப்பந்தஞ் செய்து கொண்டதை நான் உடனிருந்து கேட்டேன். என் தலைவன் உத்தரவின்படி நான் தான் உங்கள் புத்திரனை உங்களிட மிருந்து பிரித்துக் கொண்டு போனேன். ஏங்கள் தலைவன் பரமதயாளு வாதலால், அவர்கள் கூறிய படி இவனைக் கொலை செய்ய மனம் வராது தன் அருமைப் புத்திரனுகப் பாவித்து வளர்த்து வந்தான். அவன் இறக்குந் தருவாயில் என்னைக் கூப்பிட்டு, ஒரு ஜமீனுக்கு உரியவனுக வுள்ள இவனைத் தான் அநியாயமாகத் தீய வழியில் பழக்கி விட்டதாகவும், உரியவர்க ளிடத்தில் கொண்டு போய் விடலா மென்றுலோ கொள்ளைக்காரனுக இருக்கும் அவனை ஏற்றுக்கொள்ள மாட்டார்க ளென்றும், தான் உண்மையைக் கூறினும் நம்பமாட்டார்க ளென்றும், பின் எப்போதேனும் தகுந்த சந்தர்ப்பம் நேர்ந்தால் உண்மையைக் கூறி இவனை உரியவர்களிடம் ஒப்படைக்கும்படியும் கூறிவிட்டு

இறந்தான். இந்த இரகசியம் எனக்கும் தலைவனுக்கும் தான் தெரியும். ஆதலால், என் வார்த்தையை நம்புங்கள். வீரமார்த்தாண்டன் உங்கள் செல்வ மகனே. இவன் இந்த ஜமீனுக்குச் சொந்தக்காரன்" என்று கூறி நிறுத்தினான்.

ஜமீன்தாரினியின் முகம் மகிழ்ச்சியையும் தெளிவையும் காட்டியது. அவள் ஆழ்ந்த யோசனையோடு, "ஆம், நினைவுக்கு வருகிறது. இப்போதுதான் எல்லாம் ஞாபகத்துக்கு வருகிறது. சுமார் இருபது வருஷங்களுக்கு முன் ஒருநாள் இரவு ஞானசேகரன்—ஆம்; இதோ இருக்கும் என் மகன் பெயர் ஞானசேகரன்தான்—காணமல் போய்விட்டான். அவனுக்கு அப்போது நாலைந்து வயதுதா னிருக்கும். என் பக்கத்தில் வளர்த்தப்பட்டுக் கண்ணுறங்கிக் கொண்டிருந்த என் கண்மணி திடீரென மறைந்துவிட்டது எனக்கும் என் கணவருக்கும் அதிக ஆச்சரியத்தையும் மிகுந்த துக்கத்தையும் கொடுத்தது. என் கணவர் ஜமீன் ஆட்களை நாலாபக்கமும் அனுப்பி மூலை முடக்குகளிலெல்லாம் தேடச் செய்தார். காணமற் போன ஞானசேகரனைக் கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு 10,000 ரூபாய் பரிசு தருவதாக, பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தினர். பிரபல துப்பறியும் நிபுணர்களை இது சம்பந்தமாக நியமித்தார். ஒன்றாலும் பயனில்லை. காணமற் போன மைந்தன் காணமற் போனவனே. ஞானசேகரன் தரித்திருந்த விலை யுயர்ந்த நகைகளுக்கு ஆசைப்பட்டு யாரோ திருடர்கள் தான் அவனைத் தூக்கிச் சென்றிருக்கவேண்டும் என்று நாங்கள் முதலில் எண்ணினோம். ஆனல், எங்கள் மாளிகையில் வேறெப் பொருளும் திருடு போகாததைக் காணவே, எங்களுக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது. ஏதோ கொள்ளையிட வந்தவனாயின், மாளிகையிலுள்ள விலையுயர்ந்த பொருள்களை யெல்லாம் விட்டுவிட்டு, குழந்தை பூண்டுள்ள நகைகளை மட்டுந்தானா திருட

வருவான்? அதற்காகக் குழந்தையையே தூக்கிக் கொண்டு போய் விடுவானு? இதில் ஏதோ சூதிருக்கிறது என்று எங்களுக்குப் பட்டது. ஆனல் நாங்கள் எவ்வளவோ பிரயாசைப்பட்டும் அதன் மர்மம் வெகுநாள் வரை விளங்காமலே இருந்து வந்தது. இரண்டொரு வருஷங்கள் கழிந்த பிறகுதான் உண்மை ஒருவாறு வெளிப்பட்டது. எங்கள் அருமை மைந்தன் காணமற் போனதற்கு என் கணவரது சகோதரனே மூலகாரணம் என்று அறிந்தோம். அப் படுபாவி, எங்கள் மகனைத் தொலைத்து விட்டால், என் கணவரது காலத்துக்குப் பிறகு தான் ஜமீந்தாராய்விடலாம் என்ற பேராசையாலேயே இவ்விதப் பாதகச் செயலைத் துணிந்து செய்தான் என்று எங்களுக்குத் தெரிந்தது. ஆனல், அவனது சூழ்ச்சியின் இரகசியத்தைக் கடைசி வரை எங்களால் அறிய முடியாமலே போய் விட்டது. எங்கள் மகன் உயிரோடு இருக்கிருனு? இல்லையா? என்ற தகவலே தெரியாது போய்விட்டதால், எங்களுக்கு ஏற்பட்ட தாங்க முடியாத துக்கமும் ஏக்கமும் நிலைத்து நின்று விட்டது. மிக்க அன்போடும் ஆதரவோடும் வளர்த்து வந்த தமது தம்பி எங்களுக்கு இழைத்த கொடுமையையும் துரோகச் செயலையும் எண்ணி எண்ணி என் கணவர் மனம் புண்ணுனர்.

"என் மைத்துனனைக் குற்றஞ் சொல்வதிலும் பயனில்லை. விதி அவ்விதமெல்லாம் எங்களுக்குச் சதி செய்து விட்டது. என் கணவருக்கு நான் இரண்டாவது தாரமாக வாழ்க்கைப்பட்டேன். முதல் மனைவி வாயிலாக மகப்பேறு இல்லாததால் தான் அவர் என்னை மணந்தார். தன் தமையனர்க்கு நீண்ட நாட்களாகப் பிள்ளை பிறக்காததால், அவருக்குப் பின் தானும் தன் பிள்ளைகளுமே வார்சுகள் என்று

மனப்பால் குடித்துக்கொண்டிருந்த என் மைத்துனனுக்கு இவ்விரண்டாவது விவாகம் பொருமையையும் ஆத்திரத்தை யும் கொடுத்தது. இங்ஙிலையில் இரண்டொரு வருஷத்துக்குள் எனக்கு ஞானசேகரன் பிறக்கவே, பொதுவாக எல்லார்க் கும் மகிழ்ச்சியைத் தந்தது. என் கணவருக்கு எவ்வளவுக் கெவ்வளவு சந்தோஷம் உண்டாயிற்றோ, அவ்வளவுக்கவ்வ ளவு என் மைத்துனனுக்கு வயிற்றெரிச்சல் உண்டாயிற்று. இவ் வயிற்றெரிச்சலும் பொருமையும் சேர்ந்தே என் அருமை மகனைத் தொலைத்து விடும் கொடிய செயலுக்கு அவனைத் தூண்டியது. இச்சதிச் செயலுக்கு எனது சக் களத்தியும் உடந்தையென்று பின்னால் தெரிந்தது. தன் வாழ்வுக்குப் போட்டியாக வந்தேன் என்ற காரணத் தால் அவளுக்கு என்மீது பொருமை இருப்பது இயல்பு தானே! எனக்குப் பிறந்த பிள்ளை தனக்குப் பிறந்திருந்தால் இந்த ஜமீனுக்குத் தன் மகனன்றோ உரியவனாயிருப்பான் என்று எண்ணியபோது அவளது பொருமைத் தீ கொழுந்து விட்டெரிந்தது. அதுவே என் மைத்துனனின் சதிச்செய லுக்கு அவளை உடந்தையாயிருக்கும்படி செய்தது. ஹூம்- இவ்வித கெட்ட எண்ணங்கொண்டு பாதகச் செயலைச் செய் தார்களே! அவர்கள் என்ன வாரிக்கொண்டு போய்விட்டார் கள்? என் சககளத்தி திடீரென காலரா கண்டு அகால மரண மடைந்தாள். என் மைத்துனனே தான் செய்துவந்த அக் கிரம அட்டூழியங்களின் பயனாக, குடி மக்களில் ஒருவனால் கோரமாகக் கொலை செய்யப்பட்டு இறந்தான்.

"ஞானசேகரன் காணமற் போனது பொதுவாக எங்கள் இருவருக்கும் பெருந் துயரத்தை யளித்ததாயினும், என்னைக் காட்டிலும் என் கணவருக்கே அதிகமாக வருத் தத்தைத் தந்தது என்று கூறவேண்டும். இதே வருத்தத்தால்

அவர் தேகம் உருக் குலேந்தது. இவ்விதம் இரண்டு மூன்று வருடங் கழிந்திருக்கும். இதனிடையே, நான் கருப்ப முற்று ஒரு பெண்மகவைப் பெற்றெடுத்தேன். இது என்னைவிட என் கணவருக்கு மீண்டும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. எங்கள் வாழ்க்கையில் அஸ்தமித்த சந்தோஷ மாகிய சூரியன் ரமணியின் ஜனனத்தால் மீண்டும் உதய மாகிப் பேரொளியுடன் பிரகாசிக்கலானுன். ஆனுல், எங்க ளது இம்மகிழ்ச்சி நீடித்து நிற்க வில்லே. ரமணி பிறந்தது என் மைத்துனனுக்குப் பிடிக்கவில்லே. தன் ஆசையில் மண் ணேப் போட்டதாக அவர் கருதினர். எனவே, இக்குழந்தை யையும் தொலேக்க அவர் கறுவிக்கொண்டிருப்பதாக எனக் குத் தெரிந்தது. இச் செய்தி என் உயிரைக் கொள்ளே கொள் வதுபோ விருந்தது. நான் பதை பதைத்தேன்; துடிதுடித் தேன். இப் பேராபத்திலிருந்து என் அருமைக் குழந்தையை எவ்விதந் தப்புவிப்பது என்று அறியாது மயங்கினேன். என் கணவருக்கு இச் செய்தியைத் தெரிவித்தால் அவர் மனம் எவ்வாறு வருந்துமோ ? என்ன செய்வாரோ ? என்ன விபரீ தம் நேருமோ ! என்று நான் பயந்தமையால், மீண்டும் என் மைத்துனன் சதிச் செயல் புரிய இருப்பதைப்பற்றி அவ ரிடம் தெரிவிக்கவில்லே. என் மைத்துனன் சூழ்ச்சிச் செயலே எவ்விதமோ தெரிந்து எனக்கு அறிவித்த எஸ்டேட் மானேஜர் சந்திர சேகர ஐயர் இவ்விஷயத்தை அவருக்கு முன்னதாக எச்சரிக்க வேண்டாமென்று தெரிவித்தார். அத்துடனில்லாது, அவர் மற்றெரு யோசனேயும் கூறினர். நாங்கள் எவ்வளவுதான் கண்காணிப்பாகக் குழந்தையைக் காத்து வந்தாலும், என் மைத்துனன் தான் நினைத்தபடி செய்து முடித்துவிடுவானென்றும், ஆதலால் அவனது சூழ்ச்சியி லிருந்து விடுபடவேண்டுமானுல், நான் இக் குழந் தையை அவர் சொல்லுமிடத்தில் அடைக்கலப் படுத்தி

வைக்க வேண்டுமென்றும், அவர் சிபார்சு செய்யும் சரசாங்கி பெரிய குடும்பத்தி லுதித்தவளென்றும், அவளுக் குப் பிள்ளை யெதுவு மில்லாததால் தன் குழந்தைபோல அருமையாக வளர்ப்பாளென்றும், நாம் எப்போது கேட் கிறோமோ அப்போது திருப்பிக் கொடுப்பாளென்றும் ஆனால், இவ்விதம் செய்வதெதுவும் ஜமீந்தாருக்குத் தெரி யக்கூடாதென்றும், முன்போல் களவு போய்விட்டதாகவே அவர் நினைக்கவேண்டுமென்றும், அப்போதுதான், அவருக் குத் தம் சகோதரன்மீது கோபமேற்பட்டு அவனை ஜமீனி னின்றும் விரட்டி யடிப்பாரென்றும், உடன்பிறந்தே கொல் லும் வியாதி போலுள்ள என் மைத்துனனை எங்களிட மிருந்து பிரிக்க இது சரியான வழி யென்றும் கூறினார். அவர் உண்மையாக என் மீது பரிவுகொண்டே இவ்விதங் கூறுகிறாரென்று கருதிய பேதையாகிய நான் அந்தப் படுபாவி சொற்படியெல்லாம் ஆடினேன். பிறகு தான் எங்கள் எஸ்டேட் மானேஜரும் என் மைத்துனனது கையா ளென்று தெரிந்தது. இருவரும் சேர்ந்து சூழ்ச்சி செய்தே இம்முறை என் மூலமாகவே குழந்தையை வெளியேற்றி சுலபமாகக் கொண்டு சென்றனர். பாவி நான் அவர்க ளால் முற்றும் ஏமாற்றப் பட்டேன். இச்சதிச் செயலை யறிந்த பின்னரும் நான் என் கணவருக்கு நடந்ததைச் சொல்ல முடியாது மனங் குமுறினேன். இரண்டாவது குழந்தையும் காணமற் போய்விட்டதை யறிந்த என் கணவர் அதே கவலையால் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்து கடைசியாகக் காலன் வாய்ப்பட்டார். எங்கள் குடும்பம் இவ்வித மெல்லாம் அலங்கோல மடைந்ததற்குக் காரணம் என் மைத்துனனென்று கூறினாலும், அவனுக்குத் துன் மந்திரியா யிருந்து அவன் செய்யுந் துஷ்ட காரியங்களுக் கெல்லாம் தூபம் போட்டு வந்தவன் இந்த எஸ்டேட்

மானேஜர் சந்திரசேகர ஐயர் தான் என்று எனக்கு இப்போதுதான் விளக்கமாகத் தெரிகிறது.—ஹூம்—(என்று ஒரு பெரு மூச்சு விட்டு) என்னமோ! இவ்வளவு காலம் பொறுத்தாயினும், ஈசன் அருளால் என் அருமைக் கண்மணிகளைத் திரும்பப் பெற்றேனே! அதுவே போதும். ஆனால், என் ஆருயிர்க் கணவர் தம் அருமருந்தன்ன மக்களைப் பார்த்து மகிழக் கொடுத்து வைக்காது போய் விட்டாரே! என்று தான் இச்சமயத்தில் என் மனம் வருந்துகிறது. என்ன செய்வது? அவர் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். என் காதற் கணவர் இறந்த பிறகும் என் வெற்றுடலை வைத்துக் கொண்டிருந்ததற்கு, என் கலி தீர்க்கவந்த கண்மணிகளை யடைந்து பலன் பெற்றுவிட்டேன். என் ஜென்மம் சாபல்ய மடைந்துவிட்டது. அப்பா ஞானசேகரா! கண்ணே ரமணி! உங்களைப்பெற்ற எனக்கு இனி என்ன குறைவு!..............." என்று கூறித் தம் மக்கள் இருந்த பக்கம் ஆர்வத்தோடு ஓடினாள். ஞானசேகரனும் (இனி நாமும் வீரமார்த்தாண்டனை ஜமீந்தாரினி கூப்பிடுவதுபோல் ஞானசேகரனென்றே அழைப்போம்.) ரமணியும் தங்கள் தாயைத் தழுவிக்கொண்டனர். ஜமீந்தாரினி தன் இருமக்களையும் இருகைகளாலும் சேர்த்துக் கட்டிக்கொண்டு முகத்தோடு முகத்தைப் பொருத்தி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். ரமணியும், ஞானசேகரனும் தங்கள் தாயின் அன்புப் பிணைப்பில் கட்டுண்டு பொருமினர். இக்காட்சியைக் கண்டு முருகன் மனமுருகினான்.

இப்பேரானந்த நிலையி லிருந்து பிரிய அவர்களுக்கு வெகு நேரமாயிற்று. பிறகு தன்னுணர்வு பெற்ற ஜமீந்தாரினி முருகனை நோக்கி, "முருகா! என் அருமை மைந்தனைக் காட்டிக் கொடுத்த உனக்கு நானென்ன கைம்மாறு

செய்யப்போகிறேன்?—இருந்தாலும், உனக்கு ஏதாயினும் வேண்டியதா யிருந்தால் கேள்; தருகிறேன்" என்று கூறினாள்.

முருகன், "அம்மா! உங்கள் குமாரனைக் களவாகக் கொண்டு சென்ற எனக்கா கைம்மாறு? பாவியாகிய என்னிடத்திலும் தயாளங் காட்டினீர்களே! அதுவே போதும். இவ்வேழை மீது உங்கள் அன்பு இருந்தால் அதுவே எனக்குப் பெரிய செல்வம்!..........." என்ருன்.

இதற்குள் ஞானசேகரன் குறுக்கிட்டு, "முருகனுக்கென்ன அம்மா கொடுக்கிறது? அவரை நம்மிடத்திலேயே தான் வைத்துக்கொள்வதென்று தீர்மானித்து விட்டேனே! இனி அவர்தான் நம் ஜமீனுக்கு அதிகாரி?—என்ன முருகா! சம்மதந்தானு?" என்று குதூகலத்தோடு கூறினுன்.

"கொள்ளைக்காரர் கூட்டத்தைச் சேர்ந்த எனக்கா இந்த பவிசு!" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் முருகன்.

ரமணி, "என் அண்ணுவை இவ்வளவு நாள் காப்பாற்றி எங்களிடந் திருப்பிக் கொடுத்ததற்குப் பிரதியாக, நாங்கள் வயோதிகத்தை யடைந்த உம்மைக் காப்பாற்ற முன் வருவதில் என்ன தவறிருக்கிறது?" என்று கூறினுள்.

பிறகு ஜமீந்தாரினி தங்கள் மக்கள் இருந்த இருப்பைப் பற்றி கேட்க ஆசைப்பட்டாள். ரமணியும், ஞானசேகரனும் தங்கள் தாயிடம் தாங்கள் இதுவரை வாழ்ந்து வந்த வரலாறுகளைக் கூறினர். அவ்வாறு கூறிவரும்போது, தங்கள் காதல் விவகாரத்தைப்பற்றிக் கூறுகையில் சங்கோஜமடைந்தனர். ஆயினும், தங்கள் எண்ணம் நிறைவேற வேண்டுமானுல், தங்கள் தாயிடம் எல்லாவற்றையுங்

கூறியே தீரவேண்டுமென்று உணர்ந்த அவர்கள் விவரமாக யாவற்றையும் கூறினர். அன்றிரவெல்லாம் அவர்கள் ஒருவருக்கொருவர் பேசியே பொழுதைக் கழித்தனர்.

மறுநாள் பொழுது விடிந்ததோ இல்லையோ ஜமீந்தாரினி சரசாங்கியையும், கலியாணசுந்தரனையும் கையோடு அழைத்து வரும்படி தஞ்சைக்கு ஆளனுப்பினுள். மற்ருெரு ஆளைவிட்டுப் பெண்ணுகடத்துக்குச் சென்று தன் ஒன்றுவிட்ட சகோதரர் திருச்சிற்றம்பல முதலியாரை அழைத்து வருமாறு ஏவினுள். அவளுக்குத் தங்கள் மக்கள் விருப்பப்படியே உடனே மணஞ்செய்துவிட வேண்டுமென்று உறுதி கொண்டாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சரசாங்கிமட்டும் வந்தாள். ஜமீந்தாரினி ரமணியைக் கூட்டிக்கொண்டு வந்த சிறிது நேரத்துக்கெல்லாம், கலியாணசுந்தரன் யாரிடமும் ஒன்றுஞ் சொல்லாது ஊருக்குப் போய்விட்டதாகச் சரசாங்கி கூறினுள். இதைக் கேட்டு ரமணி துடிதுடித்தாள். தான் யாதொரு தகவலுஞ் சொல்லாது வந்த தன்மீது தப்பபிப்பிராயங் கொண்டு கலியாண சுந்தரன் ஊருக்குத் திரும்பிவிட்டான் என்று எண்ணிய ரமணி தான் சென்னைக்கு நேரே போய் அவனைச் சமாதானப்படுத்தி யழைத்துவர வேண்டுமென்று தன் தாயிடங் கேட்டுக்கொண்டாள்.

ஏற்கனவே, கலியாண சுந்தரனைக் கொண்டு வைர வியாபாரியின் விவகாரத்தைத் தீர்த்துவிட வேண்டுமென்று கருதியிருந்த ரமணியின் யோசனைப்படியே ஜமீந்தாரினி சென்னைக்குப் பிரயாணமாகத் தீர்மானித்தாள்.

இதற்குள் திருச்சிற்றம்பலம் பிள்ளை வரவே, ஜமீந்தாரினி, "வாருங்கள் அண்ணு; வாருங்கள். ஏது ? இந்தப்

பக்கமே வருவதே யில்லையே! என்னை மறந்து விட்டாற் போ லிருக்கிறது!—" என்று குசலப்ரச்னஞ் செய்தாள்.

பிள்ளையவாள், "அப்படி யொன்றுமில்லை; என் போன்ற ஏழைக் குடியானவனுக்குப் பெரிய இடத்தில் என்ன வேலை யிருக்கிறதென்றே..............." என்று கூறி வருகையில், ஜமீந்தாரினி இடைமறித்து, "அதெல்லாம் வெறும் பேச்சு; நானும் அந்தக் குடியானக் குடும்பத்தி லிருந்தன்றோ பெரிய இடத்து ஜமீந்தாருக்கு வாழ்க்கைப் பட்டேன்; அதிருக்கட்டும்" என்று கூறிப் பிறகு தன் மக்களைத் திரும்ப அடைந்தவிதத்தை ஒருவாறுகச் சொல்லித் தன் மகன் அவரது அண்ணன் மகளான பிரஹதாம்பாளைக் காதலித் திருப்பதாலும், அவளும் அதற்கிசைந்திருப்பதா லும் அவளைத் தன் மகனுக்கு விவாகஞ் செய்து தரும்படிக் கேட்டாள்.

திருச்சிற்றம்பலம் பிள்ளைக்கு இப்போதுதான் பிரஹ தாம்பாளின் முரண்டுதலுக்குக் காரணம் விளங்கியது. கடன்கார ஜமீந்தாரரது சம்பந்தத்தைக் காட்டிலும் இச் சம்பந்தம் பலவிதத்திலும் சிறப்பாக இருப்பதைக் கண்டு அவர் மனதுக்குள் திருப்தி யடைந்தார். எனினும், அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாது தன் அண்ணியைக் கலந்து சொல்வதாகக் கூறிவிட்டுச் சென்றுர். அன்று மாலையே ஜமீந்தாரினியும் ரமணியும் சென்னைக்குப் பிரயாண மாயினர். மறுநாள் அங்குள்ள தங்கள் ஜமீன் பங்களா வில் தங்கியதும் ரமணி கலியாண சுந்தரனை ஆபீஸில் சந்தித் துப் பேசிப் பங்களாவுக்கு அழைத்துச் சென்றுள். விஷய முற்று முணர்ந்த கலியாணசுந்தரன் இடையே யுண்டான மனஸ்தாபத்தை யெல்லாம் மறந்து அளவிலா மகிழ்ச்சி கொண்டான். ஜமீந்தாரினி அவனைக் கண்டதும் தன் மக

ளுக்கேற்ற மணாளன் என்றே மனத்திருப்தி கொண்டு ஆர்வத்தோடு வரவேற்றாள். சிறிது நேரம் மூவரும் அளவளாவிப் பேசிய பின்னர், ஜமீந்தாரிணி குமரப்ப செட்டியார் ஸன்ஸுக்குப் போகவேண்டுமென்று குறிப்பிட்டாள். கலியாண சுந்தரன் புன்சிரிப்போடு, "நான் அதைப் பார்த்துக் கொள்கிறேன்; அதுபற்றி உங்களுக்குக் கவலைவேண்டாம்" என்று கூறினான்.

பிறகு, கலியாண விஷயத்தைப்பற்றிப் பேச்சு ஆரம்பித்தது. சிறிது நேரம் ஒருவருக்கொருவர் மனங்கலந்து பேசிய பின்னர், ஞானசேகரன் விவாக விஷயமும் முடிவானதும் இரு விவாகங்களையும் சென்னையிலேயே வைத்துக் கொள்வதென்று முடிவு செய்தனர். ஜமீந்தாரிணி பழைய சம்பிரதாயத்தைப் பின்பற்றுபவ ளாயினும், தன் அருமை மகளின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன், கலப்பு மணத்துக்கு ஒப்புக் கொண்டாள்.

தாயும் மகளும் சென்னைக்குப் பிரயாணஞ் செய்த அன்றே ஞானசேகரன் பக்கத்து ஊராகிய பெண்ணுகடத்துக்குச் சென்று பிரஹதாம்பாளை எப்படியோ சந்தித்தான். அவள் அச்சமயம் சோலையில் வாடிய முகத்துடன் உலவிக் கொண்டிருந்தாள். ஞானசேகரனைக் கண்டதும், முதலில் புதிய மாறுதலான தோற்றத்தைக் கண்டு யாரோ அன்னியனென்று எண்ணித் தன்னில்லத்துக்குப் போக முயன்றாள்.

ஞானசேகரன் பிரஹதாம்பாளைப் பின் தொடர்ந்தோடிக் கைப்பற்றி யழைத்துப் பேச ஆரம்பித்தபிறகே அவள் தன் காதலனென அறிந்தாள். ஞானசேகரன் கடைசியாக அவளைச் சந்தித்துவிட்டுச் சென்ற பிறகு நடந்த நிகழ்ச்சிகளையும், தனது தற்போதைய நிலையையும் விவரமாகத் தெரிவித்தான். இதைக் கேட்டதும் பிரஹதாம்பாள்

முகம் மலர்ந்தது. அவள் அன்றே தன் எண்ணம் நிறைவேறியதுபோல் களி கொண்டாள்.

*　　*　　*　　*

ஒரு வாரமாயிற்று. சென்னைப் பூவிருந்தவல்லி ஹைறோட்டில் உள்ள சேத்தூர் ஜமீன் பங்களாவில் நமது கதாநாயகி ரமணியின் விவாகமும், ஞானசேகரன் விவாகமும் சிறப்பாக நடைபெற்றன. இத்திருமணங்களுக்குப் பெரிய பெரிய ஜமீந்தார்களும், சீமான்களும் பெண்மணிகளும் விஜயஞ் செய்திருந்தனர். அவர்களில் முன் ரமணியால் ஏமாற்றப்பட்ட குமரப்ப செட்டியார் அண் சன்ஸ் சொந்தக்காரர்களும், டாக்டர் மாதவ ராவும் குறிப்பிடத் தக்கவர்களாவார். கலியாண சுந்தரன் பக்கலில் கம்பீரமாக அமர்ந்திருந்த ரமணியைக் கண்டு அவர்கள் அடிக்கடி புன்முறுவல் பூத்தனர். இவ் விவாகங்களைப்பற்றி—குறிப்பாக ரமணி—கலியாண சுந்தரம் விவாகத்தைப்பற்றிப் பத்திரிகைகளெல்லாம் சிறப்பாகப் பாராட்டி எழுதின. இவ் விவாகம் சீர்திருத்த மனப்பான்மையுடைய மற்றவர்களுக்கு ஆதர்சமாக விளங்கியது.

கலியாணமான மூன்ருவது நாள் பங்களாவின் பூந்தோட்டத்தில் ஒரு மாமரத்தில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் பிரஹதாம்பாள் உட்கார்ந்து மகிழ்ச்சியோடு ஆடிக் கொண்டிருந்தாள். ஞானசேகரன் அவளது பேரழகைக் கண்டு களித்த வண்ணமே ஊஞ்சலை ஆட்டிக்கொண்டிருந்தான். இச்சமயத்தில் கல கல வென சிரிப்பொலி கேட்கவே, அவர்கள் திடுக்கிட்டு எதிரே பார்த்தனர். சிறிது தூரத்தில் மாதவிக் கொடிப் பந்தர் மறைவிலிருந்து ரமணியும் கலியாணசுந்தரனும் நகைத்துக்கொண்டே வெளிப்பட்டனர். இவர்களைக் கண்டதும், பிரஹதாம்பாள் ஊஞ்சலி



.........அவள் எழிலைப் பருகிய வண்ணமே ஊஞ்சலை ஆட்டிக்கொண் டிருந்தான்.

—பக்கம் 254.

விருந்து குதித்து ஓடிவந்து ரமணியைத் தழுவிக்கொண்டாள். ஞானசேகரனும் கலியாணசுந்தரனோடு அளவளாவினான். இளங் காதலர்களான இரு தம்பதிகளையுங் கண்டு பொறுமை கொள்ளாதார் ஒருவரு மிரார் என்றே கூற வேண்டும். அவர்கள் அவ்வளவு அன்னியோன்னியமாக வாழ்ந்து பிறருக்கும் சேவை செய்யலாயினர். ரமணி பெண்ணுலகுக்கு—சிறப்பாக வழுக்கி விழுந்த தேவதாசி சமுகத்துக்கு—தன்னாலான தொண்டைச் செய்து வரலானாள். ஞானசேகரன் தன் கூட்டாளிகளாயிருந்த கொள்ளைக் கூட்டத்தார்க்கெல்லாம் தக்க பொருளுதவி செய்து அவர்களை நல்வழிப் படுத்தினான். இப்போது சென்னை சீர்திருத்த வாலிப சங்கத்துக்குக் கலியாண சுந்தரனே தலைவனா யிருந்து வருகிறான். பொதுவாழ்வில் ரமணியின் பெயரும் கலியாண சுந்தரனின் பெயரும் பிரபலமா யிருந்து வருகிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

---

மதுரை காமராசர் பல்

# இந்நூலாசிரியர் இயற்றிய நவீனங்களைப் பற்றிப்

# பத்திரிகைகள் பாராட்டு

## உயிரோவியம்

**கல்கி:**—* * * 'உயிரோவியம்' சாதாரணமான காதல் கதை அல்ல. சரளமான இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

**சக்தி:**—* * * எளிய தூய தமிழ் நடை.

**தமிழன்:**—* * * 'ஜீவா' தந்துள்ள உயிரோவியம் என்ற நவீனம் ஒரு லட்சியக் கனவை நிரூபிக்கிறது. அநுபவமும் கற்பனையும் கை கோத்துக்கொண்டு உலாவும் இந்தக் கதை தமிழ் நாட்டின் மறு மலர்ச்சி இலக்கியத்தில் ஓர் ஒப்பற்ற சிருஷ்டி.

**திருச்சி ரேடியோ:**—* * * இதில் ஆசிரியர் நமக்கு ஓர் உன்னத காதல் சித்திரத்தை அளித்துள்ளார். கதையின் நடை, விஷயத்திற்கேற்ப உணர்ச்சி ததும்பும் தூய நடை. 'வ. ரா,' தம் முகவுரையில் சொல்வதுபோல், தூய காதலைக் கலையழகு வாய்ந்த எழுத்துத் திறனுடன் சித்திரித்திருக்கிறார்.

## யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?

**கல்கி:**—* * * விதவைகளுக்குச் சமூகம் இழைத்துவிட்ட கொடுமையைக் கதாநாயகி சொல்லிக் கொண்டே போகும்போது நாமும் அவளுடன் சேர்ந்து கண்ணீர் விடுகிறோம்.

**சக்தி:**—* * * நடை தெளிந்து செந்தமிழ் மணம் கமழ்கிறது.

**குமரன்:**—* * * இதைப் படிப்பவர் மனத்தில் விதவா விவாகத்தின் அவசியமும் நியாயமும் படும் என்பதற்கு ஐயமில்லை. ஆசிரியர் தமக்கு இயற்கையான தூய, தெள்ளிய, இனிய தமிழ் நடையில், மனத்தை உருக்கும் வண்ணம் சித்திரித்திருக்கிறார். இந்நூல் ஒவ்வொரு தமிழரும் படிக்கவேண்டிய தவசியம்.

**தமிழன்:**—* * * இக்கதையில் பெண்மையின் உணர்ச்சிமான கண்ணீர்த் துளிகள் உயிர்பெற்று பேசுகின்றன. இ 'ஜீவா' சரளமான நடையில் விறுவிறுப்பு குன்றாமல் எழுதியிருக்கிறார். வாழ்க்கையுடன் இலக்கியம் உறவு கொண்டாட வேண்டுமென்பவர்களுக்கு இப்புத்தகம் அமிர்தத்தைப் போன்றது.